T.D. ne 3266
R.R.no 132-297

DIGITIZED

O:,2MSL,S
M97
117954

SARASANGI

A

TAMIL DRAMA

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, 17 MAR 97, MADRAS.

32651

132

2-97

BY

T. R. SARASALOCHANAM.

MADRAS.

SREE LALITHA PRESS

1897.

[All Rights Reserved.]

சிவமயம்.

சரசாங்கி நாடகம்.

இது

திருவெவ்வுளூர்

இராமசாமி செட்டியாரவர்கள்

கனிஷ்டகுமாரர்

சலசலோசன செட்டியாரால்

இயற்றப்பட்டு,

சென்னை:

ஸ்ரீலலிதா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

துர்முகி௵ தை௴

1897.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. 17 MAY 97

O-,2MSL,S 1897

TO

The Hon. Rev. William Miller, M.A., LL.D., C.I.E., D.D.

Moderator of the Free Church of Scotland and

Principal, Madras Christian College

THIS DRAMA

IS DEDICATED

AS A SMALL TOKEN OF LOVE AND RESPECT,

BY ONE OF HIS STUDENTS,

THE AUTHOR.

PREFACE.

This humble contribution to the Tamil Dramatic Literature which is now in process of formation needs very little preface. It is on the lines of the English Dramas, and its plot is more or less that of Shakespeare's *Cymbeline*. It does not lay much claim to originality except in the way of characterization.

The readers will find that in this drama I have eschewed slang, and have taken care to write, as far as possible, good, simple and faultless, Tamil.

The MSS. of this drama were subjected to the kind and careful revision of my teacher M.R.Ry. V. G. Suryanarayana Sastriar Avergal, B.A., and of M. R. Ry. T. T. Kanakasundaram Pillay Avergal, B.A., and my thanks are due to them both for their valuable suggestions and corrections.

I take this opportunity to offer my best thanks to M. R. Ry. M. S. Dandayudapani Aiyar Avergal, B.A., L.T., for his kindness in furnishing this book with an Introduction.

MADRAS,
April 26th 1897.

T. R. S.

INTRODUCTION.

From time immemorial, the Tamil Literature has been divided into three departments, namely, Iyal, Isai and Natakam. It is strange that while the first two classes have representatives in existence, the last has none. Dramas more than six hundred years old and comparing favourably with the best productions of Europe in the same field are to be met with in Sanskrit. Kanarese, which is an offshoot of the Tamil language, and which has allowed itself to be much influenced by the Sanskrit Literature, has a drama written about three hundred years ago. In the latter part of the seventeenth century, we find the translator of the Sanskrit drama, *Prabodha Chandrodaya,* into Tamil adopting the Epic form in preference to the dramatic. Facts like these lead one to conclude that either the drama, as a class of literature, was mentioned by the ambitious Tamil scholars of olden times by analogy with Sanskrit, or at any rate the later scholars would not recognise the dramatic form as one that belonged to the Tamil language.

Dramas in Tamil, corresponding to our modern conception, are the creations of the last twelve years. The authors thereof are the products of western education, and it is to this influence we have to trace the origin of the present drama. During this period *Nandidroog*, *Manônmanîyam*, *Lilâvathi-Sulôchanâ*, and *Rûpâvati* have seen the light and all of them are, no doubt, on the lines of English dramas. Whether the dramatic composition, now being slowly engrafted on our literature, will be a permanent acquisition to it or not, we are not now in a position to say. Probably it is the privilege of the coming generations to pronounce the opinion that, in these English-modelled dramas, there are permanent thoughts put in a permanent form worthy of the noble and permanent literature of the Tamil people.

Sarasângi, now presented to the public, is a humble contribution to the Tamil dramatic literature, which is now in the process of formation. It differs from the existing ones in the language, in that it is not original, in the sense that its plot is borrowed. It is in

fact Shakespeare's *Cymbeline* that has passed through the alembic of oriental imagination. *Sarasângi* is original in many other respects and shows what wealth of poetic ideas the young author has at his command.

For the sake of easy understanding, we give here an outline of the story of this drama, an adaptation of Cymbeline. *Sacchanda*, king of Kânchi, having lost his first wife by whom he has two sons, *Vikrama* and *Viraséna*, and a daughter, *Sarasângi*, thinks of taking one *Kanakâmbujam* for a second wife and consults *Gunanithi*, his most trusted lord about the marriage. He advises the king very strongly against marrying a second time. The king, not relishing the advice, resolves upon marrying Kanakambujam. Gunanithi, fearing evil to himself and the two infant sons of the king at the hands of the new queen, quits the court and lives in concealment, waiting for a favourable opportunity to carry them off. Such an opportunity occurs on the day of the marriage, when he carries them off to a mountain-cave and lives with them there. The king, ensnared by the beauty of Kanakâmbujam, does not trouble himself about the fate of his sons who have disappeared and fancies that they have been carried away by some goblin. So he loves his only remaining child, Sarasângi, with all the love of a parent. The new queen bore no children, and she, foreseeing from the fondness of the king for his daughter that he will bestow the kingdom on her future husband, brings over her brother Mukunda, an idiot, to the Court, and at the same time strengthens her hold upon Sacchanda.

Alagânanda, the posthumous son of the late commander-in-chief of the Kânchi forces, is also brought up in the royal palace. He and Sarasângi fall in love. The queen, coming to know of this, prevails upon the king to banish Alagânanda with a view to get Sarasângi married to Mukunda.

It is with the banishment of Alagânanda that the play opens. That same evening Sarasângi in the garden adjoining the palace laments over the severe sentence passed upon her lover when he comes there to take leave of her. Then Sarasângi swoons. Soon after Alagânanda fastens on her hand a bracelet he had brought with him, he himself wearing her ring. A few minutes after this, the king, in company with his queen, comes to the garden and finds his daughter in an unconscious state. Seeing Alagânanda at a distance,

he orders him to quit the kingdom which he does without bidding farewell to his *lady-love*; but leaves a letter to her with his devoted friend Suguna, one of the lords of Kânchi. He delivers the letter to her that night; but Sarasângi in her dejection does not open it all that night. Before leaving the garden, Sarasângi does not find her ring on the finger, but finds a bracelet on her hand. She is nonplussed a good deal (*Act I, Sc. 1.*). *Mukunda* has come to know that Sarasângi is in love with Alagânanda and now this night when he learnt that Alagânanda had left Kânchi, he pursues Alagânanda that he may put him to death; but in the duel that ensues between them, it is only by chance that Mukunda escapes with his life. Now that Alagânanda is not permitted to enter Kânchi, Mukunda deludes himself into the belief that he is Sarasângi's future husband. (*Act I, Sc. 2.*)

Next morning Sarasângi asks her maid to bring the letter that was brought to her on the previous night and then reads it. She comes to understand that Alagânanda wears her ring, that he fastened the bracelet on her hand, that he will be writing to her and be hoping to receive her letters through their friend Suguna and that she may place a good deal of confidence in him. (*Act I, Sc. 3.*)

After the lapse of a few days, Alagânanda reaches Tanjore and stops there with his friend, *Jayavîra*. *Dunmati*, a native of Kumbagonum, comes to see Jayavîra. Dunmati drags Jayavîra and Alagânanda into a conversation, in the course of which he says that virtuous women are very rare in the world and therefore Sarasângi cannot be chaste. Alagânanda grows angry at these words, whereupon Dunmati says that he would stake his property on the truth of his statement and compels Alagânanda to do so with his ring, which he reluctantly does. Then Dunmati leaves for Kânchi to bring Alagânanda some proof of Sarasângi's unchastity. (*Act I, Sc. 4.*)

Kanakâmbujam learns that Alagânanda corresponds with Sarasângi through Suguna. She sends for Suguna and tries to buy him over in order that he may further the interests of Mukunda; but finds him firmly attached to Alagânanda. To rid him off her way, she lets drop a phial of what she believes to be deadly poison and tells him that it is a valuable medicine. She then gives it to him, ostensibly as an earnest for his future exertions. (*Act I, Sc. 5*).

Then Dunmati arrives at Kânchi and wends his way to Suguna's house. Both Suguna and Dunmati go to Sarâsangi's, the latter going

thither under the pretence that he bears a letter to her from her lover. Dunmati dismisses Suguna shortly under some pretext and then answers all her queries about her lover and concludes it by saying how he is running out the gushing energies of his budding life in the company of disreputable women at Tanjore.

After this he advances to kiss and spoil her but Sarasângi remains firm and cries out for help. Then Dunmati tells her that he never intended to do any harm to her but merely sought to test her fidelity. He then adds that her husband is like her morally pure and requests her to keep in safety a box, full of valuable presents, to be given to the king of Kânchi, which he would send thereafter through his servants. *(Act I, Sc. 6.)*

That same evening Mukunda comes to the conclusion that he will win over Sarasângi by singing to her early morning next day. *(Act II, Sc. 1.)*

At midnight of the same day, when Sarasângi is sound asleep in her bed-chamber, out comes Dunmati from the box, notes down the disposition of things in the sleeping apartment, removes the bracelet from her hand, looks out for some mark on her body by which he could convince Alagânanda of Sarasângi's unfaithfulness, and sees a mole in the front of her body, just a little below her neck. Before daybreak he gets into the box and locks himself up in it. *(Act II, Sc. 2.)*

Next morning, Mukunda stops outside Sarasângi's room and sings. He then knocks at the door, when Sarasângi comes out. Not only does she refuse to marry him, but also treats him with contempt. Mukunda, in rage, leaves her. *(Act. II, Sc. 3.)*

About a week after leaving Kânchi, Dunmati reaches Tanjore and goes straight to Jayavîra's house. There he tells Jayavira and Alagânanda how Sarasângi is no exception to the general rule that no woman is virtuous. When called upon to produce proofs, he gives them first a description of Sarasângi's bed-chamber, then shows them the bracelet, which, he says, she gave him as a token of her beastly passion for him, and lastly draws the attention of Alagânanda to the mole referred to above. So Alagânanda gives over the ring to Dunmati. *(Act II, Sc. 4.)*

The news thus broken by Dunmati sends a shock through his frame and he begins to despond. Afterwards he makes up his mind to bring about the death of Sarasângi as well as his own. *(Act II, Sc. 5.)*

The next evening Dunmati goes to the palace of Chandrasêkara, King of Tanjore, whose favour he had won by very questionable means. He so works upon the feelings of the king by his description of Sarasângi's personal beauty that the king, forgetting for the moment his senility, sends a letter to Sacchanda, asking for the hand of his daughter. *(Act II, Sc. 6.)*

In due time the messenger arrives at Kânchi and delivers the letter to Sacchanda. The king consults his queen on the matter, who suggests to him that it would be desirable to give Sarasângi in marriage to one among their near relatives and that Mukunda was such a one. The king, approving the sugestion, sends a reply in the negative to Chandrasêkara. *(Act III, Sc. 1.)*

The very evening Suguna is in receipt of two letters from Alagânanda, one to himself and the other to Sarasângi. Suguna reads the startling news that Sarasângi has proved false to her lover, and must therefore be put to death and a piece of cloth soaked in her blood be sent as proof of the bloody act. In the other letter to Sarasângi Alagânanda wrote that he would come over to Tiruvakkarai, a place near Kânchi, and await her arrival thither with Suguna. This place was chosen as a safe retreat to compass her death without discovery. Sarasângi tells Suguna that she will leave with him for Tiruvakkarai on the ensuing morning. *(Act III, Sc. 2.)*

Next morning Vikrama, Virasêna and Gunanithi are out for hunting after three days' rain, and Gunanithi enlarges upon the blessings of nature as far superior to the painted pomps of Courts. *(Act III, Sc. 3.)*

Sarasângi, in male attire, leaves Kânchi, and while the two are going towards Tiruvakkarai, Sarasângi perceives some bad omens and asks Suguna what they might portend. Suguna, speechless and weeping, hands over Alagânanda's letter to him. Holding it sin to commit suicide she asks him to carry out the order of his friend to the letter. He refuses to put her to death and asks her to stop with him that she may save Alagânanda's life, when he comes to know the truth about the affair and repents. Sarasângi does not like the idea of stopping with him and therefore asks him to show her the way to Tanjore; which done, he gives her the phial of medicine given him by the queen, and then they part. *(Act III, Sc 4.)*

At about three next day, Sacchanda comes to know of the disappearance of Sarasângi. Suguna, summoned by the queen, meets Mukunda in the palace. Threatened with death to give the whereabouts of Sarasângi, Suguna places in his hand Alagânanda's letter to Sarasângi. After getting Alagânanda's clothes from Suguna, Mukunda sets out in pursuit of Alagânanda and Sarasângi, that he may put Alagânanda to death and force Sarasângi to marry him. (*Act III, Sc. 5.*)

In the same evening Sarasângi, quite done up, enters the lonely mountain cave inhabited by Gunanithi, Vikrama and Virasêna, hoping to get something to keep up her sinking life. They welcome her, give a good treat and ask her to be with them. She consents and lives there under the name *Sundara* without giving any opportunity to the inmates of the cave to suspect her disguise. (*Act III, Sc. 6.*)

The next evening Chandrasêkara receives Sacchanda's reply and, being much put out by it, makes preparations to invade Kânchi. (*Act III, Sc. 7.*)

A few days after, one morning Sundara, being unwell, takes a dose of the medicine given to her by Suguna and stops in the cave. Gunanithi, Vikrama, and Virasêna come out of it to hunt and see Mukunda coming towards them at a distance. Gunanithi, making out Mukunda, and fearing that he might be coming over there to make them prisoners, asks Virasêna to keep an eye over Mukunda while he and his brother go to the top of the hill to see if Mukunda was coming with a company of soldiers. In the meanwhile Mukunda advances towards Virasêna, uses foul language to him and then attempts to strike him with his sword, when the boy, snatching the sword from him, severs his head from the body. Just at this juncture, Gunanithi and Vikrama return and Gunanithi takes Virasêna to task for his act. Then Virasêna goes to throw the head away while Vikrama goes to the cave to see how Sundara was doing. There he finds Sundara apparently dead and comes out with Sundara thrown over his back. Fancying Sundara dead, they gather flowers and cover the body with them while the headless body of Mukunda is left by the side of the other.

Full of grief, Gunanithi, Vikrama, and Virasêna retire to the cave. Soon after Sarasângi (Sundara) comes back to her senses, the medicine she took in being only a narcotic or a sleep-inducing drug. On looking about her she finds the headless body in the clothes of Alagânanda and swoons. Just then Vajravâhudêva, commander-in-chief of the Tanjore forces, seeing Sarasângi asleep, makes to her and asks her to come along with them. She enters their service in the assumed name of Sundara. (*Act. IV, Sc. 1.*)

Next day at about two o'clock Sacchanda learns that Chandrasêkara has left Tanjore with his forces and so makes preparations to repel the attack. (*Act IV, Sc. 2.*)

The next morning, Gunanithi sees the invading army and comes to know that the Chola King leads an expedition against the King of Kânchi. He calls together Vikrama and Virasêna and counsels them to strike a blow on behalf of Sacchanda. Of course the boys do not know that Sacchanda is their father and therefore manifest an utter indifference as to the issue of the invasion. Then Gunanithi successfully persuades them to join in the battle against Chandrasêkara. So Gunanithi and the boys leave the cave for the field. (*Act IV, Sc. 3.*)

Then the two armies meet in battle on a plain adjoining Kânchi. In one part of it is Alagânanda in disguise, soliloquising. He, having come to know of the deception practiced upon him by Dunmati, has come over there to strike a blow for Sacchanda and die on the field. Life is insupportable to him, because he is already in receipt of the piece of blood-soaked cloth sent by Suguna.

Vikrama, Virasêna and Gunanithi take their stand in another part of the field, watching the issue of events.

Alagânanda, seeing Dunmati in the front rank of the enemy, springs upon him tiger-like and wounds him. Then Dunmati falls down insensible.

Soon after Sacchanda is taken prisoner, and the Kânchi forces take to flight in all directions from the field of battle.

Just at this critical moment, Vikrama, Virasêna, Gunanithi, and Alagânanda rally the scattered forces round them and lead them again to rescue the king. Not only do they succeed in doing so but in the attempt they win a decided victory over the enemy, Chandrasêkara falling a victim to the sword of Alagânanda, and Vajravâhudêva, Dunmati, and others being taken prisoners. Vajravâhudêva, before he is taken prisoner, asks Sundara (Sarasângi) to run away from the field and seek safety. (*Act V, Sc. 1.*)

Then Sundara and Alagânanda are also taken prisoners by mistake. (*Act V, Sc. 2.*)

Alagânanda has a dream in the prison house that he is married to Sarasângi who, he had fancied, was dead, and that he is made a king. He desires very much that the first part of the dream at least, though an impossibility, should be realised.-(*Act V, Sc. 3.*)

Kanakâmbujam, who had been ill for some days past, died broken-hearted, because, by a strange turn of circumstances, all her designs were about to come to light through her maid. Sacchânda, in a repentant mood, orders all the prisoners of war to be brought before him along with the doctor and Suguna. The king is very anxious to find out the youth to whose valour he was indebted for his life and kingdom. Just then Alagânanda, Dunmati, Vajravâhudêva, and Sundara (Sarasângi) make their appearance. Vajravâhudêva asks the king to grant him a favour, which granted, he entrusts Sundara to his charge. Vajravâhudêva was about to say something about Dunmati when Alagânanda, hearing of his name, attempts to strike him. Then Sarasângi recognises Alagânanda and entreats him not to put Dunmati to death. Alagânanda sees in Sundara his Sarasângi in disguise. Dunmati is then forced to speak out every bit of his design, which he does. The king asks Vajravâhudêva how he came to have Sundara in his service, and this leads to mention being made of a headless corpse. Gunanithi, Vikrama, and Virasêna strike in and explain why Sundara (Sarasângi,) was removed out of the cave, how Mukunda was killed by Virasêna and his headless body was placed by her side. Through the doctor and Suguna he comes to know of the fell purpose for which his queen had ordered the medicine, referred to above, to be prepared, how the humane doctor instead of giving a deadly poison only gave her a soporific drug, and how Sarasângi came to be in possession of the same. Gunanithi reveals to the king that Vikrama and Virasêna are his sons. The king is then overwhelmed both with joy and sorrow,—*joy*, as to Sarasângi, Alagânanda, Gunanithi, Vikrama, and Virasêna being once more restored to him, and *sorrow* as to his having been cruel to them out of measure. Then he asks forgiveness of Sarasângi, settles upon Alagânanda and Sarasângi, the kingdom of Tanjore, which has become theirs by right of conquest, and marries them and gives over *his* kingdom to his sons. He makes Suguna the prime-minister of Kânchi, and Vajravâhudêva, the commander-in-chief of the Tanjore forces under Alagânanda, and throws Dunmati into solitary confinement for life.

A most cursory reading of the book, while it shows that the general run of the story is mostly Shakesperean, reveals also that the characters are conceived and delineated with a profusion of oriental imagination. Some of the highest flights of imagination are embodied in stanzas on pages 40—41, 43, 62—66, 98, among the rest.

One feature of this work is that it is written both in the literary and the colloquial style. For these reasons not only will this drama meet with a good measure of success on the stage for which surely it is intended by the author, but will, we are confident, be also keenly appreciated in the closet.

We do not intend to give here a character sketch of the dramatis personæ as we fear that by doing so we take off the interest of the intending readers to go through the work, yet we cannot refrain from stating that bold strokes are discernible in the development of the character of Dunmati, Alagânanda, Kanakâmbujam and Sarasângi.

Lastly, we come to the naming of the play as Sarasângi. If this play were merely a regular translation or a close adaptation of Shakespeare's Cymbeline, one would expect the author to let the play go by the name of Sacchanda. The fact, that he has not done so but named it Sarasângi, shows that the author has allowed himself to be influenced by considerations of poetic justice. Evidently Sarasângi is the heroine of the play and the other characters revolve round her as so many satellites throwing light on the hidden springs of her noble character.

We are of opinion that the wide acquaintance of the author with the Tamil literature of olden times has occasionally led him to indulge in what, to western minds, may seem to be too much tinged with oriental conceits.

To conclude, the play Sarasângi, though it is the maiden attempt of the author, exhibits unmistakable signs of rare merit.

MADRAS, *26th April 1897.* M. S. DANDAYUDAPANI AIYAR B.A., L.T.

OPINIONS.

(1) *From* **M.R.Ry. T. V. Vaidyanatha Aiyar Avergal, M. A.** *Professor of Mathematics, St. Thomé College, Mylapore.*

It is with great pleasure that I acknowledge the receipt of the presentation copy of your neat little volume of the Tamil drama of *Sarasângi* an admirable adaptation of Shakespeare's *Cymbeline*. The spirit of the characters in the original invested with Sanskrit names, is sustained throughout, of course with the modifications necessitated by the rules of Sanskrit Dramaturgy. The songs with which your work abounds are beautifully adapted to music, and bear well the tunes and the thâlams designated at the commencement of each. The verses are written in faultless Tamil, and the quotations from the *Silappadikâram*, the *Chintâmani*, the *Naishadham*, the *Tirukkural*, and the other classical works in Tamil are very appropriate. Your diction in prose is chaste, and the speeches of some of the characters have characteristic features. *Sarasângi's* soliloquy in pp. 5-7, the soliloquy of *Alagânandan* in pp. 55 and 56, as also the *Ahaval*, in pp. 96 and 97 are excellent. The book contains other intrinsic merits, both prosodial and rhetorical, which are too numerous to enumerate. I am indeed proud of such a publication, perhaps the first of its kind in Tamil emanating from one of my former students. It is my wish that this will soon be followed by several other publications of yours and I hope that, ere long the Tamil literature will be largely indebted to your energetic and praiseworthy attempts towards its development.

(2) *From* **M. R. Ry. P. Sundaram Pillai Avergal, M. A., F. R. H. S., F. M. U.,** *Professor of Philosophy, Maharajah's College, Trivandram.*

I have seen enough of your play to make me believe that it will repay perusal. The plot seems well conceived and carefully developed and the language, generally speaking, popular without being vulgar. The parts in verse are also good, though capable of much improvement. But considering the age and the attainments of the young author, I am more pleased with the promise the work gives than with what is actually before me; and sincerely trust that the talents here revealed will so be cultivated as to add materially to the Literature of the land. I earnestly wish the young author will meet with every due encouragement and success.

(3) *From* **M. R. Ry. T. Ramakrishna Pillai Avergal, B. A., F. R. H. S., F. M. U.** *High Court of Judicature, Madras.*

I have read with the greatest pleasure your "Sarasângi." The plot of the story is well conceived, the ideas are expressed in good language and

some of the scenes in it are really good. I am glad to congratulate you sincerely on this your first attempt in Tamil Literature.

(4) *From* **M. R. Ry. V. Kanakasabhai Pillai Avergal, B. A., B. L.,** *Superintendent of Post Offices, Calicut.*

I have read with great pleasure the copy of the Drama "Sarasângi" which you kindly forwarded for my perusal. Works of this kind ought to be welcomed, as they form a distinctly new class of literature, which is sadly wanting in Tamil. The quotations from ancient Tamil classics interspersed in the work are brought in very appropriately. The songs which are mixed up with the prose dialogue may appear out of place, but I believe they are introduced with a view to please the musical tastes of the audience. I wish the work every success on the stage : and I shall not be surprised if it is popular even as a novel.

(5) *From* **M. R. Ry. T. T. Kanakasundaram Pillai Avergal, B. A.**—

I write to thank you for the copy of your interesting drama Sarasângi that you so kindly sent me. From what I have seen of it and the like of its kind I am led to form a good opinion of the book. It is very creditable that at a time when the study of the ancient languages of this land is so much neglected if not despised, you should have chosen to present the public with such adaptations into Tamil of some of the leading plays of Shakespeare written in a simple and readable style. I wish you all success in your new attempt and trust that the public will accord a hearty welcome to your book.

(6) *From* **M.R.Ry. S. Narayanaswami Aiyar Avergal, B. A.,** *Lecturer, Government College, Kumbhakonam.*

I had no time to go through your book "Sarasângi" critically, yet a cursory reading of it has left in me, on the whole a very favourable impression of the production. As the first attempt of the kind, it reflects much credit on a young man like you. There is sufficient evidence in the work to show that you have powers enough which, well cultivated, will make you in course of time, one of the good writers in Tamil.

(7) *From* **M. R. Ry. T. Balasundara Mudaliar Avergal,** *Munshi to the Tamil Translator to the Government, Madras.*

I have perused your Sarasângi with great delight. I am glad to be able to say that you have spared no pains to make the work perfectly intelligible to all classes of readers, and that the plot is most edifying. It is hardly an exaggeration to say that your work deserves the appreciation of superior scholars in Tamil. I wish your work every success.

ஸ்ரீ வில்லிபுத்தூரைச்சேர்ந்த மங்கலம்

வித்வான்,-இராயலு ஐயங்காரவர்கள் குமாரரும்,

ஆங்கில சமஸ்கிருத திராவிடாந்திர பாஷா வல்லவருமாகிய

ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள்

சொல்லிய

अनुष्टुप्.

सुमनोयत्नसंजातं
सरसांप्याद्यानाटकं ।
सत्पात्रस्थ सुधातुल्यं
ददौजकजलोचनः ॥

इन्द्रवज्रा.

यन्नाटकालोकनबद्धचित्ता
विद्वत्सभावाञ्छतिशक्रभावं ।
यन्नाटकस्तोत्रविधिप्रसक्तो
विद्वज्जनोऽनन्तगुणाभिलाषी ॥

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

இது

புரசையம்பதிப் புலவர்பெருமான்

ம-ா-ா-ஸ்ரீ அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள் மாணாக்கரும்

சென்னைக்கிறிஸ்டியன்காலேஜ்

தமிழ்ப்பண்டிதருமாகிய ம-ா-ா-ஸ்ரீ

திரு. சின்னசாமிப்பிள்ளையவர்கள்

சொல்லிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பூங்கமலத் தயன்முதல்வா னவர்க ளாரும்
போற்றுமெழி லெவ்வுளூர்ப் பதிவாழ் ஐயோன்
தேங்கமழ்செங் காந்தளந்தா ரணியு மார்பன்
சீர்திகழ்நற் குணராம சாமி மிக்கோ
னோங்குறுதவச் சேய்சலச லோச னன்று
உலகினர்க ளுலகியலை யெளிதிற் றேறப்
பாங்குபெறச் சாசாங்கி நாட கத்தைப்
பாவலருள் வியப்பவினி தியற்றி னானால்.

இவை
மதுரையம்பதி மகாவித்துவான் ம-ா-ா-ஸ்ரீ,
சு. சபாபதிமுதலியாரவர்கள் மாணாக்கரும்
சென்னைக்கிறிஸ்டியன்காலேஜ்
தமிழ்ப்பண்டிதருமாகிய பிரமஸ்ரீ
வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள்
பி. எ. சொல்லிய

தரவுகொச்சகக்கலிப்பா.

சீர்பழுத்த செழுங்கமலச் செம்மாலுந் திசைமுகன்றன்
பேர்பழுத்த நாவிடத்துப் பிறங்குறூஉ வெண்மாது
நார்பழுத்த வன்புகொளீஇ நாடோறும் விளையாடு
மேர்பழுத்த தொண்டைநன்னாட் டெவ்வூரினில்வாழ்வோன்.

தேன்பூத்த செங்காந்தட் செழும்பிணையல் செறிபுயத்தான்
கான்பூத்த குழல்பூத்த கவுரியுடல் பூத்தானை
மான்பூத்த கரத்தானை மறவாத சிந்தையினான்
மீன்பூத்த விண்ணகத்து விளங்குகலை மதிபோல்வான்.

விற்புருவ மார்தளிர்மா மேனியெழில் வேயினைத்தோட்
பொற்புடையாள் புங்கவனைப் போற்றுகிற்குந் தன்மையினாள்
கற்பினுக்கா கரமெனும்பூங் காவனப்பேர் மாதரசைத்
தற்புனிதத் தலைவியாத் தலைக்கொண்ட தனிவேந்தன்.

பண்ணமைந்த பைந்தமிழிற் பற்பலநற் பதிகட்குந்
தண்ணமிழ்தப் பதிகங்கள் சாற்றியசெந் நாப்புலவன்
றெண்ணலஞ்சேர் குணமுடையான் சிராம சாமியெனு
மண்ணன்முனைத் தவத்தீன்ற வரும்புதல்வர் தமிலையோன்.

சந்தமுறு மொழுக்கமுளோன் சந்தமுந் தவறுமற்
செந்தமிழ்தே ரியல்பினன்பாச் சிறப்பறிசெவ் வியரசிக
னந்தமில்சீ ராங்கிலமு மன்பினொடு பயில்கிற்போன்
வந்தரனை வந்திக்கும் வாழ்சலச லோசனவேள்.

அரசமொழி யாங்கிலத்தி னரியபல நாடகந
வரசமொழு கப்புனைந்த வள்ளல்சேகப் பிரியனாது
பிரசமொழிக் கதையொன்றைப் பெரிதுளத்திற் பற்றியநங்
குரிசின்மழ விளஞ்சயந்தன் குறிக்கொண்டு தமிழ்ச்செய்வான்.

பீடுறுசம் போகம்விப் பிரலம்ப மாப்பேசும்
வீடறிய சிங்காரம் விளம்புகிற்குஞ் சோகமுத
லாடரங்கின் சுவையனைத்து மமைந்தசா சாங்கியெனு
நாடகமா நானிலத்தோர் நனிவிழைய நவின்றனனே.

இவை
புரசையம்பதிப் புலவர்பெருமான்
அஷ்டாவதானம் ம-ா-ா-ஸ்ரீ
சபாபதிமுதலியாரவர்கள் மாணாக்கர்
ம-ா-ா-ஸ்ரீ திருமயிலை வித்துவான்
சண்முகம்பிள்ளையவர்கள்
சொல்லிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருமாலுஞ் சதுமுகப்புத் தேளும்வன் றியெனமெனத் தேடி யுங்கா
ணரியபிரா னருநெறிற் குணுவையெஞ் ஞான்றும்வல மன்பிற் செய்யூ
விருகமுறு தவப்புரிந்த சிறப்புடைய தொண்டையெனு மினிய நாட்டிற்
பெருமையுறப் பெறுமெவ்வு ளூரின்கண் வதிகிற்போர் பீடு சாலும்.

பணியிலனந் தனுந்தருவிற் கற்பகமு மலரினிற்பங் கயமுந் தெய்வ
மணியினிற்சிந் தாமணியு மறையினிற்சா மமுமனுவி லஞ்செ ழுத்துந்
தனிவிலைபுகழ் மலிகுடிலத் தவரில்வலா ரியுமென்னத் தமிழ்சொ லஞ்சு
மணியெனுமாலிலக்கியஞ்சொல்வணிகர்தஞ்சீரெவ்வாறுவழுத்தற்பாற்றே

கலைநாடு மாமணியான் கந்தனெமை யாண்டருள்செங் கடம்பன் வென்றி
நிலைநாடி வெஞ்சூர்மாத் தடிந்திடுநெட் டிலைவேல னினைந்து பாரிற்
றலைநாடுங் கரத்தொருநல் வணிகன்மக வாத்தானே தோன்று மென்னிற்
புலைநாடுஞ் சிந்தையனே னம்மரபின் புகழெங்ஙன் புகலற் பாற்றே.

இன்னமர பினினிகை யொப்புரவு முதலவொருங் கெய்தி நின்று
சன்னாளும்பின் னவனுமெனக் கற்றோரிங் கெடுத்துரைக்குங் காமதேனு
பொன்னவனென் றுலகுரைக்கும் புந்தியினன் கவிமாரி பொழியு மேக
மென்னையுமோர் நண்பனெனக் கொண்டிலகி னிசையுமிருங் கற்பு தாரு.

பூமனைவாழ் திருமாது கலைமாதென் றிருவோரைப் பொருவில் கண்ணு
மாமலையை யொருகாசற் றந்தையாக் கொடுநிலவும் வடிவைக்கொன்றைத்
தாமனைத்தென் னுற்றிலகவெருத்தறியும் பெருமானைத் தனுவாத் தெய்வப்
பூமகளையென் றுர்தன்னெஞ்சகமாங்கோயிலிடம்பொருந்தக்கொண்டோன்

மன்னவர்கள் விழைதருநற் குணராம சாமியெனு மகிப னீண்டு
முன்னியற்று மருந்தவமங் குரித்தவெனப் புவியிலிவண் மொழிய நின்ற
தன்னருஞ்சீ ரெழிற்பால சுந்தரவேள் சிவானந்தத் தோன்றலின்னோர்
பின்னுதித்த சலசலோ சனனென்னத் தோன்றினர் பெரிது மன்றே.

இனையநூ லருட்பின்னை ரிவண்டேன்று யினையவன்று ளிந்த ஞாலத் [லாய்
அனலருந்நீர்த் தென்மொழியு மேன்மொழியு மினிதுணர்ந் துலப்பில் கா
கனைகடல்சூழ் நிலவுலகிற் காவிநா சப்பெயர்கொள் சுகிரு தேமே
யெனநன்று நடகமொன்றை யிருஞானன்றி னெவருமகிழ் வெய்த மாதோ.

சொற்சுவையும்பொருட்சுவையுந்தோயிலசப்பொருட்சுவையுந்துறைக்கணி
யற்புதத்திற் செழுமவனி நலனெனைத்து மடைகிறுற வதிருராயொ[ன்றே
ரிப்பரிசிங் கியலுவரே யியற்றுவா ரென்றுரைப்ப விருசீர் வைப்பி
னற்புடனற் சாசாங்கி யெனும்பெயரிட் டிமகிழ்வி னளித்தா னம்மா.

இவை

சென்னைக்கிறிஸ்டியன்காலேஜ்

உதவித்தமிழ்ப்பண்டிதராகிய ம-ா-ா-ஸ்ரீ காரப்பங்காடு

கோபாலாசாரியரவர்கள்

சொல்லிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆராமஞ் சூழ்ந்திலகு திருவெவ்வுள் மாநகருக் கணியா வந்தோன்
சீராம சாமியெனும் வணிகர்பிரான் செந்தமிழின் செல்வன் செய்த
நேரான புண்ணியமேல் லாந்திரண்டோ ருருக்கொண்டிந் நிலமீ தந்
நீரான ஞஞ்சலச லோசனனென் றினியபெயர் திகழுஞ் செம்மல்.

தந்தையினுஞ் சதமடங்கு குணமுடைய னெனுமொழிக்குந் தகுதி பூண்ட
செந்தமிழின் பயிற்சியினை யாட்டுடைய ஞங்கிலத்துந் திறமை மிக்கோன்
சந்தமொடு நவரசமுங் கற்பனையு மமைந்தசா சாங்கி யென்னும்
பந்தமுறு நாடகமொன் றியற்றினனந் நூற்பெருமை பகர லாமோ.

கற்றோர்க்கு மகிழ்வளிக்குங் கற்போர்க்கொள் ளறிவளிக்குங் கருதி யாட
லுற்றோர்க்குப் புகழளிக்கு முற்றதனை யாடரங்கி லுவந்து காணப்
பெற்றோர்க்குச் சுகமளிக்கும் பின்னுமிதி னீதியினைப் பேணி நாடு
மற்றோர்க்கு நயமளிக்கு மென்னலமு மளிக்குமிது வழங்கி னோர்க்கே.

இவை

திருமழிசை கந்தசாமிமுதலியாரவர்கள் குமாரரும்

சோக்கநபுரம். ராமலிங்கத்தம்பிரானவர்கள் மாணாக்கருமாகிய

ம-ா-ா-ஸ்ரீ. வடிவேலுமுதலியாரவர்கள்

சொல்லிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆரணற்றந் தருணா ணைவாழு மேவ்வுணை ரம்ய நிக்கட்
பேரணவும் வசியர்குலப் பெருமாறு வுதித்தனைங்கைப் பெருநால்வைவேற்
சீரணனைம் முகனம்பி கைக்குவப்பாங் கவிமாலை கவிந்து சாற்று
மோரண்ஸ்ராய் வருராம சாமியெனு மியற்புலவ னிருந்த வத்தால்,

மகனறிவு தந்தையறி வெவைவுரைக்கு மான்றோர்சொல் விளக்கி யந்நா
டகமொரு மையப்பாடனைவர்க்கு மசனுமெவுண மவனி மீதிற்
புகழ்நிலக் கணவிலக்கி யந்தோர்ச்சி பொருந்தியிறும் பூதுமன் டாகக்
சுகமுமம ரும்வியக்க வுதிரலச லோசனப்பேர்கொ காளை யிந்நாள்.

வடசரங்கி யங்கனொடு மணமுடித்த மனைவியரின் வலஈற் போதச்
சிரசாங்கி தெனப்புலவர் சிரமேற்கொள் சரிதைத்தனைத் தேச மெய்ச்சிப்
பிரசாங்கி லேயத்தின் விதிசமுவிக் கதநியம்பத் தியத்தோ டோங்கச்
சாசாங்கி நாடகமொய் புயர்வின்றி யிசைத்தானற் றமிழின் மாதே.

இது

சயப்பாக்கம். ம-ா-ா-ஸ்ரீ

ரெத்தினசெட்டியாரவர்கள் குமாரர்

சதாசிவசெட்டியாரவர்கள் பி-ஏ.

சொல்லிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

பூமகள் கணவ னுமசீ ருலக
மளந்த காலை வளர்ந்தென வுயர்ந்தே
யோங்குயர் குடுமி தாங்கிய சந்திப்
பொருப்பிற் றேறு விருப்பித் பொழிந்த
பால்பெருகு பாலிக் காலமிசு சூழ்ந்து
நீர்வள மேழுத லேர்வளன் வாய்ந்த
தொண்டை யெனுஞ்சீர் மண்டில நடுவிற்

பானிறக் கடன்மிசை நீனிற மேகந்
தாமரை மலர்பல வேறுறப் பூத்த
பச்சை மாலை யச்சிய பெருஞ்சீர்ச்
செவ்வி வாய்தரு மேன்மைப் பதிதனி
னெல்லாந் தானே யல்ல தியாதோ
தென்னவன் முடிக்கு நன்மணி பார்த்து
மங்கைநல் லாரவ ரங்கையி னெய்து
ஞாதியர் கைப்படும் பேதையின் மகற்கு
வனநெறி சென்ற தமைத்தி யாவருஞ்
சுடரிலை நெடுவேன் மிடலி னேந்தியோன்
றோங்கலி யாய்ப்புகழ் தாங்குசங் கத்தார்
மாறுபடு கலக நீறுபட வுருத்தியுந்
தம்மர பெய்திய மெய்ம்மரபு வாய்ந்து
அடியிடை பாக னடியார் வேட்டன
வில்லையென் றுரைத் தொல்லியற் பகையு
மிறைவன் றரித்த மறைத்தூக் கோவணஞ்
சமனுறச் செய்த வமர்நீதி யாரு
மனைவி யியலொடு வினைவினை யொரீஇக்
கைம்மலர் தடிந்த மெய்க்கிளை யன்பரும்
பூதி சடைமுடி சாதன நீறு
மும்மையா வுலகுஞ் செம்மையாண் டாரு
மம்மையு மப்புறு மெம்மையு மில்லா
னம்மையே யென்று மம்மை யாரு
மண்பெண் பொன்னென வெண்பெறு மூன்று
மொட்டறத் துறந்த பட்டினத் தடிகளு
மத்தி ரியார்க்குப் பத்தியி னூல
வட்ட மிசைக்கு மிட்ட நம்பியுந்
தங்குலத் துதித்த பொங்குபே ரிசையும்
வாய்ந்த சாத்திர கோத்திர முடையா
ராற்றுப் பெருந்தவப் பேற்றி னுருவெனக்
குன்றத் தூழான் பெயரிய வளர்தெரு கோத்திர
முதித்தவ வுலக மதித்தவன் பெரிய
ஞாலம ரிறைவன் பாலமர் தோகை
வீறணி மேனிய னாறணி சடையின்
னடியிணை யிரவியே கொடியவெம் பிறவி
மடியிருள் கெடுக்கு மிடனுடை யனவென
வெண்ணுறு மாபெரும் புண்ணிய மனத்தன்
மனமொழி மெய்க ளெனுந்திரி கரணந்
தம்மி னியற்று மும்மைத் தொண்டா

மனத்தின் வகைபெற நினைத்தல் வாக்கிற்
பாடுதல் கையி னடிப்புனை தலிற்
பண்டரு பாடற் றெண்டே சிறப்பென
ஆலவாய் குடந்தை மாலவா னெவ்வு
ளிடைமரு தம்பிகை யடைமா யூர
முதல் தலந்தொறும் வதியுறு மமலன்
பார்ப்பதி யைங்கரன் சீர்த்திறம் பலவகை
சித்திரக் கவிமுத லெத்திறக் கவியினு
மியற்றுறும் பெரிய வியற்றமிழ் நாவலன்
ராமசாமிச்சீர் நாமம் புனைந்தவன்
பவத்திற மறுக்குந் தவத்திற் றந்த
பெருமைவாய் தரூஉ மருமை மைந்தருள்
மைந்த னறிவு தந்தை யறிவெனு
முண்மையை விளக்கும் வண்மையிற் றமிழு
மாங்கில பாஷையும் பாங்குடன் கற்றவ
னெவ்வுளி னடியார் பையு ளடைந்தருள்
கணபதி மரைமலர்த் துணைத்தா ளொன்று
மோவா வன்புடன் பாவாற் றுதிக்குநன்
சலசலோ சனனென் றுலகம் புகழ்வோன்
றானுறு புலமை வானுற வோங்குபு
பாவல ரெனும்பெரு நாவலர் புகழ்தரப்
பொற்புறு மடவார் கற்பி னிலைமையு
மறுமணம் புணர்ந்துழி யறிவில ராய்முன்
மைந்தரைப் பின்னே வந்தவள் சொல்லின்
வாடுற வருத்து மூடர்க ணிலைமையு
மிடுக்கண் மேன்மே லடுத்துமிக வரினுஞ்
செம்மையி னீங்காத் தன்மையர் நிலைமையுங்
குலத்தி னளவினை நலத்தகு குணமு
மெய்துறு மென்றும் பொய்யுறு நிலைமையும்
சங்கையொன் றின்றி யங்கை நெல்லியி
னெளியரு மறிவுற வெளிய நடையி
னாங்கி லேயறா முங்கிய விதியின்
விரைசெய்ம் மாமலர்ச் சூரசாங் கியெனும்
நாடக மொன்று பாடமை தோழர்
செய்கென வாங்கே யொய்யென விரைந்து
கத்திய பத்திய மெத்திய சீர்த்தனை
சேர்த்துச் செய்தனன் கீர்த்தியஃ துறவே.

இவை
திருவெண்காடு
பிரமஸ்ரீ. சேஷசாஸ்திரியாரவர்கள்
குமாரர்
சுவேதாரணியசாஸ்திரியாரவர்கள்
சொல்லிய

எழுசீராசிரியச்சந்தவிருத்தம்.

பணிகொண்ட கண்டன் மலர்ப்பாத மேத்தி மனநெக்கு நைந்த கவியா
லணிகொண்ட திவ்ய பதிகங்கள் பாடி யருள்பெற்ற தூய புலவன்
பணிகொண்ட பத்தர் பரவெய்வுள் வாழும் பகர்கீர்த்தி யான பலவுங்
கணிகொண்ட நல்ல கவிபோது வல்ல கனராம சாமி யதுலன்.

ஷெ வேறு.

பெருந்த வந்தரு சலச லோசனன் பேசு நற்றமிழ் யாவரு
மருந்தி யுட்கொள வசம மிழ்ந்தனி யார்வு சேர்சர சாங்கியா
மருந்த கைப்புல வோர்கள் செய்கவி யழகு கொண்டவர் ளுடைக
திருந்து சொற்பொரு ளவிக ளார்தலிற் செந்த மிழ்க்கொரு திலகமே.

இவை
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்
தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ
வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள் மாணாக்கர்
சருக்கை ம-ா-ா-ஸ்ரீ
இராமசாமி ஐயங்காரவர்கள்
சொல்லிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பாடகத்தா ளல்லளொருஞ் சாராங்கித் திருக்கதையை பரிந்து நோக்கி
நாடகஞ்செய் தொருவற்றினுமே சிறந்ததென வெண்கூறி நாக வேந்து
மாடகப்பொற் கடிகைமணி முடிதுளக்கி நன்குபுகழ்ந் தசம கிழ்ந்தாற்
பீடுறுசீர் தனியுயர்ந்த பெரியார்முதற் பல்லோரும் பேசற் பாற்றே.

நேரிசை வெண்பா.

யாரி சிசீர்ந்தியவன் யார்ப்பயந்த தோன்றலிவ
சீருரையின் வண்டர்கா ணீடிலகி - னீரிலிய
தொண்டைநாட் டெல்வுணர்த் தய்ராம சாமியஞ்சே
யெண்சலச லோசனவே ளே.

முகவுரை.

சான்றோருடைத்தெனத் தமிழ்மூதாட்டியரான் எடுத்தோதப்பட்ட தொல்பெருஞ்சீர்த்தித் தொண்டைநாட்டிற்குத் தலைநகராகிய அம்பிகை யறம்வளர்த்த திருக்காஞ்சிபுரியின்கண் அரசுபுரிந்துவந்த கோலொருநாளுங் கோடாக் கொற்றவ னொருவனிருந்தான். அவன் சச்சந்தப் பெயரினன். பெண்ணெனத்தகும் பெண்கள் நாயகமொருத்தியைக் கடிமணம் புரிந்து அக்காரிகையிடமாய் விக்கிரமமும் வீரமுமுருவெடுத்தன்ன விக்கிரமவீரசேனர்களெனப்பெயர்பெற்ற ஈராண்குழவிகளையும் தாமரைதோன்றிய காமருகொடியெனுஞ் சாராங்கி நாமத்தளிரியலாய பெண்ணருங்கலமாம் பெண்மகவொன்றையும் பெற்றுக்களித்துப் பேருவகை பூத்தனன். சின்னாட்செல்லலும் சச்சந்தன் தன்றேவியை யிழக்குமாறு சம்பவித்தது. வஞ்சனைவடிவான கனகாம்புஜமெனும் கட்டழகியைமறுமணம் புரியவேண்டிக் குணநிதிப் பிரபுவுடன் கோமான்யோசிக்க, அவன் மக்களிருப்ப மணம்புரிதல் தகுதியன்று என்று அஞ்சாதிடித்துக்கூற அரசன் அவனிடம் வெறுப்புற்றுக் கடுஞ்சீற்றத்தனாய்த் தான்கொண்டதையே சாதித்துநின்றனன். அரசன் கட்டளையை யெதிர்பார்த்து நாட்டைவிட்டகல்வதே உசிதமென்றெண்ணியகுணநிதி, அரையன்மக்களையுமுடனழைத்துச் செல்லவேண்டுமென்று மெண்ணத்துடன் தகுந்த சமயம்பார்த்து மறைந்திருந்தான். இவ்வாறவன் கருதியது அம்மக்களிடத் தன்பினாலேயன்றி வேறன்று. அரசன் கல்யாணமகிழ்ச்சியிற் களியாட்டயர்ந்திருக்கையில், குணநிதி மக்களிருவரையுங் கவர்ந்து காட்டகத்தேகினான். பொறிசொடியினின்பத்தாழ்ந்த மன்னவன்புதல்வர்களைக் கவலியாது பூதந்தூக்கிப்போயிற்றென்று கவலைநீங்கிக் காலங்கழிப்பானாயினன்.

இங்ஙன மணந்தமணமகள் மாயக்கள்ளியாகையினாலே, தன்னாயகன் மூத்தாள் மகள்மேல் மிகுந்த அன்புடையனாதலைக் கண்ணுற்று அவ்வன்புடைமை நாட்டையவள் கொழுநன்வசமே கொடுக்கச்செய்யுமென்றறிந்து, முன்யோசனையோடு முதுந்தனென்னும் மூடத்தம்பியைத்தன்னிடம் அழைத்துவைத்துக்கொண்டு தான் அரசனைமயக்கித் தன்கைச் சூத்திரப்பாவையாக்கித் தன்னிஷ்டம்போல் அரசன் ராஜரீகம் நடாத்துமாறு செய்தாள். கனகாம்புஜம் சாராங்கியின்மேற் கண்ணையுங்கருத்தையுந்தவறாமல் வைத்திருந்தும் அரண்மனையிற் குழந்தையென வளர்ந்து வந்த அழகானந்தன் மேலிருந்த உழுவலன்பின் மேலீட்டினால், அவனே கணவனெனக் கருதிய

மங்கையும் சின்னாளில் யுவதித்தன்மையையடைந்தாள். அந்தகையாளொருநாள் தண்டலையிற்றனியே தங்கியவழி யாண்டெதிர்ந்த அழகானந்தனும் அவளைக்கண்ணுற்றுக் காதல்கொண்டான். அங்ஙனமிருவர்மனமுமொருவழிப்பட்டமையால் அவர்கள் காந்தருவமணம்புணர்ந்து *கழிபேருவகையுற்றார்கள். இதுநிற்க.

நாட்டைத் தன்வசமே செய்துகொள்ள வேண்டுமென்று நினைத்த கனகாம்புஜம் அவர்கள்காதலை யையுற்று அரசனுடன்கூறி அழகானந்தனை யப்புறப்படுத்துமா றியற்றித் தன்றம்பி மூட முகுந்தனுக்குச் சரசாங்கியைக் கல்யாணஞ்செய்யும்படி தீர்மானஞ்செய்தனள். சரசாங்கி தன்கணவன் ஊர்த்தப்பட்ட செய்தியை யுணர்ந்து, மிகவும் வருத்தமுற்றிருப்பச் சிறானையறியாள்போன்று அவளைக்கூட்டவழைத்துக்கொண்டு பொழிலிடைப்புக்குத் தேறுதல்கூறிச்சென்றனள். சரசாங்கி பின்னும்வருந்த நாயகியிடம் விடைபெற்றேகவேண்டுமென்றுவந்த அழகானந்தன் பிரிவதிவுறுத்தலும் அவள் ஆற்றுந்துயரத்தாழ்ந்து மூர்ச்சையாயினாள். அரசனுணையஞ்சிய அழகானந்தன் தன்னிட்டமிருந்த வளையொக்கையவள் கையிலணிந்து அவள் விரலிலிருந்த ஆழியைக்கழற்றி ஞாபகக்குறியாகத் தானுமணிந்து ஒன்றுந்தோன்றாது இலைத்தாவிற்குமளவிற் கனகாம்புஜத்தின் சூழ்ச்சியாலரசன் ஆண்டுப்போதரத் தஞ்சைமாபுரிக்குத் தனியேசென்றனன். அரசன் தன்மகளொழுக்கத்தைச் சிறிது மோவ்வாறுங் கடிந்துரைத்து அரண்மனையுற்றான். சரசாங்கியின் உயிர்ப்பாங்கியாகிய இந்துவதனை யவளைத் தேடிவர இருவரும் கனகாம்புஜம் வரும்வரையிலாண்டிருந்து பிறகு யாவரும் அந்தப்புரமேகினார்.

மற்றைப்படி சென்ற அழகானந்தன் தஞ்சைமாபுரியிற் சிநேகனான் ஜெயவீரன் வீட்டிற்றங்கினன். போம்வழியில் தன்னுயிர்த் தோழன் சுகுணனிடந் தன்காதலிக்கு ஒரு கடிதங்கொடுத்துச் சென்றனன். சரசாங்கியுங் கடிதங்கண்டு சிறிது மனத்தளர்ச்சியற்றுக் கணவன் க்ஷேமத்திற் கண்ணாயிருப்புழி முழுமகனான முகுந்தன் தன்னை மணம்புணரும்படி பலவாறு வேண்டியு மவள் கடிந்துரைப்ப வெருண்டுசென்றான்.

சதிங்ஙனமாக, ஜெயவீரன் வீட்டிற்றங்கிய அழகானந்தனும், துன்மார்க்கமே உருவாயமைந்த துன்மதியும் ஏனையோரும் ஒருதினம் உலகிற்பதிவிரதைகளுளரோவென்பதைப் பற்றிப் பேசியிருந்தார்கள். வேடிக்கைவினையாயிற்றொன்று முதுரைக்கேற்பச் சரசாங்கியைச் சோதிக்கும்படி அழகானந்தனுடன் பந்தயம்போட்டுத் துன்மதி அவ்வினைமேற் கொண்டு சென்றனன். துன்மதி சரசாங்கியின் கற்புநிலையைத்தெரிந்து ஒருதந்திரத்தால் அவள்பள்ளியறைப்புக்கு, அயர்ந்துறங்குங்காலையிற் கைவளையைக் கழற்றிக்கொண்டு துமன்றிச்சிலகுறிகளுமறிந்து அழகானந்தனிடஞ்சென்று பந்தயம் வென்று பழிப்பினையவள்தலையிறுத்துத் தஞ்சைமாபுரிக்குத்தலை

வனான சந்திரசேகரன் அரண்மனைக்குச் சென்றான். அரசனிடஞ் சென்ற துன்மதி சரசாங்கியின் எழிலையுணர்த்தி யவற்குக்காமவிகாரத்தை மூட்டிச் சரசாங்கியை மணமகளாகக் கொடுக்கும்படி அரசனுப்பத் தூண்டினான்.

அதன்பின்னர் அழகானந்தனோ தன்காதலி வாய்மை பிழைத்தாளென்று வருந்தி யவளைக்கொல்லத் தீர்மானித்து அவ்வினைமுடிக்கச் சுகுணனுக்குக் கடிதமெழுதியதன்றியும் தன்காதலி யவனோடுவந்து தன்னைப்பார்க்கும்படியாகவு மொருகடிதமெழுதியனுப்பினான். இதைக்கண்ணுற்ற சரசாங்கி சுகுணனுடன் ஆண்வேடந்தரித்துச்சென்றனள். நடுவழியில் உண்மையையுணர்ந்து பல்வேறுநிறத்தான் வேண்டியுஞ் சுகுணன்கொலைபுரிய மறுக்க அவன்றனியே தன்கணவனைக் கண்டுறும்படி சென்றபோது கனகாம்புஜத்தினால் அமிர்தசஞ்சீவியென்று கொடுக்கப்பட்ட மயக்கந்தருமருந்தைச் சுகுணன் கொடுப்பக்கொண்டேகி வழித்தப்பி யொருகுகையை யடைந்து சுந்தரன் என்னும் பெயர்பூண்டிருந்தாள். அக்குகை வாசிகளாகிய குணநிதி விக்கிரமன் வீரசேனன் என்பார்களிவளை யாதரித்துவந்தார்கள்

இஃதிங்ஙனமிருப்ப, சந்திரசேகரனால் அனுப்பப்பட்ட தூதன் காரியசித்தியின்றித் திரும்பினான். கனகாம்புஜத்தின் தந்திரத்தால் அரசன் சந்திரசேகரன் வேண்டுகோளிற்கியையாததுமன்றி மூடமைத்துனனுக்குத்தன் புத்திரியைக் கொடுக்க வொருப்பட்டுச் சரசாங்கியின தெண்ணமறிவான் அழைத்துவரும்படி மனைவியைவேண்ட அவள் சிங்காரவல்லி யென்னுந் தன் அந்தரங்கத்தோழியை யனுப்பச் சென்றவள் எங்குங்காணாது இந்துவதனையோடுங்கூறத் அரையனுக்கு மலேர்வியாகுலமுறுஞ் செய்தியையுரைக்க யாவருமவளைத்தேடிப் புறப்பட்டனர்.

இதற்கிடையில் முகுந்தன் அழகானந்தனுடையைத்தரித்துக் காட்டகத்துப்புக்கு வீரசேனனாலிறந்தொழிந்தான். சரசாங்கி நோயுற்றுச் சுகுணன் கொடுத்த மருந்தினையருந்தி மரணமூர்ச்சையாயினள். குகைவாசிகளாகிய குணநிதியையுள்ளிட்டார் இவளைச் சுந்தரா! சுந்தரா!! என்றழைத்தும் வாய்திறவாமையின் உயிர்துறந்தானென்று வருந்தித் தழைகளான் மூடி அருகிற் றலையற்ற முகுந்தனைக் காவல்வைத்துக் கலங்கிச்சென்றனர். சரசாங்கி மூர்ச்சைதெளிந்தெழுந்து தன்னிலையை நோக்கிக் கவன்றரற்றி வழிதேடித்திரும்ப முகுந்தனையுடையா லழகானந்தனென்றுன்னிப் 'பிராணநாதா' வென்றலறிக் கீழேவிழுந்து மயங்கிக்கிடந்தனள்.

சதிங்ஙனமாகக் காமவெற்றி வாழ்ச்செழும்வகை யறியாதியங்கிச் சரசாங்கியே புனைவென்று மனமுருகிய சந்திரசேகரனிடத்தில் தூதுவன் தச்சந்தன் கூறிய அனைத்தும் பொருதமனைத்துறையப்போர்புரியாவெண்ணி வச்சிரவாகுதேவன் என்னுஞ் சேனாதலைவனைச்சிறுபடையோடு முன்னனுப்பித் தான் பின்வருவானாயினான். செல்வழியிற்சோர்ந்திருந்த சரசாங்கியை யுடையாலழகிய சிறுவனென்றுன்னிய சேனாபதி தன்னிடம் வேலைக்காரனாயமைத்துத் தன்னுடனழைத்து வருவானாயினன்.

பிறகு நடந்த பெரும்போரிற் சச்சந்தன் பின்னிட அவற்கு, அழகானந்தன் நன்மதியினது அரப்போதனைகேட்டுக் காதலியைத் துறந்தோமென்று மனமுடைந்து, சமர்க்களத்திலறைந்துயிர் துறக்கு மனோநிரத்துடன் சந்திரசேகரனைக் கொன்று உதவியதன்றித் நன்மதியைத் தெய்வமுறிய வடித்துப் புகழ்பூண்டனன். அவ்வமயத்துத் தமதரசனுக்குக் குணநிதி விக்கிரமவீரசேனர்கள் ஒருங்கேயுதவிபுரிந்து பெருங்கீர்த்தி யுற்றனர். தஞ்சைநாட்டாரெல்லோரும் வச்சிரவாகுதேவனுடன்பிடிபட்டார்கள். பின்பு ராஜசபையில் உண்மையாவையும் ஒருப்படவிளக்க, சச்சந்தன் இறந்தமன்னர்களைக்கண் டானந்தங்கொண்டு சாரசாங்கியை அழகானந்தற்குமணமுடித்துத் தஞ்சையைச் சீதனமாகக் கொடுப்பதாகவும் நிர்மாணித்தனன். இத்தோடு நாடகம் முடிவுபெறுகின்றது.

இந்த நாடகமானது இந்துவாலிபநாடகசங்கத்தாருக்காக வெகுசீக்கிரமாய்ச்சொற்பவிதம் ஒருவாறியற்றப்பட்டது! இதன்கண் குற்றங்குறைகள் இருக்குமாயின் பேரறிவுடையோர் பிரியத்தோடும் அவையிற்றினைத் திருத்தி யெம்மீது கிருபை புரிவாராக.

தி. க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கடவுள் வாழ்த்து.

விநாயகர் வணக்கம்.

நேரிசைவெண்பா.

உலகமிவள் பத்தினியென் றோதுசர சாங்கிக்
குலமகள்சீர் நாடகமாக் கூறப் - பலகலைக்கு
மாதார மான வழுகன்வேண் முன்னோன்றன்
பாதார விந்தம் பணி.

நாமகள் வணக்கம்.

நேரிசைவெண்பா.

நண்ணும் புகழ்த்தொண்டை நாட்டரசன் மாமகளாக்
கண்ணமுதச் செஞ்சொற் சரசாங்கிப் - பெண்ணணங்கி
னாடகத்தைச் செய்ய நளினமலர் வாணிபத
நாடகத்திற் கொண்டு நனி.

நடராஜர் வணக்கம்.

நேரிசைவெண்பா.

நாடுவையே னெஞ்சே நடராஜ னுமியற்று
நாடகஞ்சீர் நண்ண நயந்தருள்வான் - நீடுபரி
பாகந்தாங் கன்பாற் பரிந்தே புலிமுனிமா
நாகந்தாங் காணு நடம்.

அவையடக்கம்.

நேரிசைவெண்பா.

சாந்த மணியாய்த் தரித்தவர்தஞ் சீர்பாத
மேந்து மனங்கொண் டெளியனேன் - பாந்தமிக
நண்ணுஞ் சரசாங்கி நாடகஞ்சொன் னேனன்னோர்
கண்ணியமாக் கொள்வார் களித்து.

விநாயகர் துதி.

இராகம் - நாட்டை. தாளம் - ஆதி.

பல்லவி.

கணபதியே சரணம் - கருணைசெய்வாய்
கணபதியே சரணம்.

அநுபல்லவி.

குணபூஷணப்ரதாபர் குறிக்குமூலா தரனே
குஞ்சரத்திருமுகங் கொண்டசுபா கரனே (கண)

சரணங்கள்.

முக்கனி சருக்கரை மோதகமென்று ருண்டை
முதிர்சுவைக்கரும்புடன்முழுத்தேங்காயுங்கற்கண்டைத்
தக்கவன்பர் படைத்துத் தருமண மலரிண்டை
சாத்திப்பூசிக்கவுண்ணுஞ்சதுருறுமெழிற் றொண்டைக் (கண)

அம்பிகை மடியிருந்தையன் செங்கையி னிடு
மாரமுற் பிழம்பையுண் ணருங்கனியென நாடுங்
தும்பிக்கையாலெள்ளைவையிச் சுந்தரர் சேர ஞேடுங்
துங்கக் கயிலை யுய்த்துச சுகம்பெற விளை யாடுங் (கண)

நற்றமிழ்ப் புலவர்க ளுள்ளங் களிக்க நல்ல
நங்கை சாசாங்கியின் நாடகந்தனைச சொல்ல
வுற்றிடுங் கஜமுகா பரனைப் [illegible] மெல்ல
வம்பர்கள் பதிவின்னி லோங்கிடச்செய்த வல்ல (கண)

சரஸ்வதி துதி.

இராகம் - மத்தியமாவதி. தாளம் - ஆதி.

பல்லவி.

சாரதாம்பா சரணம் - தயைபுரிவாய்
சாரதாம்பா சரணம்.

அநுபல்லவி.

நாரதாதி முனிவர்கள் நிதம் போற்றிடும்
நாவலர் மனவிருளைலம்பெற மாற்றிடும் (சார)

சரணங்கள்.

அன்ன வூர்திதன்நாவி லமர்ந்தொளிருஞ்செந் தேனே
அப்புயத்தவிசுறுமழகியமட மானே
பொன்னைமார்பிற்கொண்டமால்புகழ்மாமறைத் தானே
புகலுமணங்கே யுன்றன் பொன்னடிமற வேனே (சார)

உண்மைநிறை யடக்கமுயர்கல்வியுடன் சால
வொழுக்கமன்பு நிறைந்த வுத்தமர்மனம் போல
வெண்மையதாய்த் துலங்கு மெய்யினளே சுசீல
மேவும் பக்தர்களிடம் விளங்கிடுமனு கூல (சார)

கற்பொரு வடிவமாய்க் காசினியி லுதித்த
கவின் சரசாங்கியின் காதையை நன் குணர்த்த
விற்பன நாடகத்தால் விளம்பவெனது சித்த
மிசையிருந்தருள்கலை மின்னே மொழியி னித்த (சார)

நாடக பாத்திரங்கள்.

சச்சந்தன்:—தொண்டைநாட்டரசன்.
சந்திரசேகரன்:—சோழநாட்டரசன்.
அழகானந்தன்:—சரசாங்கியின் காதலன்; நாடகத்தலைவன்.
முகுந்தன்:—கனகாம்புஜத்தின் சகோதரன்.
சுகுணன்:—அழகானந்தன் நண்பன்; ஒருபிரபு.
துன்மதி:—சரசாங்கியைக் கெடுக்கமுயன்ற கொடியன்.
ஜெயவீரன்:—அழகானந்தன் நண்பன்.
குணநிதி:—தொண்டைநாட்டுப்பிரபு.
விக்கிரமன், வீரசேனன்:—சச்சந்தன் புத்திரர்.
வச்சிரவாகுதேவன்:—சோழநாட்டுச்சேனாதிபதி.
கனகாம்புஜம்:—சச்சந்தன் மனைவி.
சரசாங்கி:—சச்சந்தன்மகள்; அழகானந்தன்காதலி; நாடகத்தலைவி.
சிங்காரவல்லி:—கனகாம்புஜத்தின் தோழி.
இந்துவதனை:—சரசாங்கியின் தோழி.
ஏமவதி:—அரண்மனைச் சிலதிப்பெண்.

பிரபுக்கள், மதுரை நெல்லை சேலவாசிகள், வைத்தியர், சேவகன், தூதன், மந்திரி, படைவீரன், சேனைத்தலைவர், காவலாளர், போர்வீரர், முதலாயினோர்.

நாடகநிகழ்விடம்.

பெரும்பான்மை தொண்டைநாட்டுத் தலைநகராகிய
காஞ்சியிலும் அதற்கடுத்த காட்டிலும்:
சிறுபான்மை சோழநாட்டுத்
தலைநகராகிய
தஞ்சையிலுமாம்.

சரசாங்கி.

அங்கம்-I.

முதற்களம்.

இடம்:—காஞ்சியிலோர் உத்தியானவனம். காலம்—மாலை.

நடர்:—கனகாம்புஜம், சரசாங்கி.

கனகாம்புஜம்:—என்மணே! சரசை! நீ ஏன் துக்கப்படுகின்றாய்? உலகில் தாய் தந்தையர்கள் தம்அருமைமக்களைக்கண்டிப்பது அவர்கள் நன்மைக்காகவன்றோ? வயிற்றிற்பிறந்த பெண்ணைக்காட்டிலும் உன்னை எத்தனையோ மடங்கு பாராட்டிச் சீராட்டி வருகிறேனே! யான் உலகிலுள்ள மாற்றாந்தாய்போல்வா சீராட்டு செய்கிறேன்?— அரண்மனையில் உன் அண்ணனைப்போல் வளர்ந்துவந்த அழகானந்தனைக்காணாமல் வருந்தமுறுகின்றாயோ? அவன் நெறிதப்பி நடந்தபடியாலல்லவோ உன் தந்தையார் கோபித்து ஊரைவிட்டுத் துரத்திவிட்டார்! ஆயினுமென்? மகாராஜாவிடஞ் சொல்லி அவனை மன்னிக்கும்படி செய்கிறேன். நீ வருந்தவேண்டாம். இதோபார்! சந்திரன் எவ்வளவு அழகாகப்பிரகாசிக்கிறான்! சண்பகபுஷ்பங்களினின்றும் எவ்வளவு திவ்வியமானவாசனை வருகின்றது! மந்தமாருதம் எவ்வளவு சுகமாகவீசுகின்றது! கண்மணே! யான்சற்று அந்தப்புறம் சென்றுவருகின்றேன். அழாதே! போய்வரட்டுமா?

(கனகாம்புஜம்போதல்.)

சரசாங்கி:—ஐந்து தந்திரங்களோடு ஆறுவது தந்திரமுங்கற்றநீலி! குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதுபோல, எந்தைக்குக்கோபத்தையும் மூட்டிவிட்டு, எனக்குத்தேறுதல் கூறுகின்றாளே! ஈசா! என்னைச்சற்றேனும் இரக்கமில்லாதவர்களிடங் காட்டிக்கொடுத்துவிட்டாயே! யான்யாரை நோவேன்? என்னை நோவேனோ? விதியை நோவேனோ? பின்யாரை நோவேன்? ஐயோ! என்னைவிட்டுப் பிரியமாட்டேனென்று வாக்களித்த பிராணநாயகரும் ஒருவார்த்தை கூடச்சொல்லாமல் தேசாந்தரம் போய்விட்டாரே! பிராணநாதா! முன் நாமிருவரும் இந்த நந்தனவனத்திலே கொஞ்சிக்குலாவியதை எப்படித்தான் மறந்துவிட்டீரோ! அதே நந்தனவனத்திலேயும்மை நினைந்து நினைந்து அனலிலிட்டமெழுகு போலுருகியுருகி யழவுந்தெய்வந் திருவுளங் கொண்டதோ!......

(பாடுதல்)

இராகம் - சகானா. தாளம் - ஆதி.

பல்லவி.

தெய்வமேநா னென்ன செய்வேன்
சித்தங் தியங்குமெங் குய்வேன்.

அநுபல்லவி.

கைவரும் பொருளை விட்டுக்
கலங்கினேன் துயர்ப் பட்டு (தெய்வமே)

சரணங்கள்.

மனதிற் குகந்த நேசன்
மறவாத விசு வாசன்
தனைமறந் திங்கே வாழுந்
தன்மைடி யொழிந்தேன் பாழுந் (தெய்வமே)

இன்பொழிந்த பெண் ஜன்மம்
எடுப்பதே பெருங் கன்மம்
அன்புகொண் டதும் பொய்யோ
அறியே னறியே னையோ (தெய்வமே)

கொடுமதியாள் சிற் றன்னை
கூறி யதைக் கேட் டென்னை
விடச் செய்தன னென் னாவி
வேந்தனைத் தந்தைப் பாவி (தெய்வமே)

ஆ! பாழ்ந்தெய்வமே! என்னை யேன் உயிரோடுவைத்திருக்கின்றாய்? பிராணநாதா!—உம்மைப்பாராத கண்களும் கண்களோ! என்று காணப்போகின்றேன்! என்று காணப்போகின்றேன்!! ஐயோ! உமது செந்தாமரைபோன்ற திருமுகத்தைக் காட்டாவிட்டால் உயிர் துறப்பேன்! இது நிச்சயம்!

(அழகானந்தன் "என்னுயிர்க்காதலீ" யென்று கூவிவருகின்றான்)

சரசாங்கி:—பிராண........நாதா! (வேறொன்றும் பேசமுடியாமலவனை யாலிங்கனஞ் செய்தவ்வண்ணமே நிற்கின்றாள்.)

அழகானந்தன்:—கண்ணே! யானிப்பொழுதே இந்நகரத்தை விட்டகலவேண்டும். ஆதலின் எனக்குத்தாமசமின்றி விடைகொடு. யான் அதிசீக்கிரத்தில் திரும்பிவருவேன். ராஜாக்ஞையோ பொல்லாதது.

போய்வருகிறேன். தாமசம்வேண்டாம். சீக்கிரமாகவிடையளி. போகட்டுமா? (சரசாங்கி மூர்ச்சையாகின்றாள்.) என் கண்முன்னாலேயே நீ மூர்ச்சித்து விழும்படியாக கொடுஞ்சொற் சொல்லும்படி நேர்ந்ததே! என்ன ஈரமில்லா நெஞ்சின னாய்விட்டேன்! இதுகாறும் இறவாமலிருந்த யான் சிறிதும் அன்பில்லாதவனே யானேன்!........(மௌனம்) யான் விரைந்து செல்ல வேண்டுமே! பட்டகாலிலேயே படுமென்பதுபோல என் துக்கம் மேன்மேலு மதிகப்படுகின்றதே! யான் எப்படி யுன்னைவிட்டுப் பிரிவேனோ?

(பாடுதல்.)

இராகம் - தேசிகத்தோடி. தாளம் - ஆதி.

பல்லவி.

எப்படி யுனைப் பிரிவேன்
என்னாசை நாயகி.

அநுபல்லவி.

இப்படியும் வரு மென்றே
எண்ணினே னலனே யின்றே (எப்படி.)

சரணங்கள்.

முழுக் கொம்பின் றே லுடைந்து
மூடவன் கையி லடைந்து
ஒழுக் கெடுத்தே மண் பட்டு
ஒழிந்ததைப்போல் நான் விட்டு (எப்படி)

அமுதே நின் மொழி யென்றும்
அகலாதென் மன நின்றும்
நம தெண்ணம் நிறை வேறு
நாள்வரு மட்டும் வீற (எப்படி.)

உள்ளன்ப முத மாதே
உயிர் சோர்ந் திருக்கும் போதே
கள்ளனைப் போல வேங்கி
காடுகர் தனை நீங்கி (எப்படி.)

யாவெல்விதமும் பிரிந்துபோக வேண்டியது தான். ஏ! வண்டுகளே! என் காதலிக்கு யான் வருவே னென்று தெரிவிக்க சொல்வீரோ? என் செய்வேன்! என் செய்வேன்!! உன்மத்தம்பிடித்தவனானேனே! இது (கைவளை யொன்றையவள் காத்தி லணிகின

ருன்) உனது மெல்லிய தளிர் போன்ற கரத்தில் ஞாபகமாக இருக்கட்டும். பகலாய் ஜொலிக்கும் வெட்கும்படியான உன் கை விரலிலுள்ள மோதிரத்தை யான் கழட்டிக் கொள்கின்றேன்! (அவள் மோதிரமொன்றைக் கழற்றித் தானணிந்து கொள்கின்றான். உடனே அதைப்பார்த்து) தெய்வமே என்னைக் காப்பாற்ற வேண்டும். மூர்ச்சித்துக் கிடக்கின்ற உன்னை விட்டு யானெப்படிச் செல்வேன்! என்மன மெழுந்தாலும் என்கா லெழவில்லையே! என்னெஞ்சம் பதறுகின்றதே! ஐயோ! ஈசா! (நாலடி நகர்ந்து வருகின்றான்.)

(சச்சந்தன் வருதல்.)

சச்சந்தன்:—அழகானந்தனோ இங்கு நிற்கின்றவன்? என் கட்டளையை மீறி நடப்பவன் நீதானோ? அரண்மனையில் நீ குழந்தைபோல் வளர்ந்துவந்தவனானபடியால் உன்னைக் கொல்லாது ஓடிப்போகும்படி ஆக்ஞாபித்தேன்! (கனகாம்புஜம் மற்றொரு பக்கம் வர) இனி ஒரு நிமிஷமாவது தாமதித்து இங்கு நிற்பாயே யானால் எனது வாளுக் கிரையாகி விட்டாய்! நில்லாமல் விரைந்து செல்வாய்! (அழகானந்தன் போக அரசன் திரும்பிக் கனகாம்புஜத்தைப் பார்த்து) எங்கே நம்புதல்வி?

கனகாம்புஜம்:—சற்று முன் இங்கிருந்தாளே! சரசே! எங்கிருக்கின்றாய்? (சுற்றித் திரும்பிப் பார்த்து) இதென்ன கோலம்?

சச்சந்தன்:—நமது குமாரத்தியா! இந்தவிடத்தில்! இந்நேரத்தில்! என்ன இந்த அநியாயம்!

கனகாம்புஜம்:—மகாராஜா! நான் முன்னமே தங்களிடத்திற் கூறவில்லையோ? நம்பமாட்டேனென்றீர்களே! இப்பொழுது பார்த்தீர்களா? தங்கள் குமாரத்தியை மெச்சி மெச்சி யுச்சியிலே வைத்துக்கொண்டீர்களே! பொய்த் தூக்கமல்லவோ தூங்குகின்றாள்!

சச்சந்தன்:—சரிதான். நீ சொல்லிய வெல்லாம் நிஜமே. நீ அந்தப்புரத்திற்குச் செல். இதோ விரைந்து வருகின்றேன்.

(கனகாம்புஜம் போதல்.)

என் பழமையாகிய குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பாய் என் வயிற்றிற் பெண்ணெனப் பிறந்த இந்தப் பாவியை இவ்வாளினால் இரு துண்டமாய் வெட்டி யெறிந்தாலென்ன? எனக்கும் என் சுற்றத்தார்க்கும் என்றும் மீளாப் பழிச் சொல் ஏற்றிவைத்த இவளோ எனக்குப் புத்திரி? இப்படிப்பட்ட அவமானத்தை யடைந்த பின்னரும், உயிரை வைத்திருக்கலாமோ? ஐயோ! இவளைக் கொல்லும்படியாக புஜம் துணிக்கும், புத்திரி வாஞ்சை என்னைச் சுற்றிக் கொண்டு என் கையை எழும்படி செய்யவில்லையே! என திரண்டு அருமைப் புத்திரர்களை யிழந்த துக்கத்துக்கு

மேலான கொடுந் துயர்க்காளாக்கி யுறங்குகின்றாயோ? உறக்கத்தினின்னும் விழியாமலே ஈங்கு இறவாயோ?—ஐயோ! என் மனந் துடிக்கின்றதே!—யான் நின்னை கொன்று கொள்வதிற் பயனென்னை? என் தலை விதி யுன்னை யெனக்கு மகளாகப் பிறப்பித்தது! (யோசனை செய்து கொண்டு இரண்டடி நடக்கின்றான்) உன்னைக் கொல்லவும் மனமில்லை.—

(சிங்காரவல்லி வருதல்.)

சிங்காரவல்லீ! ஏனிங்கு வந்தனை?

சிங்காரவல்லி:—மகாராஜா! தங்களை ராணியவர்கள் உடனே பார்க்க வேண்டுமென்று சொல்லி வரும்படி என்னை யனுப்பினார்கள்.

சச்சந்தன்:—கனகையா உன்னை யனுப்பினாள்? ஆயின் இதோ வந்துவிட்டேன்!

(சச்சந்தனும் சிங்காரவல்லியும் போதல்.)

சரசாங்கி:—(சற்றுக்களை தீர்ந்து) பிராணநாதா!—(கண்ணைத் துடைத்து விழித்துப் பார்த்து) விளையாடுகின்றீரோ? இப்பொழுது தானோ என்னுடன் விளையாட வேண்டும்? பேதையாகிய என்னிடத்தில் உமது வல்லமையைக் காட்டுவது தகுதியோ? யானிவ்வளவு தூரம் இரங்கிக் கேட்டுக் கொள்ளுகின்றேனே! என்மேல் உமக்குச் சிறிதேனுங் கிருபை யில்லையோ? யாருமே!... இன்னும் என் மீது உமக்குக் கோபமோ? ஐயோ! உம்மை இந்த நந்தனவனத்தில் எந்த மூலையிற் றேடிப் பிடிப்பேன்! நாவும் உலருகின்றதே! பிராண நாதா! பிராண நாதா!! சந்தடியையே காணுமே! இவ்விடத்தில் பிராணநாத ரிருந்தால் இந்நேரம் வந்திருக்க மாட்டாரோ? யான் கனவோ காண்கின்றேன்? இல்லையே! நனவுடனிருக்கிறேனென்று தோன்றுகிறதே! பின்னே எங்கே என்னருகில் நின்ற பிராணநாதர்? என் கண்ணை ஏதும் மறைக்கின்றதா? (கண்ணைத் துடைக்கும் பொழுது கையிலிருந்த வளையைக் கண்டு) இஃதென்ன என் கையில் வளை யொன் றிருக்கிறதே! இதை யான் வரும்போதணிந்திருக்க வில்லையே! யார் என் கரத்தி லணிந்திருக்கக் கூடும்? (கழற்றிக் கீழே வைக்கிறாள்) ஐயோ! படுபாவி சிற்றன்னை என்னைக் கொல்லுவதற்குச் செய்த சூழ்ச்சியோ? ஆம். அவள்தான் இங்கு வந்திருக்கக் கூடும். பின் யார் இங்கு வந்திருப்பார்கள்? இவளைக் கண்டதும் பிராணநாதர் போய்த்தானே யிருப்பார்? பிராணநாதா!

(பாடுதல்.)

இராகம் - எதுகுலகாம்போதி. தாளம் - சாப்பு.

பல்லவி.

நாதா நீ எங்குற்றாயோ - என் பிராண
நாதா நீ எங்குற்றாயோ

அநுபல்லவி.

காதார் மலர்ச் சோலையிற் றனியாய்ப் புலம்ப நீதி
தானோ வுமக்கிதனாற் றங்கிடுமோ ப்ராக் யாதி (நாதா)

சரணங்கள்.

என்னைப் பிரிந்திடவென்ற சிரக்கமது சிந்தித்து
மில்லாமற் றனிவிட்டிங் கேகிலார்போல் வந்தித்து (நாதா)

மணியு மொளியும்போல மலரு மணமும் போல
மருவியிருந்த வென்றன் மனமுருகவே சால (நாதா)

ஆதார முனை யன்றி யவனியில் வே றுண்டோ
அடியாளிடத்திற் பிழை யமர்ந்ததும் எது கண்டோ (நாதா)

என்ன செய்யப் போகிறேன்? என்னுயிரை விட்டு விடலாமென்று பார்த்தாலும் அதுவும் உம்முடையதே யாகையினாலே, உம்முடைய உத்தரவின்றி யானெப்படி யதைத் துறப்பது? பாக்கு வெட்டியி லகப்பட்ட பாக்கைப்போல் நிலை குலைகின்றேனே! உம்மைப் பின் றொடர்ந்து வரலாமென் றிருந்த என்னையும் விட்டுப் போய் விட்டீரே!—நீர் சென்றதைப் பற்றி யாரைக் கேட்டு யான் தெரிந்து கொள்வேன். இப்பூங்காவனத் துள்ளவைகளைக் கேட்பேனோ?

(பாடுதல்.)

"வாவு மிளமான்காள் மயில்காள் மடப்பிடிகாள்
கூவுங் கரிய குயில்காள்மென் புள்ளினங்காள்
ஆவியென மேவி யகலே மெனவகன்ற
காவலன்றான் போன வழியெனக்குக் காட்டீரே."

"நிரைவீ ழருவிந் நிமிர்பொன் சொரியும்
வரையே புனலே வழையே தழையே
விரையார் பொழிலே விரிவெண் ணிலவே
புரையி லுயிர்கா வலனுள் வழியே."

ஏ! முல்லைக் கொடிகளே! கணவனை யிணைந்து இப்படியும் ஒரு பெண் ஏங்குவாளோ வென்று என்னை நகையாடி யிகழ்கின்றீர்களே! இகழாமல் எனது வேண்டுகோளுக் கிரங்கி நீர் தலை யசைத்துச் சென்ற வழியைக் காட்டினீ ரானல், என்றும் உம்மை மறவாத எனக்குப் பேருதவி புரிந்தவராக மாட்டீரோ? ஏ! வண்டுகளே! என் கணவனும் யானும் கொஞ்சிக் குலாவியபோது, உம்

முடைய பாட்டைக் கேட்டுப் புகழ்ந்து புகழ்ந்து பேசினேனே! அதற்குக் கைம்மாருக வாவது அவர் சென்ற விடத்தைப் பறந்து காட்டுவீராயின் உம்மைச் சிரத்திற் சூடிக் கொள்ளேனோ! ஏ! அன்றிலே! நீயுங் கூறமாட்டாய். கணவனைப் பிரிந்து உயிர் வாழ்ந்து வருந்தி யிருந்தா லல்லவோ, எனக்குக் கூறுவாய்...... உன்னை யான் கோவதிற் பயனென்ன? ஏ! வன தேவதைகாள்! நீங்களாவது சொல்வீரோ? கால தாமதஞ் செய்வீராயின் ஒரு பெண்ணைக் கொன்ற பழி நும்மைச் சாரும். யான் உயிர் துறக்கப் பார்த்திருப்பதும் பாதக மல்லவோ? ஏ! சந்திரா! என்னைப் பார்த்தால் சொல்லிவிடவேண்டி வருமென்கிற தாட்சணியத்திற்குப் பயந்து மேகமாகிய போர்வை போட்டுக்கொண்டு மறைந்து நிற்கின்றாயோ? யான் எவ்வளவு கத்திக்கத்தி நாவுலர்ந்தும் நீங்கள் இரங்கமாட்டீர்கள். ஏ! மனமே! நீயும் மயங்கி எனக்குத் தீங்கிழைத்தாய்! இனி இந்த ஆபரணங்கள்தா மெனக் கென்னத்திற்கு! ஏ! ஆபரணங்களே! கணவன் பிரிந்து சென்ற பிறகு நீங்களேன் இவ்வுறுப்புகளிற் றங்கி யிருக்கின்றீர்கள்? நீங்களும் பிரிந்து போகவேண்டியதுதான். (ஒவ்வோ ராபரணமாய்க் கழற்றிக் கீழே வைக்கிறாள். மலர்மாலையையும் உதிர்த் தெறிகிறாள். கையில் மோதிரத்தைக் கழற்ற அது அங்கில்லாததைக் கண்டு திகைத்து) இதுவும் சிற்றன்னை செய்த சூழ்ச்சியோ? ஐயோ! என்னன்னை கொடுத்த வயிர மோதிரமாயிற்றே! இதையும் யான் துறக்க விதி நேர்ந்ததோ? என் துக்கம் அளவில்லாம லதிகப்படுகிறது. யானே என்னைத் தேற்றிக் கொள்ள வேண்டியதுதான். பின் யார் என்னைத் தேற்றப் போகிறார்கள்? தோழி இந்துவதனை ஒருவேளை தேடி வரலாம். அவளும் இப்பொழுது அசட்டைதானே செய்வாள் (இந்துவதனை வர) இந்துவதனே! (என்று அலறி யவளருகிற் செல்கின்றாள்.)

இந்துவதனை:—அம்மா! கண்களெல்லாம் என்ன கோவ்வைப்பழம் போலச்சிவந்து தோன்றுகின்றனவே? ஏனம்மா நீங்க ளிப்படி யழ வேண்டும்? அரண்மனை முழுமையும் தேடிக்காணுமல் இங்குவந்திருக்கலாமோ வென்றல்லவோ பார்க்கவந்தேன். இரவில் நெடுநேரமாய்விட்டதே! ஏன் துக்கப்படுகிறீர்கள்?

சரசாங்கி:—உன்னிடங் கூறுமற் பின் யாரிடந்தான் கூறப்போகின்றேன். இப்பொழுது எனக்குக்களையாக இருக்கின்றது.

இந்துவதனை:—அம்மா! யாரோ வொருவர் தங்களுக்குக் கடிதங்கொடுக்கும்படியாகத் தலைவாயிலில்வந்திருக்கிறார்! வாங்கிவரவா?

சரசாங்கி:—நீபோய் இப்பொழுது பார்க்கமுடியாதென்று சொல்லிவிடு.

இந்துவதனை:—கடிதத்தையாவது வாங்கிவரட்டுமா?

சரசாங்கி:—வாங்கி நீயே வைத்துக்கொள். என்னால் இப்பொழுது படித்துப்பார்க்க முடியாது. (இந்துவதனைபோதல்) கடிதம் யார் எனக்கு எழுதப்போகிறார்கள்? எழுதத்தக்கவர்கள் ஒருவரும் இல்லையே! இதுவும் சிற்றன்னை தந்திரந்தானோ? சொல்லத்தானேபோகிறாள். இவ்விதத் துன்பங்களையெல்லாம் அனுபவிப்பதைவிட இறப்பதே நலம். தமக்கும் பிறர்க்கும் ஆக்கம் என்ன இருக்கிறது?

(இந்துவதனைவருதல்)

இந்துவதனை:—அம்மா! நாளைவந்து தங்களைப்பார்க்கவேண்டுமாம். கடிதத்தைமட்டும் வாங்கிப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

சரசாங்கி:—பெண்ணே! எனக்கு அதிக களையாயிருக்கிறது, ஒன்றுந் தோன்றவில்லை.—

இந்துவதனை:—ஜலங் கொண்டுவரட்டுமா அம்மா?

சரசாங்கி:—வேண்டாம். சற்றுட்கார்ந்தாயே யானால் உன் மடியின்மீது சிறிது நேரம் நித்திரைசெய்கிறேன்.

(கூறிய வண்ணமே இந்துவதனை மடியில் நித்திரைபுரிகின்றாள்)

இந்துவதனை:—தாயைப் பார்க்கிலும் பன்மடங்கதிகமாக என்னைப்பாராட்டிச் சீராட்டிவரும் இம்மங்கைக்கு இவ்விதமாகத் துக்கப்படும்படியான காரணம் என்ன நேர்ந்திருக்கவேண்டும்? ஒருநாளும் கண்ணீர் விட்டதைப்பார்த்ததே இல்லையே! எதையாவது கண்டு பயந்தாளோ? தகப்பனார் தாம் வைதாரோ? சிற்றன்னை கோபித்துக் கொண்டாளோ? ...அரண்மனைக்குச் சென்றதும் திருஷ்டிகழிப்பேன். சாயங்காலவேளையில் என்னுடன் பந்தாடுவதைய மறந்து இனியுடன் வார்த்தையாடுவதையுந் துறந்து இந்த நந்தவனத்திலே இந்நேரம்வரையும் இருந்தாளே! என்னகாரணம்? ஒருவேளை அழகானந்தனை நினைந்து இங்குவந்து அங்கித்துக் கொண்டிருந்தாளோ? இருக்கலாம். 'என்னின்னுயிரினுஞ் சிறந்தவ'னென்றெத்தனைமுறை கூறியிருக்கின்றாள். யானும் மறந்தேனே!—

(கழற்றி வைத்திருந்த நகைகளைப்பார்த்து)

'இதென்ன பளிச்சென்கிறதே! முத்து மாலைபோல் தோன்றுகிறதே! அதென்ன மலர்மாலையோ? ஆம். பதிவிரதைகளுக்குப் புருடனைப்பிரிந்திருக்கும் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமென்கிறார்களே! புஷ்பமும் ஆபரணங்களும் அணியமாட்டார்களென்கிறார்களே! இவளிடத்திலேதான் அந்தத்தன்மையை இன்று கண்டேன். உலகத்தில் சிலபெண்கள் கணவன் எப்போதுவெளியே போவானென்று எதிர் பார்த்திருந்து தெருவில்வந்து முகங்காட்டுகிறார்களே! (கனகாம்புஜமும் சிங்காரவல்லியும் வருதல்)

கனகாம்புஜம்:—இந்துவதனை! என்ன உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?

இந்துவதனை:—இல்லை. தமது குமாரத்தியை எங்குந் தேடிக்காணாமல் இங்குவந்து பார்க்க களைத்திருந்தார்கள். களையாயிருக்கிறதென்று என்மடிமீது சயனித்துக் கொண்டார்கள்.

கனகாம்புஜம்:—களையாயிருக்கிறதென்று சொன்னால் உடனே அரண்மனைக் கல்லவோ அழைத்துவரவேண்டும்?

இந்துவதனை:—இல்லை..........

கனகாம்புஜம்:—எதிலும் இப்படித்தானே! உனக்குச் சிறிதேனும் புத்தியிருக்கிறதோ? (சிங்காரவல்லியைப் பார்த்து) சிங்காரவல்லி! நீ சென்று பனிநீர்ச் செம்பும் விசிறியும் எடுத்துக்கொண்டு அதிசீக்கிரத்தில் ஓடிவா.

சிங்காரவல்லி:—இதோ வந்துவிட்டேன். அம்மணி!

(சிங்காரவல்லி போதல்.)

கனகாம்புஜம்:—(இந்துவதனையைப் பார்த்து) வனதேவதைகளைப் பற்றிச் சிறிதும் யோசிக்கவில்லையோ? சந்திரனும் மறைகின்ற சமயமாய் விட்டதே! நாழிகை இவ்வளவாகியும் இங்கிருப்பது தகுதியோ?—(அவள் மறுமொழி கூறுவாளோவென்று சிறிது நிதானித்துப்பிறகு) பேசாமலிருப்பதே நன்மையென்று நினைத்துக் கொண்டிருக்கின்றாய்?—(சிங்காரவல்லி விசிறியும் பனிநீருங் கைக்கொண்டுவருதல்.)

சிங்காரவல்லி! பனிநீரையும் விசிறியையும் இப்படிக் கொடு.

சிங்காரவல்லி:—யான் விசிறுகின்றேனே!

கனகாம்புஜம்:—வேண்டாம். கொடு. (அவள் கையினின்றும் வாங்கிப் பனிநீரைச்சரசாங்கியின் முகத்திற் றெளித்துச் சந்தன விசிறியால் விசிறுகிறாள்.)

சரசாங்கி:—(மூர்ச்சை தெளிந்து) இந்துவதனை! அரண்மனைக்குச் செல்வோமா?

கனகாம்புஜம்:—சரசா! எழுந்திரு. வருகிறேனென்று போன யான் மறந்தாற்போல் அரண்மனைக்குப்போய் விட்டேன். நீ அந்திக் காலத்தில் வழக்கம்போல் அரண்மனைக்கு வந்திருப்பாயென்றல்லவோ நினைத்திருந்தேன். என் சொற்படி தவறாது நடக்க வேண்டுமென்று நினைத்தாலும் நீ யுக்தாயுக்தம் பார்க்கவேண்டுமல்லவோ? வா! போவோம்.

(யாவரும் போதல்.)

இரண்டாங்களம்.

இடம்:—காஞ்சியில் இராஜவீதி. காலம்:—காலை.

நடர்:—முகுந்தன், பிரபுக்கள்.

முதற்பிரபு:—புதிய மாப்பிள்ளை! வாரும். (மண்ணைச் சுட்டிப்) பலகாரம் நன்றாயிருந்தது போலும். என்ன உத்தரிய மெல்லா மண்ணா யிருக்கின்றதே! என்ன விசேஷம்? அதி காலையிலேயே இவ்வழியாய் வருகின்றீரே!

இரண்டாம்பிரபு:—(தனக்குள்) மாப்பிள்ளை மண் தின்றார்! கேட்க வேண்டுமோ பிள்ளையின் திறம்? இது ஆனிப்பிள்ளை தென்னம்பிள்ளையா? அன்று. மாப்பிள்ளை. தலை யுடையாமல் வந்து சேர்ந்தது அக்காளுக்குச் சந்தோஷந்தான்.

முகுந்தன்:—ஐயா! நானெங்கே பலகாரஞ் சாப்பிட்டேன்? அழகானந்தனோடு முட்டி யுத்த மல்லவோ செய்தேன்!

முதற்பிரபு:—முட்டி யுத்தமா செய்தீர்! பின்னே இங்கு எப்படி வந்து சேர்ந்தீர்! தெற்கே உங்களூருக் கல்லவோ வழி யிருக்க வேண்டும்? (அடிபட்டுக்) கெட்டு அக்காள் வீட்டிற்கு வரலாமோ?

இரண்டாம்பிரபு:—(தனக்குள்) முட்டி யுத்தம்! பேர் யார் கற்றுக் கொடுத்தார்கள்? மட்டிப் பயலுக்கு முட்டி யுத்தமோ? முட்டி யுத்தஞ் செய்திருந்தால் பிழைத்து வருவது கஷ்டந்தானே!

முகுந்தன்:—இதற்குள்ளே இரண்டுபேர் நல்லவர் வந்து தடுத்து விட்டார்கள்!

இரண்டாம்பிரபு:—(தனக்குள்) புரட்டிப் புரட்டி யுதைத்தாலும் இவனுக்கு மீசையில் மண்படவில்லையாம்!

முதற்பிரபு:—அப்படியா! அதனாலேதான் பிழைத்தீர். இல்லாவிட்டால் வைவச்சுத பட்டினத்திற்கு யாத்திரை போயிருக்கமாட்டீரா?

முகுந்தன்:—ஆம் போயிருப்பேன். போயிருப்பேன்.

முதற்பிரபு:—ஆம் போயிருப்பேன்! சரிதான். அதிருக்கட்டும். எப்போதையா கல்யாணம்?

இரண்டாம்பிரபு:—(தனக்குள்) கல்யாண மேது கல்லெடுப்புத்தான்.

முகுந்தன்:—அந்தப் பயல் பயந்தல்லவோ ஓடிப்போய் விட்டான்? இனி விவாதந்தான்.

(விவாகந்தான்என்பதைவிவாதந்தான்என்று வாய்தவறிச் சொல்கின்றான்.)

முதற்பிரபு:—விவாதந்தான்! தடை யென்ன? விவாதத்தைப்பற்றி இனிக் கென்ன விவேக சூனியந்தான். நீர் சொல்வதில் ஏதாவது பிசகிருக்கின்றதா? நீர்சொன்னது சொன்னபடியே நடக்கப்போகிறது

இரண்டாம்பிரபு:—எலி வளை யல்லவோ தேடிக்கொண்டிருக்கிறான் உமக்குப் பயந்து ஒளித்துக் கொள்வதற்கு.*

முகுந்தன்:—தடை யென்ன? சரசாங்கிதான் என் பெண்டாட்டி.

இரண்டாம்பிரபு:—ஒதியமரம் உத்திரத்திற்கானால் நீயும் அவள் புருஷன்தான்.

முகுந்தன்:—இல்லை ஐயா! அவளுக்கு அழகுக்குத் தகுந்த புத்தியே யில்லை.

முதற்பிரபு:—ஆமாம் ஐயா! நீர் சொல்வதில் ஏதாவது பிசகிருக்கிறதென்று சொன்னேனா? ஆம். அவளுக்கு அழகுக்குத்தகுந்தபடி கெட்டபுத்தி இல்லவே இல்லை.

இரண்டாம்பிரபு:—ஐயோ! பாவம்! புத்தி உலக்கைக் கொழுந்தும் குந்தாணி வேருமாய்த்தெற்கு வடக்குகளிலன்றோ ஓடுகின்றது? உம்முடைய புத்திக்கு அவள்புத்தி ஈடாமா? சீ! அப்படிச் சொல்லலாகாது.

முகுந்தன்:—இங்குவாருமையா? என்னவோ குந்தாணி உலக்கை என்கின்றீரே! அதென்ன ஐயா? அதென்ன.

இரண்டாம்பிரபு:—இது தெரியாதா உமக்கு? குந்தாணியைப்போல விசாலமான புத்தி உம்முடையபுத்தி. உலக்கையைப்போலக் கூர்மையானபுத்தி உம்முடையபுத்தி. இதுசொல்லியதற்கு ஏனையா கோபித்துக்கொள்கின்றீரே!

முகுந்தன்:—ஹ ஹ ஹ! பார்த்தீரா? நீர் வெகுநல்லவர். ஹ! ஹ! அந்தப்பயலைக்கல்யாணம் பண்ணப்போகிறாளாமே!

முதற்பிரபு:—எந்தப்பயலை?

முகுந்தன்:—ஓடிப்போனானே அழகானந்தன் அவனை.

முதற்பிரபு:—அவனையா!—உம்மையல்லவோ பண்ணிக்கொள்ளவேண்டும்?

இரண்டாம்பிரபு:—தடையேயில்லை. அவள் இந்த மூழ்மக்கள்பெருமானைத் தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும்!

முகுந்தன்:—மூழ்மக்கள் பெருமானென்றால் என்ன?

இரண்டாம்பிரபு:—முட்டாள்களுக் கெல்லாம் முதற்றாம்பூலம் பெறுகிறவர். வேறென்ன?

முகுந்தன்:—அப்படியா! முதல் தாம்பூலம்! நமக்கென்னகுறைச்சல்?

இரண்டாம்பிரபு:—உமக்குக்குறைச்சலே யில்லை. போதும். போம்.

முகுந்தன்:—எங்கேபோகச் சொல்கிறீர்? இங்குதானிருப்பேன்.

இரண்டாம்பிரபு:—இரும் ஐயா இரும். உம்மையார் வேண்டாமென்று சொல்லுகின்றார்கள்? யான் "அரண்மனைக்குப்போம். பின்னே வரு

* இந்தவாக்கியத்தைக் கவனித்துநோக்க இருபொருள் பயக்கும்.

கிறோ"மென்றல்லவோ சொல்ல வாரம்பித்தேன்? இதற்குள்ளே உமக்கு என்ன கோபம்?

முகுந்தன்:—க்ஷமியாச்சு ஐயா க்ஷமியாச்சு. நீர் நல்லவரையா. ஞாபக மூட்டினீரே! வீட்டுக்குப் போகவேண்டும் ஐயா! வாரும்.

ஒண்டாம்பிரபு:—(தனக்குள்) ஊத்தை வாயில் அரண்மனையென்று என் வரும்? நாயைத் தவிசேற்றி நடுவீட்டில் வைத்தாலும் அது அங்கிருக்குமா? (முகுந்தனைப்பார்த்து) எந்தக் குட்டிச்சுவர் வீட்டுக்குப் போகப் போகிறீர்? மோட்சத்திற்குப் போகப் போகிறீரோ? அங்கு யாம் வரமாட்டோம்.

முதற்பிரபு:—அரண்மனை என்பதற்கு, வீடென்று வாய்தவறிச் சொல்லிவிட்டார்!

முகுந்தன்:—வாரும் போவோம். போவோம் வாரும்.

முதற்பிரபு:—இதோவந்து விட்டேனையா.

முகுந்தன்:—நீ என்ன ஐயா?

ஒண்டாம்பிரபு:—இதோ (தெத்திப் பேசுவதுபோல் நடித்து முகுந்தன் மேற்காரியுமிழ்ந்து) வந்துவிட்டேன் ஐயா! (யாவரும் போதல்.)

மூன்றாங்களம்.

இடம்:—காஞ்சியிற் சரசாங்கியின்கன்னிமாடம். காலம்:—காலை.

நடர்:—சரசாங்கி, இந்துவதனை.

சரசாங்கி:—இந்துவதனை! நேற்று யாரோ கடிதங்கொண்டு வந்ததாகவும், வாங்கி வைத்திருப்பதாகவுங் கூறினாயே! எங்கே அந்தக்கடிதம்?

இந்துவதனை:—அம்மா! இதோ இருக்கிறது.(கடிதத்தைச் சரசாங்கியிடங் கொடுக்க அவள் பிரித்து வாசிக்கிறாள்.)

சரசாங்கி:—"என்னுயிரினுஞ்சிறந்த தெள்ளமிழ்தே! இக்கடிதத்தைக்கண்டு நீ கவலைப்படுதலொழிக."— என்னைவிட்டுப்பிரிந்தது மன்றித்தேறுதலுங் கூறியிருக்கிறீரே! நன்றாயிருந்தது நும்மன்பு?

இந்துவதனை:—அம்மா! தாங்கள் மூர்ச்சையாயிருக்கிறபோது பிரிந்திருக்கவே மாட்டாரே! முழுமையும் படித்துப் பார்க்கலாமே! தாமும் அவசரப்படலாமோ?

சரசாங்கி:—(மறுபடியும் வாசிக்கின்றாள்) "நீமூர்ச்சையாய்க் கிடந்தபோது பிரிய மனமில்லாம லிருந்ததனாலும் இராஜ ஆக்ஞைப்படி நடக்க வேண்டுமென்பதனாலும் உனக்குப் பிரக்ஞை வந்தவுடன் விடை

பெற்றுச் செல்லலாமென்றெண்ணி நினது கரத்தில் ஓர் வளையைத் தரித்து உன் சிறுவிரலி லிருந்த மோதிரத்தை யானும் ஞாபகக்குறியாக அணிந்து கொண்டேன். அதுதான் உனக்குப்பிரதிநிதி யாயிருந்து என்னைக் காப்பாற்றுகிறது. உன்னை விட்டகலக் கைகா லெழாம லிருக்குந்தருணத்தில் நின்றந்தை யங்குவந்த படியால் யான் நின்னிடம் விடைபெறாமற்போக நேர்ந்தது. கோபித்துக் கொள்ள வேண்டாம். உன்னை யான் மனப்படத்திலன்றோ எழுதிவைத்திருக்கிறேன்? இக்கடிதங் கொண்டுவருபவர் எனது பிராணசிநேகிதர். அவரிடம் யாதும் ஒளிக்காமற் கூறலாம். யான்குறித்தநகரஞ் சென்று சேர்ந்ததும் கடிதமெழுதுவேன். கண்ணே! நீதுக்கப்பட்டுக் கொண்டிருப்பது நன்றன்று. அதிசீக்கிரத்தில் நின்னைக் காண்பேன்.

நினது காதலன்
அமுதானந்தன்."

இந்துவதனை:—அம்மா! காரணமில்லாமல் அவர் அப்படிப் போயிருக்கமாட்டாரென்று நான் சொல்லவில்லையோ?—(ஏமவதிவர) அம்மா! ஏமவதிவருகின்றாள்.

சரசாங்கி:—ஏமவதி! இப்பொழுதெங்குவந்தனை?

ஏமவதி:—இல்லை. யாரோ ஒருவர் தங்களைப் பார்க்கும்படி தலைவாயிலில் வந்து காத்துக்கொண்டிருக்கின்றார்.

சரசாங்கி:—அப்படியா? நீபோய் அவரை இங்கு வரும்படி அனுப்பி விட்டு அங்கேயே யான் சொல்லியனுப்புகிற வரையில் இரு.

ஏமவதி:—அப்படியே செய்கின்றேன் அம்மா.

(ஏமவதி போதல்.)

சரசாங்கி:—இந்துவதனை! இக்கடிதத்தில் தான்போகக்கருதியிருக்கிற இடத்தைப்பற்றி எழுதினாரில்லையே!

இந்துவதனை:—காரணமில்லாமலா எழுதாமலிருப்பார்? ஏதோ ஒருகாரணமிருக்கத்தான் வேண்டும்.

சரசாங்கி:—என்ன காரணமிருக்கக்கூடும்? யோசித்துச்சொல் பார்க்கலாம். (சுகுணன்வருதல்) ஐயா! வாருங்கள். இந்த ஆசனத்தில் இருங்கள். நீங்கள்தாமோ நேற்றுக்கடிதங் கொண்டுவந்தவர்?

சுகுணன்:—ஆம்.

சரசாங்கி:—அப்படியானால் அவர் எத்திசை நோக்கிச் சென்றனர்? தங்களுக்குந் தெரியுமே!

சுகுணன்:—அம்மா! அவர் குறித்த விடம் சேர்ந்ததும் கடித மெழுதித் தெரிவிப்பதாக வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார். அவர் [illegible]யவாறனபடியால் கூறியதிற் சிறிதுந் தவறி நடக்கமாட்டார்.

சரசாங்கி:—யானும் அறிவேன். ஆயினும் அவரைப்பற்றித் தாங்கள் அடிக்கடி கடித முதலியவைகளாற் றெரிந்து கொள்வதோடு யுடனுக்குடனே எனக்குக் கூறுவீர்களெனத் தங்களை மிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுகுணன்:—தாங்கள் ஊழியனுகிய எனக்கு என்ன கட்டளையிட்டபோதிலும் சித்தமாய்ச் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேனே!

சரசாங்கி:—நல்லது. அவர் தங்களைப் பார்க்கும்படி வந்தபோதும், தங்களிடம் விடைபெற்றுச் செல்லும்போதும், எவ்விதமாக இருந்தார்?

சுகுணன்:—அம்மா! அவரை யான் காணும்போது அடையாளமே தெரியவில்லை. யான் கண்டதுமுதல் அவர் சென்றது வரையிலும் தாமரை பனியினால் வாடியதுபோல், அவரது முகம் பொலிவிழந்திருந்தது. கைவிரலி லணிந்திருந்த மோதிரத்தைக் கண்ணுற்றுக் கண்ணுற்றுக், "காதலி! உன்னை எப்பொழுதுகாண்பேன்? என் கண்ணே! உயிரே! அமிர்தே!" என்று முத்து முத்தாகக் கண்ணீர் பெருக்கியும், மோதிரத்தைப் பலதரமும் முத்தமிட்டும் விசனப்பட்டுக் கொண்டிருந்தார்.

சரசாங்கி:—இவ்விதமாகவோ என் பிராணநாதர் ஏங்கித்திருந்தார்? இதைக் கேட்டும் உயிர்நீத்திலேனே! யான் கொடும்பாவி!

(பாடுதல்.)

இராகம்-பிலகரி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாவியானேன் - யான்கொடும்
பாவியானேன்.

அநுபல்லவி.

ஆவிக் குகந்த நாத — னிங்க
அல்லும் பகலு மேக்க — மோங்கப் (பாவி)

சரணங்கள்.

தனியா யிங்குத் தயங்க — வகன்று
சஞ்சரித் தெங்கும் மனமுஞ் — சுழன்று
எனையா ளன்ப னிருக்க — நீங்கரும்
இன்னுயிர் துறக் காத — மாபெரும் (பாவி)

செய்வினை வசச் செயலோ — அறியேன்
செல்லும் போதுற்ற தியக்கங் — குறியேன்
மெய்ம்மை நீத்திடும் வேளை — பிரிந்த
விற்ப னதுடன் போகா — திருந்த (பாவி)

மொய்ப்புளி கொண்ட முகார — விந்தன்
மொழிதற் கரிய அழகா — னந்தன்
செய்யா பாதச் சேவையே — செய்யச்
சேரு நாளெது வோநான் — ஐய (பாவி)

இச்சாவதனை! யான் பெரும்பாவியாய் விட்டேன்.

இந்துவதனை:—(சுகுணனை நோக்கி) அவர் சீக்கிரமாக வரமாட்டாரோ? தாமதிக்கீரே!

சுகுணன்:—அதி சீக்கிரத்தில் திரும்புவதாக என்னிடங் கூறிச் சென்றனர். (சரசாங்கியைப் பார்த்து) அம்மா! நீங்கள் துக்கப்பட வது ஒன்று மில்லை. வருத்தப்படவேண்டாம்.

சரசாங்கி:—என் சிறு விரல் மோதிரஞ் செய்த பாக்கியமும் யான் பெறவில்லையே! என்னைவிட்டு நீங்கும்போது இரண்டு வார்த்தை கூடச் சரியாகப் பேசவில்லையே! ஐயோ! எனது எண்ணங்களெல்லாம் காற்றின்வாய்ப்பட்ட பூனமலர் போலாயினவே! எப்பொழுது அவரதின்சொ லமுதத்தையுண்டு களிக்கப்போகிறேன்! (சத்தங் கேட்டுத்திடுக்கிட்டு)

யாரோ! சந்தடி கேட்கிறதே!— (சிங்காரவல்லிவருதல்.)

சிங்காரவல்லி! என்னவிசேஷம்?

சிங்காரவல்லி:—ஒன்றுமில்லை. தமது சிறியதாயார் தம்மை உடனே அழைத்துவரும்படி எனக்கு ஆக்ஞாபித்தார்கள்.

சரசாங்கி:—அப்படியா. இதோவந்து விட்டேன். (சுகுணனைப் பார்த்து) ஐயா! பிறகுஉம்மைக் காண்பேன்.

சுகுணன்:—போய்வருகிறேன். அம்மணி!

(யாவரும் போதல்.)

நான்காங்களம்.

இடம்:—தஞ்சையில் ஜெயவீரன்வீடு. காலம்:—நண்பகல்.

நடர்:—ஜெயவீரன், துன்மதி, மதுரை சேல நெல்லைவாசிகள்.

துன்மதி:—ஜெயவீரரே! உமதுவீட்டில் நேற்றைப்புதிதாக ஒருவர்வந்திருக்கிறாரே! அவர் யார்? உமக்குப்பந்துவா?—நேற்றுச் சேலவாசி

யோடு அவளைப்பற்றி உயர்வு நவிற்சியிலும் உயர்வு நவிற்சியாகப் புகழ்ந்து புகழ்ந்து கூறினீரே! அதைப்பற்றி நமக்குக்கொஞ்சம் சந்தேகமிருக்கின்றது.

ஜெயவீரன்:—நண்பரே! பக்ஷவல்லன். ஆயினும் பக்ஷவைக்காட்டிலுஞ்சிறந்த நண்பர். அவர் தகப்பனும் யானும் ஒரேகுருவினிடத்து இளம்பருவத்திலேயே வித்தைகற்று வந்தோம். அவரும் யானும் ஒத்த தோழர்கள். அவர் என்னைப்பலமுறையுங்காத்துரக்ஷித்தவர். அவரது இளையகுமாரராகிய இவருக்கு மனம் வாக்குக்காயங்களில் யாதும் ஒன்றுக்கொன்று முரண்படா. தொண்டைநாட்டரசன் புத்திரி [illegible] காதல்கொண்டதற்காக, இவரை ஊரைவிட்டுப் போகும்படி அரசன் ஆக்ஞாபிக்க இங்கு என்னிடம் வந்திருக்கிறார்.

சேலவாசி:—அவரைப்பார்க்கும்போதே தாம் கூறியன வெல்லாம் உண்மையாயிருக்கவேண்டுமென்றே தோன்றுகிறது. நெல்லையாரே! நீரென்ன நினைக்கின்றீர்?

நெல்லைமதுரைவாசிகள்:—சந்தேகமேயில்லை!

"அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்."

என்று வீறுகவா தேவர் கூறினார்?

துன்மதி:—ஜெயவீரரே! ராஜகுமாரத்தி இவரிடம் காதலுடையவளென்பதுமட்டும் சந்தேகமாகத்தான் தோன்றுகின்றது! (யாவரையும் பார்த்து) நீங்களெல்லாம் யோசித்துப்பாருங்கள்! மெய்க்காதல் கொண்டிருந்தால் இவரேன் தனியே வரவேண்டும்?

மூவரும்:—நீர் சொல்வதையும் சற்று யோசிக்கவேண்டியதுதான்.—

ஜெயவீரன்:—நீங்களேன் வாதம் பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்? அவரும் வருநேரமாய்விட்டது. அவரிடம் நேராகப் பேசிப்பார்த்தால் அவரை நீங்களே என்னைவிட நூறுபங்காகப்புகழ்ந்து பேசப்போகின்றீர்கள்! அவர் தொண்டைநாட்டுச் சேனாபதி குமாரனானபடியால் தகுந்த மரியாதையுடன் நாம் எதிர்கொள்ள வேண்டுமென நினைக்கின்றேன்.

(அழகானந்தன் வருதல்.)

யாவரும்:—வாருங்கள்,—வீற்றிருங்கள்.

சேலவாசி:—இதுநல்ல வேடிக்கைதான். இந்நேரங்களெல்லாம் ஓரேயிடத்தில் சந்தித்தோமே! (அழகானந்தனைப் பார்த்து) ஐயா தங்களை யான் [illegible] போகும்போதும்பார்த்திருக்கிறதாய் ஞாபகமிருக்கிறது. [illegible] முதல் தங்களுடன் வார்த்தையாடவேண்டுமென்று மிகவும் ஆவல்கொண்டிருக்கிறேன்.

அழகானந்தன்:—காஞ்சிநகர் வழியாய்ப் போயிருந்தால் பார்த்திருக்கலாம். நல்லவர்களோடு ஒரு நிமிஷகாலம் வார்த்தையாடினும் அவர்கள் அதை என்றுமே மறப்பதில்லை.

துன்மதி:—யானும் தங்கள் குணவிசேஷங்களைப்பற்றி நமது நண்பரிடந்தெரிந்துகொண்டேன்.— (அழகானந்தன் முகத்தைப் பார்த்து) ஒரு வேளை நகரத்தைவிட்டுப் பிரிந்தவருத்தமோ என்னவோ முகம் வேறுபட்டிருப்பதாகத் தோன்றுகிறது!

சேலவாசி:—யாருக்குத்தானிராதையா! அழகு, அன்பு, குணம், கல்வி, வயது, குலம் முதலியவை ஒத்திருக்கப் பெற்றவளாய் கற்பினுக்கரசியாய் விளங்கும் பெண்ணைப்பிரிந்து வந்தால், முகம் வேறுபடாதோ? மனம் வேறுபடாதோ? அப்பெண்மணியைப் போன்றவள் எமது நாட்டிலும் கூட இல்லையென்று நேற்றுச் சாயங்காலம் பற்பல தேசத்து ஸ்திரிகளைப்பற்றி நாங்கள் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தபோது அவர் கூறினாரே! அப்பெண்மணி போன்ற ஒரு கண்மணியை நீர் பிரிந்திருந்தாலல்லவோ தெரியும்?

துன்மதி:—ஐயா சேலத்தாரே! போதும். போதும். [illegible] அவரவர் கண்டதை அவரவர்கள் விசேஷமாய்ப் பேசுவதுவழக்கந்தானே! இதிலெல்லாம் யான்மிகவும் தெரிந்தவன். எத்தனைபேரிடம் ஏமாந்திருக்கின்றேன்? பழகினவருக்குத்தான் தெரியும். எவள் மிகவும் பயந்தவள்போல நடிக்கிறாளோ அவள்தானையா முழுத்திருடி. ஏனையா! நீங்களெல்லாம் யோசித்துப்பாருங்கள்! யான் சொல்வது பொய்யா?, பத்துப்பொன் ஆசைப்படாத பதிவிரதை உலகத்திலேயே கிடையாதையா!

நெல்லைவாசி:—ஆம். ஆம்.

"பெண்ணெனப் படுவ கேண்மோ
பீடில பிறப்பு நோக்கா
உண்ணிறை யுடைய வல்ல
வோராயிர மனத்த வாகும்
எண்ணிப்பத் தங்கை யிட்டா
லிந்திரன் மகளு மாங்கே
வெண்ணெய்க்குன் றெரியுற் றற்போல்
மெலிந்துபின் னிற்கு மன்றே."

எனத்தேவருங் கூறியிருக்கிறார் ஐயா!

மதுரைவாசி:—அதற்குச் சந்தேகமுண்டோ?

"அன்புநா லாக வின்சொ
லல்லதோடுத் தமைந்த காத

பெண்பகுசெய் காமச் சாந்திற்
கைபுனைந் தேற்ற மரியே
நன்பகற் சுட்டு விளக்கா
தொழுதெழு நங்கை மார்க்குப்
பின்செலும் பிறர்க ளுள்ளம்
பிணையானுக் கடிய தன்றே."

என்றும் கூறியிருக்கிறதையா! பதிகள்கள்! அப்படியே கூடாதையா!

ஜெயவீரன்:—உலகத்திலே பதிவிரதை ஒருத்திகூடக் கிடைக்கவே மாட்டாளோ? ஏன் ஐயா!

'பெண்டிரி லொருவர் கொழுநன்வழி நிற்பார்'

என்பது பெரியோர் கூறியதன்றோ?

துன்மதி:—அதுகூட இல்லையென்று நிச்சயமாய்க் கூறுவேன் ஐயா!

அழகானந்தன்:—ஒருத்திகூட உலகிலில்லையென்று நிச்சயமாய்க் கூறுவீரோ?

துன்மதி:—நான்தான் நிச்சயமாய்க் கூறுகிறேனே!

அழகானந்தன்:—நிச்சயமாய்க் கூறுவீரோ?

துன்மதி:—மறுபடியும் மறுபடியும் கேட்கிறீரே! நான்தான் முன்பே கூறிவிட்டேனே!

சேலவாசி:—ஒருவேளை இவர் பெண்சாதி ஒப்பற்ற பதிவிரதையாயிருப்பாள்போலிருக்கிறது.

அழகானந்தன்:—நேற்றுச் சாயங்காலமே காதலின் நிலைமையைக் கூறினேனே! இவர் உலகத்திற் பதிவிரதை ஒருத்தி கூட இல்லை யென்பதை ரூபிக்கக் கூடுமோ?

துன்மதி:—ஐயா நீர் கோபித்துக் கொள்ளுகிறீர்! பதிவிரதைகளைப்பற்றிப் பேசுவதை விட்டுவிடும். என்னதான் நீர் வற்புறுத்திக் கூறினபோதிலும் உமது காதலி உமது சொல்லுக்கு ஸ்திரீகளைவிட எவ்விதத்திலும் உயர்ந்தவளல்ல வென்பது நிச்சயந்தான்.

அழகானந்தன்:—என்ன ஏதுவைக் கொண்டு நீரிப்படிக் கூறுகிறீர்?

துன்மதி:—காரணமில்லாமற் காரியம் நிகழுமோ? நீர் இது விரலி லணிந்துகொண்டிருக்கின்றீரே மோதிரம் இதை யான் பார்த்திருக்கின்றது வயிர மோதிரங்க ளெல்லாவற்றினுஞ் சிறந்ததுதான். இதுபோலவே உமது பெண்சாதியும் ரூபத்தில் மற்றைப்பெண்களைவிடச் சிறந்திருக்கலாம். ஆனாலும் பெண்களின் ரூபத்தினாலே உயர்த்திக் கூறுகிற

தா? மனப் பரிசுத்தத்தாலல்லவோ அவர்கள் சிறப்படைய வேண்டும்? ரூபத்திலும் மனத்திலும் எவ்வளவோ வித்தியாசமிருக்கின்றது. ரூபவதிகளிற் பலர் கற்பில்லாதவர்களாக விருக்கிறார்களென்று அமக்குத் தெரியாதோ? ஏன் கல்லினைக் கவருகிறதோ அந்த வல்லூறின்மேல் பலர்க்கும் எண்ணோக்கமே!

அழகானந்தன்:—நீர் சொல்வனவெல்லாம் என் காதலியினிடம் இல்லை என்கிற நிச்சயத்தினா லல்லவோ இவ்வளவு துணிவாய்க் கூறினேன். அதுவும் மிகவோ? இம்மோதிரம் உமது புத்தியானது மயக்குகிறதாகத் தோன்றியதுபோல அவளையும் உலகின் மாதரிற் சிறந்தவளென்று காண்பீர். ஆதலால் அவளை நினைத்தே பெருமிதமே. இதையும் ஒருவருக்குங் கொடேன்.

துன்மதி:—நாலவேளைபாட்டால் மோதிரத்தை இழக்கும்படியும் சேரும். அவளையும் இழப்பீர்.

அழகானந்தன்:—இதை ஒருவேளை விற்கலாம். அவளைவிற்கவும் கூடுமோ?

துன்மதி:—விற்பதைப்பற்றி இங்கென்ன பேச்சு? இதைத் திருடன் கவர்ந்து செல்லானோ? அவளையும் அழகுள்ள ஓர் ஆண்மகன் தன்வசப்படுத்தானோ?

அழகானந்தன்:—எத்தகைய அழகமைந்த ஆண்மகனும் மயக்கத்திற்கு முட்படாளென்று உறுதியாய்க் கூறுவேன்.

ஜெயவீரன்:—நீங்கள் இதைப்பற்றி இனிவார்த்தையாட வேண்டாம்.

அழகானந்தன்:—உமதிஷ்டப்படியே!—முதல் முதற் காணும்பொழுதே மிகவும் பழகினவர்போல் வார்த்தை ஆடுகிறீரே!

துன்மதி:—ஆம். உமது அழகியதேன் பகையாட்டியையும் மயக்கும்படி பேச வல்லவனென் றறியீரோ? ஆனால் அவளிடத்தில் சற்றுப்பேசும்படியான சந்தர்ப்பந்தான் வேண்டும்.

அழகானந்தன்:—நீர் மூர்த்திகளாலும் முடியாத காரியம் உம்மாலாகப் போகிறதோ?

துன்மதி:—உமது நம்பிக்கை முழுப் பொய் என்பதை இப்பொழுதே காண்பிக்கிறேன்! வேண்டுமானால் எனது அன்றி [illegible] கிறீரா?—(அழகானந்தன் கோபித்துநோக்க) ஐயா! நீர் கோபித்துக்கொள்ள வேண்டாம். உலகத்திலுள்ள எந்தப் பெண்பிள்ளையையும் நம்பக் கூடாது என்பதை உமக்குப் புலப்படுத்தும்படி கூறினேனே யன்றி வேறன்று.

அழகானந்தன்:—ஐயா! நீர் மூடத்தனமாய் உரலிற் றலை யிட்டுக்கொண் டீரென்பு ஒன்றும் தோன்றாது விழிப்பீரெனத் தோன்றுகிறது!—

துன்மதி:—ஏன்?

அழகானந்தன்:—ஏனென்றால் கற்புநிலை தவறாப் பெண்களிடம் உமது வன்மை விளங்குவதன்றி அதற்காகத் தகுந்த தண்டனையையு மடைவீர்.

ஜெயவீரன்:—ஐயா! நீங்கள் உங்கள் வாதத்தை விட்டு விடுங்கள். வினையாட்டுச் சண்டை வினையாய்ப் போய்விடப் போகின்றது! நீங்கள் மனம் ஒருப்பட்ட சிநேகர்களாகவேண்டும்.

துன்மதி:—இருக்கட்டும் ஐயா! அவளிடங்கண்டிப்பாய் யான்சொல்லு வது கிடுமென்று என்று ஆயிரமூவரும், பந்தயமாக வைத்தேனே! இனி ஏன் மயங்குகிறீர்?

அழகானந்தன்:—யான் ஏன் மயங்கவேண்டும்? இப்பொழுது எந்தப் பெண்மணியைக் கெடுக்கக் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறீர்?

துன்மதி:—யாவரிலுஞ் சிறந்தவளென்று புகழ்ந்து கூறுகின்றீரே, அந்தப் பெண்மணியாகிய உமது கண்மணியைத்தான்! ஆனால் அவளோ டுதாவது பேசும்படியான சந்தர்ப்பம் வேண்டும். உமது கைம்மோ திரத்திற்கும் என்பதினாயிரம் பொன்னுக்கும் பந்தயம்!

அழகானந்தன்:—பொன்னுக்குப் பொன்னல்லவோ பந்தயமாக வைக்க வேண்டும்? மோதிரத்தைப் பந்தயமாக வைக்கமாட்டேன்! அதை விட்டுயான் பிரியேன்.

துன்மதி:—உமக்கு நம்பிக்கையில்லாத விஷயத்தில் நீர் ஏன் தலையிட்டுக் கொள்ளுகிறீர்? நீர் ஜெயமடைந்தால், மோதிரம் பொன் எல்லாம் உம்முடையதானே? பயப்படுகிறீர் பாரும்! ஐயா!

அழகானந்தன்:—சரிதான் ஐயா! யான் எப்படி உம்மை நம்புவது? நீர் என்னை வெற்றிகொண்டதற் கடையாளமாக அவள் கையிலணிந் திருக்கும் வளையைக் கொண்டுவந்தீராயின்.—

துன்மதி:—தடை இல்லாமற் கொண்டுவருவேன்!

அழகானந்தன்:—தோற்றுப் போனீராயின்?—எனது மனைவியை அவமதித்துக் கூறியவும் நாவை இருதுண்டாக அறுத்தெறிவேன்! வெற்றி கொண்டீராகில் மோதிரம் பொனயாவும் உம்முடையனவே.

துன்மதி:—ஐயா! நீங்களெல்லாம் சாட்சி. யான்போய்வருகிறேன்.

(துன்மதிபோதல்.)

அழகானந்தன்:—இவர் யார் ஐயா? மகாகுணசாலியா யிருக்கின்றாரே! இவர் சோணாட்டில் எந்த மூலையிலுள்ளவர்?

ஜெயவீரன்:—இவர் கும்பகோணத்தார்!

அழகானந்தன்:—கும்பகோணத்தாரோ? சரி. யான்போய்வருகிறேன்?

(அழகானந்தன்போதல்.)

ஜெயவீரன்:—நாமும் இவர்கள்பின்சென்று இவர்களைச் சமாதானப்படுத் தவேண்டும். ஐயா!

சேலவாசி:—கும்பகோணத்தான் கொலைகளவுக்கஞ்சானே! அவன்பிடித்த முயற்கு மூன்றேகால்தானையா! இந்நேரம் பேசி இருந்ததிலிருந் தங்களுக்கு விளங்க வில்லையோ?

மதுரைநெல்லைவாசிகள்:—ஆம். ஆம்.

ஜெயவீரன்:—ஆயினும் போய் நம்மாலானவரையில் சமாதானப்படுத்தும் படி பார்க்கலாம்.

மதுரைநெல்லைவாசிகள்:—ஆம். ஆம். நாமும் போவோம்.

சேலவாசி:—யானும் வருகின்றேன்.

(யாவரும்போதல்.)

ஐந்தாங்களம்.

இடம்:—காஞ்சியிற்கனகாம்புஜத்தினந்தப்புரம். காலம்:—காலை.

நடர்:—கனகாம்புஜம், சிங்காரவல்லி.

கனகாம்புஜம்:—சிங்காரவல்லி! நீசென்று ஏமவதியையும் இந்துவதனை யையும், இன்னும் சற்றுநேரத்திற்குள் வரும்படியாய்ச் சொல்லி விட்டு, விரைந்துவரவேண்டும். காரிய மிருக்கின்றது. ஏதோ வந்தாயா?

சிங்காரவல்லி:—இதோ வந்துவிட்டேன்! அம்மணி!

(சிங்காரவல்லிபோதல்.)

கனகாம்புஜம்:—தம்பி மூடருக்குயான் எத்தனைவிதமாகப் புத்தி கூறி னபோதிலும், கேட்பதில்லையே! "சும்மாவிரு. யானெப்படியாவது காரியத்தைப்பூர்த்திசெய்து விடுகிறே"னென்று எத்தனைமுறை சொன்ன போதிலும் அவை எல்லாம் கேட்டும் கேளாததுபோல் நடக்கிறானே! சர்வ மூடனாயிருக்கிறானே! இவன் எப்படிப்பிழைக் கப்போகிறான்? நம்முடைய வயிற்றிலும் ஒருபிள்ளைபிறப்பதற்கும் ஏதுவில்லையே! என் எண்ணத்திற் கல்லைப் போடுகிறானே! இவன்

யன் அழகானந்தனைச் சவுடைக்கிழுக்கவேண்டும்?—ஆயினும் இவனுக்குள் நமதுகாரியத்தைச் சித்திபெறச்செய்யவேண்டும்! தன்னைத்தானே முட்டாளாக்கிக்கொள்ளுகிறனே! பேசாமல் கௌரவமாக இருக்கப்படாதா?—என்னுடைய வளையிலும் பார்க்கின்றேன்! "முயற்சியுடையா ரிகழ்ச்சியடையார்" என்று ஔவையாரும் கூறியிருக்கின்றாரே! பார்ப்போம்.

(சிங்காரவல்லிவருதல்.)

சிங்காரவல்லி:—அம்மா! யாவரும் அதிசீக்கிரத்தில் இங்குவந்து சேருவார்கள்.

கனகாம்புஜம்:—சரி. இன்னும் ஏதாவது விசேஷசமாசாரம் உண்டா?

சிங்காரவல்லி:—முருந்தர் அழகானந்தரோடு முஷ்டியுத்தம் புரிந்தவரலாற்றை முன்பே கூறினேனே! முக்கியமானவிஷயம் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன்! அரண்மனைக்கு யாரோ ஒருவர் அடிக்கடிவந்து சரசாங்கியுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றார். அவர் அழகானந்தரின் நண்பராம்! பெயர் சுகுணராம்! ஒருநாள் தங்கள் கட்டளைப்படி சரசாங்கியைக் கூப்பிடச் சென்றபொழுது அவர் அவளுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்.

கனகாம்புஜம்:—சரிதான். அது தெரிந்த விஷயந்தான்.—

(இந்துவதனையும் ஏமவதியும்வர)

நீங்களிருவருஞ்சென் றநந்தனவனத்திற்புஷ்பம்பறித்துக்கொண்டு வாருங்கள். சிங்காரவல்லி! புஷ்பங்களின் பெயரெழுதிய விபரக்குறிப்பை ஏமவதியிடங்கொடு. (சிங்காரவல்லி விபரக்குறிப்புக் கொடுத்தல்.) விரைவில் வரவேண்டும். (சிங்காரவல்லியைப்பார்த்து) நீயும்சென்று வைத்தியனாயான் சொல்லியபடிமருந்துஎடுத்து வரும்படி கூறிவிட்டுவா. ஒருவேளை சுகுணன் சரசாங்கியைத்தேடி வரும்படிக்கொண்டு வரலாம்! அவனைக்கண்டால் தந்திரமாய் இங்கு அழைத்து வந்துவிடு.— (சிங்காரவல்லிபோதல்.)

இராஜாவைத் தான் நமது வசப்படுத்திவிட்டோம். சரசாங்கியை ஏமாற்ற முடியவில்லையே! அழகானந்தனோ நினைந்துமிகவும் உருகித் தேய்கின்றானே! நம்காரியம் சுகுணனால்தான் ஆகவேண்டும்! வாயிருந்தாலல்லவோ பிள்ளைபிழைக்கும்? இருக்கட்டும். காந்தர்வவிவாகந்தானே செய்துகொண்டாள்? இருந்தால் என்ன? நம்தம்பியைக் கொண்டு ஒருதாலியைக் கட்டிவிட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம். (வைத்தியர்வருதல்.)

வைத்தியரே! வாரும். க்ஷேமந்தானே?

வைத்தியர்:—அம்மணி! தங்கள் கிருபாகடாக்ஷத்தினால் க்ஷேமந்தான். தங்கள் கட்டளை காதில் விழுந்ததுதான் நோயாளிகளை எல்லாம் அங்ஙனே விட்டு விட்டு ஓடிவந்தேன்! அம்மணி!

கனகாம்புஜம்:—கூவாதீர்! அதிருக்கட்டும். நீர் யான் நும்மிடம் சொல்லிய மருந்தைக் கொண்டுவந்தீரா?

வைத்தியர்:—அதை மறப்பேனோ! (தனக்குள்) அதைமறந்தால் சிரசை மறக்கவேண்டியதுதானே? என்னம்மாள் சூர்ப்பணகைக்குத் தமக்கை யல்லவோ? (வெளியாய்) மடியிலேயே பத்திரமாய் வைத்தெடுத்து வந்தேன். அம்மணி! இதோ இருக்கிறது.

கனகாம்புஜம்:—நல்லது. இதை எப்படி உபயோகிப்பது?

வைத்தியர்:—இதற்கு மரணநாதி அல்லது பரமபத சிந்தாமணி என்று பெயர். இதை உள்ளுக்குக்கொள்ள இரண்டுநாழிகைப் பொழுதிலேயே பரமபதத்திற் சேர்த்துவிடும். ஆனால் சாப்பிடவோ வெகு ருசியாயிருக்கும்.

கனகாம்புஜம்:—நல்லது......சிலதைலங்கள் முடிக்கவேண்டியிருக்கிறது. (சிங்காரவல்லிவர அவளருகிற் சென்று இரகசியமாய் வார்த்தையாடிக்கொண்டிருக்கின்றாள்.)

வைத்தியர்:—(தனக்குள்) மகாராணியவர்கள் குணம் எனக்கு நன்றாய்த் தெரியுமே! தெரிந்தும் கிணற்றில் விழவேண்டுமா?

"சச்சமறக் கிளைகுலங்கள் வேரோ டற்றுத்
தரணிதனில் வெகுபாவந் தலையின் மேற்கொண்
டிச்சையற வெழுநரகில் வீழ்வ தல்லால்
இகபரமொன் றில்லாமல் ஏங்கு வீரே."
"கோத்திரங் கிளையொடு குலங்கள் வேரற
வீழ்ந்திட நரகினில் வீழ்தல் திண்ணமே."

என்று அகஸ்தியர் முதலிய பிரபல ஆயுள்வேதபண்டிதர்கள் கூறியிருக்கின்றார்களே! அம்மாள் நன்மையடைவதற்கு நாம் மீளா நரகிற்காளாகலாமோ? யான் மயக்கத்தைச் செய்யும்படியான மருந்தைக் கொடுத்தேனே யன்றி உயிரைப்போக்கத்தக்கொடிய பாஷாணத்தைக் கொடுக்கவில்லை! சாக்கைக்கு வைத்துப் பரீக்ஷை பார்க்கப்போகின்றாள். அதுவும் நல்லது தான். இவள் எல்லாருக்கும் நாமம் சாத்தினால் யான் பட்டைநாமம் பெரிதாய்ச்சாத்தினேன்! ஏமாறப்போகிறாளே! எமனுக்கும் ஒரு நமன் இருப்பானென்று தெரிந்து கொள்ளவில்லை!

(சுகுணன்வருதல்.)

கனகாம்புஜம்:—என்ன காலடிச் சப்தம்?

சிங்காரவல்லி:—சுகுணர் வருகின்றார் அம்மணி!

கனகாம்புஜம்:—வாரும் சுகுணரே! (வைத்தியரைப்பார்த்து) வைத்தி யரே! வியாதியஸ்தர்களெல்லாம் காத்துக்கொண் டிருப்பார்கள். நீர்போம்! பின்பு விசாரித்துக் கொள்கிறேன்.

வைத்தியர்:—அம்மணி! மிகவும் கஷ்டம். மறந்துவிடப்படாது! மறந் துவிடப்படாது!!

கனகாம்புஜம்:—சரியாய் விசாரித்துக் கொள்கின்றேன். போம்.

வைத்தியர்:—அம்மணி! பயமாய் இருக்கின்றதே!

கனகாம்புஜம்:—வைத்தியரே! பயப்படாமற்போம். (வைத்தியர்போதல்.) (தனக்குள்) சனியொழிந்தது! (சுகுணனைப்பார்த்து) நும்மைப்பற்றி மிகவும் கேள்விப்பட்டிருக்கிறேன் எவருடைய துன்பங்களையு நீக்கவல்லவரென்று! (கண்ணாற் சிங்காரவல்லியைப்போக ஜாடை செய்கின்றாள்.) (சிங்காரவல்லிபோதல்.) சிங்காரவல்லியிடம் யாவுந்தெரிந்து கொண்டிருப்பீர். யான்மறு படியும் நும்மிடங் கூறுவது அதுவேயன்றான்!......நீர் எவ்வ கையிலாவது சரசாங்கியின் மனத்தைத்திருப்பி எனது தம்பியை ப்பலருமறிய மணம்புரியும்படி செய்வீராயின் நுமக்குவேண்டி யது எதுவாகிலும் அதைத் தடையின்றிப் பெற்றுக்கொள்வீர். அழகானந்தன் திரும்பி வருவதற்கு யாதொரு ஏதுவும் இல்லை. அவனைப்பற்றி யவள் நினைந்துகொண்டிருப்பது வீண்தானே! எல்லாந் தெரிந்த உமக்கு யான் என்ன சொல்லிக் கொடுக்கப் போகின்றேன்? நீர் எப்படியாவது என் கோரிக்கையை நிறை வேற்றிவிட்டால் நீர் பெறும்படியான பெரும் பாக்கியத்தை யா ன் கூறவேண்டுவதில்லை! கரைப்பவர் கரைந்தாற் கல்லுங்கரை யாதோ? சற்று ஞாபகமிருக்கவேண்டும். (வாங்கியமருந்தைக் கீழே நழுவவிடுகிறாள். சுகுணன் அதை எடுத்துக் கொடுக்க) நீரே வைத்துக்கொள்ளும். இது அமிர்தசஞ்சீவி என்னும் சிறந்த ஔஷ தம்! இவ் வௌஷதப்பிரயோகத்தால் மகாராஜா அவர்கள் ஐந் துதரம் கிராணியாதியினின்று நீங்கினார்! உமது கஷ்டத்திற்கு முன்னாலேயே ஒரு வெகுமதி கொடுக்கும்படி, ஈசாசம்மதியும் உண்டென்பதைத் தோற்றுவிக்கும் பொருட்டே அதுவுங்கீழே விழுந்தது! என்மனம்போல நடப்பீராயின் ராஜாவிடங்கூறி எது விரும்புகின்றீரோ அதை யுமக்களிக்கும்படி செய்வதன்றி, யா னும் தருந்தபடி நடந்து கொள்வதற்குத் தடையேயில்லை! நா ழிகையாய்விட்டது! நந்தனவனத்திற்குப் புஷ்பம் பறிக்கச்செ ன்ற பெண்கள் வருநேரமாய்விட்டது!—ஐயா! நீர் இச்சவழி

யாகச் செல்வீராயின் அரண்மனைத் தெருவாயிலிற் கொண்டு போய்விடும்! உம்மை மறுபடியும் பார்ப்பேன்; யான் கூறியவை கள் ஞாபக மிருக்குமா?

சுகுணன்:—எதற்கும் தங்களை மறுபடியும் வந்து பார்க்கின்றேன். அம்மணி!

கனகாம்புஜம்:—சரி! அப்படியே! ஞாபகம் இருக்கவேண்டும். போய்வ ருகின்றீரா?

சுகுணன்:—(போகும்போது தனக்குள்) எனது நண்பனுக்கா யான் து ரோகம் நினைக்கவேண்டும்? அதைவிட இறத்தல் ஒரு பெரிய காரியமன்றே! (சுகுணன்போதல்.)

கனகாம்புஜம்:—திருட்டுப்பயல்! சற்றுவது அசைகின்றானா? இவனை நம்புவதிற் பிரயோசனமேயில்லை. இவனைக் கொன்றுவிட்டாற் பிறகு சரசாங்கிக்கு அழகானந்தன் செய்தி கூறுவோர் யாரிரு க்கின்றார்கள்? அதனுற்றான் வைத்தியர் யாத்திரை மருந்தை உதா ரம்போற் கொடுத்தேன்.—இறப்பது நிச்சயம்! பணமென்றால் யாரும் ஆசைப்பட்டு எந்தக்காரியமும் செய்யத் துணிவாரன்! இவன் முகக்குறிப்பால் அதை லக்ஷியம் பண்ணினவனென்று நி னைக்கத் தோன்றவில்லை!—இருக்கட்டும்! பிறகு சரசாங்கி எனது தம்பியை யன்றி யாரை மணம் புரிவாள்? பார்ப்போம். இரா ஜாவிடம் சற்று முடுக்கினால் நம்தெண்ணம் நிறை வேறுகின்றது! (சிங்காரவல்லிவர) எங்கே நந்தனவனத்துக்குச் சென்ற பெண் கள்?

சிங்காரவல்லி:—இதோ வருகிறார்கள்.

(இந்துவதனையும் ஏமவதியும் வருதல்.)

கனகாம்புஜம்:—வாருங்கள். புஷ்பங்களு நல்லவாசனை வீசுகின்றன. வை லயிறக்குவதற்குத் தகுந்தவைகளே! என்ன என்ன புஷ்பங் கொண்டுவந்தீர்கள்? எங்கே பார்ப்போம்?

(கைநீட்ட)

இந்துவதனையும்ஏமவதியும்:—

(பாடுதல்.)

இராகம் - கல்யாணி. தாளம் - ஆதி.

பல்லவி.

பாராய் - அம்மா - பாராய் - மலர
புதித்துச் - சிரத்தையுடன்
கரத்திற் கொண்டு வந்தோம். (பாராய்)

அநுபல்லவி.

ஏரார் மன்மதபாணம் எழின்மனோரஞ்சிதம்
சீரார் நந்தியாவட்டம்செழித்த மருக்கொழுந்தும் (பாராய்)

சரணங்கள்.

மல்லிகை முல்லையு மருவிரு வாட்சியும்
வில்வமுங் கோங்கும் விலாமிச்சம் வேருமே (பாராய்)

பாரிசாதமெனும் பவளமல்லி சண்பகம்
நீரிற் செங்கழுநீர் நிறைமணப் பாடலம் (பாராய்)

பகருஞ் சம்பங்கி பனிநீர் புட்பமொடு
மகிழங் கொன்றை புன்னை வனந்தனி இளமிவை (பாராய்)

கனகாம்புஜம்:—சரி. மற்றைப்புஷ்பவகைகளை அனுப்பிக்கொண்டுவரச் செய்வோம். இவற்றைப்பத்திரமாய் நமது அறையிற் கொண்டு போய்ச்சேருங்கள்.—

(இந்துவதனையும் ஏமவதியும் போக)

இதோ யானும் வருகின்றேன். (யாவரும்போதல்.)

ஆறுங் களம்.

இடம்:—காஞ்சியிற் சரசாங்கியின்கன்னிமாடம். காலம்:—காலை.

நடி:—சரசாங்கி.

சரசாங்கி:—தகப்பனாரோ கொடுமைக் குணமுடையவராக இருக்கின்றார்! நயவஞ்சகி சிறியதாயோ வாழை மேலே குளிர்ந்து உள்ளே வெப்பங்காட்டுவதுபோல, உதட்டி லொன்றும் மனதிலொன்று முடையவளாயிருக்கின்றாள்! மணம்புரிந்த என்னை முகுந்தன் கல்யாணஞ்செய்துகொள்ளப் போகின்றானாம்! ஓ! என் அன்பே! நீயோ அயலூரிலிருக்கின்றாய்! என் மனமோ தாமரையிலை நீர் போலத் தத்தளிக்கின்றது! என்னைப்போல் இவ்விதத்துன்ப மநுபவிப்பவர்கள் உலகிலிருப்பார்களோ? என்னை என் சகோதரர்களைப்போலப் பூதம் தூக்கிக்கொண்டு போயிருக்கப்படாதா? யான்ராஜகுமாரியாய்ப் பிறந்தென்ன பிரயோசனம்? இதைவிடக்கவலையில்லாத இடையர் மகளாய்ப் பிறந்து காலத்தைத்துன்பமின்றிக் கழிக்கலாகாதா? ஈசன் வருத்தமென்பதையே யநுபவிக்க என்னைப் பெண்ணாய்ப் பிறப்பித்தான்!—ஐயோ!— (ஏமவதிவருதல்.)

ஏமவதி:—அம்மா! சுகுணரும் மற்றொருவரும் தம்மைப்பார்க்க வந்திருக்கின்றார்கள்!

சரசாங்கி:—வரச்சொல். (ஏமவதிபோதல்.) [தனக்குள்] சுகுணரே! உம்மைத்தான் எனக்குற்ற துணையென நம்பியிருக்கின்றேன்!—

(சுகுணரும்துன்மதியும்வருதல்.)

சுகுணன்:—அம்மா! தஞ்சைமா நகரத்திலுள்ள தமது கணவரிடமிருந்து இவர் கடிதங்கொண்டு வந்திருக்கின்றார்!

துன்மதி:—(சரசாங்கியையுற்றுப்பார்த்து) அம்மா! என்ன உங்கள்முகம் வாடுகின்றதே! தமது கணவர் க்ஷேமமாயிருக்கின்றார்! தங்களை நினையாமலிருப்பதும் (கடிதம் கொடுக்கின்றான்.) இல்லை.

சரசாங்கி:—ஐயா! மிகுதியும்வந்தனம்! உட்காருங்கள்!—

துன்மதி:—(தனக்குள்) இவள் நடையுமுடையும் (சரசாங்கி மௌனமாய்க் கடிதம் வாசிக்கின்றாள்.) வார்த்தையும் மரியாதையும் மனத்தைக் கவர்கின்றன.—இதற்குத் தகுந்தபடி மனமும் நிலைப்பட்டிருந்தால் இவளே பெண்ணாவாள்?

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.”—

யான் பந்தயம் இழக்கவேண்டியதுதான்......மனமே! அதைரியப்படுகின்றாயா! என்ன! அஞ்சாதே! ஒருவழி யில்லாவிட்டால் மற்றொருவழி யிருக்கின்றது! ஒருகை பார்ப்போம்!

சரசாங்கி:—(கடிதத்தைவெளியாய்வாசிக்கின்றாள்.) “இவர்மிகவும் பெரிய மனிதர்! இவர்மீது மிகுதியும் ஞாபகமிருக்கவேண்டும்! என் மீதுள்ள நேசத்தைப்பாராட்டி நன்றாய் விசாரிக்கவேண்டும்!”— ஐயா! என்னுலானவரையும் தங்களையுபசரிப்பதற்குத் தடையில்லை!

துன்மதி:—நல்லதம்மா!—(திரும்பி) உலகத்து மனிதர்களெல்லாம் பைத்தியம் பிடித்தவர்கள்! அவர்களுக்குக்கண் என்பதே கிடையாது! நல்லது கெட்டது தெரிந்துகொள்வதேயில்லை!—

சரசாங்கி:—ஏனப்படிக் கூறுகின்றீர்கள்?

துன்மதி:—இல்லை. தெரியாமற் கிணற்றில் விழுந்து தத்தளிக்கின்றார்கள்!

சரசாங்கி:—என்ன சமாசாரம்?

துன்மதி:—ஒன்றுமில்லை. (சுகுணனைப்பார்த்து) ஐயா! நீர் தயவுசெய்து, என்னோடுவந்தவர் இந்த ஊர்ப்பழக்கமில்லாதவர்! ஆதலால்.—

சுகுணன்:—இதோபோய் அவருக்கு வேண்டியவற்றைச் செய்கிறேன்!

(சுகுணன்போதல்.)

துன்மதி:—இலக்குமிபோலும் மனைவியைவீட்டில் வைத்துவிட்டுக் குறத்திபோன்ற ஸ்திரீகள்மேல் மோகங்கொண்டு அவர்களுக்குக் குற்றேவலும் புரிகின்றார்களே! ஐயோ! பாவம்!

சரசாங்கி:—க்ஷேமமாயிருக்கின்றாரோ எனது நாயகர்?

துன்மதி:—சுகமாக விருக்கின்றார்! (இருட்டுச்சிரிப்புச்சிரிக்கின்றான்.)

சரசாங்கி:—சந்தோஷமாக விருக்கின்றாரோ? இல்லையோ?

துன்மதி:—சந்தோஷத்திற்கென்ன குறைச்சல்? சிரித்து விளையாடிக் கொண்டு தானிருக்கின்றார்!

சரசாங்கி:—இங்கிருக்கும்போது துக்கமாயிருப்பது வழக்கம்! அப்படி ஏதாவது அங்கும் இருந்து கொண்டிருக்கின்றாரோ வென்பதைத் தெரிந்துகொள்ளும்படியாகக் கேட்டேன். வேறொன்றுமில்லை.

துன்மதி:—அவர் ஒரு கணமேனுந் துக்கமாய் இருந்ததைப்பார்த்ததே இல்லையே! எங்களோடு சேலத்தார் ஒருவர்வந்திருக்கின்றார். அவர் நகரத்திலிருந்தும் தமது பெண்சாதியை நினைந்து நினைந்து உருகுவார்! அதைக்கண்டு நமதுகாதலர் பரிகாசஞ்செய்வதன்றி ஒரு பெண்ணைப்பற்றி இப்படியும் வருந்தலாமோ வென்று கண்டிப்பார்.

சரசாங்கி:—எனது கணவரா?

துன்மதி:—ஆம். தடையில்லாமல்! அவர் பரிகாசஞ்செய்வதைப்பார்க்கமகா வேடிக்கையா யிருக்குமே!

சரசாங்கி:—அப்படி நடக்கமாட்டாரே ஒருபொழுதும்!

துன்மதி:—நடக்கவாமாட்டார்? நடக்கின்றாரே! அவரையும் பார்த்து உங்களையும்பார்த்தால் எனக்கு உம்மிடம் அதிக இரக்கந்தோன்றுகின்றது!

சரசாங்கி:—என்ன காரணமோ?

துன்மதி:—என்ன காரணம்! நீங்கள் தெரிந்துகொள்ள வில்லையோ? மிகவுந் துக்கத்தை விளைக்கத் தகுந்ததே!

சரசாங்கி:—ஐயா! தயவுகூர்ந்து சற்று வெளிப்படையாகக் கூறவேண்டும்! என்னத்திற்காக என்மீதிரக்கப்படுகின்றீர்?

துன்மதி:—தங்களுடைய சுகத்தை!—யான் ஏன் கூறவேண்டும்?—

சரசாங்கி:—என்னைப்பற்றிய சிலவிஷயங்களைத் தாங்கள் அறிந்திருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது! தாங்கூறினாலன்றோ அதைஒழுங்குபடுத்தும்படி பார்க்கக்கூடும்? சொல்லும்படிவாயெடுத்தும் ஏன் அடக்கி விடுகின்றீர்கள்?

துன்மதி:—இப்பேர்ப்பட்ட முகவிலாசமுடைய பெண்சாதியைப் பிரிந்தாலும் படத்திலெழுதிப்பார்த்துக் கொண்டிரேனோ? பரஸ்திரீகளை நினைக்கவும் மனம்வருமோ?

சரசாங்கி:—எனது பிராணநாயகர் தொண்டைநாட்டை முழுது மறந்தார்போலும்!

துன்மதி:—யான் கூறவேண்டாமென்று பார்த்தாலும் தங்கள் முகச்சோதி என்னை மயக்கிக்கூறும்படி செய்கின்றது! அவர் அங்கே தாசி மயக்கத்தில் விழுந்து தத்தளிக்கின்றார்! நீங்கள் ஏன் இப்படி வருந்தியிருக்கவேண்டும்? தகுந்த புருஷரோடுகூடி ஒத்த அன்பினராய்ச் சுகிப்பதுதானே? இளமைப் பருவத்தை வீணாய் ஏன்கழிக்க வேண்டும்? பிறகு வயோதிகதசையில் இளமையை நினைந்து கண்கலங்கவேண்டி வருமே!

சரசாங்கி:—இனி இவ்வார்த்தைகள் என் காதில் விழவேண்டாம்! ஐயா!

துன்மதி:—தமது குயில் மயங்கும் வார்த்தையைக்கேட்டும் தமது தேகசௌந்தரியங்களைக்கண்டும், தம்மைக்கட்டியணைத்த சுகந்தோன்றக் களித்தும் நின்ற ஒருவனோ பரஸ்திரீகளைக் கையாற்றொடுவது? பாற்சாதத்தைவிட்டுப் புளிச்சாதத்தை விரும்புவானோ? பாலடிசில் அதனை நுகருந் தன்மை யுடையவனுக்கன்றோ உபயோகப்படல் வேண்டும்?

சரசாங்கி:—என்ன வீணான விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றீரே!

துன்மதி:—மயிலும் வெட்கும் சாயலை யுடையவளே! உன் நலம் வீணாய்ப் போவதைப்பார்க்க எனக்கு மனம் வரவில்லை! உனதிளமை பயன்படும்படி அநுபவிக்கத் தகுந்தவனன்றோ அநுபவிக்கவேண்டும்?

சரசாங்கி:—உமக்குத் தகாத விஷயங்களைக் குறித்து நீர் வார்த்தையாட வேண்டாம்!

துன்மதி:—கண்ணே! என்ன கோபித்துக் கொள்கின்றாய்? உன்னைச் சிறிதேனும் நினைக்காதவனை நினைத்து நீ ஏன் கனவு காண்கின்றாய்? உனது ஒரு முத்தத்திற்குப் பதினாயிரம் பொன்னுங் குறைந்த விலையன்றோ? என்னை உனக்கே காணிக்கையாகக் கொடுத்துவிடுகின்றேன்! மட்டும் ஏறத்துணிந்தேன்! எப்போதும் உன்னை விட்டுப் பிரியாமல் உனக்குக் குற்றேவல் செய்து கொண்டிருப்பேன்! கண்ணே!—

(அவள்கையைப்பிடிக்கப்போகின்றான்.)

சரசாங்கி:—ஐயோ! சுகுணரே! எங்குச்சென்றீர்?

துன்மதி:—தோழனே! எங்கே ஒருமுறை தங் கொடு. பார்ப்போம். நானமோ என்ன? பிணைப்பிக்கொள்கின்றாயோ? என்னிடத்தில் என்ன உனக்குப்பிணைக்கு?

சரசாங்கி:—அரகில்லும்! கிட்டே வராதீர்!— சுகுணரே!— உமது வார்த்தைக்குச் செவிகொடுத்த எனது காதையான் அறுத்தெறிய வேண்டும்! நன்மை கூறுவதுபோலக் கெடுக்கவந்தீரே! நல்ல யோக்கியதை! சிநேகனுக்குச் செய்கின்றநன்றி நன்றாயிருந்தது! நீர் கூறியன வெல்லாம் அபத்தம் என்று தெரிந்துகொண்டேன்! பாவி! கெட்டிழ் வாசித்தேனே! அதிற் குறிப்பித்திருந்ததையுமறந்தேனே!—சுகுணரே! எங்குச் சென்றீர்? (துன்மதியைநோக்கி) எனது தகப்பனாரிடங்கூறி யும்மைச் சிரசாக்கினை புரியும்படி செய்கின்றேன்!—ஐயோ! சுகுணரே! எங்குச் சென்றீர்?

துன்மதி:—ஓ! என்னருமைத்தோழா! நீயன்றோ கொடுத்துவைத்தவன்? ஓ! அழகானந்தா! உன்குணத்திற்குத் தகுந்தவளோ சரசாங்கி! இப்படியிருக்கின்ற ஸ்திரீபுமான்களை யான் உலகிற்கண்டதேயில்லையே! புண்ணியம் பண்ணினால் உன்னைப்போற் புண்ணியம் பண்ணவேண்டும்! நீகூறியதைவிடப் பத்துப்பங்கு அதிகமேயன்றிச் சிறிதுந் தவறில்லை!—(சரசாங்கியைப்பார்த்து) அம்மா! தங்களிடம் இவ்விதமாக வார்த்தையாடின வெல்லாம் தங்களைப்பரிசோதித் தறியவேண்டியன்றி வேறன்று. உங்களுடைய மானத்தைப் போக்க நினைத்தவனல்லேன்! தாங்கள் ஒருவேளை சம்மதித்திருந்தாலும் தங்களை நிராகரிப்பேனேயன்றி ஒப்புக்கொள்ளேன்! சிநேகன் மனைவி தன்தாயல்லவோ? சகோதரி, பெண்ணல்லவோ? இதையானறியேனோ? அன்னமிடும்வீட்டிற் கன்னமிடலாமோ? உமது மனவுறுதியைக் கண்டறிந்தேன்! அழகானந்தனைப் போன்றகணவனை யுலகத்திற்காணவுங்கூடுமோ? அவனைப்போல் மனவுறுதியையுடையபுருடரும் உலகிலுண்டோ?

சரசாங்கி:—திருப்பிக் கேட்கின்றீரோ?

துன்மதி:—இராமனுஞ் சீதையும் போன்றவர்கள் அவரும் நீருமன்றி வேறேவேவருமில்லை! நீரே யுலகமெய்ச்சத் தகும் பதிவிரதை!

(பாடுதல்.)

இராகம் - சாவேரி. தாளம் - ஆதி.

பல்லவி.

தகுந்தகும் பதிவிரதா செந்தேனே - யுன்றன்
சங்கதி யறியாமல் வந்தேனே.

அநுபல்லவி.

புருஷர்களைக் கருதாப் புன்மை யாள | னென்னது
புந்தி விளங்கிட வுன் புருஷனன்று | சொன்னது (தகுந்)

சரணங்கள்.

கோதமன் சதியிந்த்ரன் கொள்கைக் குடன் | பட்டாளே
கோகன்னனை த்ரௌபதி கூடவெண்ண | மிட்டாளே
மாதுதாரை சந்த்ரனை மருவிமானங் | கெட்டாளே
மங்கையேயவர்போலெண்ணிவழுத்தியயான்மூட்டாளோ(தகுந்)

மீகிழ்நன் பிரிந்தசந்த்ர மதியும் வழுவி | லாத
வனப்புடைய சீதையும் வாய்ந்தகற் பழி | யாத
புகழ்சேர் தமயந்தியும் புவியிலும் மையும் | போதப்
போற்றிச் சமமாம்நல்ல புத்தியுடையரென் | றோதத்(தகுந்)

பேதைமைக் கலன்கொண்ட பெண்கள் மதி | மயக்கல்
பெரியதன்றென் றுரைக்கும்பேச்சிங்கதி | சயிக்க
ஏதுநாண்பசப்பியும் இணங்கிலம் | பயக்க
விடங்கொடாமற் கற்பினை வந்துமுனை | வியக்கத்(தகுந்)

ஏ! ராஜபுத்திரி! உனக்கமைந்த கணவனே கணவன்! மலரும் மணமும் தீபமும் ஒளியும்போன்று பிரகாசிக்கின்றீர்கள்! யான் தங்களுக்குக் கோபமூட்டியும் கோபித்துக் கொள்ளாமலிருந்தீர்களே! உங்களைப்போற் குணசாலியை யுலகிற் காண்பதரிதரிது! தாங்கள் மன்னிக்கவேண்டும்! அம்மணி!

சரசாங்கி:—நல்லது ஐயா! தாங்கள் இன்று இங்கேயே போசனஞ் செய்யுங்கள்!

துன்மதி:—அம்மணி! ஒருவிண்ணப்பம். அதைப்பற்றித் தாங்கள் கொஞ்சங் கவனிக்கவேண்டும்.

சரசாங்கி:—என்ன அது?

துன்மதி:—நாங்கள் சோழநாட்டரசருக்குக் காணிக்கை செலுத்த யோசித்திருக்தோம். அதற்காகச் சில விலையுயர்ந்த சாமான்கள் வாங்கிவைத்திருக்கின்றோம்! அந்தப்பெட்டியைத் தாங்கள் காப்பாற்றிக் கொடுக்கவேண்டும்!

சரசாங்கி:—எனது கணவரும் அதிலொருவரானபடியால் அவசியம் கொண்டுவாருங்கள். இங்கு என்படுக்கையறையில் பத்திரமாயிருக்கும்.

துன்மதி:—மிகவும் சந்தோஷம்! எனது வேலைக்காரர் வசமனுப்புகின்றேன்! இன்றிரவு மாத்திரமே! நாளைக்கு யாருக்குப் புறப்படவேண்டியிருக்கிறது.

சரசாங்கி:—சிலதினங்களிலிருந்து செல்வதுதானே?

துன்மதி:—தங்களிடம் கடிதம் கொடுக்கும்படியாகவே இரண்டு நாட் பிரயாணம் வரும்படி நேரிட்டது! யான் இனி நிற்க நாளில்லை. கடிதம் ஏதாவது எழுதும்படி யிருந்தால் இன்றிரவே எழுதிவையுங்கள்.

சரசாங்கி:—அப்படியே எழுதிவைக்கின்றேன். பெட்டியை யனுப்புங்கள். அதி சாக்கிரதையாய்க் காப்பாற்றித் தங்களிடம் ஒப்புவிக்கப்படும். ஏமவதி!—

(ஏமவதிவர)

இவரை அரண்மனை வாசலிற் கொண்டுபோய் விட்டுவிடு.

(துன்மதியும் ஏமவதியும் போதல்.)

இந்துவதனை ஏன் இன்னும் வரவில்லை? எங்கிருப்பாள்? அவளையும் பார்க்க வேண்டுமே!

(போதல்.)

முதலங்கம் முற்றிற்று.

அங்கம்-II.

முதற்களம்.

இடம்:—அரண்மனைவாயின்முற்றம். காலம்:—மாலை.

நடர்:—முகுந்தன், பிரபுக்கள்.

முகுந்தன்:—நீங்கள் எல்லாம் இருந்தும் பிரயோசனமே இல்லை. ஐயா!

முதற்பிரபு:—என்ன ஐயா! என்ன?

இரண்டாம்பிரபு:—என்ன ஐயா! அப்படிக் கூறுகின்றீரே! உம்மை நன்றாய் விசாரிக்கின்றதில்லை என்கின்றீரா?

முகுந்தன்:—ஆமாம். ஐயா!

முதற்பிரபு:—ஆமாம். ஐயா! மறந்துவிட்டேனே! பார்த்தீரா? ஆமாம். ஐயா! கல்யாணசமாசாரம் எப்படி இருக்கின்றது? ஐயா!

இரண்டாம்பிரபு:—(தனக்குள்) எத்தனைபேர் விசாரிக்கின்றார்கள்! இன்னும் நாமும் விசாரிக்கவேண்டுமா? விசாரிப்பதற்கு ஆயுதந்தான் அகப்படவில்லை!—(வெளியாய்) கல்யாணம் இருக்கிறபடி யிருந்து கொண்டிருக்கின்றது!

முகுந்தன்:—ஆமாம். ஐயா!

முதற்பிரபு:—ஆமாம். ஐயா! இழுப்பிலே இருக்கிறது! அப்படித்தானே!

இரண்டாம்பிரபு:—பின்னென்ன? அப்படித்தான். இழுப்புத்தான்!

முகுந்தன்:—ஆமாம். ஐயா! இல்லை ஐயா! இல்லை ஐயா! சித்திரைமாதம் கல்யாணந்தான். ஐயா!

முதற்பிரபு:—யாருக்கு?

இரண்டாம்பிரபு:—அழகானந்தனுக்கு!

முகுந்தன்:—ஆமாம். ஐயா! இல்லை ஐயா! இல்லை ஐயா! எனக்கு.

முதற்பிரபு:—உமக்கா! நல்லது.

இரண்டாம்பிரபு:—பெண் எங்கே ஐயா!

முகுந்தன்:—சரசாங்கிதான்! வேறேயார்? ஆமாம். ஐயா!

முதற்பிரபு:—உமது பாட்டன் யாரோ ஒருவன் அழகானந்தனிடமிருந்து வந்திருக்கின்றானே! அது தெரியாதா வுமக்கு?

முகுந்தன்:—அழகானந்தனுவந்தான்? முன்னேதான் இரண்டுபேர் தமித்து விட்டார்கள். ஓடிப்போகுன். இப்போதுகூடவா? உதைத்துவிட்டு வருகின்றேன்! விடுங்கள் ஐயா! என்னை.

(இருவரும்முகுந்தனைப்போகவொட்டாமற் றடுத்தல்.)

முதற்பிரபு:—முன்னே உதைபட்டதுபோதும். ஐயா! அவசரம் வேண்டாம்! சற்றுநில்லும். ஐயா!

இரண்டாம்பிரபு:—இதைமாத்திரம் கேட்டுவிட்டுப்போம். ஐயா!

முகுந்தன்:—என்ன ஐயா! தப்பி ஓடிப்போகப் போகின்றுன்! சீக்கிரம் சொல்லும். விடுங்கள். ஐயா! என்னை.

முதற்பிரபு:—யான் சொன்னது தெரிந்ததா!

முகுந்தன்:—நீர் சொன்னது தெரிந்தது.

இரண்டாம்பிரபு:—மட்டைக்கு இரண்டு கீற்றென்றுதானே தெரிந்தது! இருக்கட்டும். இப்போது போகப்போகின்றீரே! என்ன ஐயா! உதைப்பதாயக் கூறினீரே! ஒருகாலிலேயா அல்லது இரண்டுகாலிலேயாஉதைத்துக்கொள்ளப் போகின்றீர்? இதைமாத்திரஞ்சொல்லி விட்டுப்போம்.

முகுந்தன்:—ஆமாம். ஐயா! நல்லகேள்விகேட்டீர்! ஒருகாலிலே யுதைத்தால் சரியன்று. ஐயா! நீர் சொன்னீரே நல்லயுக்தி! இரண்டு காலிலே யுதைத்துக்கொள்ளப் போகின்றேன்!

(இரண்டுகாலிலே யுதைத்துக்கொல்லப்போகின்றேன் என்பதற்கு வாய்தவறியுதைத்துக் கொள்ளப்போகின்றேன் என்கின்றுன்.)

இரண்டாம்பிரபு:—*ஆனால் அதுவேசரிப்பட்டால் கொடுக்கும் ஐயா! இரண்டுகாலையும் உதைத்துக்கொண்டு மண்டையுடைந்து கீழேவிழுந்தப்பல்லை யிளித்துத் திருவடிதீக்ஷைசெய்து கொண்டால் கல்யாணந்தான். ஆம். ஆம்.

முகுந்தன்:—வேசரி என்றால் என்ன? ஐயா!

இரண்டாம்பிரபு:—இது தெரியாதா! வேசரி என்றால் சிங்கம்! வேசரி என்றால் கழுதை!

முதற்பிரபு:—யான் சொன்னதில் நீரென்ன தெரிந்துகொண்டீர்?

முகுந்தன்:—அழகானந்தன் வந்தான் என்றுயே. ஐயா!

முதற்பிரபு:—இல்லை ஐயா! இல்லை ஐயா! அழகானந்தனிடமிருந்து கடிதம் சரசாங்கிக்கு வந்ததென்றன்றே சொன்னேன்?

* இந்த வாக்கியத்தை யுற்றுநோக்க இருபொருள்பயக்கும்.

இரண்டாம்பிரபு:—(தனக்குள்) மண்டையிலே களிமண்தானே அடைத்து வைத்திருக்கிறது! அங்கேஏன் அனுத்தானைபுத்தியாவதிருக்கும்?—நல்லது முகுந்தரே! இப்படிவாரும். நீர் கல்யாணம் கல்யாணமென்று சொல்லிக் கொண்டிருக்கின்றீரே! சரசாங்கிக்குச் சம்மதந்தானு?

முகுந்தன்:—எனக்குச் சம்மதந்தான்! இப்போது அழகானந்தன்தான் வரப் போகிறதில்லையே! என்னையல்லாமற் பின்யாரைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகின்றுள்?

இரண்டாம்பிரபு:—மனப்பால் குடிக்கின்றீரோ? இங்குவாரும்! யான் சொல்வதைக்கேளும். நேராகப்போய் ‘என்னைக் கல்யாணம்பண்ணிக்கொள்’ என்று கேளுமே!

முதற்பிரபு:—இவனைத் திரும்பித்தான் பார்ப்பதில்லையே! இவரெங்கே நேராகப்போகிறது?

முகுந்தன்:—ஆமாம். ஐயா! அதுமுடியாது! வேறு ஏதாவது ஒருதந்திரம் சொல்லுமே!

முதற்பிரபு:—இப்போது சொன்னீரே! இரண்டுகாலாலுதைத்துக் கொள்ளும்படி அதைப்போல் ஒருதந்திரம் சொல்லுமே!

இரண்டாம்பிரபு:—ஆறுதற் சொல்லுகின்றேன்! யோசிக்கின்றேன்!—அவள்காலிலேவிழுமே!

முகுந்தன்:—நானு ஐயா! காலில்விழுகிறது?

இரண்டாம்பிரபு:—உம்மை யான்சொல்லவில்லை! கோபித்துக்கொள்ளாதீர்! ஐயா! வேறொன்று சொல்லுகின்றேன்! நீர்நீதிநூல் வாசித்ததில்லையோ? அதில் ‘தையலை(ப்)பாடிமகிழ் விக்கவேண்டு’ மென்பது உமக்குத்தெரியாதோ?

முதற்பிரபு:—நீர்சொல்லுகிறது மெத்தச்சரி! ஐயா!

முகுந்தன்:—நீர்சொன்னதென்ன? நன்றுய்ச்சொல்லுங்கள். ஐயா!

இரண்டாம்பிரபு:—பெண்பிள்ளைகளுக்குப் பாட்டுப்பாடவேண்டும். ஐயா! அப்போதுதான் அவர்கள் கல்யாணஞ்செய்து கொள்வார்கள்!

முகுந்தன்:—ஆமாம். ஐயா! ஆனல் எனக்குப் பாடத்தெரியாதே!

இரண்டாம்பிரபு:—உமக்குமுன்னமே வேசரிப்பட்டங்கொடுத்திருக்கின்றதே! நீரேன்பயப்படுகின்றீர்? வாயைத் திறந்தால் வண்ணான் வருவான்! வந்தால் நமக்கென்னபயம்? (முதற்பிரபுவைப்பார்த்து) ஏன் ஐயா? இவர்பேசினால் குயில்கூவுகிறதுபோலில்லை.? அவருடைய கெட்டிக்காரத்தனம் அவருக்குத் தெரியவில்லை!

முகுந்தன்:—எனக்கு ஒருபாட்டும் தெரியாதே!

முதற்பிரபு:—ஏனோ ஐயா! வருத்தப்படுகின்றீர்? யான் சொல்லிக்கொடுக்கின்றேன், வாரும்.

முகுந்தன்:—சொல்லிக் கொடுக்கின்றீரா?—இங்கேயே சொல்லிக்கொடும். இப்பொழுதே சொல்லிக்கொடுக்க வேண்டும்.

முதற்பிரபு:—வாரும்! சொல்லிக் கொடுக்கின்றேன்.

முகுந்தன்:—வேண்டாம். இங்கேதான் சொல்லிக்கொடும்.

முதற்பிரபு:—அப்படியானால் யான் பாடும்போது நீர் கூடப்பாடுகின்றீரா?

முகுந்தன்:—ஆ ஆ அப்படியே பாடுகின்றேன். சொல்லிக்கொடும்.

முதற்பிரபு:—

(பல்லவிபிடித்துப் பாடுதல்.)

இராகம் - கல்யாணி. தாளம் - ஆதி.

பல்லவி.

சரசி யடியென் கண்ணே-கூடவிது
தருணந் தருணம் பெண்ணே.

முகுந்தரே! சும்மாவிருக்கின்றீரே! பாடும்.

முகுந்தன்:—நீர்முற்றதும் பாடிமுடித்தபின்பு பாடுகின்றேன்.

முதற்பிரபு:—அனுசரி. (பாடுதல்.)

அநுபல்லவி.

கரிசற வெதிர் வந்து
கனிந்துவாய் முத்தந் தந்து (சரசி)

சரணங்கள்.

வில்லெனும் புருவத்தால் விளங்கிடுங் காமன் போலா
வல்லியிகவு மாற்றில் வர்ணிப்பே னென்றன் சீரைச் (சரசி)
மார்பை யிலக்கு வைத்து மன்மதன் வில்லெடுத்துப்
பாரில் வருத்துகின்றான் பஞ்ச பாணந் தொடுத்துச் (சரசி)
ஏதடி யுனக் கென்மே லிந்த வஞ்சனை சாற்று
காதல் மீறுமே மனங் கனிந்தெனைக் கொப் பாற்று (சரசி)

பாடல்முடிந்தது. நீர்பாடுகிறதுதானே!

முகுந்தன்:—இந்தப்பாட்டு வேண்டாம். ஐயா! வேறொருபாட்டுச் சொல்லிக்கொடும்.

முதற்பிரபு:—ஏன் ஐயா?

முகுந்தன்:—இது பெரியபாட்டாயிருக்கிறது! இதுவேண்டாம். வேறொன்று சொல்லிக்கொடும்.

முதற்பிரபு:—அப்படியானால் வாரும் சொல்லிக் கொடுக்கிறேன்.

முகுந்தன்:—சொல்லிக் கொடுக்கின்றீரா? இதோவந்து விட்டேன்: (இரண்டாம்பிரபுவைப்பார்த்து) நீர்வரமாட்டீரோ?

இரண்டாம்பிரபு:—நீங்கள் போங்கள். இதோவருகின்றேன்.—

(முகுந்தனும் முதற்பிரபுவும் போதல்.)

முகுந்தா! அடேமூடா! பெற்றார்களே உன்னையும் பிள்ளையாய்! அவர்கள்பெற்ற பாக்கியமே பாக்கியம்! உனது தங்கையையும் உன்னையும் ஒரேவயிற்றிற்றானே பெற்றாள்உனதுதாய்? அப்படியிருக்க அவளது புத்திசாலித்தனத்திலும் நயவஞ்சகத்திலும், பதினாயிரத்திலேயொருபங்கு கூட உன்னிடமில்லையே! ஏனோ?—அழகும் அன்புமே யுருவாயமைந்த சரசாங்கி! நீ நன்றாயிரு! சுகமாயிரு! அநுகாலங்களுக்கும்வாழ்ந்திரு! ஈச்வரன் நம் மிருவர் மனத்திலும் இரும்புக்குங் காந்தத்துக்குமுள்ள ஒற்றுமையை யுண்டாக்கக்கடவும்! சிற்றன்னையினது நயவஞ்சகத்திற் கிணங்கி மயங்காதே!...முகுந்தன் குலைக்கப்போகின்றான்! யானும் போகின்றேன். (போதல்.)

இரண்டாங்களம்.

இடம்:-காஞ்சியிற்சரசாங்கியின்சயனக்கிருகம். காலம்:-நள்ளிரவு.

நடர்:—சரசாங்கி, இந்துவதனை.

[சரசாங்கி வாசித்துக்கொண்டிருக்கின்றாள். இந்துவதனை நின்று கொண்டிருக்கின்றாள். ஒருமூலையில் ஒருபெட்டி யிருக்கின்றது.]

சரசாங்கி:—இந்துவதனே!

இந்துவதனை:—ஏன் அம்மா?

சரசாங்கி:—நாழிகை எவ்வளவு ஆயிற்று?

இந்துவதனை:—பதினைந்து நாழிகை!

சரசாங்கி:—அப்படியானால் அதிகநாழிகையாய் விட்டது! இந்தப்புத்தகத்தில் இவ்விடத்திற் குறியிட்டுவைப்பாய். நீயும்சென்று சயனித்திரு. (இந்துவதனை புத்தகத்தைவைக்கச்செல்ல) விளக்கெரியட்டும்.

அதை ஏன் அவிக்கின்றாய்? விடிய நான்கு நாழிகைப் பொழுதா ம்ரு, எழுந்திருக்கக் கூடுமானால் இங்குவந்தென்னை எழுப்புகின் றாயா?—நித்திரையோ என்கண்ணை மயக்குகின்றது.—

(இந்துவதனை போகின்றாள்.)

(பாடுதல்.)

பைங்கணு ளழகா னந்தப் பார்த்திபன் வாரா னுயி
வெங்கணு னுனே யென்றன் வேதனை யென்ன சொல்வேன்
எங்கணு யகனே தேவ ரிடர்கெடுத் தின்ப நல்கும்
அங்கணு தமியேன் றன்னை யாண்டருள் புரிவாய் போற்றி.

என்றுமே யுறங்க லேனு யிடர்ப்படா நின்ற வென்னை
இன்றுதா னுறக்க மெல்லா மெதிர்த்துடற் சிறைபி விட்டு
நன்றிமைக் கதவ மூட நயந்தது மெற்றி னுக்கோ
ஒன்றுமே யறிய கில்லே னும்பர்நா யகனே போற்றி.

எந்தையே யெம்பி ரானே யிமையவர்க் கரசே யன்பே
கந்தினை யடர்க்கும் வெற்றிக் களிற்றுரி போர்த்த நாதா
சிந்தைநின் னிடத்தில் வைத்தேன் திருவருள் செய்ய் வேண்
அந்தமு மாதி யில்லா வருமறைப் பொருளே போற்றி. [டும்

ஏ! ஈசா! இவ்வேழையைக் காப்பாயாக. (படுத்துறங்குகின்றாள்.)

(துன்மதி பெட்டியைத்திறந்து வெளியில்வருதல்.)

துன்மதி:—உலகத்துயிர்கள் எல்லாம் அயர்ந்து நித்திரை புரியும்படியான காலம் இதுவே! நல்ல பதினைந்து நாழிகை நிசிப்பொழுதும் வந்துவிட்டது.— நம்மைப்போன்ற வஞ்சகர்களுக்கும் காமாதூரர்களுக்கும் நெஞ்சில் ஈரமில்லாத கொலைகளவாளிகளுக்கும் தகுந்தசமயமே!—இந்திரன் அகலிகையினைக் கெடுக்க எண்ணங்கொண்டு கௌதமர் உருவங்கொண்டானல்லவோ? நாம் என்ன உருவமடைவோம்? அழகானந்தன் உருவங்கொண்டால் நமதெண்ணங்கள் எல்லாம் பூர்த்தியாய்விடும்!—அஃது எவ்வாறு இசையும்? இவள் அகலிகையைப்போன்றவ ளல்லளே!—ஒருபோதும் நடவாது!—அவ்வாறு நடக்கக் கூடுமாயினும் அவ்வுருவெடுக்கு மாற்றல்தானும் நமக்குண்டோ? இல்லையே!...ஏன் யான் பலவந்தஞ்செய்து என் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கூடாது? இங்கு யாரிருக்கின்றார்கள்? கதவும் மூடித்தானே யிருக்கின்றது. அவள் கூச்சலிடாத விதமாயொரு ஏற்பாடு செய்தால்!—(மௌனம்) மனமே! நின்யோசனை வெகு நன்று! வெகு நன்று!!—

(பாடுதல்.)

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'யென்றே - யையமிலா
தான்றோர்க ளோத்து மருணிறைசெந் நாப்போதா!
ரூன்றி யுரைத்ததுபொய் யோ?

கற்றவர்சொற் கற்புமலர் நிறைகொம்பைக்
காமுகனுங் கடைக்காற் றீனும்
பற்றியசைத் தம்மலரைச் சிதறுறச்செய்
திடவிந்தப் பாரி லுண்டோ
வெற்றுரையே காட்டிடத்தும் மலையிடத்து
மில்லிடத்து மேவி னுலுந்
சுற்றினுந்தீச் சுடர்செய்யு மங்கிகுணம்
பிறழ்ந்திடுமோ சொல்லாய் சொல்லாய்.

வஞ்சகம்பொய் சூதுரைத்தல் பெரும்பாவ
முதலியவும் வாதப் பேயு
நெஞ்சமுத்த முடையநெடும் பூதங்க
முதற்பலவு நிகரில் லாத
வஞ்சகொடுஞ் சாபமுமிக் கற்பெரிமுன்
சருகாக் வவியு மன்றி
நஞ்சுகளங் கொண்டவன்மால் பிரமனவள்
சீருரையி னடப்பர் மாதோ.

ஒண்டொடியும் பத்தினியென் றுணர்ந்தனை நீ
கண்ணகியென் றொருபேர் பெற்ற
பெண்கொடியாற் கடலுலக திலகமெனு
மதுரைநகர் பிறந்த தீயின்
விண்டசையுங் கொடிமாடம் வெறுநீறு
யெரிந்ததுமும் வேடன் றன்முன்
றண்டருசொற் றமயந்தி திருவாக்கா
லுயிரையிழந் தமையு மோராய்.

ஆம். பைசாசத்தன்மையா யநுபவித்தலி லின்பமுண்டோ? இல்லை. இல்லை. அந்த எண்ணம் வேண்டாம்.—ஆனாலும் அழகானந்தனைப் பந்தயந் தோற்கச்செய்யும் மார்க்கத்தையாவது தேடுவேன். அதிற் பின்னடைவேனோ?—இனிச் சந்தடி தெரிந்து விழித்துக் கொண்டாளானால் யாம் எப்படித் தப்பிச்செல்வது? இதற்காகவே

நாம் கால்களிற் றுணி சுற்றிக் கொண்டிருக்கின்றோமே! இனி என்னபயம்? சந்தடி தெரியாமல் மெல்ல மெல்ல நடந்து அவளருகிற்செல்வோம்!—(சரசாங்கிஅருகில்வந்து அவளைக்கண்ணுற்று) "கண்ணி றேறுடி பிறந்தது காரிகை, வண்ணாய் காண்டற் கன்றே."—யான் பிறந்த பயனின்றடைந்தேன்.—ஏ! பாவாய்!

(பாடுதல்.)

பளிங்கதனு லியற்றுறாற் பாவையினும்
பனிமடங்காய்ப் பலரு மேத்தும்
விளங்கொளியும் வனப்புமைநீம் பொதிந்தவொரு
செய்யகிற மேனும் பாவாய்.

ஏ! ரதியே! ரதியைப்போல் அழகைப் படைத்தவள் நீதானோ!—

(பாடுதல்.)

இராகம் - பைரவி. தாளம் - ஆதி.

பல்லவி.

அழகைப் படைத்தவள்நீ தானோ - இன்னும்
யாரையுனக் கொப்பிடு வேனோ.

அநுபல்லவி.

மழைமுகிற் கருங்குழல் வளர வுமிழ்ந்திடும்
வருநடை விடுமதி நுதலெனப் புகழ்ந்திடும் (அழகை)

சரணங்கள்.

வேனிலான் வருத்திட விடுங்குவளைப் பகழி
தான்புரையுள் மறைந்த தன்மைத் துயிலும் விழி (அழகை)
எள்ளின் மலர்க்குமிழை யெள்ளுநன்மணம் வீசி
உள்ளத்தை யுருக்கழ கொழுகி விளங்கு நாசி (அழகை)
செம்பவளத் துண்டெனத் திகழ்கவையத கிதழும்
இன்ப மளிக்க வுத கிடும்பிதழ் முருக் கிதழும் (அழகை)

சயனித்திருக்கின்ற உன்னைப்பார்க்கின்றவர்களும் கூசுகின்றனவே! ஆண்மைக்குரிய அறிவு நிறை யோர்ப்புக் கடைப்பிடி யென்னும் நான்குணங்களும் புலன்வழிப் புக்காயின்தாற்போ லாயினவே!—

(பாடுதல்.)

அன்னப்பு ளொலிக்குரலாற் கன்னுற
மென்றுணைத்த தரிந்தி லேனும்
கன்னலிது பிலிய நறு மொழியுடையா
ளிமையைடுக் கன்னு றங்க

வின்னமில்லை யென்றெமக்கு வாய்திறவா
வெடுத்துரைக்கு மிணைப்பா தத்துப்
பன்னருநற் கிண்கிணியைக் கருத்திலமைத்
துறவுகொளப் பயன்ப டாவே.

அன்பைக்காட்ட ஒரு முத்தமிடுவெலென்றெழுந்தாலு மங்கையினாங், குவன வல்லவே! யான் வேறு எவ்விதம் கைம்மாறவற்றிற்குச் செய்வது!—தெய்வலோகத்திலே மேனகை,அரம்பை,ஊர்வசி, திலோத்தமை,என்னும் அப்சரஸ்திரீகள் மிகுதியும் அழகு வாய்த்தவரெனக்கேட்டதுண்டு. அவர்களும் நின்னைக்கண்டால் மோகிக்க வேண்டுவதுதான்! தம்மைப் புருஷர்களாகப் பிறப்பிக்கவில்லையே யென்று பிரமனையும் வைவார்கள்! நினக்குக் குற்றேவல் புரியவுந்துணிவர்கள்!—வாடாதபூவே! உன்னைப் பூவிலுறைகின்ற இலக்குமி யென்று தான்கூறுவதோ? அவளுக்கும் மேம்பட்டவளே! ஆதலால் நீயவள் திலகமாகின்றாய்! அவள் தன்னைவிட அழகில் மிகுந்தவர்களில்லை யென்னும் நினைப்பையொழிக்கவே இப்புவியிற்பிறந்தாய்! உன்னை யினியாருக்குச் சமானமாக யான் கூறுவது? உனக்கொப்புமில்லை யுயர்வுமில்லை! உன்னை யுனக்கே ஒப்பிடவேண்டுவதுதான்!—காந்தள் மலராகிய கரத்தினிடத்திற் குறுவேர்வையரும்பியிருப்பதைக்கண்டு முத்தும் மயங்குமே! ஒருமுத்தங் கொள்ளவா? ஓரேமுத்தம்! வேறுவேண்டுவதில்லை! ஐயோ! தொடுவேனோ? தொட்டாற் சுடுமே! பதிவிரதாக்கினி சுட்டெரித்துவிடும்! நிச்சயம்! சாம்பலாக வேண்டுவதுதான்! சந்தேகமேயில்லை! யோசிக்கவேண்டுவதில்லை!—

(பாடுதல்.)

செங்கமல மலரின்கிழங் காந்தண்மல
ரலர்ந்ததெனச் செழும லர்க்கை
தங்குநிமு லாடியெனுங் கவுட்புறத்தைக்
கவர்ந்ததனாற் றரிக்கி லாது
பொங்கியெழுந் தொறுங்கினதா லிருபுறமுந்
தாவியணைபொருமை மேற்கொண்
டிங்குநிலைத் திணைப்பொருளுஞ் சோதைநல்ன்
விரும்பினவென் றெண்ணு நின்றேன்.

ஐயோ! இம்மங்கையினது பரிசவின்பத்தை என்றும் அநுபவிக்கும்பொருள்களுள் ஒன்றாகவாவது பிறந்தேனில்லையே!—மனமே! ஏன் வீண்யோசனை?—பவளமும் சரியாமோ இவ்விதழ்களுக்கு?

தாமரைப் புஷ்பமும் வெட்கித்தலைகுனியும் இவளது முகவிலாசத் தைக்கண்டு!—இதென்ன! இவ்வறையிற் சண்பக மலரிருக்கின் றதோ? வாசனை மூக்கைத் துளைக்கின்றதே! இல்லை! இல்லை!! இவள் உயிர்ப்பே நறுநாற்றத்தையுடையது! நல்ல பத்மினிஜாதி ஸ்திரீயல்லவா? கூறுவானேன்!...விளக்கேன் மங்கியெரிகின்றது? மாணிக்கமாகிய இவளது இளஞ்சூரிய ஒளிக்கு விளக்கு மழுங்கிப் போகாமலென்செய்யும்? மரகதமும் ஒளிகுன்றும்படியாகப் பச்சை நரம்புகள் என்ன விநோதமாக இவள்கையிற் படிந்திருக்கின்றன! ஆ! ஆ! வைரமும் இவளது கூட்டுறவை வேட்டு இவளுறுப்புக்களிற் படிந்திருக்கின்றதுபோலும்!—வந்தகாரியத்தை விட்டு இவளை நினைத்து உருகி வர்ணித்துக்கொண்டிருந்தால் நாழிகையாக என்ன தடை? பின்பு திரிதிரியென்று விழிக்கவேண்டிவரும்! நாம் ஆரியக்கூத்தாடினும் காரியத்தின் மேற்கண்ணாயிருக்கவேண்டாமா? நமதுகாரியத்தைப்பார்ப்போம்!—இந்த அறையில் என்ன என்ன விசித்திரங்களிருக்கின்றன? இவற்றை எல்லாம் ஞாபகப்படுத்துவதிருக்கூடுமோ? கூடாது! இவற்றை யெல்லாம் எழுதி உருப் போட்டு விட்டால் அழகானந்தனிடம் தடதடவென்று வொப்பு வித்து விடலாம். ஆம். இதுவே தகுந்தயோசனை!

(கடிதமும் எழுதுகோலும் உடையினின்றும் எடுத்து எழுத வாரம்பிக்கின்றான்.)

இங்குத் தொங்கவிடப்பட்ட விளக்குகள், படங்கள், கட்டிலின் விசேஷம், யாவும் எழுதியாயின!—இனி என்ன எழுதவேண்டும்? ஒன்றுமில்லை. இதைக்கூறினால் அழகானந்தன் நம்புவானோ? ஒரு காலும் நம்பமாட்டான்! அவள் தேகத்திலுள்ள அடையாளங் களைப்பற்றி ஏதாவது கூறினாலன்றோ நம்புவான்! ஆம். ஆம். அது ஒன்றுதானும் தெரிந்துகொண்டால் இப்பொழுது எழுதிக்கொண் டவைகளைக்காட்டிலும், அவனை ஏமாற்றுவதற்கு நல்லது! ஸ். மறந்துவிட்டேனே! அவள் கையிலிருக்கின்றவளை! ஆ! ஆ! அதில் லாவிடிற் பந்தயம் போய்விடாதோ! (சரசாங்கி புரளும்போது 'பிராணநாதா!' என்கின்றாள். தன்பதி விழித்தானென்று நினைத்து ஒளிக்கமுயல்கின்றான்.—பிறகு அதுபொய் யென்றறிந்து) தூங்கும்போதும் அழகானந்தனை நினைத்துக் கனவுகாண்கிறாளே!—அதைப்பற்றி நாமேன் நினைக்கவேண்டும்? நமது கண்ணுங்கருத் தும் இப்பொழுது அவள் கையிலணிந்திருக்கும் வளையின்மீது!—ஸ்ரீதேவிக்கு மூத்த மூதேவியே! எனக்குச்சற்றுத்துணைவரவேண் டும்! எங்கே உனது சௌரியத்தைப் பார்ப்போம்! அவள் கண்ணை விழிக்கவொட்டாமல் தயைபுரி!—

(பாடுதல்.)

பச்சைநிறப் படுக்கையினிற் கரமொன்று
பொருந்தவதிற் பகரும் வேர்வை
மிச்சமதிற் பசும்புல்லின் றலைமேற்செங்
காந்தளினி லினிய முத்தம்
வைச்சமுதி யதுபோலும் பனிநீரின்
றுளிகள்பல வதிதன் மாது
மச்சமுறு தெங்கனங்கை வளைகவர
மனமிசைவே னச்சோ வச்சோ.

ஆனாலும் கழற்றித்தான் ஆகவேண்டும்.—பந்தயம். (அருகிற்சென்று வளையைக்கழற்றிக் கொள்கின்றான்.) இவையெல்லாம் பெரியனவல்ல! அவள் தேகத்தில் ஓர் அடையாளங்கண்டு பிடிப்பதே பெருங்காரியம்! (விளக்கெடுத்துப் பார்க்கின்றான்.)

(பாடுதல்.)

வெண்டுகிலி னித்திலநற் கச்சினுளே
மதன்முடிபோல் விளங்கா நிற்குங்
கண்டனினி னிறமணிசெ யிணைக்கொங்கை
யுயிர்ப்பதனாற் கதித்துத் தாழ்தன்
மண்டலத்தி லிருசக்ர வாகமெனும்
பட்சிகளோர் வலையி னுட்பட்
டெண்டிசையிற் செலவெழுந்து வலைப்பாரந்
தலைபூத்த விறங்கன் மானும்.

இப்பட்சிகளை யென்கையிற்கொண்டு முத்தமிடுவதற்குங் கொஞ் சுவதற்கு மிடமில்லையே! சொந்தக்காரனன்றோ. விடுவித்தெடுத் துக் கொஞ்சுதல் கூடும்!—என்காரியம் ஜெயம்! ஜெயம்!! பயோ தரங்களுக்குமேலும் கந்தரத்திற்குக் கீழும் உரத்தில் ஒரு திவ்ய மான மச்சமிருக்கின்றது!—மச்சமா? அன்று. அன்று. கொங்கைக் கண்ணீலச் சாயல்தான்.—வார் வெய்த்திருக்கும்போது சாயல் நிகழக்காரணமில்லையே!—கருவிழியின் சாயலோ?—இமைமூடி யுறங்கும்போதா?—அன்று. அன்று. தங்கச்செப்பிற் பதித்த நீல மணியிற் றெறித்ததுண்டோ!—பெருமாயக்கம். அதுவுமன்று. என் மனக்களங்கந்தானோ?—இல்லை. இல்லை. பின்னென்ன இது? (தன் மதி திரும்பி, ஆண்டுள்ள நீலப்பணியணிந்து நீலவுடைதரித்து நீல மலர் சூடிய ஒருமோகினிப் பதுமையைக்கண்டுற்று)அலர்ந்துள்ள

இந்நீல மலரின்சாயல்தான். கூந்தற் கறுப்பன்றிவேறு கறுப்பென்பதிவள் சந்நிதானத்தில் வரக்காரணமில்லையே!—ஆம். ஆம்.—அப்படியாயின் அச்சாயல் இவ்வெண்டுகிலில் ஏன் தோன்றவில்லை! ஆதலின் இதுவுங்காரணமாகாது. இது புருஷனுக் கின்பளிக்கும் மச்சமே!—மச்சந்தான். இதுவொன்றே அவன் கண்களில் மிளகுபொடி தூவுவதற்குச் சாட்சியாகும்! தீர்ந்தது ஐயா காரியம்! இதையுங் குறித்துக் கொள்வோமா? இது மறக்காது! மறக்காது!! வேண்டாம்! வேண்டாம்!! இதைக் கூறினதும் தன்பெண்சாதி கபடமனமுடையவள் என்றும் நினைக்கத்தடையே இல்லை!- நாழிகையாய் விட்டது!- படித்துக் கொண்டிருந்தாளே!—அதென்ன புத்தகம்?— இராமாயணமோ?—ஆம்.—

(பாடுதல்.)

வெண்டுகிலை மேலுடுத்து வயிரத்தா
லிலங்குபணி விளங்கப் பூண்டு
மண்டலத்திற் கலைவிளங்க வுதித்ததனாற்
கலைமகளாய் வழுத்த லாமே.

நல்லது.- (மோகினிப் பதுமையைப் பார்த்து) இப்பதுமைக் கணிந்திருக்கின்ற நீலமலர் தன்னாயகனாகிய சந்திரனின்றும் இச்சயனக் கிருகத்தால் மறைக்கப்பட்டும் மலர்ந்திருக்கின்றன. இவள் முகச்சந்திரனிடத்துள்ள குவளைப்போதிரண்டும் குவிந்திருக்கின்றன. இனித் தாமரைநாயகன்வரக் குவளைப்போது குவியும். இவள் கண்மலர்கள் விகசிக்கும். ஆதலால் இவற்றை நீலப்போதென்றெண்ணிய வெனக்குத் தாம் செந்தாமரைமலரே யென்று வற்புறுத்திக் கூறுகின்றன.—இதென்ன இப்பதுமைக்கணிந்த நீலமலர் குவிகின்றனவே!—சரி! விடியுங்காலமாய்விட்டது. இனித் தாமதித்து நிற்பது தகாது. பெட்டியிற் போய்ப் பதுங்கிக்கொள்ள வேண்டும்!—(சங்கமுழக்கங்கேட்டு) நான்கு நாழிகைச் சங்கும் முழங்குகின்றது! (திரும்பி) இவள் ஆபரணவொளியும் மழுங்குகின்றது. இனித் தாமதித்தால் உயிர்போய்விடும். (பெட்டியில் ஒளித்துக்கொள்கின்றான்.)

[இக்களம் இதனோடு முடிவு பெறுகின்றது.]

மூன்றாங்களம்.

இடம்:—சரசாங்கி அறையின் தாழ்வாரம். காலம்:—காலை.

நடன்:—முகுந்தன்.

முகுந்தன்:—நம்மோடு கூடவந்தவர்—அவர்பெயர் என்ன? ஞாபகத்திற்கு வரவில்லையே! அவர்சொல்லிக் கொடுத்தாரேபாட்டு அது நல்ல

பாட்டு! அதைப்பாடினால் சரசாங்கி மயங்கி என்னைக்கல்யாணம் பண்ணிக்கொள்வாள்! ஆமாம், ஐயா! ஆமாம்.

(பாடுதல்.)

* இராகம் - கமாஸ். தாளம் - ரூபகம்.

பல்லவி.

மோகங் கொண்டேனே - பெண்ணே கண்ணே
மோகங் கொண்டேனே.

அநுபல்லவி.

மோகங் கொண்டுன் முன்னே நின்றேன்
மோடி செய்ய லாமோ வின்றே (மோகங்)

சரணங்கள்.

இந்தச் சமயம் வந்தேன் றேடுநீ
சொந்த மாகம கிழ்ந்து கூடும் (மோகங்)

தாமதஞ் செய்யுந் தன்மை யேது
காமக் கடல்க டக்கநின் மீது (மோகங்)

பாவை யென்பரி தாபம் பார்த்துக்
கோவை யிதழ்கொ டுப்பாய் வேர்த்து (மோகங்)

பொழுதுதான் விடிந்ததே! தூங்கி எழுந்திருப்பாள்! ஆமாம், ஐயா! ஆமாம். நாம்பாடின்பாட்டுக்கு மயக்கமடைந் திருப்பாள்! நம்மை வந்துதேடுவாள்! நான் ஒளித்திருப்பேன்.—(சற்றுப்பொறுத்து) இதுநல்லயுக்தியல்ல. பலிக்கவில்லை. அவளைநேரே கேட்டுப்பார்ப்பேன். அதற்குமுடியாமற் போனால் அவள் நல்ல அழகாகத்தானேயிருக்கிறாள். அவள் காலிலேவிழுந்தால் தானென்ன? நேற்றுச் சொன்னாரே—அவர் நல்ல புத்திசாலி. இப்போதுதான் அவர் சொன்னது நல்லயுக்தியென்று தெரிகிறது.—(கதவிடிக்கின்றான்.) இப்போது கதவுதிறக்கிறதற்கு அவள் தோழிதானே வரப்போகின்றாள். அவள்கையிலே பணங்கொடுத்து நம்மைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுமாறு சொல்லும்படி சொன்னால் நம்மைக் கல்யாணம் பண்ணிக்கொள்வாள்! தோழிசொன்னால்—நம்ம சரசாங்கி நல்லவள். கேட்பாள். (கதவிடிக்கின்றான்.)

---

* இந்தக்கீர்த்தனையைச் சொற்களை விழுங்கியும் திரித்தும் பிறகூற வேண்டியதை முற்கூறியும் முன்னுரைப்பதைப் பின்னுரைத்தும் மறந்துவிட்டதைப் பிற்பெய்துரைத்தும் பலராகங்களைக் கலந்தும் கண்டோர் யாவரும் நகைக்கும்படி முகுந்தன் பாடுகின்றான்.

இந்துவதனை:—யார் கதவிடிக்கின்றது?

முகுந்தன்:—ஒரு பெரிய மனுஷன்!

இந்துவதனை:—யார் ஐயா நீர்?

முகுந்தன்:—ஒரு பெரியமனுஷிதம்பி! (இந்துவதனைவருதல்.)

இந்துவதனை:—ஏனிங்கு வந்தீர்?

முகுந்தன்:—சரசாங்கி இங்கேவரமாட்டாள் இப்போது?

இந்துவதனை:—வரமாட்டாளென்று நினைக்கின்றேன்.

முகுந்தன்:—யான் பணங்கொடுக்கின்றேன், நீ என்னைக்கல்யாணம் பண்ணிக்கொள்ளும்படி யவளுக்குச் சொல்லுகின்றாயா?

இந்துவதனை:—பணமா! யாருக்குப்பணம்?— (சரசாங்கிவருதல்.) அம்மா!

முகுந்தன்:—(சரசாங்கியைப் பார்த்து) என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற் கென்னதடை?

சரசாங்கி:—ஐயா! நீரேன் இவ்வளவு பிரயாசைப்பட்டு இவ்வளவு காலையிலே வரவேண்டும்? நீர்பேசுவது நன்றாயில்லை! நீர் உமதுகாரியத்தைப் பாரும்!

முகுந்தன்:—எனக்காசையா யிருக்கிறதே!

சரசாங்கி:—ஐயா! எவ்வளவு மரியாதையோ அவ்வளவு மரியாதையுடன் நீர்பேசும்! ஏன் வீணான வார்த்தைகளைப் பேசுகின்றீர்?

முகுந்தன்:—இதுவா எனக்குப்பதில்?

சரசாங்கி:—யான் இனி உம்மோடுவார்த்தை யாடுவதுகூடாது! நீர் வந்தவழியைப் பார்த்தாட்டவும்!

முகுந்தன்:—(காலில்விழுந்து) இப்பொழுதாவது என்னைக்கல்யாணம் பண்ணிக்கொள்ளேன்!

சரசாங்கி:—அடேமூடா! ஒருவன் மனைவி மற்றொருவனுக் கெப்படி மனைவியாவாள்? உனக்குச் சிறிதும் புத்தியில்லையோ? பெண்பிள்ளையின் காலில்விழலாமா? பெண்பிள்ளையைக் கல்யாணஞ் செய்து கொள்ளென்று நேரிற்றான் கேட்கலாமா? உனக்கு வெட்கமில்லையோ? உனக்குத் தேகங் குன்ற வில்லையா?

முகுந்தன்:—பைத்தியம் பிடித்திருக்கிறது! இல்லாவிட்டால் இப்படி எல்லாம் பேசமாட்டாய்!

சரசாங்கி:—உமக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாற்றான் இப்படியெல்லாம் பேசவாரம்பித்தீர். புத்தி சுவாதீனத்திலிருந்தாற் செய்யத்தகாத காரியங்களெல்லாஞ் செய்வீரா?

முகுந்தன்:—தாயார் தகப்பனார் சொல்வதைக் கேட்காதே!—பிச்சைக்காரப் பயல் அழகானந்தனை நினைந்துகொண்டிருக்கின்றாயோ?

சரசாங்கி:—நீர் இந்திரகுமார ராயினும், அவரது செருப்படியிற் பொடியொன்றிற்கு நிகராவீரோ? அந்தமகா புருஷனை நிந்தித்த உனக்கு என்னநேரிடுமோ? சர்வேசா! இந்தத்துஷ்டன் அவரை அநீதியாக வையும் வார்த்தைகளையான் கேட்கும்படியாகவும் விதிநேர்ந்ததே!

முகுந்தன்:—போனவன் திரும்பிவரப் போகின்றானோ?—அவன் காற் செருப்பாநான்?

சரசாங்கி:—உம்மை யாரையா அதைப்பற்றிக் கேட்கின்றார்கள்? அதற்குக் கூட நிகராகமாட்டீர் என்பதும் பொய்யோ?

முகுந்தன்:—அவன் காற் செருப்பா நான்?

சரசாங்கி:—(கையில் வளையில்லாததைக்கண்டு திடுக்கிட்டு அருகில் நின்றிருந்த இந்துவதனையைப்பார்த்துப்)பெண்ணே! எங்கே என்கையிலிருந்தவளை?

முகுந்தன்:—அவன்காற் செருப்பாநான்?

சரசாங்கி:—என்ன இந்த வீண்முண்டத்தோடு வார்த்தை யாடினேன்?

இந்துவதனை:—வளையை எங்காவது கழற்றிவைத்திருக் கின்றீர்களோ?

சரசாங்கி:—இல்லையே! ஐயோ! நேற்றிராத்திரி என்கையிலிருந்ததே!

இந்துவதனை:—ஆமாம் அம்மா!

சரசாங்கி:—எனது நாயகருக்கு என்தன்மையைச் சொல்லவரும்படி சென்றிருக்குமோ?—அடி! பெண்ணே! அங்கு எங்கேயாவது நழுவி விழுந்திருக்கும்! அதைத்தேடி யெடுத்துவா.—ஒருவேளை தவறிவிட்டதோ?—

இந்துவதனை:—அது தவறியே யிருக்காதே!

சரசாங்கி:—யானும் அப்படித்தான் நினைக்கின்றேன். ஆனாலும் நீபடுக்கை யறையைப்போய்ப்பார். (இந்துவதனைபோகின்றாள்.)

முகுந்தன்:—நீ என்னை அவன்காற் செருப்பென்றா திட்டினாயே!

சரசாங்கி:—ஆமாமையா! அதற்கென்ன செய்யப் போகின்றீர்? நீர்செய்வதைச் செய்துபாரும்!

முகுந்தன்:—உனது தகப்பனாரிடங் கூறுகின்றேன்!

சரசாங்கி:—உமது தமக்கையிடமுங் கூறுகின்றதுதானே! உம்மையார் வேண்டாமென்கின்றார்கள்? இனி உம்மோடு வார்த்தையாடுதல் எனக்குச்சரியன்று. (போதல்.)

முகுந்தன்:—அவன்காற் செருப்பு இரு இரு உன்னை!— (போதல்.)

நான்காங்களம்.

இடம்:—தஞ்சையில் ஜெயவீரன்வீடு. காலம்:—மாலை.

நடர்:—ஜெயவீரன், அழகானந்தன்.

அழகானந்தன்:—அதைப்பற்றி நாமேன் பயப்படவேண்டும்? அவளது மானத்திற்கு யாதொருபழுதும் வரவேமாட்டாது! யாளும் அதிசீக்கிரத்தில் அரசனிடம் போய்ச்சேருவே னென்பதற்குச் சந்தேகமேயில்லை!

ஜெயவீரன்:—தாங் கூறுவன வற்றிற்குத் தகுந்தகாரணங்கள் இருக்கின்றனவோ?

அழகானந்தன்:—அப்படியொன்றையுங் காணோம்! காலமென்பது ஒன்றைமற்றொன்றாகவுஞ் செய்யுமே! நல்லகாலம் வரின் தொட்டவையெல்லாம் பொன்னாகாவோ? யான் ஏன் அதைப்பற்றிக் கூறவேண்டும்? அந்த நம்பிக்கையன்றி வேறொன்றுமில்லை. ஈச்சுரன்கிருபை புரியாவிட்டால் உமது ரணத்திற்காளாகியிறக்க வேண்டுவதுதான்.

ஜெயவீரன்:—நீர் ஏன் அப்படிக்கூறவேண்டும்? உமது நற்குணத்திற்கே நீர் என்றும் என்னுடனே யிருக்கலாகாதாவென்று ஈச்சுரனைத்துதிக்கின்றேனே! (துன்மதிவர) இதோபாரும் துன்மதிவருகின்றார்!

அழகானந்தன்:—காற்றினுங் கடிகிவழிநடந்து வந்தார்போலும்! மனோவேகமும் இவர்வேகத்திற் கொடுங்க வேண்டுவதுதான்.

ஜெயவீரன்:—வாருங்கள், ஐயா!

அழகானந்தன்:—தாங்கள்வந்த வேகத்தைப் பார்க்கும்போதே பந்தயந் தோற்றுவிட்டதாகத் தெரிகின்றதே!

துன்மதி:—ஐயா! உமது பெண்சாதி யான் பார்த்தவர்களுக்குள் அழகிற் சிறந்தவள்தான்!

அழகானந்தன்:—அவள் குணமுமப்படியே யென்பதற்கையமுண்டோ!

துன்மதி:—இதோ தங்களுக்கு உமதுநாயகி கொடுத்தகடிதம்.

(துன்மதி அழகானந்தனிடங் கடிதங்கொடுக்கின்றான்.)

அழகானந்தன்:—கடிதத்திற் குற்றமொன்று மில்லையென்றே நினைக்கின்றேன். (கடிதத்தை ஒருமுறை இருமுறை மும்முறைவாசிக்கின்றான்.)

துன்மதி:—அதேது?— (பாடுதல்.)

* காஞ்சியே தாம்பர நாகா பரணக் கவினைத்தும்
வாஞ்சை மணிவண்ணன் பள்ளிகொள் கோலமும் வார் † குடந்தக்
காஞ்சன நற்கும்ப வெங்கழுங் கண்டு கருத்துடைந்து
ஓஞ்சங்கரனென வைந்தெழுத் தோர்ந்துணர் வொன்றினனே.

* இப்பாடல் இருபொருள் படும். † குடந்தம்-கும்பகோணம்; திரட்சி.

ஜெயவீரன்:—சென்றீரே! தொண்டைநாடு செழிப்பாயிருக்கின்றதா?

துன்மதி:—கண்ணிற் கெட்டியதூரம் எல்லாம் மருதநிலமே நிறைந்துசெந்நெற்பயிரும் கருப்பஞ்சோலைகளும் செறிந்து தென்னைமரங்கள் சிறந்து தோன்றும் தேசமதுவே! அந்நாட்டைப்போலும் நிலம் நீர் குடி வளங்களிற் சிறந்தநாடில்லையென்பது நிச்சயம்! அது நமது சோணாட்டுக்கும் வளங்களிற் குறையாது!

ஜெயவீரன்:—சரி! ஏதேனும் விசேஷமுண்டோ?

துன்மதி:— (பாடுதல்.)

கிம்பமி ரிங்கிடச் சிந்தூர நிற்பதை
யங்கொரு மான்கண்ட தம்பனி மூடிய
கனகமென் குன்றுாத தூணுகு ழைத்ததை
யாங்கனிற் கண்டன னன்பரே யோர்திரால்.

மாலயன் காணச் சிவபெரு மானூர் மலையொன்றினைச்
சால வணங்கினர் நாண்பூட் டினரென்றல் சீர்புடைத்தோ
ஞால மடந்தை மலையிரண் டிற்கொரு வார்பிணித்துச்
சிலம் பெறுகுண நாண்பூண் டனளுடற் றேயத்திலே.

அழகானந்தன்:—மனஸ் திருப்தியாகவே யிருக்கின்றது! எனது சிறுவிரலை யுறைவிடமாகக் கொண்டமோதிரம் பிரகாசத்திற் குறைந்திருக்கின்றதோ! அது நமது கரத்திற் சேர்வதில்லை என்பதற்கையமுளதோ?

துன்மதி:—அம்மோதிரத்தை விற்றாயினும், இரண்டுதரம் அத்தொண்டைநாட்டையணுகிச் சிறிது பொழுதாயினும் ஆனந்தவாரிதியிலமுந்துவதற்கிடமிருக்க, நீர் ஏன் அதைத்தோற்காதிருப்பீர்?

அழகானந்தன்:—வீணுக்கு வீம்பேன் பேசுகின்றீர்?

துன்மதி:—வீம்பென்ன? உமது பெண்சாதிதான் கற்பிற்றவறினளே!

அழகானந்தன்:—விளையாடுகின்றீரா என்ன? இனியெனக்குக் கோபம் வரும்!

துன்மதி:—கோபம் ஏன் ஐயாவரும்? உமக்கு ஏன் வரவேண்டும்? உமது நாயகிக்கும் ஏன் வரவேண்டும்? உங்களிருவர் வேண்டுகோளின் படி தானேயான் நடந்தேன்!

அழகானந்தன்:—நீர் கூறுவது நம்பக்கூடியதாயன்றோ விருக்கவேண்டும்? பின் என் மயங்குகின்றீர்?

துன்மதி:—மயக்கம் ஒன்றுமில்லையே!

அழகானந்தன்:—சொல்ல வாரம்பிப்பதற்குள்ளே நடந்த சங்கதியென!

துன்மதி:—ஆச்சரி. ஆ! ஆ!! அவள் சயனக்கிருகம்!

(பாடுதல்.)

இராகம் - செஞ்சுருட்டி. தாளம் - ஆதி.

பல்லவி.

சயனக் கிருகத்தின் சிங்கார முறைகளை
தரமுடன் வர்க்க மரிகா மிரு காம்பீர (சயன)

அநுபல்லவி.

நயனமீ ராயிரத்தும் நாடிப் பார்த்துப் புயங்க
நாத னுள்ளத்தில் மிக நயந்து வியக்கும் நம்ப(சயன)

சரணம்.

அம்ச தூளிகா மஞ்சம் - ரத்ன
ஹார மணிவி தானம்
ஆர்ப நுமைமி தானம்
சம்சய மேமேரு கஞ்சம் - திவ்ய
தாம மருவி நால
மாம ணிக்கதிர் கால
இம்சை நீர முன மிரட்டிநு சாமரை கந்த
மெய்ங்கு மணக்குந் தூளடா தில்கருவிளக்கமைந்த(சயன)

என்னவிசேஷமா யமைந்திருக்கின்றது! படங்களும், பற்பலவிளக்குக்களும் தொங்க விடப்பட்டுத் திவ்யமான சலவைக்கற்களாலமைக்கப்பட்டன்றோ விருக்கின்றது?

அழகானந்தன்:—இவை ஒவ்வொரு சயனக்கிருகத்திலு மிருப்பனவேயாம்! நீரென்ன அதிசயங்கூறுகின்றீர்?

துன்மதி:—இதற்குள்ளே என்ன அவசரம்! முற்றுங்கூறமாட்டேனோ? ஆ! ஆ! அவ்வறையி னொருபக்கத்தில் ஒருநிலைக்கண்ணாடியிருக்கின்றதே! தெரியுமா?—மிகவு மிருளிலேயிலும் இரண்டு சிறுமேலைக் காற்காலிகளில் விசித்திரமான படுமைகளிருக்கின்றன வல்லவோ?

அழகானந்தன்:—இவற்றை யெல்லாம் யாராவது சொல்ல நீர் தெரிந்துகொண்டிருத்தல் கூடாதோ?

துன்மதி:—இரண்டு வர்ணக்கிளிகளும் சேர்கொடுகூடிய படமைகளும் நிறைந்த பனிநீர்ச் செம்பும் சந்தனக்கிண்ணியும் ஒரு புறங்கொண்டிருக்க வில்லையோ?

அழகானந்தன்:—இதை நீர் கூறுவதனாலே அவள் கற்புக்குக் கேடுவந்ததோ? நன்று! நன்று!! இவற்றை யெல்லாம் ஞாபகமாக விடாமற் கூறுகின்றீரே! நுமது சக்தியை என்னென்றுரைப்பது?

துன்மதி:—ஆச்சரி.—இதோபார்த்தீரா? நமது நாயகிகைவளை! இப்போதென்ன கூறுவீர்? எங்கே மோதிரம்?

அழகானந்தன்:—ஈசா!—எங்கே? கொடும் பார்ப்போம். யான் அவள்கரத்தி லணிந்த வளை இதுவா?—இதுவா அவள் கைவளை?

துன்மதி:—நன்றாய்ப்பாரும். அவள்தன் கையினின்றும் கழற்றியளித்தவளையிதுவே! அவள் கழற்றும்போது அவள் செய்கை என்னவாயிருந்தது. பார்க்கப் பதினாயிரங் கண்வேண்டுமே! அஃது என்மனதில் எப்படித் தோன்றுகின்றது! கழற்றி என் கையிற்கொடுத்ததன்றி ஒருகாலத்தில் அதைமதித்ததாகவுங் கூறினள்!

அழகானந்தன்:—ஒருவேளை—கழற்றிக்கொடுத்து என்னிடங் கொடுக்கும்படி உமக்குச் சொல்லியிருப்பள்!

துன்மதி:— (பாடுதல்.)

“ வாரம் பட்டுழித் தீயவு நல்லவாந்
தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவா
மோரும் வையத் தியற்கையன் றோ”

சடிதத்திலெழுதி யிருக்கின்றனோ! கண்ணைப் பிடுங்கிவைத்தும் இன்னும் இந்திரஜால வித்தையோ?

அழகானந்தன்:—இல்லை! இல்லை!! இம்மோதிரமும் நம்முடையதே! எடுத்துக்கொள்ளும்!—(மோதிரங்கொடுக்கின்றான்,) எங்கே அழகிருக்கின்றதோ அங்குக் கற்பென்பதில்லைபோலும்.

ஜெயவீரன்:—அவசர மென்னத்திற்கு? உம்முடைய மோதிரத்தை நீர் பெற்றுக்கொள்ளும்! இன்னமும் இவர்பந்தயம் வென்றவராகமாட்டார்! ஒருவேளை யவள்கையினின்றும் நழுவி விழுந்திருக்கலாம்! அல்லது அவள் தோழிகளுள் ஒருத்திகவர்ந்து கொடுத்து இவரிடம் பணம்பெற்றுக் கொண்டிருக்கலாம்! இது நடக்கக்கூடிய விஷயந்தானே!

அழகானந்தன்:—நீர் கூறுவதும் உண்மையே! (துன்மதியைப்பார்த்து) மோதிரத்தைக்கொடும்! அவள் தேகத்தில் தோழிமாரடையாளம் கூறுவீராயின் நம்பக்கூடியதுதான்!

துன்மதி:—குருவாணையாக அவள் கையினின்றும் கொண்டேனே யான்!—

அழகானந்தன்:—ஜெயவீரரே! பார்த்தீரா? ஆணையிடுகின்றார்! பிசகாது!—(துன்மதியைப்பார்த்து) மோதிரத்தை நீரே வைத்துக்கொள்ளும்.

ஜெயவீரன்:—இரும். ஐயா, மகாஅவசரக்காரர்நீர். (துன்மதியைப்பார்த்து) எதற்காக அவள் தன்கையிலிருந்த வளையைக்கழற்றிக் கொடுத்தாள்?—நீர் அழகானந்தன் வளைவேண்டுமென்ன வலித்துக்கேட்டதனாற்றா னாயகனது நல்வரமெனத் தும்மிடங் கொடுத்திருக்கலாம். அப்படித்தானிருக்க வேண்டும். வேறுகாரணமேது? ஒன்றுமிராதே!

துன்மதி:—காரணமிருக்கின்றது. அஃதென்னவென்றுகேளும்.—தனதரண்மனைக்காக்கு மருட்கூலங்கப் பதமாசனத்தின் கணிருந்து வில்லு மம்புங்கொண்டு பகையறைந்து தனது வெற்றியையவளிடமாய் மன்மதன் தெரிவிக்க, யான் அருகுசென்று அரணழித்து மகுடங்கைக்கொண்டு உடல்வருந்தச்சாட என்னை மிக்கோனெனமதித்துத் தான் தோற்றதற் சதிருதியாய்க் காணிக்கை செலுத்திய வளையன்றோ ஈது?—ஜெயவீரரே! யான் அவளிடமிருந்தேகொண்டேன். இனியுஞ்சந்தேக முமக்கேன்?—

அழகானந்தன்:—அவள் அந்தவளையைத் தொலைப்பதற்கும் இடமில்லை. தோழிமார்களும் அப்படிவஞ்சனை புரியார்கள்! அதுநன்றுயெனக்குத்தெரியும். அவர்கள் களவர்திருப்பார்களா?—ஒருகாலுமில்லை. அதுமுடியாத காரியம்! அவளையிவர் அநுபவித்திருப்பரென்பதற்கையமில்லை. அதற்கு இவ்வளையே சாட்சிபகருகின்றது! ஐயோ!

ஜெயவீரன்:—சற்று நிதானியும்! ஏன் அவசரம்? 'அவசரக்காரனுக்குப் புத்திமட்டு' என்பதைக் கேட்டதில்லையோ? (துன்மதியைப்பார்த்து) ஐயா! இதனால் நும்மை நம்ப இடமேயில்லை!

அழகானந்தன்:—ஜெயவீரரே! இதைப்பற்றி இன்னும் ஏன் பேசிக்கொண்டிருக்கின்றீர்? அவள் தவறியிருக்கவே வேண்டும்!

துன்மதி:—இன்னமும் உமக்கு நம்பிக்கை வரத்தகுந்த விஷயமொன்று கூறுகின்றேன். அதையுங் கேளுங்கள். அவளது கந்தரத்தின் கீழிடத்தில் அழகிய மச்சமொன்றிருக்கின்றது! அதை நீர் கவனித்ததுண்டோ? என்ன சிங்காரமாக விருக்கின்றது!—

(பாடுதல்.)

சுந்தரியின் பாதத்திற் கொப்பு நோக்கிற்
றுருமந்தான் கருநிறமாய்த் தோன்றல் கண்டாற்
சந்தழிரு மாயிரத்தோ டெட்டு மாற்றுச்
சரம்பூத தப்பொன்னுஞ் சிவந்து மேனிச்
செந்தவித மிதுவென்று பார்ப்பார் போல
வெழிலுடைய தோழிப்பத் தனைமாற் றப்பொன்
கந்தரத்துக் கிழிடத்தின் மச்சங் கொண்டு
காண்டகச்சேர்ந் திட்டதுவே நீல மசசம்.

எத்தனைதரம் முத்தங்கொண்டும் மனமாரவில்லையே! மறுபடியும் என்று சென்று அதைக்கண்ணுறுவது?—நீர் இந்தக்களங்கத்தை அவளிடங் கண்டவர்தாமே! இனியும் சந்தேகமோ!

அழகானந்தன்:—அந்தக் களங்கத்தை விடப் பெரியகள்ங்கத்தையும் இன்று கண்டேன்! இனியென்?—

துன்மதி:—இன்னுங் கூறட்டுமா?

அழகானந்தன்:—நீர் கணக்கிற் பெரியரென்பதெனக்குந்தெரியும். போதும். இனி யொன்றுஞ் சொல்லாதீர்!

துன்மதி:—ஒருவார்த்தை!—

அழகானந்தன்:—நீருரைத்தது பிசகென்று கூறப்போகின்றீரா? அப்படியானால் இப்பொழுதே உம்மை யமலோகத்திற்கு விருந்ினராய் அனுப்பிவிடேனோ?

துன்மதி:—ஒன்று மில்லை!—

அழகானந்தன்:—(தனக்குள்) அவள் என்னருகிலிருந்தால் சித்திரவதை செய்து விடமாட்டேனோ?—

(பாடுதல்.)

பெண்ணொன்றுருகேன் பிறந்த விடம்பாரேன்
வுண்ண வுடற்குருதி வாள்சிவப்பப்—பண்ண
மனந்தங்கு நெஞ்சை மருளாமற் போழ்ந்தென்
னினைந்தங்கி வாழ்வே னிவண்.

யான் தொண்டைநாட்டிற்குச் சென்று அவளை யிருதுண்டாய் வெட்டி யெறிகின்றேன்!— (வெளியாய்) சற்றுக்காரிய மிருக்கின்றது! (போதல்.)

ஜெயவீரன்:—துன்மதிப் பிரபுவே! நீரேஜெயங் கொண்டவரானீர்! ஆயினும் அவரைச் சமாதானப்படுத்த வரலாகாதோ? ஒருவேளை தற்கொலைபுரியப்போகின்றார்! வாரும். போகலாம்.

(ஜெயவீரன்போதல்.)

துன்மதி:—அப்படியே தடையின்றி இதோவருகின்றேன்.—(தனக்குள்) அவனுக்கவள் கிட்டாதவழியை யான் தேடுகின்றேன். இவன் ஒருவேளை அவளைக்கொன்றாலுங் கொல்வான்! (போதல்.)

ஐந்தாங் களம்.

இடம்:—தஞ்சையில் ஜெயவீரன் வீடு. காலம்:—யாமம்.

நடன்:—அழகானந்தன்.

அழகானந்தன்:—ஆ! என்னமதி யீனனாய்ப்போய்விட்டேன்! அந்தோ! சிறிதும் யோசித்திலேனே நான்! யான்கண்டு கேட்டறிந்தவை

யெல்லாம் ஒரு பெண்ணால் மயங்கிமறந்தேனே! என்னைப்போலும் அறிவில்லாதவரும் உலகில் உளரோ! ஐயோ! வீணான எண்ணம் கொண்டதன்றி வீண்சபதமுஞ்செய்து மனப்பால் குடித்தேனே! ஏ! சரசாங்கி! நீ இப்படிமோசஞ் செய்வாயென்று ஒரு சிறிதும் நினைத்தேனில்லையே! உன்னையான் மணம்புரிந்து உன்னுடைய சட்டமுக்குமயங்கியோ? அல்லது உன் தகப்பன் கொடுக்கவிருக்கும் சீதனத்தைக் கருதியோ? அன்றி உன்னை மணத்தலால் தொண்டைநாட்டரசனாகலாமென்கிற வீண் எண்ணத்தைக் கொண்டோ? எதுவுமில்லை! எதுவுமில்லை!! யான் பணத்தை அபேட்சிக்குஞ் செய்பவனென்றும் வனப்பை நோக்கினவனல்லனென்றும் நீயறியாயோ? உனது குணத்தைக் கண்டேயன்றோ உன்னை எனது மனைவியாகக்கருதினேன்! அதனாலன்றோ யானு மிப்பெருந்துன்ப மனுபவிக்கவும் நேர்ந்தது! யானே மதித்தநின்குணமும் இப்படி மாறுந்தகையினதாயிற்றோ? அந்தோ! இனி யென்செய்வது? இனியென செய்வது? நீ என்மீது காதல்கொண்டாயென்று யானும் நின்மீது காதல் கொண்டேனே! நம்மிருவர்தேகமு மிரண்டேயாயினும் அக்கினியிற்சூடுபோலவும் மணியின்கணொளிபோலவும் நம்மிருவர்மனமும் ஒன்றேயாயிருக்கின்றதென்றல்லவோ நம்பியிருந்தேன்! உன் நம்பிக்கை வீண் என்பதைத் தெரிவிக்கவோ இக்காரியஞ் செய்தனை? என்மனமெல்லாம் நின்னிடமே குடிகொண்டிருந்ததே! அக்கினியினின்று சூடும் பிரிக்கப்படுமோ! மணியினின்றொளியும் பிரிக்கப்படுமோ?— எவ்வண்ணம் பிரிக்கக்கூடும்? சாக்ஷாத் திரிமூர்த்திகளாலும் செய்யமுடியாத காரியமே! அவ்வண்ணமே காதலின் மகிமையை யுணர்ந்து நான் நீ யென்கிற பேதமற்று நானே நீ யென்று நினைந்த என்னை நான்வேறு நீவேறு என்று காட்டுதல்போல் எனக்குத் தீங்கிழைத்தனை! என்னெஞ்சம் துடிதுடிக்கின்றது! என் கண்ணோ சுழலுகின்றது! என்மனம் கொதிக்கின்றது! என்னறிவு அழிகின்றது!— எனக்கு யாரிருந்தேறுதல் கூறுவார்கள்? ஏ! சுகுணா! சுகுணா!! என்னருமைத் தோழனே! நீ நன்றாயிருக்கின்றாயோ? உன்றோடு கூறியாறுவேனோ? அதற்கு மிடமில்லையே! இனியுன்னை சந்திப்பேனோ? அன்றி யிங்கேயேயுயிர்துறப்பேனோ? எனக்கு நேரிட்ட அவமானத்தைக் குறித்துப்பின் யாரிடம் முறையிட்டுக்கொள்வேன்? ஒத்தோழனிடமன்றோ கூறவேண்டும்? உத்தமனான தோழன்! அவனும் நீ யில்லையோ? யாருமற்றதே நாமமென்பதை மறந்து அரசன் பெண்ணைக்கைப்பிடிக்க, எனக்கு இவ் விதிநேர்ந்ததன்றி இவ்வித அவமானமும் நேர்ந்தது! யானிவளை மாதவிப்பொதும்பரிடத்திற்கண்டபொழுது இவள் ரூபலாவண்யங்களைக்குறித்தா மயங்கினேன்? முதலுமெச்சாத்தில் கிளையாயினேனோ? அன்னநடைக்குத் திகைத்தேனோ? தேன்மொழிக்குத் துறைந்தே

னோ? அன்றித் தேகத்தைக்கண்டு மோசங்கொண்டேனோ? இஃதொன்றையும் யான் கவனித்திலேனே! இவளது குணவலையிலகப்பட்டேனையன்றி வேறன்று! ஏ! பெண்ணே! நீ எவ்விதவிசேஷத்தை யென்னிடங்கண்டு சுதந்தர்வ மணம்புரிய நினைந்தனையோ? அவ்வித விசேஷத்தை யானிப்பொழுதிழந்தேனோ? அப்படியிழந்ததுனக்கெப்படித் தெரிந்ததோ? ஐயோ! உனைத் தேவர்கள்கொடுத்த தெள்ளமிழ் தென்றிருந்தேனே! எங்கும் ஏகசௌந்தரியமாகத் திகழுங்கும் இளங்கரும் பென்றெண்ணினேனே! கரும்பே! நீயுமெனைக் கசந்தாயோ! ஆ! யானும் நீயும் மருவியணைந்த சுகத்தை மறந்தாயோ?— ஊடலும் கூடலும் நின்னிடஞ் சிறந்ததென்று கூறுவாயே! அதை நினைக்கும்போதே யானுருகுகின்றேனே! உன்னைப்போல் என்மனங்களங்கப் படவில்லையே! திருத்தக்க தேவர்வாக்கும் பொய்யாகாதென்பதைக் காட்டும்படியாகவோ இவ்விதமான தூர்க்கிருத்தியத்திற்குடன் பட்டாய்? உன் பிரிவால் என் தாய் தந்தை உற்றுறவினர் முதலியவர்கள் இறந்ததற்குண்டாயதுக்கத்திற்குக் கோடியங்கதிகமான கொடுந்துக்கத்திற்காளாகினேனே! உன்னிடம் அஃதில்லையோ! யானே கற்பிற் கரசியென்றாயே!—

(பாடுதல்.)

"சாமெனிற் சாதலோத றன்னவன் றணந்த காலைப்
பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை யென்றுஞ் சொல்லீர் கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்வமிப்பார்."

என்று நூல் கூறியிருக்கின்றதே! எங்கே நின்னிடம் அத்தன்மை? ..(மௌனம்) ஸ்திரீகளை யொருபொழுதும் நம்பலாகாது. யான் நம்பி மோசம்போனேன்.

(பாடுதல்.)

இராகம் - பியாகு. தாளம் - ரூபகம்.

பல்லவி.

நம்பி மோசம் போனேன்
நானும் வீணானேன்.

அநுபல்லவி.

இன்பங் கொண்ட வென்னை
யேங்கச் செய்த டன்னை (நம்பி)

சுரயொங்கள்.

மங்கை யர்கி ஜத்தைய
வமூ வெம்மி தத்தை.
புங்க வருங் காணப்
போகா தேயா ணை (நம்பி)

கைவு ளோதங் தாளே
உலங் திருங் தாளே
வெம்பமு முதுங் காட்டும்
வெகி போல்வான் மாட்டும் (நம்பி)

விட்டு நீங்கும் போது
விழ்ந்தா ளேமண் மீது
கட்டிக் கதை யென்றே
தாளு மயில யன்றே (நம்பி).

நீயா யானனுபவித்த உன்னைப் பிறரிடங் காட்டிக்கொடுப்பது! இந்தக்குரூபியாகிய துன்மதியோ உன்னை மயக்கினின் நலமும் துகர்ந் தனன்! ஆ! ஆ! அதுவும் க்ஷணநேரத்தில்! ஒரு நொடிப்பொழுதில்! சிறிதுந்தடையின்றி! நாணமென்பதும் உன்னைவிட்டகன்றதோ?

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சு" சத்த
ளென்று கருதிய வெனைநகை யாடினை!—

வேண்டியபோ தின்பம் வேண்டியவரிடம் நுகரும் விலைமகளிரும் நாணமுதலிய வுடையவர்கள் போன்று நடித்துக்காலதாமசஞ் செய்கின்றார்களே! குலமகள்! என்னிடங்காதல் கொண்டவள்! நீயோ வார்த்தைபிறக்கு முன்சம்மதித்தனை! யான் மற்றொரு பெண்ணைக் கண்ணெடுத்துப்பார்க்கவும் மனம்வரவில்லையே! நீதவறிற் றென்று தெரிந்தும் என்மனந் துணியவில்லையே! உலகில் ஆட வரில்லாவிடத்துத்தான் பெண்கள் பதிவிரதைக ளாயிருப்பது? மன மொற்றுமை யில்லாதவர்களே! பிறழ்ந்திடு முளத்தரே!

(பாடுதல்.)

"நாம வேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கதிங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே."

இனிச்சகியேன். இனிச்சகியேன். யானநுபவித்த நீயோ மற்றொருவ னாற்பயனுக் கின்பங்கொடுப்பது? இதற்கென்ன பரிகாரமிருக் கின்றது?—(மௌனம்) இருக்கின்றதொன்று! உனது தேகத்தைச் சின்னபின்னமாக இவ்வாளினால் வெட்டியெறிந்து அவன்கண்ணு ற்ற வொவ்வொரு உறுப்பையும் கொந்தி அக்கினியிற் காட்டியன்றே நின்னுவியைப் பரிசுத்தப்படுத்துவது! இனியஞ்சேன்! இதோ, எழுந்திருப்பேன்! தொண்டைநாட்டிற்குச் செல்வேன்! பெற்ற தந்தைமுன்னரே இச்சித்திரவதை செய்வேன்! நெடுநாளாகச் சிறு பிராயமுதற் பழகின யான் கனவிலுமறியாத அற்பப் பயலைக் கலந்து அவனைத் தழுவுவதா? நின்னைமயக்கிய நின்கண்ணை நெருப்பிற்காய்ச்சிய இருப்புக்குறட்டாற் பிடுங்கியெறிவேன்!— ஐயோ!—என்கண்ணே! உன்னைக்கொல்வதற்கும் மனந்துணியவில் லையே!—என்று மனத்தில் நினைத்தேனோ அன்றே உன்னை எந்த வகையினாலும் கொல்லேன்! நானுமிறப்பேன்! நீ எனக்குத்துன் பங்கொடுத்த போதிலும் முன் நாமிருவருமிருந்த தன்மையென்னை மயக்குவதனால் நீயிறந்து நானிறவாமலிருப்பேனோ! யானுமிறப் பேன்! துணிந்துவிட்டேன்! இனி எதுவும் என்னை—

(சோர்ந்து படுத்துக்கொள்கின்றான்.)

[இக்களம் இதனோடுமுடிவு பெறுகின்றது.]

ஆறுங்களம்.

இடம்:—கருநகையிற்சந்திரசேகரன்அரண்மனை. காலம்:—மாலை.

நடன்:—சந்திரசேகரன்.

சந்திரசேகரன்:—நமது அந்தரங்க நண்பர்களுள் ஒருவராயினும் இது காறும்வந்திலர். பொழுதும்போகேன் என்கின்றது. நமது கட்டழகி யாகிய காதற்பரத்தை மனோரஞ்சிதம் இல்லத்திற்குப்போய் உல் லாசமாக வார்த்தையாடுவதற்கும் இடமில்லையே! அவள்தான் நோயினால் பீடிக்கப்பட்டுத் தேகமெலிந்திருக்கின்றாளே! இப்பொ ழுது அவளைப்பார்க்க மிகவும் அருவருப்புத்தான் தோன்றும். அவ ளுடன் சொக்கட்டான் சதுரங்கமாடியே வெகுதினங்களாயின. அஃதாவது நேரிட்டால் ஒரு பொழுதுபோக்காயிருக்கும். அவளை நினைக்கும் போதே எனக்கு வருத்தமாயிருக்கின்றது.—அவள் தேறி எழுவதற்கும் இன்னும் இரண்டுவார மாகுமாம். இக்காலம் எப்படிக்கழியுமோ? எனக்குத் தெரியவில்லை.— (துன்மதிவர) வாரும்! துன்மதியாரே! உம்மைத்தான் எதிர்பார்த்திருந்தேன். இப்படியுட்காரும். ஏன் நிற்கின்றீர்? பொழுது போக்காகச் சதுரங் கம் ஆடுவோமா?

துன்மதி:—அப்படியே ஆடுவோம்.

சந்திரசேகரன்:—யாரடி பெண்ணே! சுந்தரி! (சுந்தரிவருதல்.) சதுரங்கங்கொண்டுவா.

சுந்தரி:—இதோ கொண்டுவந்து விட்டேன். (சுந்தரிபோதல்.)

சந்திரசேகரன்:—என்ன இன்று இவ்வளவு நாழிகைபொறுத்து வந்தீர்! சற்றுமுன் வந்திருந்தால் இரண்டாட்டமாவது ஆடியிருக்கலாமே!

துன்மதி:—தாங்கள் வழக்கம்போல் மனோரஞ்சிதவனமென்னும் அரண்மனைக்குப் போயிருக்கலாமென்று நினைத்துக் கொஞ்சம் தாமதமாய்வந்து சேர்ந்தேன். இங்கு இருப்பீர்களென்று தெரிந்திருந்தால் முன்னமே வந்திருப்பேன்.

சந்திரசேகரன்:—நான் இப்பொழுது அங்குப்போவதில்லையே!

துன்மதி:—ஏன்?

சந்திரசேகரன்:—அவள்தான் கோபித்து அழுகின்றாளே!

துன்மதி:—ஏன் அழுதல்?

சந்திரசேகரன்:—பதினைந்து தினமாக—

துன்மதி:—பதினைந்து தினமாகவா?

சந்திரசேகரன்:—ஆம். உமக்குத்தெரியாதா? உமக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! நீரன்றோ கூட்டிவைத்தவர்?

துன்மதி:—நான் நகரத்திலில்லை. ஆதலால் எனக்குச் சங்கதி தெரியாது. இப்போதுதான் தங்கள்வாக்கினால் தெரிந்துகொண்டேன். இனிப் போய்ப்பார்க்காம லிருப்பீரோ?

சந்திரசேகரன்:—ஆமாமையா! உம்மைப் பத்துப் பதினைந்துதினமாகக் காணோம்! எந்நாட்டிற்குப் போயிருந்தீர்?

துன்மதி:—தொண்டை நாட்டிற்குப் போயிருந்தேன்.

சந்திரசேகரன்:—என்னிடமும் சொல்லாமற் போய்விட்டீரே!

துன்மதி:—இல்லை. அவசரமாகப் போகவேண்டியிருந்தது.

சந்திரசேகரன்:—அங்கென்ன உமக்குக்காரியம்.

துன்மதி:—என்காரியம் ஒன்றுமில்லை.

சந்திரசேகரன்:—பின்என்ன அவசரமென்றொருவார்த்தை?

துன்மதி:—அவசரமாகத்தான் போகவேண்டியிருந்தது. இல்லையாகில் உயிர் நண்பராகிய உம்மிடத்திற் சொல்லாமற் போயிருப்பேனோ?

சந்திரசேகரன்:—அவசரமாய்ப் போனேனென்கிறீர்! உமது காரியமாயுமில்லையென்கிறீர்! பின்யார் விஷயமாகத்தான் போயிருந்தீர்?

துன்மதி:—எல்லாம் தங்கள்காரியமாகத்தான். அடிமை வேறெந்தக்காரியத்திற்கு அவ்வளவு அவசியமாகப் போயிருப்பான்?

சந்திரசேகரன்:—என்காரியமா? என்காரியம் என்ன இருக்கின்றது தொண்டைநாட்டில்? ஒன்றுமில்லையே!

துன்மதி:—தங்கள்காரியந்தான். தொண்டை நாட்டின் தலைநகராகிய காஞ்சிபுரியிலேயே—

சந்திரசேகரன்:—காஞ்சிபுரியில!—காஞ்சிபுரியில்!!— (சுந்தரிவருதல்.)

சுந்தரி:—மகாராஜா! இதோ இருக்கிறது சதுரங்கம்.

சந்திரசேகரன்:—சரி! நீ போ. (சுந்தரிபோதல்.)

துன்மதி:—ஆடுவதுதானே!

சந்திரசேகரன்:—பிறகு ஆடுவோம். நீர்போன காரியமெல்லாம் சிறிதும் ஒளியாமல் இப்பொழுது சொல்லவேண்டும்.

துன்மதி:—தாங்கள் வற்புறுத்திக் கேட்கும்போது யான் சொல்லாமலிருக்கலாமா? இதோ சொல்லுகின்றேன்.

சந்திரசேகரன்:—இந்தப்பீடிகை யெல்லாம் என்னத்திற்கு? சீக்கிரம் சொல்லும்.

துன்மதி:—பதினைந்து தினங்களுக்குமுன்னே காஞ்சிபுரியிலிருந்து நமது நகரத்திற்கு ஒருவர்நகர் வந்திருந்தார். அவருடன் வேடிக்கையாய் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தபோது அவ்வூர் ராஜாவைப்பற்றிச்சம்பாஷிக்கும்படி நேர்ந்தது. அப்பொழுது அவர் தமது நாட்டரசருக்கு அழகிற்சிறந்த பதினைந்து பதினாறு வயதுள்ள பெண்ணிருக்கிறாளென்றும் இன்னும் கல்யாணமாகவில்லை யென்றுஞ்சொன்னார். அப்பொழுது தங்கள் ஞாபகம் வந்தது. அவள் பெயர் என்னவென்று கேட்டேன். 'சரசாங்கி' என்றார். ரசத்தோடுகூடிய தேகத்தையுடையவளோ வென்று கேட்டேன். அவர் சாரசத்தைப்போன்ற தேகத்தையுமுடையவள் என்றார். வெகுநாள் தேடிநின்ற திரவியம் காலடியிற் கிடைத்ததென்ன மிகவுஞ் சந்தோஷமடைந்தேன். தாங்களுடன் இந்த விஷயத்தை யப்பொழுதே சொல்லியிருக்கவேண்டும். தவறிவிட்டேன். மன்னிக்கவேண்டும்.

சந்திரசேகரன்:—அதனால் ஒருபாதகமுமில்லை. பிறகு—

துன்மதி:— (பாடுதல்.)

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு" என்றும்

"செய்தொழில் பயனு முரைப்பரே யன்றித்
தெளிருங் குணையினு துணையார்" என்றும்

பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். தாங்கள் மகப்பேறில்லாமல் வருந்துவது வெகுநாளாய் அடியேனுக்குத் தெரியும். ஆயினும் தாங்கள் வாய்விட்டுச் சொல்வீர்களா? தங்கள் மனோரதத்தை யீடேற்றும் வண்ணம் வெகுநாளாக யோசித்திருந்தேன். அஃது இப்பொழுதுதான் வாய்த்ததென் றெண்ணினேன்.

சந்திரசேகரன்:—இந்த விஷயத்தை முன்பே சொல்லியிருக்கலாமே! தாம் போனபோது தமக்குத் துணையாய்ச் சிலரை யனுப்பியிருப்பேனே!

துன்மதி:—ஆம். வாஸ்தவந்தான்! ஆனாலும் எங்கே குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொள்வோமோ என்ற ஒருயோசனை. உலகத்தில் செவ்வாய்க்கிழமையை மங்களவாரமென்று மங்கலமாகக்கூப்பிடுகிற ஒருவழக்கமிருக்கின்றதே! ஆதலாற்றான் தங்களிடஞ் சொல்லாமற் போகநேர்ந்தது. இஃதன்றியும் நேரிற்போனதற்கு வேறு சிலகாரணங்களுமுண்டு.

சந்திரசேகரன்:—வேறுகாரணங்க ளென்ன?

துன்மதி:—பிறகு சொல்லமாட்டேனா?

சந்திரசேகரன்:—சரி! போய்ச் சேர்ந்தீர். பிறகு.—

துன்மதி:—தங்களிடம் சொல்லாமல் தனியே போய்ச்சேர்ந்தேன்.—புருஷர்கள் ராஜகன்னிகையைப் பார்ப்பதென்றால் சரிப்படுகின்றதா?—ஆனாலும் போய்ப்பார்த்தேன்.

சந்திரசேகரன்:—பார்த்தீரா அவளை? எப்படிப் போய்ப்பார்த்தீர்?

துன்மதி:—உயிரை ஒருபொருட்டாய் எண்ணுமற்றான் போய்ப்பார்க்கும்படி நேரிட்டது. பார்த்தேன். மிகவும் மனத்திருப்தி யடைந்தேன். இனித் தங்களுடன் சொல்லத்தகுமென்று நினைத்துச் சிறிதும்தாமதியாமற் புறப்பட்டு ஆறு ஏழுதினங்களிலேயே வந்துசேர்ந்துவிட்டேன். இன்றுகாலைதான் வந்தேன். உடனே தங்களைப்பார்க்கும்படி நேரிட்டது.

சந்திரசேகரன்:—நண்பரே! உமது சாமர்த்தியத்திற்கு நானென்ன சொல்லப்போகின்றேன். எனக்காக உயிரையு மிழக்கத் துணிந்தீர்!

துன்மதி:—தேகம் பின்னரிய பிறகு உயிரென்றும் உடலென்றும் பார்த்தாலாகுமா?

சந்திரசேகரன்:—தோழரே! நீர் எனக்காக இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டீரே! உமக்கு என்னகைம்மாறு செய்யப்போகின்றேன்!

துன்மதி:—நீர் அழகுள்ள புத்திரனொருவனை அவளிடமாகப் பெற்று இந்தச்சோழநாட்டுக்கரசனாக்கி ஆளச்செய்வதுதான் கைம்மாறு. அவளிடமாகப் பிறக்கும் பிள்ளை பரதனைப்போல் ஏகசக்கிரேசுவரனாயிருப்பானென்பதற்குத் தடையேயில்லை.

சந்திரசேகரன்:—அதென்ன! அவளிடம் பிறக்கும் பிள்ளை சக்கிரேசுவரனாயிருப்பா னென்கிறீரே!

துன்மதி:—ஆம். தாய்தகப்பன்மார்கள் நல்ல அழகுடையவர்களாகவும் குணமுடையவர்களாகவு மிருந்தால் ஏன் அப்படிப்பிறவாது குழந்தை? தங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. இப்பொழுது பார்த்திருக்கிற பெண்ணோ—அழகிலும் குணத்திலும் மிகச்சிறந்த பெண்தான். தடையேயில்லை.

சந்திரசேகரன்:—மிகவும் உயர்த்திக் கூறுகின்றீரே! அவள் எப்படித்தானிருப்பாள் சொல்லும்பார்க்கலாம். நமது மனோரஞ்சிதம் போலிருப்பாளா?

துன்மதி:—நன்றாயிருக்கிறது உவமை! நல்ல மயக்கம். காமத்திற்குக் கண் தெரியாதென்பது சரிதான். அந்தப்பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட பிறகு மனோரஞ்சிதம் ஆகமாட்டாள் என்று பழி சுமத்தினீராயின் என்செய்வது?

சந்திரசேகரன்:—அப்படியன்று. அவள் இப்படியிருப்பாள் என்று தெரிந்துகொள்வதற்கு ஓர் உவமை சொன்னால் அதற்கென்னெல்லாமோ சொல்லுகின்றீரே!

துன்மதி:— (பாடுதல்.)

நிலையே சுவர்க்கம் விலோசன மம்பெணுந் தேமொழியைத்
தலைவீ முறுந்தன் னகிலந்தை யொப்பத் தவஞ்செயினும்
வலையா னின்று மனப்பூட் படுத்த மனோரஞ்சித
மிலைவேற் கரந்தாய் நிகர்ப்ப திலையிலை யென்றென்றுமே.

மாதுளங் காய்வனம் புக்குந் தவஞ்செயும் வண்ணங்கண்ட
குதிளங் கொங்கை மடந்தைக் குவமை சொலத்தகுமோ
வாதொழிந் தேதலை நாணிக் கவிழ்ந்தன வேண்டனத்தைப்
பேதுற வெய்வார் பிணிக்குழும் பேரிளம் பெண்ணினையே.

ஒரு பொருளுக்குவமை அதனினுஞ் சிறந்ததாகுதலன்றோ கூறவேண்டும்? அங்ஙனமிருக்கத் தாங்கள் அந்த மாசில்லா வலம்புரி முத்திற்கு இந்த விலைமகளாகிய மனோரஞ்சிதத்தை உவமை கூறியது பாற்கடலிற் பிறந்த அமுதத்தை அடுப்பிற் கரியென்று சொல்வதுபோலத்தான் இருக்கின்றது.—இருக்கட்டும்—அக்கட்டழகியின் நலம் விளக்கப் போகலாமோ? கூடாது. கூடாது. தாம் வயதின் முதிர்ந்தவராயினும் நல்ல யௌவனத்தவர் போன்றிருப்பதால் தமக்கு உரியளாவாளென்று கருதினேன். அன்றியும் தாம் இந்த உலகத்தை வெறுத்தகல்வதற்கு இன்னும் முப்பதுவருடகாலம் செல்லவேண்டுமென்று நமது பிரபலசோதிடம் ஐயங்காரவர்கள் கூறியிருத்தலாலும் அவள் தாங்கள் அநுபவித்தற்குரிய மடந்தையென்றே கருதினேன். தாங்கள் கேட்டனுப்பினுல் தொண்டைநாட்டரசன் தடைசொல்வானோ? அஃது ஒருகாலும் நிகழாது. அஃது எனக்குத் தெரிந்த விஷயந்தான். ஆனாலும் பெண்பாவம் பெண்தோஷமல்லவா? அதெல்லாம் புத்தியுடையவர்களாகிய நாம் ஆலோசிக்க வேண்டாமா? தாங்கள் அவளை மணம்புரிய இஷ்டப்படின் இப்பொழுதே சாஸ்திர பண்டிதரை வரவழைத்துப் பாலசந்திரோதயமும் அமிர்தகுண சஞ்சீவித்தயிலமும் செய்யுமாறுச் சொல்லவேண்டியதுதான்.

சந்திரசேகரன்:—சரி. அதெப்படியாவது இருக்கட்டும். அவள் எப்படித்தானிருப்பாள் அதைச்சொல்லும்! இந்தச் சம்பாஷணைப் பிரசங்கம் என்னத்திற்கு?

துன்மதி:—எப்படிச் சொல்வது! என்வாயால் அவளை வர்ணிக்கக்கூடுமோ! அதற்கு ஆதிசேஷன்தான் வரவேண்டும். யான் பன்னிப் பன்னிப் படித்தாலும் ஒரு சிறிதுதான் சொல்ல முடியும்.

(பாடுதல்.)

பைந்தொடி யிருந்த காந்தியிற் சிறப்பப்
பகலவன் விளங்கினுந் தோன்றிச்
சிந்தையி லவளை நோக்கின வரவிற்
றிருமுகஞ் சிவந்துவெய் தியிர்த்து
விந்தைகொள் படிவத் தனக்கழுங் குறைந்து
விளாவிலின் மறைந்துவன் குடக்கிற்
சந்தக மிதனைக் கண்டுமுற் றுமாற்
சாற்றுமா றெவன்று வேள்ளியே.

நிறைமதி யவடன் முகத்தினுக் கிணைந்து
நேரிழை யுறுப்பினுக் குவமை
யுறைதரப் பெறுவ மெனவவ ளுதலிற்
கணையதா வளவினிற் சிறுத்துங்
குறைவர வொக்கிலேமெனப் புருவங்
கூடுமோ வெனமிகக் குறைந்து
பிறையென வழங்க நின்றுநோந் திலனுய்ப்
பெரிதுயிர்த் தொழிந்தனன் வடிவம்.

மீட்டுமோர் நகையின் மிகமயக் குற்று
வெட்குறு மொழிந்தன விரண்டு
கோட்டைப் பிறையா யருத்தசந் திரனுக்
குலவுவா மதியெனப் பிறப்பான்
வாட்டெழின் மடந்தை யுறுப்பினுக் குடைந்து
வளருவான் குறைகுவா னெனவே
காட்டுது வெனயான் காண்கிலே னெவனுங்
கவினுறு பெரியநா யகனே.

அழகினின் மிகுத்த விரதிகேள் வனுமிவ்
வரிவையி னெழிலினை நினைந்து
பழுதக இருவங் கண்ணுற நாணும்
படிவமே யிலனெனப் போந்தான்
தொழுதலைக் யினனுய் மங்கைகண் ணிலைத்
தொடாசரம் போற்றியே யொருதன்
வழுவிலாக் குவளைப் பகழியை வருத்தும்
வகையெலாம் பயிற்றவெண் ணினனே.

பொன்னனுங் நடையைக் கண்டுசா முறுமெய்ப்
பொற்கொடி யரம்பையர் பலரோ
டன்னமு மொருபா லொளிய வடிவா
யனிநடை பயிலுவ பொருந்திப்
பன்னுறு மிசைதேர் பகழியாழ் முனிவன்
பண்ணினிற் றேற்றன னதனுன்
மின்னனின் கொடியாள் விண்ணவர்க் கரசன்
வியனுல குளளென வறியான்.

மாமயிற் றொருத்தி கோதைதனை நோக்க
மறைமொழி வந்தனம் மாசேனுள்
றேமுற மகிழ்ந்து சாயலைக் காண்பா
னிணையிலி யமையுமோ வெவ்வள
வாமமார் கோதைக் கம்மொலா நிரம்ப
வரிசையாய் மிகநடை ரெழுமா
ருமடோ ரயிலைதீ தாங்கிய காந்தாய்
மயுமா றெவனவள் சாயல்.

மோப்பதிற் குறைபு மவிச்சமென் மலரு
முளரியு நெருந்திலா வமர்ந்து
சேப்புமே பதங்களைச் சிறைசெயப் பரிந்தே
சேடியர் செம்மலர்க் கரத்தாற்
றூப்புமென் றதனைச் செவ்வரி விழியாற்
காரிரவ வாயினும் பெயப்ப
மாப்படி புரிந்தன சொன்னுளம் வருந்து
மாந்தளிர் நடைபெறு தகறுல்.

பஞ்சராங் தனிலே வைகுமைக் கிளியும்
பயிரமென் றொடியினைக் கண்டே
யஞ்சிர மனைத்துப் பலதரம் விழித்தே
யன்னமென் னடையினை விளிக்கப்
பஞ்சினுக் கனுக்கும் பதமிகச் சிவப்பப்
பாசிழை நடந்ததை மெடுப்ப
வஞ்சிமென் பவளக் கொம்பினை மாறும்
வனையிர லதனளி வதிந்தே.

வன்னமெ லுயிலா நோக்கிய சுசுமும்
மதிக்கதோ மூக்கெனக் கருதிப்
பன்னுறு சிறகை புளர்ந்துளங் தயலைப்
பார்த்துநற் கொவ்வைவரி கனிதனைத்
தின்றுறு கனியா பயிர்த்ததைக் கோதைத்
தேமொழி மதனநோக் குற்று
மன்னமெ னடையாள் வார்த்தையைச் செவிசொன்
டதனையே கற்குமா றினைக்கும்.

கமுகமென் களத்துச் சுந்தரி யிணைத்தோள்
கருதரு நீக்மிலக் கச்சா
லுமையெனப் பலகான் முத்தினைப் பொருப்பி
லணியவரி கிறைந்துமே யிற்கு
மிமையவர் முதலோர் பெறுவதற் காற்று
றெடுத்ததும் பார்த்தது மிசையா
தமையுறு முலயிம் கனைவரும் குரவ
னன்பிமற் றெவரெவர் தமக்கும்.

குமிழகன் மலரி னிறத்தினைப் பொருத்துக்
கோதிலா தெள்ளொளி யிசைாற்
கிழிறு மணஞ்சேர் நாசிதன் யுயிர்ப்பாற்
காமன்ற விரதமென் றேறு
மமைவுறு தென்றற் குரியவா சனைய
பரிதினி லூட்டியோ நிற்கு
மிமையவர் தருவு மினியவ னுருப்பெற்
றின்றவம் செயுமது பெறவே.

யாழினிற் பயின்ற பாவலர்க ளிவடன்
மாலைர்முன் ஞகயினைக் காணின்
வாழியவி தெனப் பலமுறை யுரைத்து
வழிபட நினைகுவர் பெரிதும்
பாழிய மகன்றை காந்தளென் றேறும்
பாவல ருவமையை யழிக்கு
மாழியிற் பிறவா வமுதமா ரின்னு
ளடியிலிற் பதின்மறு பொருந்தும்.

தவத்தினி லுயர்ந்தார் நெஞ்சினைப் பிளக்குந்
தையலின் கண்ணொழும் வாளைப்
பவத்திறம் பிணிக்கும் மதனிதன் நிட்டும்
பன்னுறு தாலைகொல் கபோலம்
சிவத்தபொன் றேலைப் பலிந்தமென் செவியுந்
திருமுகம் பேரிவுற விளங்கி
யுவத்தலைப் பொருத்த வுருவலன் புடையா
வளத்தினை யல்லையாய்ப் பிலிக்கும்.

சந்திரசேகரன்:—சரி. அதனை யனுப்பவேண்டுமே! நீரிருக்கும்போதே திருமுகம் வரைந்து வைத்துவிட்டால் பிறகு வேறுபிரதி ஒன்றெழுதித் தூதனிடம் அனுப்பிவிடலாம். வாரும். போவோம்!

(சந்திரசேகரனும் அன்மதியும் போதல்.)

(சுந்தரியருதல்; சதுரங்கம் எடுத்துச் செல்லல்.)

இரண்டாமங்கம் முற்றிற்று.

அங்கம்-III.

முதற்களம்.

இடம்:—காஞ்சியிலரண்மனையில்லிடுதியிடம். காலம்:—நண்பகல்.

நடர்:—சச்சந்தன், கனகாம்புஜம்.

சச்சந்தன்:—கனகை! இப்போது சோழநாட்டு மன்னன் சந்திரசேகரன் என்பவனிடமிருந்து ஒரு தூதுவன் வந்திருக்கின்றான்! அதுதெரிந்த விஷயந்தானே உனக்கு?

கனகாம்புஜம்:—தெரியாதே! யாருஞ்சொல்லவில்லையே! என்ன விசேஷம்? தூதன் வரவேண்டிய காரியம் என்னவிருக்கக்கூடும்? ஒருவேளை அந்த நாட்டரசருக்குச் சீமந்தமோ! அதற்காகத் திருமுகம் வந்திருக்கின்றதோ?

சச்சந்தன்:—பெண்ணே! சீமந்தமில்லை. கல்யாணக்கடிதம் வந்திருக்கின்றது!

கனகாம்புஜம்:—முன்னேயே கல்யாணமாயிருக்கின்றதே அவருக்கு? ஒருவேளை முதற்றாரந்தப்பி யிரண்டாந் தாரங் கல்யாணமோ!

சச்சந்தன்:—அப்படியில்லை. கல்யாணமாய்த் தனக்கு இருபத்தைந்து வருடகாலமாயும் புத்திரப் பேறென்பதில்லையாம். அதனாலே நமக்குத் தூதனையனுப்பி—

கனகாம்புஜம்:—இவருக்கு இப்பொழுது குறைந்தது ஐம்பது வயதிருக்குமே! இவருக்கேன் இப்பொழுது பெண்சாதி? இரண்டாந் தாரத்திற்குக் குழந்தைபிறக்குமென்பதென்ன நிச்சயம்? இவருக்கிரண்டாந்தாரம் வருபவள் பிறர்முகம் பார்க்கவேண்டுவதுதான்! பன்னிரண்டு பதின்மூன்று வயதுப்பெண்ணைத்தானே கல்யாணஞ்செய்து கொள்வதாயிருக்கவேண்டும். இவர், வயிற்றிற்பிறந்த பேர்த்தியைக் கல்யாணஞ்செய்து கொள்வதுபோலவே யிருக்கின்றது! இவருக்குப்பெண்ணைக் கொடுக்கின்றார்களே புத்தியீனர்கள்! அவர்கள் சொல்லயாதகர்களாகவே யிருக்கவேண்டும். பெண்ணைப்பெற்று இப்படியும் விற்பார்களோ! ஈசா! பெரும்பாவம்! கிழவர்களுக்குத்தான் ஆசையதிகம்! வயிற்றும் பித்துப்பிடித் தலைகின்றார்கள்!

சச்சந்தன்:—கண்ணே! அவர் இரண்டாந்தாரங் கல்யாணஞ்செய்து கொள்வது இன்பமநுபவிக்கிற எண்ணத்தைக் கொண்டன்று! புத்திரவாஞ்சை எல்லாருக்குமுள்ளதுதானே! தனக்குப்பின் தேசத்

தையாள்வதற்கு ஒருபிள்ளை தன்மனைவி வயிற்றிற் பிறக்கவேண்டுமென்றுதான் கல்யாணஞ் செய்துகொள்ளப் போகின்றாராம். அதற்காக—

கனகாம்புஜம்:—மனைவி வயிற்றில், இவருக்குப் பிள்ளைபிறக்கவே பிறக்காது. அது நிச்சயம். மனைவி சோரபுருஷனுடன் கலந்து பிள்ளை பெற்றுக்கொடுக்கலாம்! அவள் பதிவிரதை யாயிருந்தால் அதுவுமில்லை!—

சச்சந்தன்:—பெண்ணே! உலகத்தில் ஐம்பது வயதுடையவர்கள் எத்தனை பேர்பிள்ளை பெறுகின்றார்கள். நீபெண்பிள்ளை யானபடியால் ஒன்றுந் தெரியவில்லை!—இப்பொழுது அவரனுப்பியிருக்குந் தூதரிடத்தில் என்ன வுத்தாரஞ் சொல்லியனுப்புவது?

கனகாம்புஜம்:—எதற்கு உத்தரமனுப்ப வேண்டும்?

சச்சந்தன்:—நமது சரசாங்கியைக் கொடுக்கும்படி யெழுதி யனுப்பியதற்கு!

கனகாம்புஜம்:—தாங்களே எழுதி யனுப்புகிறதுதானே! என்னை ஏன் கேட்கவேண்டும்? தாங்கள் பெற்றவரானபடியால் உங்களுக்கவளை விற்க எண்ணமிருக்கிறபோது அப்படியே செய்கிறதுதானே!

சச்சந்தன்:—பெண்ணே! எப்படியிருந்தாலும் உன்னோடு யோசனை செய்யாமல் எந்தக்காரியம் நடக்கும்? நீதான் அவள் நடக்கை சேரிதன்றென்று முன்பே கூறியிருக்கின்றனையே! யாருக்காவது கொடுத்துவிட வேண்டியதுதானே! இனியும் வைத்திருப்பது அவமானமல்லவோ நமக்கு?

கனகாம்புஜம்:—அழகானந்தனைப் பார்த்தாளென்றுயான் கூறினால் நீங்கள் அவள் சோரம் போனாளென்று நினைப்பதோ? நன்றாயிருக்கின்றது! கன்னியருக்கு ஒருவர்முகம் பார்த்தல் தகாதென்று சாத்திரங் கூறுதலினாலே, யான் அவள்நடக்கை நன்றாயில்லையென்றேன்! இப்போது அவனைப்பார்த்த குற்றத்திற்காகப் பாழுங் கிணற்றிற் பிடித்துத் தள்ளிவிடுவதோ? கன்னிகைகளுக்கு நல்ல அழகாக இருக்கும் ஆடவனைக்கண்டால், நமக்குப் புருஷனாக மாட்டானோவென்று நினைப்பது வழக்கந்தானே!

சச்சந்தன்:—நாம் ஏதாவது ஒருத்தரமனுப்பவேண்டும். இதோ இருக்கின்றது அவர்படம்? இதை நமது குமாரத்திக்குக்காண்பித்து அவள் மனத்தை யறிந்து எனக்குச் சொல்வதன்றி நீயும் உன்னிஷ்டத்தைத் தெரிவி!

கனகாம்புஜம்:—என் இஷ்டம் யாதிருக்கின்றது! தங்களுக்கெது இஷ்டமோ அதுதான் எனக்குமிஷ்டம்! இந்தப்படம் செய்வித்து! மிகவும் அழகுடைத்து!

(பாடுதல்.)

இராகம் - பந்துவராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

அழகுடைத்தம்மா - மிக
அழகுடைத்தம்மா.

அநுபல்லவி.

பழகும் பாவலோர்
பகரரிய சீர் (அழகு)

சரணங்கள்.

முகத்தொளியைக் காண மூவாயிர நாட்டம்
அகத்திற் கொண்டாற்று னறியலா ணோட்டம் (அழகு)

பாலைச் சிமாட்டிக்குப் பாரெங்கணுங் கிட்டா
சால நனைத்திட்ட தன்மையுனைக் கெட்டா (அழகு)

பூரணைசந்திரனைப் போன்றனைதய பீடம்
தாரணிந்து வாழத் தக்கவா தம் படம் (அழகு)

இதைச் சரசாங்கிக்குக் காண்பித்தாற் சரியுமிழ்வாள்! நீங்களே சென்று அவளிடங் கொடுங்கள்! நான் மாற்றாந்தாயாயிருந்து அப்படிச்செய்வது தகுதியன்று! சொந்தத்தாய் எது செய்யினும் பாதகமில்லை. நான் தங்கள் கட்டளைப்படி நடக்கினும் உலகம் பலபலவிதமாக நினைக்கும்!

சச்சந்தன்:—உனக்கே இஷ்டமில்லாத போது அவளுக்கெங்கே யிஷ்டமிருக்கப் போகின்றது?

கனகாம்புஜம்:—ஒருவேளை அவளுக்கிஷ்டமிருக்குமோ என்னவோ! உலகத்தில் தந்தை புத்திசாலியாய்ப் படித்திருக்கின்றானா வென்றும், தாய் பணக்காரனாவென்றும் பெண் அழகுடையனாவென்றும் உற்றார் முதலியோர் நல்ல்குலமோவென்றும் பார்ப்பதுண்டு! முக்கியமாகப் பெண்மனங்கோணாமலும் உற்றார்வசை சொல்லாமலுமிருக்கும்படி பார்த்துத்தாய் தந்தையர் தமது பெண்களுக்கு விவாகஞ்செய்யவேண்டும், குலத்திலே குரங்கையாயினுங் கொள்ளென்பது உலகில் தொன்றுதொட்டுவழங்கிவரும்பழமொழி. புதுக்கால் வெட்டாதே பழங்கால் தூர்க்காதேயென்று கூறுவது முண்டு!

னதலால் நமதவருக்கத்திலேயே ஒருவருக்கு விவாகஞ் செய்து கொடுப்பது சகுதியென்று தோன்றுகிறது. புது இடத்தில் நமது குமாரத்தியைக் கொடுப்பது உசிதமாய்த் தோன்றவில்லை.—வண்டு சண்பக மலரிடத்திற் சேருமோ?—மேலும் அவர் நெருஙரல்லரோ?— இனித் தங்களிஷ்டம். நான் என்னத்திற்குச் சொல்லவேண்டும்?

சசிசந்திரன்:—ஆயின் நல்லது! நாம் கொடுக்கமாட்டோமென்று சொல்லி யனுப்பிவிடுவோம்! இனி நமது பெண்ணையாருக்குத்தான் கொடுப் பது? குணசாலியாகவும் போரில் வன்மையுடையவர்களாகவும் ஒருவரு மில்லையே! (முகுந்தன்வருதல்.)

கனகாம்புஜம்:—மகாராஜா! தோட்டத்திற் சாய்சுதி வைத்துக்கொண்டு யோசனைக்கு வரக்கூடிய போலிருக்கின்றதே! இதோ நமது அருமைத் தம்பியில்லையோ?

சசிசந்திரன்:—குறிச்சி. சர்க்கரைப்பந்தலிற் றேன்மாரி பெய்தாற்போலா யிற்று! யான் போகின்றேன்!—யான் மறந்தாற்போல் என்னவோ பேசியிருந்தேன். (சசிசந்திரன்போதல்.)

முகுந்தன்:—சரசாங்கியைக் கேட்கவாவந்தான் அரசன்? அப்படித் தெரிந் திருந்தால் நேற்றே கொன்றிருப்பேனே!

கனகாம்புஜம்:—தம்பி! நீபுத்திசாலியாயிரு! என்றுத்தரவின்றி நீயொரு காரியமுஞ் செய்யாதே! என்னையல்லாமல் சரசாங்கிக்கு எப்படிக் கல்யாணம் நடக்கப்போகின்றது? நீ ஏன் பயப்படுகின் றாய்? வெந்நீரில் விழுந்தெரிந்துவிடப் போகின்றதா?— (சிங்காரவல்லிவருதல்.)

சிங்காரவல்லி:—அம்மா! மகாராஜா தங்களை மறுபடியும் பார்க்கவேண்டு மாம். அழைத்துவரும்படி யனுப்பினார்கள்.

கனகாம்புஜம்:—இதோ வந்துவிட்டேன். (யாவரும்போதல்.)

இரண்டாங்களம்.

இடம்:—காஞ்சியிற்கன்னிமாடத்துப்பூங்காவனம். காலம்:—மாலை.

நடி:—சரசாங்கி.

(பாடுதல்.)

சரசாங்கி:—

"முனிவரும் போக பூமிப்
போகமுட் டாது பெற்றுந்
தனியவ ராகி வாழ்தல்
சாயா ரதனி னில்லை

கனிபடு கிளவி யார்தங்
காதலன் கவானிற் றங்கிற்
பனியிரு விசும்பிற் றேவர்
பான்மையிற் றென்று சொன்னான்" என்று

பெரியோர் கூறியஉபதேசமன்று.—உண்மையே! சந்திரகாந்தக் கற்களாலாகிய இப்பளிங்கு மண்டபமும் சூரியகாந்தம் போன்று தகிக்கின்றதே!—ஏ! வசந்தமண்டபமே! என்தலைவருடனிருந்த காலத்துத்தென்றற்காற்றும் சந்திரகிரணமு நின்னகத்திற் பொருந்தக் குளிர்ந்திருப்பாயே!—மாலைப் பொழுதுதான் அரசனின்றித் தவிக்கும் நாட்டிற் குறும்புபுகுந்து நடத்துவதுபோ லெல்லையைக் காய்கின்றது.—நீயுந் தலைவர் நீத்தகன்ற இக்காலத்தைத் துணையின்றி வருந்தும் என்னைப் பாலைவனத்திற் கொடும்புலி தாக்குதலால் மான் உயிர் நீங்குவேனென்றறிந்தும் மனமிரங்காமற் செந்தழலாய்த் தகிப்பதென்னையோ?—நீங்கள் எல்லாம் எனக்குத் துணையாயிருந்து என்னை யாற்றுவிப்பீரென்றெண்ணியே யென்தலைவர் என்னைப் பிரிந்தகன்றார்.—நம்பிக்கைத் துரோகிகாள்! அவரிருக்கும் வரையில் ஆம் ஆம் என்று தலையசைத்து முகமனியம்பி யவர்சென்றதும் என்னைப்பட முடியாத துன்பத்திற்காளாக்குகின்றீர்களோ?—ஏ! நயவஞ்சகர்காள்! உங்களை விநோதம்பித் தலைவரும் விட்டகன்றனரே! அவர் வரின் கைகட்டி வாய்புதைத்து நிற்பீர்களே!—உமது துர்க்குணத்தை யறிந்திருப்பாராயின் விட்டு நீங்குவாரா?—ஏன் நீங்குவார்? ஒருகாலும் நீங்கப்பிரிந்திரார். தனியே துணையின்றி யேங்கும் ஒரு பெண்ணைக்காயு மும்முடைய விரதத்தை யென்னென்றுரைப்பது?—அவரிருக்கும்போது எனக்கின்பஞ் செய்யுநீங்கள் எனக்கிப்பொழுது விரோதம் பாராட்டுகின்றீர்களே!—அவர்வந்தவுடன் நுமதாண்மையெல்லாம் ஒடுங்கி விடுமன்றோ?—ஏ! தலைவா! எப்பொழுது வந்தென்னை யிப்பாதகர்களிடமிருந்து காக்கப்போகின்றாய்? அந்தோ! தலைவனே!—

(பாடுதல்.)

ஐயுத்தொட் டேயென்றன் பாற்கலச மிணைகோங்கி
னையுமிடை யொடியாம லாய்ந்தவினை மேலோர்க
ளாயவென்றே யடிவீழ்வார்க் கபயக்கை காட்டிற்றுந்
றையல்கா ணென்றுவள்க்குந் தலைவாவென் றலைவாவோ.

ஆற்றல்சேர் குரும்பைபிணை யகங்கையாற் றெட்டிந்தச்
சிற்றமிருந் தெனைக்கொல்லும் திறல்யானை வலியடக்கப்

பொற்றரிய வங்குசமென் பூவிரலி னுகிரலவோ
சாற்றனங்கே யென்றனைக்குத் தலைவனென் றலைவனவோ.

சங்கையிலா தென்றனது தாமரையர்க்குன் றைத்தொட்டே
யிங்கொற்றை பூமியின்மே லியம்புதவ னன்றுமா
மங்கையா லபயாத்த மகிழ்த்தேனைப் பார்த்தருளாய்
தங்கமமே யென்றனைக்குந் தலைவனென் றலைவனவோ.

நோவனிக றுயிர்பிற்குந் துயரந்தா லென்றென்னரி
வாளுடையாய் நினையொவ்வா மருத்துவர்போற் கைபார்த்துந்
நாளிடத்து வீழ்ந்தென்னைத் தலைவன்வரப் பார்த்தாற்றுன்
நானிங் கிறைந்திருப்பாய் நங்காயென் றுரைத்தனவே.

அழகின்பம் பொருந்துகுழல் லரியவொரு பெயருடையா
யழகின்பந் தருவானொன் றையுறு துணைச்சேர்ந்தே
னழகின்பங் கொள்ளைகொள்வே னறிவிலா யென்றென்று
னழகின்பங் கவர்ந்தென்னை யழுமாறு வைத்தனையே.—

(இந்துவதனை வருதல்.)

இந்துவதனை:—(தனக்குள்) இதென்ன அழுகுரல் கேட்கின்றதே! நமது தலைவிதான் துக்கிக்கின்றாளோ! ஆம். அவள் தான். யான்சென்று தேறுதல் கூறுவேன்.—(இந்துவதனை சரசாங்கி யருகில் வந்து) அம்மா! எதற்காகத் தாங்கள் இங்குத்தனியேவந்து வருந்துகின்றீர்கள்?—

சரசாங்கி:— (பாடுதல்.)

இராகம் - முகாரி. தாளம் - அடதாளசாப்பு.

கண்ணிகள்.

சகியே நானிந்த ஜென்ன மெடுத்தேன் வீணாய்ச
சஞ்சலப்பட் டேனைந்
தயங்குகின்றே னேயினிநீ
சாற்றுவாய் சாற்றுவாய் சாற்றுவாய் சாற்றுவாய். (சகியே)

இந்துவதனை:—

சாற்றுவ தென்ன வம்மா சாரு மின்ப துன்பமுஞ்
சமரசமா கவெங்குஞ்
சகத்திலெவர்க் கும்தங்கு
நையலே நையலே நையலே நையலே. (சாற்று)

சரசாங்கி:—

சென்ற விடத்தி லுற்ற செய்தி யொன்றுங் காணேனே
சித்தமயங்கு மென்செய்வேன்
சேயிழையெப் படியுய்வேன்
தேர்கிலேன் தேர்கிலேன் தேர்கிலேன் தேர்கிலேன். (சென்ற)

இந்துவதனை:—

எப்படி யெப்படி யென்றே யேங்குவ தேனோ வம்மா
ஏதுங்குறை வாராதும்
எந்தனுக்கே யெப்போதும்
எண்ணுவாய் எண்ணுவாய் எண்ணுவாய் எண்ணுவாய். (எப்)

சரசாங்கி:—

விரைவில் வருவே னென்றே வேந்தரு மேகினார்
வீணுரை யோமானே
விளம்பிடு வாய்செந்தேனே
மேவுமோ மேவுமோ மேவுமோ மேவுமோ. (விரைவி)

இந்துவதனை:—

விளம்புவ தென்ன வம்மா மெய்யாய் நின்மீ தென்றும்
வேட்கையுற் றவர்வர
வெகுநாட்செல் லுமோஸ்திர
மீளுவார் மீளுவார் மீளுவார் மீளுவார். (விளம்பு)

சரசாங்கி:—கண்ணே! நான் எப்பொழுது என்பிராணநாதனைப் பார்க்கப்போகின்றேன்? அவர்பிரிந்தது முதல்துக்கம் அளவில்லாமற் பெருகுகின்றதனாலே யான்மிகவுந் தைந்துருகுகின்றேனே! இஃதேனோ?

இந்துவதனை:—அம்மா! உலகத்தில் ஸ்திரீகள் புருஷருடன் அநுபவிக்கும் இன்பம் ஒருநிலையாக, அவரது பிரிவால் வருந்துந்துன்பம் கடலினுமதிகமாயிருக்கின்றது! மாதர்களிடம் பிரிவிடத்துத்துக்கந் தோன்றுவதன்றி ஆடவரிடம் அதுசிறிதும் புலப்படுவதில்லை! அவர்கள் தமது நாயகிகள்மேற் கடலினு மிகுந்தகாதல் கொண்டவிடத்தும் உருகின பொன்னிலுற்ற நீர்ப்புள்ளிபோல அதனை வெளியிற் றோற்றுவிக்காது அடக்கும் வல்லமையுடையர்களாயிருக்கின்றார்கள்! அவர்கள் தாமே தேறுதலடைவதே புதுமையாகத்தோன்றுகின்றது!—ஒருவேளை இத்துன்ப மிகுதியால் இறந்துபடும்படியும் நேரிடும். பிறகு இம்மையோடு மறுமைப்பயனு மின்றிக்கணவனுக்

குத்திங்கிழைத்த தன்மையமுண்டாரும்! அவரும் தங்களையதிசிக்கிரத்திற் பார்க்கக்கூடுமென்றே தோன்றுகின்றது! ஆதலின் தாங்கள் ஆற்றியிருப்பதேதகுதி. அம்மா! தேசமுழுவதும் பசலை பாவிற்றே!

சரசாங்கி:— (பாடுதல்.)

"இலையா ரெரிமணிப்பூ ணேந்து முலையுஞ்
சிலையூர் திருநுதலுஞ் செம்பசலை மூழ்க
மலையா ரிலங்கருவி வாள்போல மின்னுங்
கலையார்நின் சொல்லினும் காணார்கொல் கேள்வர்."

"பிறையார்திருநுதலும் பேரமருண் கண்ணும்
பொறையார் வனமுலையும் பூம்பசலை மூழ்க
நிறைவா ரிலங்கருவி நீள்வரைமேன் மின்னுங்
கறைவேலுண் கண்ணினாய் காணார்கொல் கேள்வர்."

"அரும்பேர் வனமுலையு மாடமையென் றேனுந்
திருந்தேர் பிறைநுதலுஞ் செம்பசலை மூழ்க
நெருங்கார் மணியருவி நீள்வரைமேன் மின்னுங்
கரும்பார்நின் சொல்லினாய் காணார்கொல் கேள்வர்."

(ஏமவதிவருதல்.)

ஏமவதி:—அம்மா! சகுணர்வந்திருக்கின்றார்.

சரசாங்கி:—வரச்சொல் (ஏமவதிபோதல்.) இந்துவதனே! நீசெல். இதோ வருகின்றேன்.— (இந்துவதனேபோதல்.)
ஐயோ! இந்துவதனே! யான் என்னடிசெய்யப் போகின்றேன்? என்னங்கமெல்லாந் தழலா யெரிகின்றதே!—

(எழுந்துசோலையூடே நடந்துசெல்கின்றாள்.)

(பாடுதல்.)

காவிடத்து மலரகத்து மதுநுகர
விரைந்துசெலுங் காமர்வண்டீர்
நாவிடத்துப் பொய்யுரைத்து நகரகன்ற
நாயகனுங் நடைகண் டேபல்
பூவிடத்துந் தேனுண்லி னுமையிகழ்ந்தா
னென்றுது பொலிவு கூர்ந்து
கோவிடத்தென் வருத்தமெலாங் கூறியவர்
வரச்செய்து கோலஞ் செய்வீர்.

கைம்மாறு கருதாதிவ் வுலகினார்க்குத்
துணைபுரியுங் கார்மே கங்கா
ளெம்மானுக் கென்வண்ண முரைத்தருளி
யவர்வரநீ ரீண்டு வந்தா
லம்மாலே மயிலனையு மனக்கிளர்ச்சி
யெனதாகு முண்மை யீது
மெம்மானு மயிலென்பான் யானுமதை
யொத்திருப்பேன் பெரிது மன்றே.

உயிர்த்துணைவன் கூறுமொழி கூறியெனைப்
பரிகசித்தே யுவக்குந் தத்தா
யயர்த்தனையோ வத்தொழிலை யல்லாக்கா
லவன்பிரிவை யறிகி லாயோ
செயிர்த்தெதுவுஞ் செப்பாதே செவ்வியுணர்ந்
தணுகின்றன் றேவி யின்னு
முயிர்த்திருக்கின் றாளெனநீ யுரைத்தவனை
யிவ்விடத்தி னுறச்செய் வாயோ.

ஏ! தத்தாய்! நீ குணமாலையினது கிளியாரைப்போன்று தலைவன் நல்வரவைத் திரும்பிவந்து கூறுமாற்றலுடையை யல்லையாயினும் இஃதொன்றையாயினுஞ் சொல்லுதி.

"வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வா
யிந்த விப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தொ டேனென்ற செவ்வரந்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்."

"ஈண்டு நாளிருந் தின்னுயிர் மாயினு
மீண்டு வந்துபி றந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை நீர்வரம்
வேண்டி னேடொழு தென்று விளம்புவாய்."

நீ நின்வாயிலாக அவருளாத் தனவற்றிற்குச் சாட்சியாயிருந்தாயாதலால் நீதான்சென்று ஞாபகமூட்டவேண்டும். சீக்கிரஞ்சென்று வருதி.—

(பாடுதல்.)

இராகம் - புன்னாகவராளி. தாளம் - ஆதி.

பல்லவி.

என்று காண்பேன் என்றன் நெஞ்சமே - நான்
என்று காண்பேன் என்றன் நெஞ்சமே

அநுபல்லவி.

ஒன்று மெனை விட்டு நீங்கி
அன்று சென்ற அன்பர் தம்மை (என்று)

சரணங்கள்.

மீள மீள வந்தே மதன்
வேளும் போர்செய் கின்று நெருங்கி
நாளு மோர்யு கமா கவே
நீண்டுமென்ம னாளர் தம்மை (என்று)

சுந்தரங் கடல் சூழ்பு விபி
னெத்தி சையி லுற்றிட் டாரோ
சிந்த மெதிர் பார்த்து மந்த
வந்த மர்தாம் வரக் காணேம் (என்று)

ஆசி லானன் மனம் வீசும்
வாச மலர்ச் சோலை யிலுலவ
லாச யிஞ்ச வேந்த யந்த
நேச விசு வாசர் தம்மை (என்று)

ஏ! மனமே! மனமே!! நீ எங்கிருக்கின்றாய்?—அன்றவருடன் சென்றநீ இன்றும்வந்தாயில்லையே!—செய்குன்றே! இயற்கைக் குன்றைக் குழைவிக்குந் தோளாய் என்று வந்து கவலை தீர்ப்பான்? மாதவிக்கொடியே!—உன்னைப்பார்க்கப் பொறாமையெழுகின்றதே! நீயாசைவிட்டகல்வதின்றோ?—அந்தோ!—

(சரசாங்கி துக்கித்துக்கொண்டே பொதும்பரின்கண் மறைகின்றாள்.)

சுகுணன்:—(கடிதம் ஒன்றைப்பிரித்து வாசித்தல்.) ஆ! இதென்ன சரசாங்கியைக் குற்றமுடையவளென்றும் வியபிசாரியென்றும் கூறியிருக்கின்றதே! யாரிதை எழுதினது? எனது நண்பரோ? அழகானந்தரோ? அவர்புருடரோ? நன்று! நன்று!! சித்தப்பிரமையோ! 'அன்பில்லாதவள்' அவள் தம்மை நினைந்து நினைந்து உருகுவது அன்பில்லா

மையோ? இறக்கவேண்டியதா? ஐயோ! ஐயோ!! என்ன விபரீதம்! காலத்துக்குத்தகுந்த புத்தியா? யான்சொல்லவேண்டும்! நானுசொல்வது? கற்பிற் கரசியை! பதிவிரதாசிரோமணியை! இதைக்கண்ணுற்கண்டதைவிட ரவுரவாதிநரகமும் அநுபவிக்கவேண்டியதில்லையே! 'அரக்த அடையாளமறுப்பவது' ஐயையோ! பிறகென்ன எழுதியிருக்கின்றது?—'எனக்குரிய தோழனுயின் இதுபுரியாமலிராய்.' இதென்னகாலக்கேடு. என்ன வன்னெஞ்சம்! யோசனையற்றதோ? பெண்சாதியைக் கொலைபுரிவது! நன்று! நன்று!!—பிறகு—'தடையில்லாமற்செய்! தாமதம் வேண்டாம்! அவளே நின்னைப் பின்தொடர்ந்துவரும்படி அவளுக்குக் கடிதமெழுதியிருக்கின்றேன்.'—நன்மை நினைப்பவர்களுக்கும் அறநெறி வழுவாதிருப்பவர்களுக்கும் தண்டனை யிதுவோ! ஈசா!—சரசாங்கி அதோ வாடியமுகத்தோடு வருகின்றாள்! யான் என்ன செய்யப்போகின்றேன். எனக்கொன்றும் புலப்படவில்லையே! (சரசாங்கிவருதல்.)

சரசாங்கி:—சுகுணரே! என்னவிசேஷம்?

சுகுணன்:—விசேஷமொன்றுமில்லை. அழகானந்தரிடமிருந்து ஒருகடிதம் வந்திருக்கின்றது!

சரசாங்கி:—கடிதமா வந்திருக்கின்றது? எங்கே! (சுகுணன் கடிதங்கொடுக்கக்கண்ணிலொற்றி முத்தமிடுகின்றாள்.) எனது நாயகரது க்ஷேமலாபங்களைக் குறித்தகடிதமோ? ஐயோ! எத்தனை நாளாக இப்பேர்ப்பட்ட கடிதம் வராமல் துக்கித்திருந்தேன்! இதைக்கண்ணுற்றயான் இன்று சந்தோஷ சாகரத்திலாழ்ந்தேன்! அவர் சௌக்கியமாயிருக்கின்றாரென்பதற் கிதுவே ஓர் அறிகுறியே யன்றோ? ஆம். (பிரித்துவாசிக்கின்றாள்.) "உனது தகப்பனார் அன்னியதேசம்போம்படி ஆஞ்ஞாபித்ததினாலுண்டான வருத்தத்திற்கு மேலான பெருந்துன்பத்தை உன்னைப்பார்க்காததனாலடைகின்றேன்! உனக்கத்தன்மையில்லையோ? யான் திருவக்கரையிலிருக்கின்றேன். நீ சுகுணனைப்பின்பற்றிவரின் நாமிருவரும் ஒருவரையொருவர் கண்ணுறல் கூடும்.—

உனது நன்மை நாடுகின்ற
"அழகானந்தன்."

சுகுணரே! அவரே கட்டளையிட்ட பின்னரும் அவரைப்பாராமல் ஒருதினமும் ஆற்றியிருக்கமுடியாது! அவரையுடனே யான் பார்க்கவேண்டும்! இல்லாவிடில் எனதுயிர் நீங்கும்! சுகுணரே! திருவக்கரை எவ்வளவு தூரமிருக்கும்?

சுகுணன்:—அம்மணீ! இரண்டு காதமிருக்கும்! அதுவும் அதிகமென்றே எண்ணுகின்றேன்!

சரசாங்கி:—நீர் எனக்குத் துணைவரவேண்டும்! நீர் அருணோதயத்திற்கு முன் என்னைக் காணும்படி நம்துமாகோட்டத்தின் சன்னியந்திருக்க வேண்டும்!

சுகுணன்:—அங்ஙனமே வருகின்றேன். (சுகுணன்போதல்.)

சரசாங்கி:—யான் சுகுணருடன் புறப்பட்டுப் போவதைப்பற்றி நமது தோழி இந்துவதனையுடன் கூறுவோமா!—அவள் யாருடனும் சொல்லமாட்டாள்! நமக்கொத்த தோழியல்லளோ!—

(இந்துவதனைவருதல்.)

இந்துவதனே! நீகூறியபடியேயான் என் பிராணநாதனைப்பார்க்குஞ் சமயம் நேரிட்டிருக்கின்றது! இதோபார்த்தாயா கடிதம்! யான் நாளைவிடியற்காலம் சென்று அவர்பாததரிசனஞ்செய்யும்படி நிச்சயித்து விட்டேன்!

இந்துவதனை:—அம்மா! யார்கூடவருவது! சுகுணரோ? புருடர்களோடு தனியே போதல் தகுதியன்றே! யானும் தங்களோடு வருவேன்! இந்தவரம்மாத்திரம் கொடுக்கவேண்டும் அம்மணீ!—

சரசாங்கி:—கண்ணே! இந்துவதனே! நீகேட்கத்தகாத வரமல்லவோ கேட்கின்றாய்? நீவேறு எதுவேண்டுமாயினும் கேள்! தடையின்றிக்கொடுக்கின்றேன்! அதுமாத்திரங் கேட்காதே!

இந்துவதனை:—ஏனம்மணீ?

சரசாங்கி:—பெண்ணே! நீபுத்திசாலியல்லையோ! நான் சொல்வதைக் கேள். சுகுணரிடம் இவ்வளவு நாளாகப் பழகுவதனாலே அவர் என்னைத்தங்கை போலெண்ணியிருப்பது உனக்குத் தெரியவில்லையே! அவரை நம்புவதிற்குற்றமேயில்லை. ஆதலின் யான் அவருடன்போகலாம். நீ ஏன் வரவேண்டும்? நீசுகமாய் அரண்மனையிற் காலத்தைக் கழிப்பதை விட்டுவிட்டு என்னைப்பின்பற்றி வருவேன் என்கின்றாயே! என்தலைவிதி யான்போகவேண்டி யிருக்கிறது!

இந்துவதனை:—அம்மா! என்னைவிட்டுவிட்டா போகப்போகின்றீர்கள்? தம்மைப்பிரிந்து நான் எப்படி யுயிர்தரித்திருப்பேன்! நீங்கள் கல்லிலுமுள்ளிலும் நடந்து செல்லநான் அரண்மனையிலிருப்பதோ? யானும் வருகின்றேன்!

சரசாங்கி:—கண்ணே! உன்னைப்பிரிவதில் எனக்குத் துக்கமில்லையோ? ஆயினும் என்செய்வது? யான் ஒருவருக்குத் தாரமாயினபோது அவருடைய சுகதுக்கத்திற்குத் தக்கபடி நடக்கவேண்டி யிருக்கிறது! வருந்தாதே! நீ. இங்கேயேயிரு!

இந்துவதனை:—யானும் வருகின்றேன்!

சரசாங்கி:—எத்தனைவிதமாக எடுத்துச்சொன்னாலும் நீ தெரிந்துகொள்ளவில்லை! இன்றிரவெப்படிக் கழியப்போகின்றது எனக்கு? நீ என்னுடன்வந்தால் அதுவசைச்சொலன்றோ? "ஊழ்வினை யுருத்துவந்தூட்டும்" என்பதற்கேற்ப யானநுபவிக்கின்றேன். நீகிளியோடுகொஞ்சிக்குலாவிக் கொண்டிரு!

இந்துவதனை:—வருகின்றேனே!

சரசாங்கி:—என்மேற் பட்சமிருந்தால் என் சொல்லைத்தடுப்பாயோ! யான் போகின்றேன்! (சரசாங்கிபோதல்.)

இந்துவதனை:—நீ என்னை விட்டுப்பிரிந்துபோகப்போகின்றாய்? தாயே!

(பாடுதல்.)

இராகம் - பைரவி. தாளம் - ஆதி.

பல்லவி.

தாயே யுன்னைப் பிரிந்தாலே-உயிர்
தரித்திருப்பனோ புவி மேலே. (தாயே)

அநுபல்லவி.

நீயென்னை யொருபோதும்
நீங்கவிடாயே
நீதியோ விதுரைப்பாய் (தாயே)

சரணங்கள்.

கந்த மலர்ச் சோலையிற்
சந்ததமும் தான் சென்று
பந்தினை யாடுவமே (தாயே)

பாலைப்பழித்த மொழி
யாலே பணித்தருளுங்
கோலங் காண்பதெக் காலம் (தாயே)

பொங்கும் பணிகள் தின
தங்கந் தனிலே யென்றுந்
தங்கப் பூட்டுவ தென்றோ (தாயே)

[இந்துவதனே யென்று ஓரினியமென்குரல் விளிக்க
என்றலைவி மனமிரங்கி யென்னையழைத்தாளோ வென்று
சத்தமெழுந்த திசைநோக்கி விரைந்து இந்துவதனை செல்கின்றாள்.]

மூன்றாங்களம்.

இடம்:—ஒருமலைச்சாரல். காலம்:—காலை.

நடர்:—குணநிதி, விக்கிரமன், வீரசேனன்.

விக்கிரமன்:—அப்பா! மூன்று தினங்களாக மழைவிடாமற் பெய்துகொண்டிருந்ததனால் நாம் நமது குகையினின்றும் வெளிப்படுவதற்கும் கூடாமையாயிருந்தது. இன்று மழை சற்று நின்றிருக்கின்றமையால் வெளியிற் புறப்படும்படி எங்களுக்கெண்ண மிருக்கின்றது.

வீரசேனன்:—ஆம். யானும் என்தமையனோடு செல்வேன். எங்களிருவருக்கும் விடை கொடுக்கவேண்டும். தந்தையே!

குணநிதி:—உங்களது வேண்டுகோளைத் தடுப்பதற் கியாதொரு காரணமின்மையின் நீங்கள் போய்ச்சுற்றிப்பார்த்து வரலாம். மழைபெய்து நின்றிருக்கின்றமையால் நீங்கள் வேட்டையாடுவதில் அதிசாக்கிரதையாயிருக்கவேண்டும். மிகுந்த ஞாபகமிருக்கட்டும். மழையால் வருந்தி ஒதுங்கியிருக்கும்பன்றி முதலிய மிருகக்கூட்டங்கள் எல்லாம் இரைதேடி வெளிவருங்காலமானபடியால் நீங்கள் மிகவும் தாமசப்படுவீர்களாயின் யான் சந்தேகப்பட்டு நும்மைத் தேடிவரவேண்டி நேரிடும். ஆதலால் அதிசீக்கிரத்திற் றிரும்புங்கள்.

விக்கிரமவீரசேனர்கள்:—அப்படியே தடையின்றி வேட்டையாடிவருவோம்.

(பாடுதல்.)

இராகம் - பியாகடை. தாளம் - ஆதி.

பல்லவி.

வேட்டை யாடி வருவோம் - நாம்வன
வேட்டை யாடி வருவோம்.

அநுபல்லவி.

காட்டினில் வாழ்   கின்ற
கனவிலங் கினம்   பொன்றி (வேட்டை)

சரணங்கள்.

பார்த்துப் பதுங்கி யெதிர் பாயத் தனது   வலி
யார்த்தெழு சினமடைய் காம முற்றிடும்   புலி (வேட்டை)

பரும்பனைக் கருநிறம் படைத்து   குடாவடி
கருவி மேறுறுந் தன்மை யுள   கரடி (வேட்டை)

வெகு தந்தந் தினது வலியிற் பிளப்ப   தன்றி
உக்ர முடன் மனிதருளங்கலங்கச்செய் பன்றி (வேட்டை)

நாங்கள் விடைபெற்றுக் கொள்ளுகின்றோம். (போதல்.)

குணநிதி:—நமக்கு நன்மையுண்டாகுக!—(ஆகாயத்தைச் சுற்றித்திரும்பிப்பார்த்து) நாம் சச்சந்தமகாராஜாவால் அநியாயமாக நாட்டைத் துறந்து இவ்விடம் வரும்படி நேரிட்டகாலமுதல் இன்றைத் தினத்தைப்போலும் மனக்களிப்பைத்தரும் நாள் ஒன்றையாயினுங் கண்டோமில்லை! ஆ! ஆ! நமது பலவகைச் சிறப்பமைந்த நகரத்தை விட்டு, மலைகளடர்ந்த இக்காட்டில் தனியே குகையில், குருவிக்கூண்டிற் சஞ்சரிப்பதுபோற் சஞ்சரித்துக்கொண்டு, அறுசுவைப் பதார்த்தங்களோடுண்டு, திவ்யமான வஸ்திரங்களைத்தரித்து, செம்பஞ்சணையிற் றுயின்றநாம், ஐவன அரிசியையும், தினைமாவையும் புசித்து, சுனைநீரைக்குடித்து, வேடரைப்போற் பரண்மேற்றுயில்கின்றோமே, என்று எண்ணி எண்ணி விதியை நொந்து வருந்தியிருந்தது அறிவின்மையென்று இன்றன்றோ கண்டறிந்தேன். இனி இவ்வெண்ணங்கள் எல்லாம் என்னைவிட்டகலு மென்பதற்கையமுமுண்டோ! என்மனம் எப்படி இம்மலைகளால் வசீகரிக்கப்பட்டது! ஆ! ஆ! யான் இதுவரையிலும், உயர்ந்த துயர்ந்ததென்றெண்ணியிருந்தேனே, அப்பேர்ப்பட்ட நகரத்தில் வசிக்கும்போதும் இன்று அடைந்ததுபோலும் மனக்களிப்பை என்றாவது அடைந்ததுண்டா! இங்கு நுகருந் தேனும், தினைமாவும் சுனைநீரும், பாயசம் பச்சடியோடருந்து முணவினும் எத்தனை மடங்குமேலானதென் றறிந்தேன்!—நான்குபக்கங்களிலும் உன்னதமான மலைகள்பொருந்த அவையிற்றின் இடைவெளியில் சூரியன் பிரகாசிப்பதும், நமது குகைக்கு எதிரில் இருக்கும் பள்ளத்தாக்கில் தேங்கிநின்ற ஜலத்தில் தோன்றும் அவனது பிரதிபிம்பமும் என்ன மனப்பூரிப்பையுண்டாக்குகின்றது! ஆகாயம் யாதொரு மாசுமில்லாமற்றோன்ற, கருநிறங்கொண்ட மலைகளிற்பொருந்திய மரங்களெல்லாம் மழையாற் குளிர்ந்து ஒரேபச்சையாய் நீர்த்துளிகளைத் துளித்து, வரிசைவரிசையாய் அடர்ந்த கொடிகளோடிணைய, சூரியனிவற்றின்மேற் றுலங்குவதும், தாழ்வாரங்களெல்லாம் சிறுசெடிகள் நெருங்கியிருப்பதும் காணத்தக்கதே!—சுனைகளினின்று நீர் பெருகுவதாலாகிய வோசையினது எதிரொலி இடியோசையினும் பதின்மடங்கதிகமே! மலையினின்றும் மாலைபோ லிழிந்துவருமிக்கானியாற்றில், பாறைகள் மேற்பட்டு நுரையெழுச்சிதறித்துளித்துவரும் ஜலப்பெருக்கும் சிறிது காலத்திற்குறைந்து, கணைக்கால் அளவாகவோடி, வெண்மையாகிய பெருமணற் சிறுகுவைகளைத்தோற்றுவித்து, சிறுகூழாங் கற்களையுருட்டிச்செல்வதும், இருமருங்கும் வெளிநிலங்களின்

நிமிர்ந்தஜலம், அவ்யாற்றின் கரைகளைச் செயகால்வாய்களாக்கியிருப்பதும் எவ்வளவுமனத்தைப் பரவசப்படுத்துகின்றது! மழையைக் கண்டு மகிழ்ந்த மயில்கள் இன்று ஒடுங்கி ஒருபுறமாய்ச் செல்வதும் கிளிகள்பறந்துலாவுவதும் வெகுவிநோதமே! இலைகள் தளிர்த்த கிளைகளடர்ந்தநெருங்கு வேங்கை சந்தன அகில் மரங்கள் திவ்யபரிமளத்தை விரப்புவதும், அவைகளே நமக்குற்ற துணையெனக்கொண்டு மிகவுல்லாசமாக மந்திகள் கடுவன்களோடு ஆடிக்கூடி உலாசலாடுவதும் என்கண்ணைப் பறிக்கின்றது! உலகில் உயிர்கள் பெற்றவர்களை விடத் தம்மை வளர்ப்பவர்களிடத்திலும் தாமுறையுமிடத்திலும் இயற்கையாய் அன்புபாராட்டுவதும் வழக்கமோ? ஆம். இஃதென்னை? நாமே அதற்கிலக்கியமாயிருக்க, இக்குரங்குகள் தாமுறையுமரங்களைத் தமது தந்தை தாய்போலுங் கருதிமேலேறித் தழுவிக்குதித்து விளையாடுவதை யறிந்தேனில்லை! நாம் ஒருபிரபுவாயிருந்தும், சச்சந்தன் எனக்குத் தீங்கிழைத்ததற்கவனை யென்னைப் போலுந் துக்கமநுபவிக்கும்படி, அவனது ஆண்மக்களிருவரையுங் கொன்றுவர, அவர்களும் என்னைத்தந்தையென்றே கருதி என்னிடம் அன்புபாராட்டவில்லையோ! இஃது உலகியல்பே போலும்! நாழிகையுமாய்விட்டது. தினைப்புனத்தைப்பார்த்துத் திரும்புவதற்குச் சென்ற ராஜகுமாரர்களும் வந்துவிடுவார்கள்! இன்று மிருதியும் மனக்களிப்போடிருப்பதன்றி வலதுதோளும் அடிப்பதனால் ஏதோ நன்மையடைய ஏது உண்டெனத்தோன்றுகிறது! ஆனால் எனது சிற்றறிவிற்கு ஒன்றும் புலப்படவில்லையே! ஈசுரசங்கற்பம் எவ்வண்ணமோ? அறிவோம்.

(போதல்.)

நான்காங்களம்.

இடம்:—திருவக்கரைக்குச்செல்லும்வழி. காலம்:—முற்பகல்.

நடர்:—சுதனன், சரசாங்கி.

[சரசாங்கி ஆண்வேடம் பூண்டுவருதல்.]

சரசாங்கி:—சுகுணரே! சற்றுநில்லும்! ஐயோ! இதென்ன என்வலக்கண் அடிக்கின்றது! வயிறெரிகின்றது! என்மெய்யுமனமும் நடுங்குகின்றனவே! இவையெல்லாம் துர்க்குறிகளே! இவையென்ன தீமையை விளைக்குமோ? தெய்வமே! என்பிராணநாதருக்கு யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் காவாயோ! ஐயோ!—

சுதனன்:—ஒன்றும் அவருக்கில்லை. அம்மணி!

சரசாங்கி:—சுகுணரே! இன்னும் திருவக்கரையையடையவில்லையோ? இன்னும் எத்தனை நாழிகைப்பொழுதிற் சென்றுசேரலாம்? மிகச்சமீப

மென்றீரே! சுகுணரே! என்ன உமதுகண்கள் நீருகுக்கின்றனவே! பெருமூச்சுவிடுகின்றீரே! உமது நாநீரின்றித் தழுதழுக்கின்றதே! பேசும்படி நினைத்தும் பேசமுடியவில்லையே! முகம் வெளுத்திருக்கின்றீரே! என்வேண்டுகோளுக் கிரங்கி யுண்மை யுரையீரோ? ஐயா! சுகுணரே!

சுதனன்:—ஈதோ ஒருகடிதம்! விஷயத்தைச் சொல்லவும் நாவெழவில்லையே! (கடிதங்கொடுக்கின்றான்.)

சரசாங்கி:—இதென்ன எனது பிராணநாதர் கையெழுத்திருக்கின்றதே!— (கடிதம் வாசித்துத் திகைத்து நிற்கின்றாள்.)

சுதனன்:—(தனக்குள்) ஐயோ! இக்கடிதங்கண்டதும் பாதியுயிரிழந்தனளே! இன்னும் வாளால் வீசிக்கொல்வதோ?—யான் ஜானகியைக் காட்டில் விடும்படிசென்ற இலக்குவனே யாயினேனே!

சரசாங்கி:—யாரோ கற்பித்தவதினவர்? ஈசா! நீயறிவாய்! பெண்ணாய்ப்பிறந்தவர்களில் யான்படும் பெருந்துயர மநுபவிப்பவர் சுளருமுளரோ?—

சுதனன்:—ஐயோ!—

சரசாங்கி:— (பாடுதல்.)

"கைகேசி மனந்திரியக் கற்பித்த கூனியைப்போன்
மையார்கண் மடவாரோ மைந்தரோ மண்ணுலகி
லையாவென் காதலனை யாரோவிக் காரியத்தைச்
செய்வாயென் றிப்பொழுது சிந்தையுறக் கற்பித்தார்."

சுதனன்:—அம்மா! இவையெல்லாம் ஊழ்வலி!—

சரசாங்கி:—ஐயா! சுகுணரே! நீரென்னசெய்வீர்!—என்னை உலகமெல்லாம் வெறுத்திருப்பதன்றி என்னைக் கைப்பிடித்த கணவனும் வெறுக்கவும் விதிநேர்ந்தது! நீர் இனிச்சற்றுந்தாமதியாது தமது எஜமானர் கட்டளையை நிறைவேற்றும்படி தமது வாளைக் கையிலெடும்! யானும் அவரெண்ணப்படி நடக்கவேண்டியதுதான்! யானுந் தலைகுனிந்தேன்! இனித்தாமதிக்கவொண்ணாது! சுகுணரே! எடும் ஐயா உமதுவாளை! என்வேண்டுகோளுக் கிரங்கினீராயின் உமக்குக் கோடிபுண்ணியமுண்டு.

சுதனன்:—அம்மணீ! தம்மையோ, என்வாளாற் கொல்வது? பதினாங்கு லோகமும் அச்செய்கையால் வருமெனினும் அத்தொழில்புரிய மனவொற்றுமைப்படேன்!

சாரசாங்கி:—சுகுணரே! யான் அவரென்னைப்படி நடக்கச் சித்தமாயிருப்பினும் தற்கொலைபுரிய மனமொழிவில்லை; உமது நண்பர் விருப்பத்தைநிறைவேற்றவும், எனதுவேண்டுகோளுக்கிரக்குந் தன்மையைக் காட்டும்படியாகவும் உமதுவாளை எடும்! யானே கேட்டுக் கொள்ளுகின்றேனே! உமக்குக்கெடுதி யிதனாலொன்றும்வாராது!—

சுகுணன்:—அம்மா! நீங்கள் பதினாயிரமுறைசொன்னபோதிலும் யானதற்குடன்படவே மாட்டேன்! பின் ஏன் தங்களை இவ்விடத்திற்கழைத்துவந்தேனென்று கேட்பீர்களாயின், என் நண்பர், தாங்கள் அரண்மனையிலில்லாதிருப்பதைக் கேட்டனராகில், யான் அவர்கட்டளையைநிறைவேற்றினேனென்று நினைக்கும்படியாகவும் ஒருகாலத்தில் தாம் தெய்வச்செய்கையைக்குறித்து அவர் வருந்தும்போது அவரிடந்தங்களை யொப்புவிக்கும் பொருட்டும் செய்தனேனேயன்றி வேறன்று.

சாரசாங்கி:—சுகுணரே! இந்த அற்பவிஷயத்திற்காகவா பொய்கூறவேண்டும்? அரிச்சந்திரன் ஒருபொய்க்கு அஞ்சித்தனது மனைவியை விற்றதன்றி அவளையும் கொல்லும்படி துணியவில்லையோ? யானிருந்தென்ன? இறந்தென்ன? இந்தத்தேசம் யாருக்குரியதோ அவரேவெறுக்கும்போது நீர்ஏன் என்னுத்பொய் கூறவேண்டும்? தாமதப்படாமல் என்னை நுமதுவாளுக்கிரையாக்கிவிடும்! சத்தியத்தைபுரியும்! ஐயா! உம்மைவணங்கிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்!

சுகுணன்:—அம்மா! இது பொய்யாகாது.

“பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்” என்று

தமிழ்வேதம் முறையிடுகின்றது! பொய்கூறினும் மெய்யேயாம்!

சாரசாங்கி:—ஐயா! நீர்யான்கூறுத்தவற்றும் இரக்கமடையாது எனக்குத்தீங்கிழைக்கின்றீர்!

சுகுணன்:—ஐயோ! யானிருதலைக்கொள்ளியிடத் தெறும்பைப்போல் அகப்பட்டுக் கொண்டேனே! ஈசா! அம்மணீ! துங்காதலர் தமது புத்தியின்மையைக்குறித்து, ஒருகாலத்து தம்மை நினைத்து வருந்தியிறக்கவேண்டிவரும்! அப்பொழுது என்னையவரே சோதிக்கவும் நேரிடும்! எனவற்குத் தாமிறந்தும் துன்பங் கொடாமலிருப்பது சதபுடையமாதர்கடனாதலின் யான்கூறுவதைச்சிறிது செவிசாய்த்துக்கேட்க வேண்டும்!

சாரசாங்கி:—என்ன சொல்கின்றீர்?

சுகுணன்:—அவர் தம்மை அதிசீக்கிரத்திலேயே தேடிவருவதற்கேயிருக்கின்றது! அது கரதலாமலகம்போல் என்னறிவிற்குத் தோன்று

கின்றதாதலின் தாம் இங்கு என்மாளிகையில் அவராக்காணும் வரையில் இருந்தருளவேண்டு மென்பதே! இங்கு இருக்குந்தோழியர் சிலதியர் யாவரும் தம்மீது மிகுதியும் அன்புபாராட்டுவார்கள். (அவள்முகநு சுளித்தலைநோக்கி) அம்மணீ! சீதை வான்மீகராச்சிரமத்திலிருக்க வில்லையோ!

சாரசாங்கி:—ஐயா! நீர்கூறுவ துண்மையே! அவள் கணவன் கட்டளைப்படிநடந்தாள்! யான் நடப்பதற்குக் கொடுத்துவைக்கவில்லை! நீர் மனமிரங்கேவென்றீரே! யான் என்செய்வது! யாண்டிங்கிருத்தல் கூடாது! உமது பெருமைக்குக் குறைவுநேரிடும்.

சுகுணன்:—தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தல்போலி என் யோசனைகள் வீணாயின. இனித்தங்களைத் தமதரண்மனையிற் சேர்த்துவிடுகின்றேன்.—திரும்பிப் போவோமா? அம்மா!

சாரசாங்கி:—ஐயா! சுகுணரே! இனி அங்குச்செல்வேனோ? யானோ செல்வது?

(பாடுதல்.)

“தக்ககண வன்சிறத் தன்னைக்கை விட்டகன்ற
புக்ககத்தார் கைவிடுவர் பிறந்தகத்தார் போற்றார்க
ளக்கணமே பழியிடுவ ரன்னியர்க ளருவினையேன்
மிக்கொரிடங் காண்கிலேன் விதியேயோ விதியேயோ.”

சுகுணன்:—அம்மணீ! என்மதியீனத்தால் இவ்வளவுந் தீங்கிழைத்தேன்! என்செய்வேன்? என்செய்வேன்? தங்களிஷ்டத்தையாவது தெரிவியுங்கள்!

சாரசாங்கி:—நீர் என்னிஷ்டப்படி என்னுடலினின்றும் உயிரைப் பிரித்திராயின் நீர் எனக்குத் தீங்கிழைத்தவராகமாட்டீர்!

சுகுணன்:—அம்மணீ! நீங்கள்சொல்வது என் செவியில் நாராசத்தைக் காய்ச்சி நுழைத்தது போலிருக்கின்றது! யானென்செய்வேன்? ஐயோ! விதியே!

சாரசாங்கி:—சுகுணரே! நீரேன்வருத்தப்படுகின்றீர்! தஞ்சைக்குச் செல்லும் வழியைக் காட்டினீராயின் யான் சென்று என்மணவாளனைக் கண்டு அவர்கையாலிறக்கவோ அன்றியணைக்கவோ!—எதுவாயினுஞ்சரி—யான்போகவேண்டியதே!

சுகுணன்:—அம்மணீ! அதுகாட்டுவழியாயிற்றே! மிருகக்கூட்டங்களும் வேடர்குழாமும் நெருங்கி இம்சைபுரியுமே! ஆதலின்யான் நும்முடன் துணையாய்வருகின்றேனே!

சாரசாங்கி:—ஐயா! வேண்டுவதில்லை.

(பாடுதல்.)

"உலகுக்கு நாயகனு யோராழி தனைநடத்தி
மலையொக்கும் தங்கள்திருவின் மகிழ்குடைக்கீழ் வாழ்ந்தநானவ்
நிலைகெட்டு நேரிழையை நெடுங்கானத் திடைவிட்டு
மலையொத்த வினைப்பயனால் மண்டையனாய் வருந்தினனே."

நீர் என்னுடன்வரின் நமதுபேருக்கொரு பெருங்குறைவுண்டாகும்! அன்றி என்றந்தைமுதலியோர் அயிர்ப்பார்கள்! ஆதலின் நீர் சீக்கிரம் போகவேண்டுவதுதான்!

சுகுணன்:—அம்மணி! இனியென் செய்வது?

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்." என்பது

போலாயிற்று! ஆயினும் இவ்வழியாகச் சென்றால் இரண்டுநாழிகைதூரத்தில் ஒருமலையிருக்கின்றது. அதற்குத்தென்புறமாகத் திரும்பிப் போகவேண்டும். அப்புறம் பத்துப்பன்னிரண்டு காதமிருக்கின்றது சோழநாடு. பிறகு—

சரசாங்கி:—நீர் காஞ்சிநகரை யடையவேண்டுமே!

சுகுணன்:—ஆம், யான் போகின்றேன்!—அம்மா! இதோ இருக்கின்றதே இந்தமருந்து அமிர்தசஞ்சீவி யென்றுபெயர். இது சாமுத்ரிய எந்த வியாதியையும் போக்கவல்லது! தாங்கள்வைத்துக் கொள்ள வேண்டும்.

சரசாங்கி:—அப்படியே!—போய்வருகின்றீரா?

சுகுணன்:—அம்மணி! நம்மை இங்குத்தனியே விட்டுப்போக மனம்வர வில்லையே! ஐயோ! ஈசா! என்விதியிப்படி யாயிற்றே?

(சுகுணன்போகின்றான்.)

சரசாங்கி:— (பாடுதல்.)

"எதமுறு பழியூட்டி யிப்பிறப்பி லெனையொழிய
மாதனையென் மனத்தானுந் தொட்டேனென்று வரகுந்து
காதலனை மனங்கலக்கிக் காட்டிலெனை விடுவித்து
வேதனைநோய் செய்வித்த விதியேயோ விதியேயோ."

யான் இனித்தாமதிக்கலாகாது! அவர்கூறியபடி வழிகண்டுசெல்வேன்.

(போதல்.)

ஐந்தாங்களம்.

இடம்:—சச்சந்தன் அரண்மனையில் ஓர் அறை. காலம்:—பிற்பகல்.

நடர்:—சச்சந்தன், கனகாம்புஜம், சிங்காரவல்லி.

சச்சந்தன்:—கனகை! நம்சரசாங்கியை முகுந்தருக்கு மணம்புரிவதாக யோசித்திருந்தோமே! அதை அவளுக்குத்தெரிவித்து மனக்களிப்புடனிருக்கும்படி செய்யவேண்டுமாதலால் நீசென்றழைத்துவா!

(சிங்காரவல்லிபோதல்.)

கனகாம்புஜம்:—சிங்காரவல்லி சென்றனள்!—சீக்கிரம் அழைத்துவருவாள்! மகாராஜா! தூதுவன் எப்பொழுது சென்றனன்?

சச்சந்தன்:—சரசாங்கியைக் கொடுக்க இயலாதென்று கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பி அநேகநாளாய்விட்டனவே!

கனகாம்புஜம்:—நல்லது! சரசாங்கிக்கும் சீக்கிரத்தில் விவாகமுடிக்க வேண்டியதுதான்! அவள் காமநோயுற்றுவருந்துவதாகத் தெரிகிறது! மிகவும் இளைத்திருக்கின்றாள்!

சச்சந்தன்:—அதனாலன்றோ நாம் இம்மணத்தைப்பற்றி யவளிடங்கூறினால் சிறிது தேறியிருப்பாளென்று நினைத்து அழைத்துவரும்படியாகக் கூறினேன்?

கனகாம்புஜம்:—சர்க்கரை என்றால் ருசிதட்டுமோ? ஆசைநோய் நோய்களெல்லாவற்றினுஞ் சிறந்த கொடியநோய்! அந்நோய் இறந்துபடும்படி உள்ளேயே சுட்டெரிக்கும் வெந்தீயாயிருக்கின்றது! அத்தீ உடம்பாகிய விறகுடனே உயிரிழுக்கச் சுட்டுவிடத்தும் யாவற்றினுஞ் சிறந்தபெற்றோரிடமுங் கூறுந்தகையினதன்று! இந்நோய் மணிமந்திர அவிழ்தங்களினால் நீங்குவதில்லை! எந்தப் பொருளால் விளைந்ததோ அந்தப்பொருளாலேயே அந்நோய் நீங்கவேண்டும்! ஆதலின் சரசாங்கிக்கு விருவிரைவில் மணம்நிறைவேற்றுவதாவசியகம்! அப்பாவென்றால் உச்சிகுளிராதாசையினாலே தலையுமுந்து கோதேய்க்க வேண்டும்.

சச்சந்தன்:—கண்மணி! உன்சொல்லைத்தவறி நடப்பேனோ? உன்னிஷ்டப்படியே அதிசீக்கிரத்தில் விவாகமுடித்து விடுவோம்!

(சிங்காரவல்லிவருதல்.)

சிங்காரவல்லி:—அம்மணி! யான் எங்குந்தேடியும் தங்கள் குமாரத்தியைக் காணேமே!

கனகாம்புஜம்:—இந்துவதனை எங்கே?

சிங்காரவல்லி:—இதோவருகின்றாள்! (இந்துவதனைவருதல்.)

கனகாம்புஜம்:—இந்துவதனா! சரசாங்கி எங்கே? உனக்குத்தெரியுமே!

இந்துவதனா:—அம்மணி!—அம்மணி!—

சச்சந்தன்:—இந்துவதனே! என்ன துக்கப்படுகின்றாய்? சொல்சீக்கிரம்!

இந்துவதனா:—மகாராஜா! வைகறைமுதல் எவ்விடத்துந்தேடியும்—காணேமே! யாதொன்றுந் தெரியவில்லையே! ஐயோ!

கனகாம்புஜம்:—என்ன நீலிவேஷம் போடுகின்றாள்!

சச்சந்தன்:—இந்துவதனா! என்பின்வா.

(சச்சந்தனும் இந்துவதனையும்போதல்.)

சிங்காரவல்லி:—அம்மா! மகாராஜா அதிகோபமாய்ப் போகின்றாரே! நீங்கள் சென்று தேறுதல்சொல்லலாகாதோ?

கனகாம்புஜம்:—நான் இதோசெல்வேன். நீ சுகுணன் ஊரிலிருக்கின்றானென்பதைத்தெரிந்துவா.—(சிங்காரவல்லிபோதல்.) எப்படியாயினும் நமதுகாரியம் ஜெயமே! அழகானந்தனை நினைத்தோடிப்போய்விட்டாள் போலிருக்கிறது! சென்றவள் திரும்பிவாராதிருந்தால் மிகவும் நல்லது! ராஜ்ஜியம் நம்வசமாகவேண்டியதொன்றே! கல்யாணத்தைப்பற்றி நமக்கென்ன? ஆடு நனைகிறதென்று ஓநாய்வருந்துமோ! நான் புருஷனோ காமநோயால் அவளைநினைந்து வருந்துவதற்கு? என்காரியம் முடிப்பதற்குத் தம்பிகாரணம்! இனி இவனது தயவுதான் எதற்கு? நம்மெண்ண நிறைவேறியது!

(பாடுதல்.)

இராகம் - அடாணா. தாளம் - ஆதி.

பல்லவி.

எண்ணம் நிறைவேறியதே
யினியான் கொண்ட (எண்)

அநுபல்லவி.

பண்ணும் யோசனை வேறிலை
யினி யான் கொண்ட (எண்)

சரணங்கள்.

இட்டப்படி யென்கைக்குட் பட்டுக்கொண்டான்மன்னனட்டி யேதுமே கிடையா தினியான் கொண்ட (எண்)

மனக்குறை நீங்கிட மயக்கினேன் கோனை
யெனக்கு நிகரெவரோ வினியான் கொண்ட (எண்)

துன்பமெல் லாங்கெடத் தொல்லுலகின் மேம்பட
வின்பமுட னேவாழ்ந்திட வினியான் கொண்ட (எண்)

(முகுந்தன்வருதல்.)

முகுந்தன்:—சரசாங்கி ஓடிப்போய் விட்டாளாமே!

கனகாம்புஜம்:—ஆம். (ஏமவதிவர) ஏமவதி! என்ன?

ஏமவதி:—அம்மா! சரசாங்கியைத்தேடிச் சுகுணர்வந்திருக்கின்றார்! அவர்களை எங்குத்தேடியுங் காணாது இங்குவந்தேன்.

கனகாம்புஜம்:—நீ சென்று இங்கிருக்கின்றானென்று சொல்லி அவனையனுப்பு. (ஏமவதிபோதல்.)

முகுந்தன்:—அக்காள்! அவளெங்கே போயிருப்பாள்?

கனகாம்புஜம்:—சுகுணன் வருவான். அவனைக்கேள்! அவன் சொல்வான்! ஒருவேளை அவனுக்குத் தெரிந்திருக்கும். தம்பி! மகாராஜா கோபமாயிருக்கிறார்! அவரைச் சமாதானப்படுத்தப் போகின்றேன்! நீ இங்கேயேயிரு. (கனகாம்புஜம்போதல்.)

முகுந்தன்:—அழகானந்தனை நினைந்து என்னை மறந்து ஓடிப்போய்விட்டாளோ? என்னை அவள்காற்செருப்பு என்றாளே! அவர்களைப் பின்தொடர்ந்து இருவரையும் குத்திக்கொன்று விடுவேன்! இதோபோகின்றேன்!—(சுகுணன்வர) பயலே! சரசாங்கி எங்கே? உண்மையைச்சொல்! வாளாற் குத்திவிடுவேன்!

சுகுணன்:—ஐயா! எனக்கொன்றுந் தெரியாதே!

முகுந்தன்:—நிசத்தைச் சொல்லுகின்றாயா? இல்லையா? பயலே! குடலைப் பிடுங்கிவிடுவேன்.

சுகுணன்:—இதோ இருக்கிறது ஒருகடிதம்! வேறொன்றும் எனக்குத் தெரியாது!

முகுந்தன்:—(படிக்கின்றான்) திருவக்கரைக்கு வரவில்லையென்று எழுதியிருக்கின்றான்! அழகானந்தன் கையெழுத்தன்றோ இது? திருவக்கரை எங்கிருக்கின்றது? அங்குத்தான் அவள்சென்றாள். நிச்சயம்! என்பின்வா பயலே! (சுகுணனும் முகுந்தனும்போதல்.)

ஆறுங்களம்.

இடம்:—காட்டிற்குகையுங்குகைக்கடுத்தவீடும். காலம்:—மாலை.

நடி:—சரசாங்கி.

சரசாங்கி:—யானோ ஒரு ராஜகுமாரத்தி! யான்பிறந்த சிலவருடங்களில் என் அன்னையிறந்தாள்! பிறவாமுன்னரே தமையன்மாரிருவரையும் பூதந் தூக்கிப் போயிற்றாம்! சிற்றன்னை என்மேற் பிரீதியிலள்! ஆதலின் எனதன்பிற்குரிய தந்தையும் என்னைவெறுத்தார்! எனது புருடருங்கைசந்தார். யாரெனக்குத்துணை? தெய்வமே! திக்கற்ற இக்கானகத்தில், இரண்டுதினமாக ஆகாரமுதலியவுமின்றி பசும்புற்றரையே பஞ்சணையாகத்துயின்று திரிகின்ற எனக்கு நீயன்றோ துணை? உடன்பிறப்பில்லாஉடம்பு பாழென்பதுபோற் கொழுநன் வெறுத்த குலமகளிரும் பாழோ? அந்தோ! யானேஇவற்றிற்கெல்லாம் ஆளாகி வருந்துகின்றேனே! இப்பொழுதுதான் சுருணர் கூறிய அடையாளப்படி மலைச்சாரலையடைந்தேன். இன்னும் வெகுதூரம் நடந்துபோகவேண்டுமே! ஈசா! அருள்செய்வாய்!

(பாடுதல்.)

இராகம் - எதுகுலகாம்போதி. தாளம் - அடதாளசாப்பு.

பல்லவி.

அருள்வாய் பரனே
அபயஞ் சங்கரனே.

அநுபல்லவி.

இருளார் வனந்தனி லேகமாய்ப்போகின்றேன்
ஏதும் வகையறியா திடரினி லாழ்கின்றேன் (அருள்)

சரணங்கள்.

கல்லு முள்ளு கருமென் காலுருவத் தைத்தே
அல்லற்பட முறையோ அன்பென்மேல் வைத்தே (அருள்)
கரடி புலி யானை காட்டில்வாழ் விலங் கினம்
அரற்றி முன் னோடுமே அஞ்சுகின் றதே மனம் (அருள்)
கண்ணாரக் காண்பதெக் காலமென் போதனை
எண்ணம் பலித்தென்று சேர்வெனென் னாதனை (அருள்)

இங்குவேடர்வில்லியரது குடிசையாயினு மொன்றிராதா? கிருபாமூர்த்தி! தினதயாளுவே! ஆனந்தசுந்தரா!

(பாடுதல்.)

இராகம் - செஞ்சுருட்டி. தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

ஆநந்தநந் - தரநடேசா - ஆபத்பாந்தவா (ஆநந்த)
ஞானரூபா - நமச்சிவாயா - நாகபூஷணா (ஆநந்த)
காலகாலா - காமதகனா - கஜசர்மாம்பரா (ஆநந்த)
பக்தவத்ஸலா - பாபநாசா - பார்வதிபாகா (ஆநந்த)
தேஜோமயா - சித்பிரகாசா - சிவசிதம்பரா (ஆநந்த)
கருணாகரா - கமலபாதா - கானவிநோதா (ஆநந்த)
ஜனரக்ஷகா - தேவதேவா - திருவருள்செய்வாய் (ஆநந்த)

இதோவோர் ஒற்றையடிப்பாதையிருக்கின்றதே! இந்நேரம் என்கண்ணுக்குப்புலப்படவில்லையே! இஃது எங்கேயாவதுகொண்டுபோய்விடுமென்பதற்குச் சந்தேகமேயில்லை! அங்குச்சற்றுநேரந்தங்கித் தாகசாந்தி செய்துகொண்டு இளைப்பாறிப் பின்புவழிநடப்போம்! ஒருவேளை இக்காட்டிற் சஞ்சரிப்பவர்கள் கொல்வார்களோ? எப்படியிருப்பினும் நன்றே!—(நடந்து ஒருகுகையினருகிற் போகின்றாள்.) ஐயா! வீட்டில்யார்? வழிதப்பிவந்த வழிப்போக்கனுக்குக் கதவுதிறந்து கொஞ்சம் மோராவது கொடுப்பீரோ? ஐயா! அம்மா! யாருமில்லையோ? பதிலொன்றையுங் காணேமே! கதவைத்தட்டியாவது பார்ப்பேன்.—(கதவைத்தட்டஅதுதானேதிறந்தலினால் உள்ளே போய்விடுகின்றாள்.) (குணநிதிவிக்கிரமன் வீரசேனன்தனித்தனி வெவ்வேறிடங்களினின்றும் வருதல்.)

குணநிதி:—நீங்கள் இன்று வேட்டையாடியதில் காடை கவுதாரியும் அகப்படவில்லைபோலும்!

விக்கிரமன்:—நாங்களிருவரும் ஒருமானைத்துரத்திச் சென்று மிகவுமயர்ந்தோம்! பசிக்களை வருத்த வாரம்பித்தது! ஆதலாற் கண்ணியிற் பட்சிகளையும் படுக்காது திரும்பினோம்.

குணநிதி:—தினையாவதிருக்கின்றதா?

வீரசேனன்:—தினையாய்விட்டதே! மூங்கிலரிசியும் மலைவாழையுமிருக்கின்றன!

குணநிதி:—இன்று காலையான்கொண்டுவந்து வைத்திருக்கின்ற வள்ளிக்கிழங்கும்பலாப்பழமுமிருக்கின்றன! ஆதலால் ஒன்றுங்குறைவில்லை! நீங்கள் மரையாவின்பாலை உலையாகவைத்து அதில் மூங்கிலரிசியைப் பெய்து சிறிதுதேனூற்றிப் பொங்கியிறக்குங்கள்! வள்ளிக்

கிழங்கைச் சுட்டுப் பலாப்பழத்தோடுண்டு இன்றுபொழுதுபோக்குவோம்!

விக்கிரமன்:—இதனோடு குறிஞ்சிப்பழமும் இருக்கின்றதே!

குணநிதி:—ஆம்! மறந்துவிட்டேன்! இதென்ன நமது குகைக்கதவு திறந்திருக்கின்றதே!—(உள்ளேபோய்ப் பார்த்து) இம்மலையிற் றங்கும் கன்னித்தேவதையோ யீது!—நம்மாகாரத்தைப் புசிக்கின்றதே!

வீரசேனன்:—என்ன? என்ன?

குணநிதி:—தேவதைதான்? தேவதைதான்! ஆண்வேடங் கொண்டு வந்தது!

(சரசாங்கி குகையினின்றும் வருதல்.)

சரசாங்கி:—ஐயா! உங்களைப்பார்த்தால் இரக்கமுடையவர்களாகத் தோன்றுகிறது! நீங்களென்னை மன்னித்துக் கிருபைபுரியவேண்டும்! எனக்குயாதொரு தீங்கும்புரியீர்கள்! இங்குக்கதவை வெகுநேரந்தட்டிப்பார்த்தேன். பிறகு பசியால் காதடைத்துக் களைத்திருந்தேனாதலால் ஜலமாவது இருக்கலாமென்று நினைத்து உள்ளேநுழையப் பாலும்பழமும் இருந்தமைகண்டு அதிற்கொஞ்சம் அருந்தினேன்! திருட்டெண்ணத்தோடு வந்தேனல்லேன்! இங்குக் கோடிகோடியாய்க் குவித்த திரவியங்கண்டாலும் அதில் ஒரு காசுந்தொட்டிரேன். இப்பொழுது உங்களைக்கண்டது பெருந்திருப்தியாயிற்று! இதோ பணமிருக்கின்றது. எடுத்துக்கொள்ளுங்கள்! உங்களைப்பார்க்காவிடில் இதற்கு கிரயம் இங்கேயே வைத்துவிட்டு உங்களைப் பிரார்த்தித்துயான் சென்றிருப்பேன்! நல்லவேளையில் வந்தீர்களே?—

குணநிதி:—அப்பா பணமா கொடுக்கப்போகின்றாய்?

விக்கிரமன்:—உன் பணம் யாருக்கு வேண்டும்? பணத்தைக் குப்பையிற் சொரி!

சரசாங்கி:—ஐயா! நீங்கள் கோபமாயிருக்கின்றீர்கள்! எனது குற்றத்திற்கு என்னைக் கொல்லத்துணிந்தீராயினும் பசியாலிறப்பதைவிட உங்கள் கையாலிறப்பது மேலென்று கருதிச் சந்தோஷமடைவேன்!

குணநிதி:—அப்பா! எங்கேபோகின்றாய்?

சரசாங்கி:—ஐயா! தஞ்சைக்கு?

குணநிதி:—உன்பெயரென்ன? ஏனங்குப்போகவேண்டும்?

சரசாங்கி:—என்பெயர் சுந்தரன்! எனதன்பரொருவரைத் தேடிச்சென்ற நான்வழிதப்பி இங்குவந்து சேர்ந்தேன்!

குணநிதி:—அப்பா! நீ நாங்கள் இம்மலைச்சாரலிலிருப்பதனால் வெவ்வேறுவிதமாக நினைக்கின்றாய்! நீ பயப்படவேண்டியதில்லை? இப்பொழுது அந்திப்பொழுதாயிற்று! நீசொல்லாதபோதிலும் நின்முகம் நீ மிகவும் நடந்து வாடிக்களைத்திருப்பதாய்க் கூறுகின்றது! ஆதலால் நீ இங்குத் தங்கிப் பின் போகலாம்.

விக்கிரமன்:—தம்பி! சொல்வதைக்கேள்!

வீரசேனன்:—நீ இங்கேயே எங்களுக்குவிருந்தினனாய் இரு! நீபயப்படவேண்டியதில்லை! என்தம்பியைப்போலவே உன்னைநினைத்தேன்! நீ என்னருமைத்தோழனானாய்!

சரசாங்கி:—உங்களுக்கு மிகவும் வருத்தத்தைக்கொடுத்தேன்.—

(மூவருந்தனித்துப்பேசுகின்றார்கள்.)

(தனக்குள்) இவர்கள் உடன்பிறப்புப்போல் என்னிடம் பட்சமாயிருக்கின்றார்களே! ஒருவேளை எனது தமையன்மார்களோ? அவர்களேயானால் என்னைப்போல் பாக்கியசாலி இவ்வுலகத்திலுண்டோ!

குணநிதி:—இவன் பெருங்குடியிற் பிறந்தவனெனத் தோன்றுகின்றது! (உற்றுப்பார்த்து) முகம் வருத்தக் குறியைக்காட்டுகின்றது!

இருவரும்:—ஆம்! ஆம்!!

குணநிதி:—இதையும் செவிசாய்த்துக்கேளுங்கள்!

(இரகசியமாய்மூவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

சரசாங்கி:—இவர்கள் பெரியமனுஷர்கள். இவர்களை நம்பலாம். இங்கு இன்று வரும்போது வாயசம்வலமாயிற்று! ஏதோ நன்மையுண்டென்று நினைத்தேன்! நல்லவேளையாய் ஆண்வேடந் தரித்துவந்தோமே! நல்லது? இவர்களே அண்ணன்மாரென நினைத்து இரண்டுமூன்றுநாள் இங்கிருப்பேன்!

குணநிதி:—அதேசரி! நாம்போஜனஞ் செய்யச் செல்வோம். அப்பா! (சரசாங்கியைப்பார்த்து) நீயும்வா! நாழிகையாகின்றது.

இருவரும்:—இதோவருகின்றோம்!

சரசாங்கி:—யானும்வருகின்றேன்! (யாவரும்போதல்.)

ஏழாங்களம்.

இடம்:—தஞ்சையிலொருபிரமதவனம். காலம்:—மாலை.

நடன்:—சந்திரசேகரன்.

சந்திரசேகரன்:—துன்மதி கூறிய தோகையை மனத்தே
யின்புற் றிருப்ப தென்றுகொல்? அறியேன்!
மதியோ விரிவியின் வருத்தும். அன்றியென்
மதியைக் கலக்கி மத்துறு தயிரிற்
சிதறுறச் செய்தனன் மதனனுங் கொடியன்!
இத்தரை தன்னில் நித்திரை யில்லேன்.
எள்ளின் நாசியாள் வள்ளைச் செவியாள்
கோங்கத் தனத்தாள் மூங்கிற் றோளாள்
இந்துவைப் பழித்த சுந்தர முகத்தாள்
சந்தங் குலவு மந்தார சந்தாள்
சங்க மென்னு மங்கல மிடற்றாள்
சலசலோ சனத்தாள் சரசாங்கி யென்றனன்.
பலவிதத் தவளைப் பற்றிய தென்னுளம்.
அவளை நினைத்தலி லமர்ந்ததென் மனமும்.
அவள்பெய ருரைத்தலி லமர்ந்ததென் நாவும்.
மாலையும் வந்தது; வருத்தமு மிகுந்தது;
சோலைக் குயிலும் சாலக் கூவுமே!
என்றவ ளுடனே நன்று குலாவி
இன்பந் தழைக்கத் துன்பொழிந் திருப்பது?
வெய்யிலி லுருகும் வெண்ணெய்ப் பாவைபோற்
பைய வுருகிப் பதைப்பேன். அந்தோ!—
காமக் கோடைக் கனலின்வருந் தாது

"கொங்கையிள நீராற் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பாற்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தின்—மங்கைநல்லாள்
கொய்தாம வாசக் குழல்நிழற்கீ ழாறேனோ
வெய்தாமக் காம வெயில்."—

சென்ற தூதனோ இன்னும்வந் திலனே.
இன்று வருவான். எனைய வராமேனாற்
சொன்று விடுவேன். தென்றல் விசிடத்
தியங்குகின் றேன்மனம். ஐயோ!—

(உருவெளித்தோற்றங்கண்டு) இதுவென்!
கோங்கத் தாமரை குவளைசெங் குமுதம்
வீங்கு குமிழ வீயொடு மலர்ந்த
வல்லிக் கொடியொன் றெல்கி யொல்கி
அந்தி மாலையின் வந்தென் முன்னர்த்
தோன்றிக் கண்களைத் தூயமென் மனத்தைக்
கொள்ளைகொண் டென்னை யேளி நிற்கின்ற
அதிசய மென்னை! விதிவச மிதுவோ!
இத்தனை யழகுகொ ளுத்தமி தன்னையான்
எத்திசை தன்னிலும் என்றுங் கண்டிலேன்!
கண்பவன் றுன்மதி நவின்றபெண் ணணங்கின்
வண்மையா வும் வாய்த்திருக் கின்றனள்!—
(உருவெளித்தோற்றத்தை முன்னிலைப்படுத்தி)
சரசாங் கிப்பெயர்த் தனியியல் நீயோ?
அருகின் வந்தெனக் கருள்வாய் பெண்ணே.
கண்ணே! யுயிரே! கற்பகக் கொடியே!
வண்ணக் கிளியே! வயங்குமுத் தாரமே!
ஆருயிர் மருந்தே! அமுதசஞ் சீவியே!
சிறுமை யொன்றென் செவிக்கமு தென்ன
வாய்திறந் துரைத்தல் வாய்க்குமோ? வழுத்தாய்.
சித்தசன் கொண்டெழு நிகழிரு குவளைசீ
வைத்திருந் தென்னை வருத்துமின் றுப்பிக.
அளிகுமங் இருப்பீர்! அளியென்ப தறிகிலீர்!
கொடியரே! எனக்குக் கொடுமைசெய் கின்றீர்!
இறந்து படுவேன் எத்திழை யீரே!
மறந்துந் துன்பங் கொடாரே மதியுளார்
கலைமதி யழிக்கக் கலையொன் றுடுத்தீர்!
முலைநேர் முறுவலீர்! முலைச்சாந்து வேண்டும்.
இதழிக் கடுக்கலீர்! இதழமிழ்து வேண்டும்.
பகைத்துக் காமன் பகழியாற் கலைத்தேன்!
கொடாவிடிற் கெடுவேன் கொம்புரு வத்தீர்!
நாண்கொண் டான்மதன் நாணிருங் கொல்லோ?
இரக்கமில் லீரே! இரக்கமில் லீரே!
நம்பிவரு கின்றேன். எம்மைக் கிழிப்பீர்.
(அவ்வுருவருகிற்சென்றதன்பாதங்களின்வீழ்ந்து)

உம்மிடத் தாசையால் உருகுகின் றேன்மின.

(அவ்வுருவம் அருளாமைகண்டு)

பெண்மைக் குணமிலிர்! பெருந்தகை யீரே!

(அவ்வுருவை யணைத்துப்பிடிக்கமுயறல்.)

முத்தமொன் றளித்து முயங்கி டீரே!

(அவ்வுருவம் பரிசப்படாமல்மறைந்ததுகண்டு)

உருவெளித் தோற்றமென் றேர்கிலேன்! அந்தோ!
சிறியேன் ஆயினேன் சித்தசன் றன்னால்.—

மதனே நினதாண் மைவழுத் துவனே
விதமே யறியா தெதிராப் பொருவாய்
வீதையே புரிவாய் வனமே புகுவாய்
கதமே தெரிவாய் கருதா யெதுவும்.

கன்னிதனை தங் கனத்துருக்கிக் கல்லிலுமே நாருரித்து
மன்மதனின் மலரம்பான் மாயன்மகன் யானென்பாய் [று
தன்மமற முறைபிறழ்ந்து தனிநெடும்போர்க் கிழுக்குமொ
துன்மதிரு தன்மகனுய்ச் சூதனையும் வெல்வாயே.

கரும்பணியா லென்றென்று முடலவருந்தி
வெய்துயிர்க்குங் கதிர்வெண் டிங்காள்
கரும்பனைய மொழிநல்லா ளிடத்தமையு
நன்பனிறுற் கடிய லுற்றேன்
விரும்பணியார் பரும்பணியை யுறப்பொன்றிற்
குவமைபெற மேவி னுரேன்
றரும்பணியா பரணிவடி சாராதார்ச்
சார்ந்தவர்க ளடைதல் போன்றே.

வெம்புலியா யுயிர்குடித்து மிகவருத்து முனையென்று
மம்புலிமா னென்றவனி யழைத்திடுதன் மங்கலமே
செம்பதனிற் களிம்பெனநின் றேக்மெலாங் களங்கமுற
வம்படிசுத் தவள்போலு நிறத்தினைநினன் றறைவதேனே.

மங்கையினன் முகத்தினுக்கே யிளைத்ததனாற்
கறுத்தென்னை வருத்துகின்று
யிங்கதனை யறிந்தனன்யாரின் கூறுமுப
தேசங்கேட் டிணங்கி வாழ்வாய்

பொங்குமு † மழுக் காறுடையா ரெனுங்குறளை
மனத்திருத்திப் பொறுமை நீங்கின்
மங்களமா யென்றுமொரே படியிருந்தி
குறைவடையாய் மதிவெண் டிங்காள்.—

பொழிலுறு சிறுகுயிலே புன்னையி னுண்மலரே
யழகுறு கலைமதியே யணைதுயில் வண்டினமே
பழுதறு கிளிமொழியே பணிசெறி சிறுநுதலே
யெழிலுறு சிற்றிடையே யெனையிடர் செய்தவையே.

இதழ்விரி நறைமலரே யெழிலுறு மென்பிணையே
புதைபடு மளியினமே புருவமென் விற்பிணையே
பனிதயிறு கொடியிடையே பகர்மலை நிகர்தனமே
இதழ்மிளிர் முலைமுகையே யெனையிடர் செய்தவையே.

பணைவளர் பைங்கிளியே பலவகை மலரினமே
யணைவளர் மென்மயிலே யணிபெறு செங்கரமே
கணைமதன் புருவமிலே கதமெறி பொற்பணியே
யிணையுகள் கயல்விழியே யெனையிடர் செய்தவையே.—

(சேவகன் வருதல்.)

சேவகன்:—மகாராஜா அவர்களுக்கு அடியேன் சேவகன்வந்தனம். காஞ்சீபுரத்திற்குச்சென்ற தூதுவர் வந்துசேர்ந்தார்.

சந்திரசேகரன்:—சீக்கிரம் வரச்சொல். தாமதியாதே.

(சேவகன்போதல்; தூதன்வருதல்.)

தூதன்:— மங்கலம் மங்கலம் மங்கல முனக்கே
செங்கதி ரோன்குலஞ் செழிக்க வந்தோய்!
மங்கலம் மங்கலம் மங்கல முனக்கே.

சந்திரசேகரன்:—இன்று வந்தனை, நன்று! பிழைத்தாய்!
காரிய மென்ன காயோ பழமோ?
விரைவிற் கூறுதி. வீணே நின்று
தாமதஞ் செய்தேன் எமுறு கின்றாய்.

தூதன்:— அடைந்தவர்க் கபய மளிக்குமெம் மிறைவ!
கடிதம் ஈதோ! காவல்! காணுய.

(தூதன்கடிதங்கொடுக்கச் சந்திரசேகரன் வாசித்தல்.)

---

† திருக்குறள்—165.

சந்திரசேகரன்:—காஞ்சி மன்னனே கருத்தழிந் திவ்விதம்
மாதை வஞ்சனையிற் றரேனென மயங்கி
ஈதெழு தியவன்? எழுதின னேவன்?
என்னே! அவன்மதி தன்னையு மறந்து
விதிவழித் தன்சிர மிகமறந் தனனே!
பேதை யறிவிலி! பித்தனே யின்றும்!
இனியென் றாமதம்? இனியென் றாமதம்?
ஏதுநி னிற்பது? தூதுவ! செல்லாய்.—

(தூதன் போதல்.)

அச்ச மாகுந் தொண்டை நாட்டினை
நால்வகைப் படையொடு நாற்புற முமணைஇ
மன்னனை மாய்த்துப் பொன்னினைக் கவர்ந்தபி
னன்பும் ஆர வருமனை யியற்றி
மங்கையொ டின்புறீஇ மகிழ்ந்துவீற் றிருத்தலே
காரிய மன்றி வீரிய மென்றே!

(போதல்.)

மூன்றாமங்கம் முற்றிற்று.

111959

அங்கம்-IV.

முதற்களம்.

இடம்:—குகையுங் குகைக்கடுத்த விடமும். காலம்:—காலை.

நடன்:—முகுந்தன்.

முகுந்தன்:—சுகுணன் அவர்களிருவரும் சந்திக்குமிடமிதுவென்று சொன்னானே! சுகுணன் பொய்சொல்லியிருக்க மாட்டான்! நமக்கு அழகானந்தனுடைய உடுப்புக்களையெல்லாம் கொடுத்தானே! பார்த்தாயா! பணம் எல்லாம் பண்ணுகின்றது! என்னிடம் அவனுக்குப்பயந்தானே! பொய்சொல்லி யிருந்தானானாற் கொன்றுவிடமாட்டேனோ? நான் புறப்பட்டுப் பதினைந்துதினமானாலும் பாதகமில்லை. எப்படியாவது கஷ்டப்பட்டுச் சுகுணன்சொல்லிய அடையாளப்படி வந்து சேர்ந்தேனே! இங்குத்தான் அவர்களிருக்கவேண்டும். அழகானந்தன் இங்குத்தான் ஓடிவந்திருப்பான். ஆமாம். ஆமாம்.—இப்பொழுது அழகானந்தன் தலைபோகப்போகின்றதே! வந்தானானாற் குத்திவிடுவேன்! சரசாங்கிவந்தாளானால்—என்னை அவன்காற்செருப்பு என்று திட்டினளே! இருக்கட்டும். அழகாயிருக்கிறாள்! கொல்லமாட்டேன்! நான்கண்ணாடி எடுத்துப்பார்த்தேனே! நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன்! நான் அழகானந்தனைப்போலவே யிருந்தேனே! ஆமாம். ஆமாம். அச்சடித்தாற்போலவே யிருந்தது! ஆனால் மூஞ்சிமாத்திரங் கொஞ்சம் வித்தியாசமாயிருந்தது! அவளைக்கண்டதும் மூஞ்சியைத் திருப்பிக்கொள்வேன்! அவள்கெஞ்சிக் காலில்விழுவாள்! பிறகு அழகானந்தன் காற்செருப்பின் காலில் விழுந்தாயேயென்றுதிட்டி, இங்கேயேமல்லுக்கட்டி மானங்குலைத்து விடுவேன்! இந்தக்காட்டில்யார் பார்க்கப்போகிறார்கள்? பிறகு அவள்மடியைப்பிடித்து ஊருக்கிழுத்துக்கொண்டுபோவேன்! ஒருவேளை ரா[illegible]க்கொண்டால்!—நம்ம அக்காளில்லையோ நமக்கு? [illegible] போலு முடியப்போகிறது! அந்த [illegible] ஒளிந்திருப்பேன்! அவர்கள் வரட்டும்.

(போதல்.)

(குணநிதி, விக்கிரமன், வீரசேனன், சரசா[illegible]கையினின்றும் வருதல்.)

குணநிதி:—(சரசாங்கியைப்பார்த்து) உனக்கு[illegible]ம்பு செவ்வையில்லை! நீஇங்கிரு. நாங்கள்சென்று வேட்டையாடி [illegible]ருகிறோம்.

விக்கிரமன்:—தம்பி! இங்கேஇரு. சுந்தரா! நா[illegible]ர்க எல்லமோ[illegible]

சரசாங்கி:—உலகிற் பிறந்த நாம் சகோதரரே யாவோம். மாறுடர்கள் ஜீவகாருண்யம் பாராட்டிப்பிறரைத் தம்மைப் போன்றவர்களாய் நினைக்க வேண்டியதன்றோ? அண்ணா! எனக்கு என்னவோ தேகம் இன்று அசௌக்கியமாயிருக்கின்றது.

வீரசேனன்:—அண்ணா! நீ வேட்டையாடும் படிசெல். நான் தம்பிக்குக் காவலாயிருப்பேன்.

சரசாங்கி:—ஆண்ணா! நீங்கள் ஏன் இங்கிருக்கவேண்டும்? நீங்கள் வேட்டைக்குப் போகலாமே! எனக்கவ்வளவு மிகுந்தநோ யில்லையே!

வீரசேனன்:—எனக்குப்போக மனம் வரவில்லையே! உன்மீது எனக்கு மிகவும் அன்பதிகரிக்கின்றதே! எனது தந்தைமீதுள்ள நேசத்தையுன் மீதும் பாராட்டுகின்றேனே!

குணநிதி:—என்ன! என்ன!!

விக்கிரமன்:—அப்பா! தம்பிகூறியது தவறோ? யான் இச்சிறுவன் மீது அன்புபாராட்டக் காரணமில்லையாயினும் அவனிடத்து விருப்பம் என்னைத்தெரியாமலே என்னிடத்ததிகரிக்கின்றது! அவனைக் காப்பாற்றுவதில் என்னுயிரைத்துறக்கவும் பின்வாங்குவேனோ?

(விக்கிரமனும் வீரசேனனும் சரசாங்கியும் பேசிக்கொண்டு நிற்றல்.)

குணநிதி:—நல்லது. (தனக்குள்) இப்பேர்ப்பட்ட பிள்ளைகளாலல்லவோ ராஜரீகம் நடத்தப்படவேண்டும்? ஐயோ! தன்னுயிரைப்போல் மன்னுயிரிடத் தன்பு பாராட்டு மிவர்களுக்குத் தீங்கிழைத்தேன்! கோபத்தினாற்பாபஞ் சம்பவிக்குமென்பதை இன்றுதானறிந்தேன்! அரசன் செய்த அநீதிக்கு யான் ஏன் இவர்களைக் கோபவெறியால் ராஜ்ஜியமிழக்கும்படி செய்யவேண்டும்! இவர்கள் எனக்கொரு கெடுதியும் நினைக்காத இளங்குழவிகளாயினரே! இவர்கள் தாம் அரசன்மக்களென் றறியார்கள்! என்னையே தந்தையென்று கருதியிருக்கின்றார்கள்! அறிவின்முதிர்ந்த இம்மேதையர்களல்லரோ மநுநீதி தவறாமற் செங்கோற்செலுத்தத் தகுந்தவர்கள்! என்றால் ராஜ்ஜியம் வீணாய்ப்போகின்றதே! ஏ! மக்காள்! உங்களை யான் விட்டுப்பிரிய மனமில்லாதவனாயினும் நீங்கள் இக்காட்டிற் சஞ்சரிக்கவும் வேறொருவன் நாடாளவும் நான் சம்மதிப்பேனோ! என் செய்வது? விதியின்பயன் இப்படியாயிற்று! இவர்கள் பிறப்பின் வரலாற்றை யான் இப்பொழுது வெளியிடத்தகுமோ? 'விடியற்காலம் கல்யாணம் பிடியடா தாம்பூலம்' என்பதுபோ லன்றோ இருக்கின்றது நம்யோசனை! இப்பதினைந்து வருடகாலமாக வாய் திறவாதிருந்தோமே! அந்தோ! விதியே! அரசிளங்குமரராகிய நீங்கள் என்னாற்றுன்பமநுபவிக்கவேண்டுமோ? ஆ!—

விக்கிரமவீரசேனர்கள்:—தம்பி! போய்வருகின்றோம்.

சரசாங்கி:—அப்படியே! (தனக்குள்) இவர்கள் அன்பேயுருவா யமைந்தவர்கள்! எவ்வளவு பட்சமாயிருக்கின்றார்கள்! என்மீது சுணவருக்குப் பட்சம்பறந்து சென்றது போலும்! மலைவாசிகளெல்லாம் கொடியவர்கள் எனக் கேள்விப்பட்டிருந்தேனே! காதாற்கேட்டு நம்புவது பொய்யென்று தெரிந்தேன்! இன்னமும் சௌக்கியமில்லை! மனோவியாதி அதிகரித்தது! குருவர்கொடுத்த மருந்தினைச் சிறிதருந்துவேன். (மருந்தருந்தல்.)

வீரசேனன்:—நானவனைவிட்டெப்படிப் புறப்படுவேன்! 'தான் துரதிர்ஷ்டசாலி' யென்று தன்னைவெறுத்து நமது நண்பன் என்னிடங்கூறினானே!

விக்கிரமன்:—அப்படியா? ஆயின் நான் காரணங் கேட்டுத் தெரிந்து கொள்வேன்! என்னிடங் கூறுமலிரான்!

குணநிதி:—புறப்படுங்கள்! புறப்படுங்கள்!! புனத்திற்கிளிவந்து தங்கும் வேளையாயிற்று! (சரசாங்கியைப் பார்த்து) தம்பி! நீயுள்ளே சென்று படுத்திரு!

விக்கிரமன்:—நாங்கள் அதிக தாமதஞ்செய்யோம்! அதிசீக்கிரத்திற் றிரும்புவோம்.

குணநிதி:—நீ நோயடையக்கூடாது. அன்னைபோல் எங்கட் கன்னமூட்டுவையே!

சரசாங்கி:—யானெவ்விதமிருப்பினும் உங்களுக்கு அடிசில் அட்டு அமுதமூட்டவேண்டியதே!

குணநிதி:—எங்களுடன் ஒத்ததோழனாய் என்றும் நீங்காது இங்கிருக்க வேண்டும். சுந்தரா! நீ இக்காற்றில் நில்லாது உள்ளேசெல்.—

(சரசாங்கி போதல்.)

இப்பிள்ளை உயர்குடியிற்பிறந்தவனே! அதற்குச்சந்தேகமேயில்லை!

விக்கிரமன்:—கந்தருவருமயங்கப் பாடுவதைப்பார்த்தீரோ!

வீரசேனன்:—நேற்றிவன் சமைத்ததற்குநளபாகமும்வீமபாகமும்ஈடோ?

விக்கிரமன்:—புன்முறுவல்பூத்துப் பெருமூச்செறிவது கோடி பொன் பெறும்! கோடிபொன்பெறும்!! பெண்ணாய்ப் பிறந்திருந்தானேயாயின் மூவருந் தேவரும் யாவரும் ஓரிளநகைக்கு ஒருயுகமாயினுந் தவம்புரிந்து பெறுவார்கள்!

வீரசேனன்:—தடையோ! முகத்திற்றுக்கமும் பொறுமையுமிருப்பதே ஒரு விளக்கமாக விளங்குகின்றது!

குணநிதி:—பிள்ளைகாள்! நாழிகையாயிற்று! தாமதம்வேண்டாம். சீக்கிரம் வாருங்கள்!—(முகுந்தன்வர) யாரிங்குவருவது?

முகுந்தன்:—அருணன் பயல் பொய்சொன்னான்!—ஓடிவந்தார்களே அவர்களைக் காணேமே! களையாயிருக்கின்றதே!

குணநிதி:—ஓடிவந்தவர்களா! நம்மைத்தான் தேடிவந்தாரோ? இவன் ராணிதம்பி முகுந்தன்! இவனைச்சிறுபிராயத்திற் கண்டது!—முகுந்தன்தானிவன்! நாம் இங்கிருப்பது கெடுதி! போவோம்.

வீரசேனன்:—நீங்கள் வேறு யாராவது நம்மைத்தேடி வந்திருப்பதாக நினைக்கின்றீர்கள்! ஆதலால் நீங்கள் இருவருஞ்சென்று சுற்றிப் பார்த்துவாருங்கள். நானிங்கு இருக்கின்றேன்!

(குணநிதியும் விக்கிரமனும் போதல்.)

முகுந்தன்:—குறப்பயலே! எங்குப்போகின்றாய்? ஒளியப் பார்க்கின்றாயா? நில்முன்னே! ஓடாதே!

வீரசேனன்:—நாடிப்பயலே! பயலேயென்று கூறிய பல்லை யுதிர்த்துவிடுவேன்! உயிர் குடித்துவிடுவேன்! பயலே! யாரென்று நினைத்தாய்?

முகுந்தன்:—திருட்டுப்பயலே! என்காலில்விழு!

வீரசேனன்:—மூடப்பயலே! உன்காலில் யாருவிழுவது? உன்னைப்போல் எனக்குக் கைகாலில்லையோ?

முகுந்தன்:—என்னைப்பார்த்தால் தெரியவில்லையா உனக்கு?

வீரசேனன்:—வாலைக்காணேமே! வாலிருந்தால் குரங்கென்றறிவேன்!

முகுந்தன்:—என்னுடுப்பைப்பார்த்துத் தெரிந்துகொள்!

வீரசேனன்:—உன்பாட்டனு தைத்துக்கொடுத்தானுனக்கு? அல்லது நீ தைத்தாயா இது?

முகுந்தன்:—பாட்டனுமில்லை! தையற்காரனுமில்லை!

வீரசேனன்:—உனக்குயாராவது பிச்சை கொடுத்திருப்பார்கள்! முண்டம்? உன்னிடம் போர்புரிவது தகுதியன்று! பிழைத்துப்போ!

முகுந்தன்:—என்பேரைக்கேட்டுப் பயப்படவேண்டாமா!

வீரசேனன்:—உன்பேர் என்ன?

முகுந்தன்:—மடையா! என்பெயர் முகுந்தப்பிரபு!

வீரசேனன்:—அடமடையா! முகுந்தனுவுன்பெயர்? பூதமா? பிசாசா? அதற்குப்பயப்படுவதற்கு!

முகுந்தன்:—பயலே! யான் ராணிதம்பியென்பது தெரியாதா உனக்கு?

வீரசேனன்:—உயர்குலத்துப்பிறந்தும் தகுந்தபுத்தியில்லையே! உனக்கு இரக்கப்படுகின்றேன்யான்!

முகுந்தன்:—எனக்குப் பயப்படமாட்டாய் நீ!

வீரசேனன்:—மூடனுக்குப் பயப்படுவார்களோ? புத்திசாலிகளுக்கன்றோ அஞ்சுதல்வேண்டும்!

முகுந்தன்:—இந்தவாளாற் குத்தி யுன்னைக்கொன்று இங்கிருந்து ஓடிப் போனவர்களையுங் கொல்லப்போகின்றேன் இப்பொழுது!

(இருவரும் சண்டையிட்டுச் செல்லுகின்றார்கள்.)

[குணநிதியும் விக்கிரமனும் வருதல்.]

குணநிதி:—எங்குஞ் சுற்றிப்பார்த்தும் யாரையுங்காணேமே!

விக்கிரமன்:—முகுந்தனல்லன் அவன். அவன் தனியேவர என்னவேதுவிருக்கின்றது? யாரோ அவன் தெரியவில்லை!

குணநிதி:—யானவனைச் சிறுபிராயத்திற்றான் பார்த்ததுண்டு! தடபுடலாய் வார்த்தை சொல்லிவந்ததைப் பார்க்க அவனே என்றெண்ணவேண்டியிருக்கிறது. அவன்தான். தடையில்லை. முகுந்தனே அவன்!

விக்கிரமன்:—இங்குத்தானே அவனின்றிருந்தான் நாம் புறப்படும்பொழுது! நமது தம்பியையுங் காணேமே!

குணநிதி:—தம்பியைப் பற்றிச் சந்தேகப் படுகின்றாயா? வேண்டாம். அவன் தீரனாயினனே! இம்மட்டிமுகுந்தனால் அவனுக்கொரு தீங்குமில்லை. இதோபார்! உனது சகோதரன்வருகின்றான்!

(வீரசேனன் முகுந்தன்தலையைக் கையிற்பிடித்துக்கொண்டுவருதல்.)

வீரசேனன்:—அப்பா! முகுந்தன் மகாமூடன்! இப்படியும் மூடர்கள் இருப்பார்களோ உலகில்? இந்தத்தலையில் மூளையென்பதிருக்கவேயிராது. பாருங்கள்!

குணநிதி:—அப்பா! என்னகாரியஞ்செய்தனை! என்னகாரியஞ்செய்தனை!!

வீரசேனன்:—என்னகாரியஞ்செய்தேன்! அவன்சிரத்தைக்கண்டித்தேன். அவன் வாய்க்குவந்தபடி நம்மைவைது கொல்வேனென்று குரைத்தமையின்கோபமிருந்து அவனை எமபுரத்திற்கனுப்பினேன்!

குணநிதி:—நாமென்னசெய்வது இப்பொழுது?

வீரசேனன்:—அவன் ராணிதம்பியென் றெண்ணுகிறீர்களோ? யாரவனைத்தொடர்ந்துவந்தார்கள்! ஒருவருமேயில்லை! நம்மைக்கண்டுபிடிக்க யாராலாகும்! அவன் நம்மைக் கொல்வேனென்ற படியால் யான் அவனைக்கொன்றேன். வேறென்ன?

துணைநிதி:—அவன்மூடன் என்பது நிஜமேயாயினும் தனியே ஆவேசங் கொண்டு ஓடிவந்திருப்பானென்பது சந்தேகமே! ஆதலால் யாராவது அவனுக்குத் துணைவந்திருக்கலாம்!

விக்கிரமன்:—என்ன நீங்கள் இப்படி அதை நினைத்து நினைத்து யோசித்துக்கொண்டிருக்கிறீர்களே! தம்பி நல்லகாரியமே செய்தான்!

துணைநிதி:—நான் இன்று வேட்டைக்குவரேன். நம்மிடம் வந்திருக்கும் சிறுவனுக்குடம்பெப்படி யிருக்கின்றதோ என்று என்மனம் வருந்துகின்றது!

வீரசேனன்:—என்னைவெல்லவும் கொல்லவும் கையேந்தியவனே அவனைக் கொன்றது. யானென்செய்வேன்? இந்தத்தலையை மலைச்சாரலில் ஒருபுறமெறிந்துவிட்டு வந்துசேருகிறேன்.

(வீரசேனன்போதல்.)

துணைநிதி:—அப்பா! நின்தம்பி சிறிதும்யோசியாது இக்காரியஞ் செய்தனன்!

விக்கிரமன்:—என்தம்பிசெய்தது குற்றமோ? யான் அவனைக் சொல்லவில்லையென்றல்லவோ வருத்தமுறுகின்றேன்! ராஜதம்பியாயிருந்தாலென்ன? தாறுமாறுமாய் வார்த்தைபேசியதால் இறந்தான். தருந்ததண்டனை!

துணைநிதி:—இளங்காளை பயமறியுமா? நல்லது! நாம் இன்று வேட்டையாடவேண்டாம்! நாளைக்குப் பார்த்துக்கொள்வோம்! நீ குகைக்குட்சென்று சுந்தரனுக்குதவியாயிருந்து சமையல் செய்வாய். யானிங்கு வீரசேனன் வரும்வரையி லிருந்து அவனை யழைத்து வருகின்றேன். பிறகுபோசனஞ் செய்வோம்.

விக்கிரமன்:—ஐயோ! சுந்தரா! நீபிணியால் வருந்துகின்றாயோ? இம்முகுந்தனைப் போன்றவர்கள் பதினாயிரம்பேரைக் கொல்வதனால் நீ தேகசௌக்கியமடைவையாயின் அதையும் இந்நிமிஷமே செய்து முடிப்பேன்.

(போதல்.)

துணைநிதி:—நீங்கள் அரசத்தன்மை வாய்ந்தவர்களே! வணங்கினோரை யாதரிப்பதும் பிணங்கினோரைக்கொலைபுரிவதும் உங்களிடத்திலேயே யிருக்கின்றன! மித்திரர்களுக் கடைக்கலமா யிருக்கின்றீர்கள்! சத்துருக்களுக்குப் படைக்கலமாயிருக்கின்றீர்கள்! இங்குவந்த சுந்தரச்சிறுவனுக்குயிரைக் கொடுக்கவுந் துணிந்தார்களே! அவனுக்கு என்ன உபசாரஞ் செய்கிறார்கள்! என்ன உபசாரஞ் செய்கிறார்கள்!! கோபத்தைமூட்டிய முகுந்தனைக் கொன்றுவிட்டான் வீரசேனன்! பார்த்தாற் பசு பாய்ந்தாற் புலியாயிருக்கின்றார்கள்!

இவர்களையரசன் தன்மக்களெனக் கண்டனனாகில் அச்சம் புகுந்து ஆனந்தக்கடலிற்குளியானோ?

(வீரசேனன்வருதல்.)

வீரசேனன்:—அண்ணன் எங்கே! முகுந்தன்தலைதாழ்வாரத்தில் ஒளித்தது.

(புள்ளாங்குழலொலி கேட்டல்.)

துணைநிதி:—இஃதென்ன ஒலி? (உற்றுக்கேட்டல்.) புள்ளாங்குழற்சப்தம்! நம்விக்கிரமன் ஊதுகின்றான்! உற்றுக்கேள்!

வீரசேனன்:—குகைக்கா சென்றனன் எனது தமையன்?

துணைநிதி:—இப்பொழுதுதான் சென்றனன்!

வீரசேனன்:—வருத்தமும் துக்கமும் அதிகரித்தவிடத்தன்றோ இதை யொலிக்கவேண்டும்? இப்போதென்னதுன்பம் நேரிட்டிருக்கும்? ஒன்றுமிராதே! ஒருவேளைமுகுந்தன் பின் வந்தவர்கள் நம்மை வளைந்தனரோ?

துணைநிதி:—ஏதோ பார் நின்தமையன் சுந்தரனைத் தோளிற் சுமந்து வருவதை!

(விக்கிரமன் சரசாங்கியைத் தோளிற்சுமந்து வருதல்.)

விக்கிரமன்:—பஞ்சவர்ணக்கிளி பஞ்சரத்தைவிட்டுப்பறந்தகன்றது! இளவயதில் இவ்வண்ணம் உயிர்துறக்கவேண்டுமோ?

வீரசேனன்:—கண்ணே! மருக்கொழுந்தே! நீ இறந்தும் உன் முகம் வாடவில்லையே!

துணைநிதி:—அப்பா! நீங்கள் ஏன் துக்கிக்கின்றீர்கள்? விதியின்படி முடிந்தது!—

" கேள்விக டுறைபோய்
வடிகொள் கண்ணியர் மனங்குழைந் துநங்களென் றிரங்கக்
கொடையுங் கோலமுங் குழகுந்தம் மழகுங்கண் டேத்த
விடையிற் செல்வுழி விளியினும் விளியுமற் றறிநீ." என்று

பெரியோர் சொல்லியிருப்பதற்கொப்ப முடிந்தது.—நீ சென்றபொழுது என்னஸ்திதியி லிருந்தான் சுந்தரன்?

விக்கிரமன்:—நீங்கள் பார்க்கின்ற இளநகையரும்பிய முகத்துடன் சயனித்திருக்கக் கண்டேன்! சந்தடிசெய்யாதருகிற் சென்றேன்! சென்றபோது இறந்திருக்கக்கண்டேன்!

வீரசேனன்:—நித்திரையிலிருக்கின்றானேயன்றி இறந்தான் அல்லன்!

விக்கிரமன்:—ஐயோ! உயிர்துறந்தான்! என்னருமைத் தம்பி! நீ பே.சி

யோகநித்திரையி லமர்ந்தாயெனவெண்ணி, நிதநிதமும் உ.

மலைமல்லிகையாலும் சார்தன்மலராலும் சுனைக்குவளையாலுமருச்
சிப்பேன்! நீயுறையுமிடத்தைத் தினந்தினமும் பிரதட்சிணஞ் செய்
துவருவேன்!

வீரசேனன்:—என்றும் உன்தேகம் அழியாதிவ்வண்ணமேயிருக்க! அக்க
ப்பட்டென் செய்வது? "ஆண்டாண்டுதோறுமழுதுபுரண்டாலு
மாண்டார்வருவரோ?" அண்ணு! இனித்தாமதியாது இங்கோ
ரிடத்திற்கிடத்திப் புஷ்பங்களாலும் தழைகளாலும் மூடிச் செல்
வோம்!

விக்கிரமன்:—எங்குவளர்த்துவது! இடம் பார்!

வீரசேனன்:—இந்தவிடம் மிகத்தகுதியானவிடம்! இதனினுஞ்சிறந்ததிங்
கில்லை! நாமும் ஒரு காலத்து இறக்கவேண்டியதுதானே! தேகம்
நீர்மேலெழுத்தாயிருக்கிறது! உலகமாந்தர்கள் இஃதறியாது ஒரு
வரையொருவர்கொல்வதும், வஞ்சிப்பதும்அறியாமையன்றோ?

குணநிதி:—மயான வைராக்கிய மென்பது இதுதான்! இது ஞான பூமி
போலிருக்கின்றது! அப்பா! மிகவும் மறந்தீர்கள்! முகுந்தன் மூட
னாயிருப்பினும் ராஜகுலத்திலுதித்தவனானபடியால் அவனுடம்பை
யும் ஒருபக்கம் வாயுசமாதிசெய்வோம்!

வீரசேனன்:—நீங்கள் மிகவும் அவனுக்கிரங்குகின்றீர்கள்! எடுத்து வந்
தால் ஒருபக்கம் கிடக்கும்படிசெய்கின்றோம்!

விக்கிரமன்:—இறந்தபிறகு இராஜாவாயிலென்ன? ஏழையாயிலென்ன?
வித்தியாசமென்னவிருக்கின்றது? ஒன்றுமில்லை. இவனருகிலந்த
முண்டத்தைக் காவல்வைத்துச் செல்வோம்! நம் தந்தைதான்
சென்று முகுந்தனைக் கொண்டுவரவேண்டும்! (குணநிதிபோதல்.)

வீரசேனன்:—சர்வேசா! இச்சுந்தரன் உனதிருவடி நீழலடையவும்
இக்காயத்தைக் கழுகுமுதலிய பட்சிகளும் புலி, நரிமுதலிய மிரு
கங்களும் தீங்குபுரியாதிருக்கவுங் கிருபைசெய்யவேண்டும்!—

(பாடுதல்.)

விலையில்லா வெண்முத்தே விளங்குமெழிற் சுந்தரனே.
கலையெல்லாம் பொருந்துகிற்குங் கட்டழகார் பெருமானே
சிலையெல்லா முருகநருந் தீம்பாட் டிசைப்பானே [யோ.
கொலையெல்லா நிகழ்த்துகின்ற கொடுங்கூற்றிற் குடைந்தா

விக்கிரமன்:—

நடுவனெனப் பேர்கொண்டு நட்டாரைப் பிரித்திடுவாய்
படுதொழிலைக் கைக்கொண்ட பாதகனே கொடுங்கூற்றே

படுதொழிலைக் கைக்கொள்ளா வருமைபெறுஞ் சுந்தரனுக்
கிடர்செய்தாய் நன்றோவீ தியம்பிடுவா யியம்பிடுவாய்.

வீரசேனன்:—

பொறுமைமிக வுடையவனே பூவுலகிற் கற்பகமே
பெறலரிய சுந்தரனே பெருநற்கோன் மைந்தனே
தறுகண்ணு னீயிந்தத் தரையிற்ற தகர்த்தன்றே
சிறியேமிற் பிரித்துன்னைத் தென்புலத்தான் கவர்ந்தனனே.

விக்கிரமன்:—

அழகுமிகுந் திருப்பானே யாதரஞ்சேர் மனத்தானே
மொழியமுத வின்சொல்லாய் பொற்பமைந்த திருமுகத்தா
வெழுதரிய வடிவினனே யிங்கிதஞ்சேர் குணத்தானே
மழகளிறே யெங்குற்றாய் மறந்தனையோ வெங்களையே.

(குணநிதி முகுந்தன் முண்டத்தைத் தாங்கிவருதல்.)

வீரசேனன்:—காரியமுடிந்தது! அவனை அப்படிக்கிடத்துங்கள்!

குணநிதி:—சரி, மண்ணாலமைந்தபிண்டம் மண்ணாய்ப்போகின்றது! நாம்
போவோம்!—கண்களினின்றும் மாரிபோல நீர்வடிப்பினும் சென்
றவர்களைக் காணக்கூடுமோ? அஃதில்லை!—

பூங்கா வனத்துப் புகழ்ச்சுந் தரன்மகிழுந்
தீங்கனிசேர் மாவிற் றிகழ்ந்துறூஉம் பொற்குயிலே
பூங்கிளியே வேடன்கைப் பொன்றும் வலையினுட்பட்
டுங்கினிநீ வந்திலையா லென்செய்கேன் மாயமே.

(குணநிதி விக்கிரமன் வீரசேனன் இவர்கள் போதல்.)

சாரசாங்கி:—ஓ! என்னருமைத் தோழர்களே! நீங்கள் வரும்வழிபார்த்து
வரும்வழிபார்த்து வருந்தியிருக்கின்றேனே! நீங்கள் எங்குச்சென்
றீர்களோ! எப்பொழுதுவருவீர்கள்?—இருண்டதிசைப்பொழுதா
யும் வந்தீர்களில்லை!—(கண்ணைத்திறந்து) இஃதென்ன மரங்களும்
புதருமா யிருக்கின்றனவே! ஜில்லென்று குளிர்ந்ததழை என்மீது
பரப்பப்பட்டு மலர்தூவப்பட்டிருக்கின்றதே! ஐயையோ! காட்
டிற்படுத்திருக்கின்றேனே!—என்புத்தி தடுமாறுகின்றதே! என்
னவோ என்கண்ணை மறைக்கின்றதே! இஃதென்னகாரணம்? இங்
குப்புலிமுதலியமிருகங்கள் ஏதாவதுவந்து என்னைக்கொல்லுமே!
ஐயோ யான்ஏன் இங்குவந்தேன்? சுகுணன் கொடுத்த மருந்து
சாப்பிட்டுப்படுத்தவள்தானே! அடா! பாவி! என்னை நயவஞ்சக

மாக முகுந்தனோடு சேர்ந்து கொல்ல எண்ணி இம்மருந்தைக்கொடுத்தாயோ! அவனைச் செருப்படியிற் பொடியென்றே னென்று வெருட்டிச்சென்றானே! பணத்திற் காசைப்பட்டு நடுக்காட்டிற் புத்தி தடுமாறிப் போகும்படி மருந்தை அமிர்த சஞ்சீவி யென்று கொடுத்தாயே! யான் வேண்டி வேண்டிக்கேட்டுக்கொண்டபோது அவன் மனங் குளிர ஒரே வெட்டாய் வெட்டியிருக்கலாமே! பொய்க்கடிதங்காட்டி என்னைமோசஞ்செய்தழைத்துவந்தாயே!— தெய்வமும் உங்களுக்கே சகாயஞ்செய்கின்றதே! என்னை யன்னை போலாதரித்தகுகைவாசிகள் யானிறந்தேனென்று நினைத்து என் மீது மலர்களைச் சொரிந்து அக்கிரதுச் சென்றார்களோ? இந்தக் காட்டில் அவர்கள் இருக்குமிடத்திற்கு எந்தவழிபிடித்துச் செல்வேன். ஐயோ! இந்துவதனே! என்கண்ணே! நீகூறியவார்த்தையையும் தடுத்துவந்தேன்! நீ என்ன துன்பப்பட்டுக்கொண் டிருக்கின்றாயோ? உன்னை எப்பொழுது பார்ப்பேன்?—

(பாடுதல்.)

இக்கும் வழியுந் தெரிகிலேன்! ஐயகோ!
இக்கொடுங் கானத் தெங்குயான் செல்வேன்?
வல்லியங் கண்ட மானென மருண்டேன்!
இல்லந் துறந்தே னெல்லையிற் காண
ஆசைக் கனியே! நேசக் கொழுந்தே!
சுகுணனை நம்பியான் தொடர்ந்துடன் வந்தேன்.
பகழி தைத்த பச்சிள மஞ்ஞைபோல்
இக்காட் டகத்தி லெளியேன் றுயருழந்
தன்றிலம் பெடையென வலறிநை கின்றேன்!
கன்னிகைப் பிடித்துக் கடிந்துய ருழந்தனை!
பெண்ணெனப் பிறந்து பெற்றதென் யானே?
அந்தோ விதியே! அந்தோ விதியே!!
எந்தையைத் துறந்தும் இனியை யுன்னைக்
காணக் கிடைத்திலேன்! கண்ணுண் மணியே!
பூணக் கிடையாப் பொன்னணி யாரமே!
என்னுயிர் நாதா! யானென் செய்வன்!
எனைப்பிறப் பித்தவ னேழை மதியிலி!
காணும் வகையிலே கடிதி லிறப்பேன்!
ஐயோ! நாதவென் னுருயிர்த் துணையே!—

(மௌனம்)

பெண்ணென்ப தோர்ந்திலையே போதும் பெருமானே
யென்னாலிங் குற்ற தறிதியேல் வாராயோ!
வண்ணக் கருங்கானில் வாடி மிகவுருகி
யெண்ணத்தைத் தூதாக வேகவிட்டும் வாராயே.

நின்னையலா லென்சோக நீக்க வலாருளரோ
பின்னைப் பெருங்கானிற் பேய்போற் றிரிவேனோ
தன்னந் தனியாய்த் தவியா யுழல்வேனோ
வென்னொந்து சுறைவோனே யிங்கிருக்க வஞ்சுகின்றேன்.

(மௌனம்)

ஈச்சுரனதுகிருபை யிப்படியிருந்தது! ஒற்றையடிப்பாதையையா வதுகண்டு—(தன்னாயகனுடையைத்தரித்திருந்தமுகுந்தனுடலைக் கண்டு) உயிர்துறந்தீரோ! பிராணநாதா!—(அவன்மேல்விழநினைத் தவன்தவறி வேறு பக்கத்தில் விழுகின்றாள்.)

(வச்சிரவாகுதேவனும் படைவீரனொருவனும் வருதல்.)

படைவீரன்:—ஐயா! நாம்போர்புரியும்போது நமது சேனாசமுத்திரத்தை என்ன வியூகமாகவகுப்பது?

வச்சிரவாகுதேவன்:—சகடவியூகமாக வகுக்கவேண்டும்! நம்மரைவின் எண்ணம் எப்படியிருக்குமோ? (கீழ்நோக்கிப்பார்த்துச்செல்ல) ஆ! இதென்ன தலையற்ற முண்டமொன்றிருக்கின்றதே! அருகில் ஒருசிறுவன் இறந்து கிடக்கின்றானே!

படைவீரன்:—நன்றாய்ப்பாருமையா! உயிருடனிருக்கிறான். இறக்கவில்லை.

வச்சிரவாகுதேவன்:—அவனை எழுப்பு. யாவுந்தெரிந்து கொள்ளலாம். இறந்தவனுக்கிவன்தோழனோ? அல்லதுஉறவினனோ? அன்றிவேலைக்காரனோ? எவ்வண்ணமோ! (படைவீரன் எழுப்பச் சரசாங்கி எழுந்திருக்க அவனைநோக்கி) எந்தவூர்? எங்குப்போகின்றாய்? யாது உன்பெயர்? யாரிங்கு இறந்திருப்பது?—விளக்கமாய்க் கூறுவாய்!

சரசாங்கி:—ஐயா! என்பெயர் சுந்தரன்! என் எசமானாகிய இம்மகாப்பிரபு மலைவாசிகளொருவரால் இறந்தனர்போலும்! பின்தொடர்ந்து வந்தயான் இக்கோலங்கண்டு துக்கத்திலாழ்ந்து சோகித்திருந்தேன்! இவரைப்போலும் அன்புடையவரையும் புண்ணிய புருஷரையும் எங்குக்காணப்போகின்றேன். வீணாக இறந்தனர்! வேறு யாரைத்தேடியவர்க்கூழியஞ்செய்து பிழைப்பேன்! இல்லை! இல்லை!!

வச்சிரவாகுதேவன்:—அப்பா! ஏன் துக்கிக்கின்றாய்? சென்றவர்வரார்! யானவரைவிடப் பதின்மடங்குபட்சத்துடன் நின்னைக்காப்பாற்று

வேள்! எனக்குவேலைக்காரனுயமர்ந்துவிடு! உனக்குநன்மையுண்டு! இனி அவளைமறந்துவிடு! என்னைத் தொடர்ந்துவா!

சரசாங்கி:—ஐயனே! தங்களுத்தரவின்படியே! என்னைக்காப்பாற்றவேண்டும்! பின்னைபோற் காப்பாற்றுவதாக வாக்களிக்கவேண்டும்!

வச்சிரவாகுதேவன்:—அங்ஙனே வாக்களித்தோம். எழுந்திரு! சூரியன் மேற்கடலிற் குளிக்கும் நாழிகையாய் விட்டது! போவோம்! நாம இக்கித் காரியங்கெடும்!

சரசாங்கி:—(தனக்குள்) இவ்விதியும் நேர்ந்ததோ எனக்கு?—

(யாவரும் போதல்.)

இரண்டாங்களம்.

இடம்:--காஞ்சிபரண்மனையத்தாணிமண்டபம். காலம்:-நண்பகல்.

நடர்:—சச்சந்தன், மந்திரி.

சச்சந்தன்:—சேவகா! நீ சென்று கனகாம்புஜத்திற்கு உடம்பெப்படியிருக்கிறதென்று விசாரித்துவா! உயிர்ச்சுற்றின்மேலம்பு விழுந்ததுபோலாயிற்று என்கதி! எனக்கு ஒரேகுழந்தையாயிருந்த சரசாங்கியைத்தான் காணேமே! இவளாவது சுகமாயிருக்கக் கூடாதா? கல்யாணமும் நின்றுவிட்டது! முகுந்தனையுங் காணேமே! சரசாங்கியைக் கொடுக்கமாட்டோமென்றதற்குச் சந்திரசேகரன் படையெடுத்து வரலாமென்றும் முன்னமே கூறினேனே! இந்தத் துக்கத்திலுண்டான மனோவியாதிதான் இவள் நோய். வேறென்ன? என் சுகங்களெல்லாம் வெய்யில் முன்பனிபோலாயின.—

(ஒரு சேவகன் சுகுணனை அழைத்துவருதல்.)

சுகுணா! சரசாங்கி அரண்மனையைவிட்டு வெளியேசென்றது நின்னாலெனநிச்சயமாய்த்தோன்றுகிறது! இரண்டாமுறையாக உன்னை விசாரிக்கின்றேன். என்மனைவி கனகாம்புஜம் நின்பேரிற் குற்றஞ்சாட்டுகின்றனள். யாதுகூறுகின்றனை?—நீ ஏன் கூறுவாய்? சுருக்கென்று கொடுக்கினுற் கொட்டவேண்டும். உன்னைச் சித்திரவதைசெய்து உன்னிடமிருந்து நிஜமறியவேண்டியதன்றிக் கொடுமையிலேயிறகென்றால் நீ எங்கேகொடுக்கப்போகின்றாய்?

சுகுணன்:—மகாராஜப்பிரபு! என்னுயிரை உங்களிடமே ஒப்புவைத்து விட்டேன். நீங்கள் எதுவாயினுஞ் செய்துகொள்ளலாம். தங்கள் குமாரத்தியவர்கள் சென்றவிடமும் இருக்கின்றவிடமும் திரும்பி வருஞ்சமயமும் எனக்குத் தெரியா. யான் அபராதமற்றவனே!

மந்திரி:—மகாராஜா! தமதுகுமாரத்தி சென்ற அன்று இவர் இங்குத்தான் இருந்தார்! ராஜசபைக்கும்வந்திருந்தார்! இவர்இதுகாறும்பொய் பேசியதை யான்கேட்டதில்லை. ஆதலால் இவர் கூறுவதுஉண்மையென்றே தோன்றுகின்றது! பாவம்! இவருக்கொன்றுந் தெரியாது! இவர் நிரபராதிதான்! முகுந்தப்பிரபு தானேவந்து சேருவார்! அவரைப்பற்றிநாம் கவலைப்படவேண்டியதில்லை!

சச்சந்தன்:—ஆயினும் எமக்குச்சந்தேகமிருக்கின்றது! சிறிதுகாலம்பொறுத்துஇவனை மறுபடியும் விசாரிப்போம்! இப்போது மனதுக்கொன்றுஞ்சரியாயில்லை!

மந்திரி:—மகாராஜா! சந்திரசேகரனுடைய சேனாதிபதிநமதுதேசத்தைப் படையுடன்வந்து கைக்கொள்ளும்படியாகத் தஞ்சையைவிட்டுப் புறப்பட்டு விட்டதாகத் தெரிகிறது! அரசனும் பெரும்படையுடன் புறப்பட்டு வருகின்றானும்.

சச்சந்தன்:—எனக்கொன்றுந் தோன்றவில்லையே! (தனக்குள்) பதினுயிரம் மந்திரிகளிருந்தாலும் கனகாம்புஜத்தைப்போலச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த யோசனைசொல்பவர்களுண்டோ!

மந்திரி:—மகாராஜா! நாம் ஆலசியஞ்செய்யாமல் நமதுபடைகளைச் சித்தஞ்செய்யவேண்டும்! சாக்கிரதையா யிருந்தால் என்னபயமிருக்கின்றது?

சச்சந்தன்:—அதைப்பற்றியா யான்கூறுகின்றேன்? சந்திரசேகரனுக்கா யான்பயப்படவேண்டும்? இங்கு நமது கனகாம்புஜத்திற்கு என்னசம்பவிக்குமோவென்று என்மனந்தத்தளிக்கின்றது! சென்ற சேவகன் இன்னும்வரவில்லையே! யானேபோய்ப்பார்ப்பேன்!—நீரும் என்னோடு வாரும், போகும்போது யுத்தத்தில் நாம் நடந்துகொள்ளும் விஷயத்தைப்பற்றிக் கூறுகின்றேன்.

(சச்சந்தனும் மந்திரியும் போதல்.)

சுகுணன்:—அழகானந்தருக்குச் சரசாங்கி இறந்தாளென்று தெரிவித்தது முதல் அவர் யாதொரு உத்தரமும் எழுதவேயில்லை. சரசாங்கி போய்ச் சேர்ந்ததும் தெரியவில்லை. முகுந்தன் என்பொய்வார்த்தைகேட்டுச் சென்றவன் எங்குளனே? ஈதொன்றும் அறியாது திகைக்கின்றேன்! நல்ல எண்ணமுடையவர்கள் எதுபுரியினும் நன்மையாக முடியுமன்றோ?

(போதல்.)

மூன்றாங் களம்.

இடம்:—மலைக்குகைக்கு எதிரிலுள்ள இடம். காலம்:—காலை.

நடர்:—ஞானநிதி, விக்கிரமன், வீரசேனன்.

விக்கிரமன்:—சுந்தரா! சுந்தரா!! நீ சொன்னதையும் மின்னலைப் போல் எம்முன்னர்வந்து சேர்ந்து எங்கட்குச் சிலகாட்சிகள் விருந் தினராயிருந்து வியப்பேற்றை யடைந்தாயே! நின்னைப்போலும் நண்பனை இக்காட்டகத்தெங்குக்காணப்போகின்றோம்? கொண்டு வந்து கூட்டிவைத்த தெய்வம் பிட்டித்திருக்கவொட்டாது பிட்டு விட்டதே! உன்பாடலொன்றைக்கேட்டால், எங்கள் மனதுக்க மும் தேவவருத்தமுமாறிச் சஞ்சீவியுண்ட அமரர்கள்போலப் பேரானந்தமடைவோமே! இப்பொழுது என்னையும் என்தம்பியை யும் துக்கத்துக்காட்படுத்திப் பறந்துசென்றாயே!

வீரசேனன்:—அண்ணா! ஈச்சுரன் கருணை அப்படியிருந்தது? நீ இன்ன மும் துக்கப்படாதே! எனக்கும் துக்க மெழுகின்றது!—சுந்தரா! என்தம்பி! எப்பொழுதடா உன்னைப் பார்க்கப் போகின்றேன்! கண்மணி! என் உயிர்தமே! சஞ்சீவியே!

(பாடுதல்.)

இராகம் - இந்துஸ்தான்காபி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

சுந்தரனோ - என்று காண்பேனம்
சொருமேமனம் - துயர்
மீறுமே தினம் ஓ (சுந்தரனே)

சரணங்கள்.

சந்ததமுநாமொன்று கூடிச்
சமைந்திருந்த வமே - ஐயோ
இந்த வேளை யெந்த நண்பனே
டினிப் பொருந்துவமே - எங்கள்
கனியாரும் தவமே ஓ (சுந்தரனே)

பட்டமாகும் விட்டுத் தனிர்க்கும்
பாடலிற் சிறந்தாய் - உன்
இஷ்டத்தின்படி நட்ட வெங்களை
யிப்படி மறந்தாய் - உயிர்
எப்படித் துறந்தாய் ஓ (சுந்தரனே)

பங்கஜ முகந்தன்னைக் காணப்
பசித்துயர் தீரும் - இனிய
மங்கள குணந்தங்கு மிங்கித
வார்த்தையை யாரும் - செவி
சேர்த்திடச் சாரும் ஓ (சுந்தரனே)

ஞானநிதி:—நீங்கள் தினந்தினம் நிடமென அவனை நினைந்துகொண்டு துக்கப்படுகின்றீர்கள்! வீரசேனா! அண்ணனுக்குப் புத்திகூறிப் பின் நீயேன் வருந்துகின்றனை? அவனைநினைத்தலை மறந்து மேல் ஆகவேண்டிய முக்கியமான விஷயங்களைக்குறித்து யோசிக்கவே ண்டியதை நோக்குவதில்லையே!

(இருவருங் கண்ணீர்த்துடைத்துக்கொண்டு)

விக்கிரமவீரசேனர்கள்:—முக்கியமாகப்பார்க்கவேண்டிய விஷயங்களைக் கூறுங்கள்! இப்பொழுதேசெய்துமுடிக்கின்றோம்!

ஞானநிதி:—பிள்ளைகாள்! இப்பொழுது சோழநாட்டரசன் நம்மரசன்மீது படையெடுத்து வந்திருக்கின்றானே! இதைப்பற்றி நாம் ஆலோ சனை செய்யவேண்டுமே!

விக்கிரமன்:—நமக்கென்ன அதைப்பற்றி? வீண்விஷயங்களை நாமேன் தலையிலே போட்டுக்கொள்ள வேண்டும்? ஊற்றுத்தலைக்கு நாட்டிலெனப்பமேன்? இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? நமக்கொன்றுமாகாது! மலைவாசிகளாகிய நமக் கிந்த யோசனையேன்?

ஞானநிதி:—எப்படியிருந்தாலும் நாமிருக்குமிடத்தை யாண்டுவரும்மகா ராஜாவுக்கு நாம் நன்மைபுரியவேண்டாமோ?

வீரசேனன்:—அவன்தான் வீணாக உங்களை இங்குத் துரத்திவிட்டானே! அவனுக்கு நன்மைநினைக்கின் அது பாவமே!

ஞானநிதி:—பயித்தியக்காரப் பிள்ளைகளே? ஒருவன் தெரியாமற் கெடுதி செய்தால் அதற்குக்குரோதம் பாராட்டாமல் அவனுக்கு நன்மை செய்வதன்றோ நம்மைப்போலொத்தவர்களுக்குக் கடமை?

"இன்னாசெய் தாரை யொறுத்தலவர்நாண
நன்னயஞ்செய்து விடல்"

என்ற வள்ளுவர் குறட்பாவை மறந்தீர்களோ!

வீரசேனன்:—ஆம். யான் முற்றுமதை மறந்துவிட்டேனே! அவர்களு க்கு நன்மைசெய்யச்சென்றால் நாம்கொண்டதற்கு நம்மைக்கொல் லாமல் விடுவார்களோ? நாமே வலியவிலக்கு போட்டுக்கொள்ள வேண்டுமோ?

துணைநிதி:—அவனிறந்ததுயாருமறியார்கள்! இதன்றியும்நாம் ராஜாவுக்கு அதிகநெருக்க முடையவர்கள்! ஆதலின் நாம் தடையின்றி நன்மைபுரியவே வேண்டுமென் றெண்ணுகின்றேன்.—(சப்தங்கேட்டல்.) இதேதோ பெருஞ்சப்தம்! மலைமேலேறி அஃதுளதென்றவிதங் காண்போம்! பிறகுயோசித்துத்தகுந்தபடி நடந்துகொள்வோம்!

விக்கிரமன்:—தங்கள் இஷ்ட விரோதமாய் இதுவரையில் நடந்ததில்லை. இனி அவ்வண்ணமும் நடப்போமா? சைந்நியங்களின் ஆரவார மன்றி வேறில்லை! எதற்கும் மலைமீதேறிப் பார்ப்போம்!

(யாவரும் போதல்.)

நான்காமங்கம் முற்றிற்று.

அங்கம்-V.

முதற்களம்.

இடம்:—போர்க்களம். காலம்:—காலை.

நடன்:—அழகானந்தன்.

அழகானந்தன்:—(செவ்வரத்தந் தோய்ந்தகிழியொன்றைக் கையிலேந்தி நின்று) ஏ! நடந்துதிரியும் பொற்கொடியே! உன்னையன்றியானெவ் வாறுய்வேன்? நம்மிருவருக்கும் நடந்த விஷயங்களெல்லாம் ஒன் றின்பின் ஒன்றாய் முளைத்து என்னை அலைக்கழிக்கின்றனவே!—

இளமரக்காப் பாங்க ரினிதோ ரிடத்தின்
வளம்படவே யானு மறைந்தே - யொளிந்திருப்ப

வாண்டுவந்து நோக்கி யடியேனைக் காணாது
மீண்டுமெனைத் தேடி மிகவருந்திக் - காண்டகைய

வெள்ளிடுகிலை நீயிங்கு வேறொருவ ரில்லையென்று
மீண்டு நகக்குறியின் மாண்டதெனக் - கண்டு

பிறையணிந்த விங்க வடிவத்துப் பெம்மா
னறைதருங் கன்கதளகங் கையான் - மறைய

வணைத்தவெம் தம்பிகைபோ லாகத் துதித்துப்
பணைத்த தனமாம் பறம்பைத் - துணைக்கைகொடு

சந்தோடங் கொள்ளுங்காற் சாரங்கேனைக் கண்டுவெள்கி
மந்தநகை செய்துமலை மங்கைபோற் - சந்தநறுங்

கொங்கைக் குவடாற் குழிப்படுத்தி மார்பகத்தை
யங்கைத் தலத்தா லணைத்தென்னைப் - பொங்கமுக

மூத்தங் கொடுத்து முகத்தின் முகமணைத்து
மெத்தத்தண் டிக்கு மினற்கொடியே - யொத்த

குறியிடத்துச் சென்றியான் குயிலேயென் றேத்த
வறியீர் குயில்வேட்டை யாட - வறியேன்முன்

றுறைது வந்தீர் நகையாடீர் தோவுலகம்
பேறுது நின்றீர் பெரியரென்றே - வீறுகக்

கண்சிவந்து காதிற் கதிர்முத்த மாளிக்க
வெண்சிவப்பைக் காட்டுமே வாகாயிம் - மண்ணுலகின்
"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்" என்றும்

வள்ளுவர் குறட்பாவை மெய்யென்று காட்டவல்லாய்! நீ எங்குச்
சென்றாய்?—

வெண்டரளச் செம்பவள மென்கமுகச் சங்கமெனு
மொண்மிடற்றி லுதித்தவைபோ லொளிபரப்பி யுதைச்சுழுங்
கின்கவந்து மார்பினிடங் கால்பரப்பித் தவழ்ந்தேறி [அ
வண்சிகரச் செப்பதனை வனைந்திருக்கல் பார்ப்பேனோ.

சந்தமொடு வில்லுமிழுந் தாளவட விளிற்பூட்டிப்
பந்துதனக் கிலிமுகமாஞ் சிலிமுகத்தைப் பலகாலென்
சிந்தையொடு நயனத்தைச் சிரிலக்காக் கொண்டெறிந்து
யிந்ததுமின் முக்நுதிப்ப செங்கண்ணிற் காட்டுவையே.

நித்திலநற் கச்சமைபு நிலக்க ளொண்டனத்தை
யத்திரியென் றேகாட்டி யமிர்தருட மாக்காட்டிச்
சித்தசன்றன் முதைமுடி சேர்ந்தசுதைத் துளிகாட்டிச்
சுத்தியெனக் களங்காட்டித் தோளையமை யாய்க்காட்டும்.

கண்ணுடைக் கருப்புடையாய் கடிமுரசச் சிலம்பொலியா
புண்ணுடுங் கோட்டிபிணைக் கயல்விழியா யொண்டொடியே
விண்ணுடும் விளக்கொளியாய் வியன்றனமா நிறைருடத்தாய்
தண்ணுடுங் கொடியிடையாய் சாமனைமான் மானத்தாய்.

நின்னையிங்குக் காணுமன் நீசென்ற வழிதேடி
யின்னேயான் வருகின்றே னினியீண்டு வாழகிலேன்
புன்னியென்று பாராமற் பாவத்திற் காளாகிக்
கொன்னேநிற் கொன்றேனே கொடியரினுங் கொடியேனே.

ஏ! சரசாங்கி! என்கண்ணே! இதோ வந்துவிட்டேன். தாமதிக்
கவில்லை! பஞ்சிதோய்ந்த பவளக்காலடிவழியே யிதோ வருகின்
றேன்! என்னுயிர்க்காதலி! மூர்ச்சித்துக் கிடந்த வுன்னைப் பிரா
ணனை யொருபொருட்டாக மதித்து நந்தனவனத்தில் விடுத்துச்
சென்ற யான் சிறிதும் அன்பில்லாதவன்! கல்விப் பெருஞ்செல்
வியே! எங்குச்சென்றனை? என்று வருவை? வருவையோ? வரு
வையோ? எவ்வண்ணம் வருவாய்? இப்பூவுலகில் நின்னை யுயி

ரோடு காண்பேனோ? அன்றிச் சுவர்க்கத்திற்றான் காண்பேனோ?
(மௌனம்) சுற்பிற்சுரசியாகிய வுன்னைத் திரவிசாரியாமல் அவசர
ப்பட்டுக்கொன்ற எனக்கும் சுவர்க்கலோகமா? சிராத்துயிருக்கும்
மீளாநரகிற்கும் ஆளானேன்! இவற்றினின்றும் என்னை மீட்கும்
உபாயமுமுளதோ? ஒன்றுமில்லை! சத்தியம்! சத்தியம்!! மெல்
லிளந்தோகாய்! நின்னை என்று காண்பேன்! எங்குக்காண்பேன்?
எவ்விதங்காண்பேன்? ஐயோ! இன்பரசவனசமே! சரசரூபி! சர
சாங்கி! சரசாங்கி!! சண்பகக்கோதாய்! தரியேன்! ஒருகணமுந்
தரியேன்! கண்ணீர்விட்டுக் கதறுகின்றேன்! என்செய்வேன்!
பாவியுயிரே! ஏனிருக்கின்றாய்? நினதுகாதலியைத் தேடிச் செல்
லாயோ! ஏன் தாமசப்படுகின்றாய்? அந்தோ! புன்முறுவல் பூத்த
திருமுகத்தையும், செவ்வரிக் கண்களையும் தேன்மொழியையும்
நினைக்கும்போதே நைந்து நைந்து மனமுருருகின்றேனே! குணம்
நிறைந்த மலர்ப்பூங்கொடியே! நின்செவ்வரத்தந் தோய்ந்தவிழி
யிதுவோ! இதுவா நின்னரத்தக்கறை? ஈதோ நின்னுதிரந் தோய்
ந்தது? (அழுகின்றான்.) பாவியேன்! பாவியேன்!! நின்னை நினைக்
கும்போதே என் ஆண்மையகன்றதே! வீரமற்றனனே! தீரமொழி
ந்ததே! பராக்கிரமம் பறந்ததே! ஏழைமனமே! இனியென்?
இனியென்? ஆறுதலடைவாய்! இறந்தார்உயிர்பெற்றெழுவரோ?
மறந்தனையோ?—ஏ! சுருணா! என்னிணைபிரியாத்தோழா! தோழ
னென்றால் நீயேதோழன்! என்கட்டளையைமீறி நடந்தாயில்லை!
மீறிநடப்பின் இவ்வண்ணம் வருந்துவேனோ! ஏன்வருந்துவேன்?
நீ வாளால் அவள்உயிரை மாய்க்கும்போது என்னினைந்தாளோ?
எவ்விதம்வருந்தினளோ? என் கூறினளோ? அலறியழுதாளோ?
ஏங்கித்திகைத்தாளோ? கெஞ்சியிரந்தாளோ? மிஞ்சித் அடித்தா
ளோ? (மீட்டும்அழுகின்றான்.) ஏ!கட்டிக்கனியே!துன்மதியே நின
க்குப் பெருஞ்சனியனாய் வந்தனன்! என்றும் என்னையும், கரும்
பும் ரசமும்,உடலுமுயிரும்போலினைபிரியாதமக்குச்செக்கும் ஆலை
யும் எமனுமாயினன்! அவன்தான் நின்னை விவாகம்புரியத் தூதனு
ப்பும்படி சந்திரசேகரனைத் தூண்டியதாக ஜெயவீரர் கூறினர்!
அவன் ஏதுதான் செய்யத் துணியான்? கொடுந்துன்மார்க்கன்!
பரமசண்டாளன்! அப்பொழுதே நினது பராக்கிமாரால் நின்மை
லுனையைக்கவர்ந்தனன் என்றேதீர்மானித்தேன்! தூதியர்கள் பகன்
றவற்றால் நின்தேக அடையாளங்களையுங் கூறிவிட்ட
த்திற் காலைசொன்னேன் நின்தேக அடையாளங்களையுங் கூறிவிட்டனரோ! பாழும் பணமே! நல்லவர்களையும் கெட்டவர்களாக்கு
வாய்! கொடியை! பெண்கள் பணஆசை பிடித்தவராயினரே!
ஐயோ! ஜெயவீரரே! நும்முவார்த்தைகளையும் தட்டிவிட்டேனே!
யான் அநுபவிக்கின்றேனே, அநுபவிக்கின்றேன் கொடுந் தண்
டனை! பிரிதலினும் கொடிந்தண்டனையுமுண்டோ? ஆ! என்மன

த்திலுதிர்தவண்ணமே நீ நிரபராதியென் றுணர்வேனாகிற் கடலும் ஒரு சிறுநிவலையேயாம் என் கண்ணீர்ச் சமுத்திரத்திற்கு! (அழுதல்.) எவ்வண்ணம் ஆற்றுவிற்பேன்? ஏ! மெல்லிய வல்லிக் கொடியே! யான் கோபவெறியா லிழைத்தவிங்கைப் பொறுத்தருள்! நீ உத்தமி யென்றே எண்ணினேன்! நின்பழி தீர்த்திதோ நின்னைக்காண வருகின்றேன்! நின்னைப் பழிகூறிய அக்கொடிய சண்டாளவன்னெஞ்சத் துன்மதியைப் பிளந்து பின்னலங் கவர வான்வந்த சோழநாட்டுச் சந்திரசேகரனைக் கண்டித்து அவனது படையைத் துண்டித்து வாளுங் கையுமாய்ப் போர்க்களத் துயிர் நீத்து நின்னை யடைகின்றேன்! யானும் யுத்தசன்னத்தனாய்விட்டேன்! உயிரைத் துரும்பென்று எண்ணின எனக்கு யார் நிகர்? முன் துன்மதி யுயிருண்ண இதோ விரைந்துசெல்கின்றேன்.

(பாடுதல்.)

இராகம் - தர்பார். தாளம் - ரூபகம்.

பல்லவி.

இதோ செல்கின்றேன் - சமர்க்களம்
இதோ செல்கின்றேன்.

அநுபல்லவி.

அதோகதிக்காளாகப் பகைஞரை
அஞ்சாமல் ஓட்டவே-எஞ்சாமல்வாட்டவே (இதோ)

சரணங்கள்.

நன்மதி யென்பதை நாடாம லெந்நாளும்
நாட்டிற் சனியனாய் நண்ணு மக்தப்பாழுந்
துன்மதி யாருந் துரோகியைக் கைவாளால்
துண்டமாய்ச் சாய்த்திட-முண்டமாய் மாய்த்திட (இதோ)

தந்திர காதன்சொற் சங்கதி கேட்டந்தத்
தையலையே கொள்ளச் சண்டைக் கிங்குவந்த
சந்திர சேகரச் சண்டாளனைக் கண்டு
தப்பாமல்வெல்லவே-யிப்போதேகொல்லவே (இதோ)

முன்னும்பின்னு மறியாமலே யான்பாவி
மொய்குழலை வதைத்திவ் வுலகி லாவி
உன்னோடு வாழ்த றவிரா திருக்கின்றேன்
தக்கணம் நீங்கவே - இக்கணமோங்கவே (இதோ)

(போதல்)

[ஒருபக்கத்திற் சந்திரசேகரன், வச்சிரவாகுதேவன், துன்மதி சோழநாட்டுப்படைகள் வருதல். வாத்தியகோஷம்.]

படைப்பிரனர்கள்:— (பாடுதல்.)

தஞ்சை மன்னன் றக்கதோர்
வஞ்சி சூடி வந்தனன்
மிஞ்சி யூன்றி வெல்வது
பஞ்சி தீயிற் பற்றலே.

வென்றி வேற்கை வேந்தர்க்கு
வென்றி யோரும் வீரரே
கொன்று வெல்லுங் கொள்கையீர்
நன்று போரை நாடுவீர்.

உற்று வாழ்வ தொன்றுகேள்
பற்றி லாப்ப கைவனே
செற்ற மின்றிச் சேருவாய்
வெற்றி வீர னடியினே.

கூற்றின் முன்னங் கோபமோ
டாற்று மாற தென்னையோ
வேற்று நாட்டு வீரரே
சாற்று வீர்க டன்மமாய்.

வாகை சூடி வருவனு
லோகை கொண்டோ மோங்கலுஞ்
சாகஞ் சேர்ந்த சாதமே
பாக வுண்டி பகைவரே.

[மற்றொருபக்கத்தில் தொண்டை நாட்டார் அழகானந்தன் முதலியோர்வருதல். வாத்திய கோஷம்.]

படைப்பிரனர்கள்:— (பாடுதல்.)

காஞ்சி மன்னன் காண்டகுங்
காஞ்சி சூடிக் காளுவன்
மூஞ்சி மூடி மூதுகிட
வாஞ்சை சேரும் வஞ்சகன்.

தருமமின்றித் தாழ்ந்தவன்
கருமமென்ன கருமமே
அருமை யின்றி யாவரியின்
மருமம் போழின் மாயுமே.

வென்றி வென்றி வீரரே
யன்றி யேவமெ னறைதிரே
நன்று வேறு காவல
ரென்று போற்றி யேற்றவே.

வஞ்சங் கொண்டு வந்தனன்
நெஞ்சி லொன்று நேர்ந்தில
னஞ்சப் போரு மாற்றுவீர்
பஞ்சை யாகப் பாதகன்.

போரின் மாண்டு போனவர்
வீர சொர்க்க மேவியே
வீர வேற்கண் மாதரார்
வாரம் பூண்டு வாழ்குவார்.

[பிறகுயாவரும்போதல். மறுபடியும் துன்மதியும் அழகானந்தனும் சண்டையிட்டுக்கொண்டு வருதல்.]

அழகானந்தன்:—தெவ்வீர்! ஓடன்மின்! இவனைக்கொன்று இதோ வருகின்றேன்!

(துன்மதி அழகானந்தனால் நிராயுதனாய்க் கீழேவிழுந்து சோர்வடைதல்.)

அழகானந்தன்:—கீழேவீழ்ந் தயிர்நீத்த உன்னை வாளால் வெட்டியெறிவது தருமமன்று!
(போதல்.)

துன்மதி:—(எழுந்து) பதிவிரதா சிரோமணியைப் பழிபகர்ந்த எனதுபலமெல்லாம் பறந்துவிட்டதே! காலிற்பெருங்காயமு மடைந்தேன். தப்பிப்போகவும் வழியில்லை. நொண்டிச்சென்றாவது உயிர்பிழைப்பேன்.
(போதல்.)

[போர்நடக்கின்றது; தொண்டைநாட்டார் வெங்கிட்டோடல். சச்சந்தன் சோழநாட்டாராற் பிடிபடுதல். பிறகு அவனை மீட்கும் பொருட்டு குணநிதி விக்கிரமன் வீரசேனன் இவர்கள்வருதல்.]

குணநிதி:—ஜெயமடைந்தோம். ஜெயமடைந்தோம். தொண்டைநாட்டார்;

பயந்து சென்றீர்
வியந்து நிற்பீர்
நயந்து காண்மின்
னயர்ந்து நோக்கீர்.

நின்மின்! நின்மின்!! ஓடன்மின்! என்சொல்கொள்ளாதோடுகின்றீர்கள்?

விக்கிரமவீரசேனர்கள்:—

பாரப் படையீர்
வீரத் தொடையீர்
சாரம் மிடைவீர்
நேரம் மடைவீர்.

குந்தம் பகழி
நந்தும் படையாற்
றொந்தாம் முடலைச்
சிந்தும் குருதி.

நில்மின்! நின்மின்!! போர்புரிமின்! போர்புரிமின்!! வம்மின்! வம்மின்!!

(அழகானந்தன் இவர்களுக்கு உபபலமாய் வருதல்.)

அழகானந்தன்:—

எடுப்போங் கொடுவா
ளடிப்போஞ் சிதறக்
குடிப்போ முயிரைக்
கொடுப்போம் விடையே.

[சச்சந்தனைமீட்டு யாவரும்போதல்.]

(வச்சிராயுததேவனும் துன்மதியும் சரசாங்கியோடு வருதல்.)

வச்சிராயுததேவன்:—சுந்தரா! இக்கணமே யோடியுயிர்பிழை! இப்பெரும்போர்க்குழப்பத்தில் உன்னைத் தப்பவிடார்கள்! நில்லாதே! ஓடிப்போ! ஓடிப்போ!!
(சரசாங்கிபோதல்.

துன்மதி:—எம்அரசன் சந்திரசேகரனும் யுத்தத்தில்மாண்டனன்! சச்சந்தனே ஜெயமடைந்தான்! இது மகாஆச்சரியமாயிருக்கின்றது!

வச்சிராயுததேவன்:—டக்கபூலமரிய் வாளேந்திவந்த ஒருவீரனால் மாண்டனன்! இனி நாமெதிர்த்துப்போரிடமுயல்வது வீணேயாம்!)

துன்மதி:—ஓடி யுயிர்பிழைப்போம்! ஓடியுயிர்பிழைப்போம்!!

வச்சிரவாகுதேவன்:—போர்முனையில் ஓடி யுயிர்பிழைத்தலினும் போர்புரிந்து யுத்தகளத்திலேயே யிறப்பேன்!

"மிக்கவெஞ் சமத்திடை வெருவி யோடின
ரொக்கறுந் புறத்தனி யுலகில் வாழுநர்
புக்கவேட் டகத்திடை துணைவியும் புன்மையோர்
மிக்கருட் படியென் றுரைக்கும் வையமே."

ஆதலால் அறிஞருஞ்சாவு அறிவிலருஞ்சாவு! பின்னுயிர் என்னகரும்பா? நீயிறந்தால் காடெல்லாம் எதும்பாமா? பிழைத்துப்போ!

(போதல்.)

துன்மதி:—யானும் போர்புரிவேன்! யானும்போர்புரிவேன்!!

(போதல்.)

இரண்டாங்களம்.

இடம்:—போர்க்களத்தின் மற்றொருசார். காலம்:—அந்திமாலை.

நடர்:—அழகானந்தன், போர்வீரன்.

போர்வீரன்:—ஐயா! நீர்யார்?

அழகானந்தன்:—யான் ஒருமனிதன்!

போர்வீரன்:—நுமது பெயரென்ன?

அழகானந்தன்:—அதை ஏன் கேட்கின்றீர்? யான் ஏன் நுமக்குக் கூற வேண்டும்?

போர்வீரன்:—ஐயா! கோபித்துக்கொள்ளாதீர்கள்? நீர் தொண்டைநாட்டரசனைவிடுவித்துச் சோழநாட்டரசனைக் கொன்றவரல்லரா? ஆகையால் நும்மைத்தெரிந்துகொண்டு போகலாமென்று எண்ணி வந்தேன். வேறொன்றுமில்லை. இதன்றி மூன்றுபேர்களாலேயே நமது தொண்டை நாட்டார் ஜெயம் பெற்றார்களாமே! இது மகா ஆச்சரியம்! மகா ஆச்சரியம்!! தெய்வந்தான் வந்து உதவியதோ என்னவோ தெரியவில்லை!

அழகானந்தன்:—ஏன்! ஐயா! நீர் போர்க்களத்தி லில்லையோ? என்னை விசாரிக்கவந்தீர்! நன்று! நன்று!!

போர்வீரன்:—இருந்திருந்தால்விசாரிப்பேனோ? தூரநின்றுபார்த்தேன்! என்கண்களுக்கு நன்றாய்ப் புலப்படவில்லை!

அழகானந்தன்:—புறமுதுகுகாட்டி ஓடியவர்களில் நீரொருவரோ? வெட்கமில்லையாவுமக்கு? என்னிடஞ் சங்கதிவிசாரித்துப்போய்ப் பெருமைபாராட்டிக்கொள்ளப் போகின்றீரா? என்முன் நில்லாதீர்! போம்! போம்!!

போர்வீரன்:—எவற்றினும் வீராவேசங்கொண்டவராயிருக்கின்றீர்! யான்போகின்றேன்! ஐயா! மன்னியும், ஐயா!

(போர்வீரன்போதல்.)

அழகானந்தன்:—போர்முனையிற் றோற்றோடிய நாய்க்கும்முகத்தில்மீசையா? இப்பேர்ப்பட்ட புரட்டர்களிடம் வார்த்தையுங் கூடுமோ? யான் அரசனுயிருப்பின் இன்னமும் இவன் உயிரோடிருப்பானோ? யான் ஏன் கொல்லவேண்டும்? யான் ஏன் கொல்லவேண்டும்? ஒருத்தியைக் கொன்றுதான் யான் படாதபாடு படுகின்றேனே! ஆ! என்கண்மணி! நீயுயிர்பிழைத்திருந்தால் இப்பொழுது யான் எவ்வளவு சந்தோஷமாயிருப்பேன்? அரசனும் என்னைக் கோபித்துக்கொள்ளாது அங்கீகரிப்பானே! எவ்வளவுசுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கலாம்! மனமே! ஏன் வீணையோசனையிற் காலம் போக்குகின்றாய்?—என்கண்ணே! பழிவாங்கிவிட்டேன்! பழிவாங்கிவிட்டேன்!! மேலாடையைக் கழற்றி யெறிந்து யானும் என்னைக் கொல்கின்றேன். (மேல் ஆடையைக் கழற்றி வீசி யெறிதல்.) அதற்கு ஈட்டியொன்றைத்தேடி யெடுப்பேன். இன்னை—

(ஈட்டியொன்றைத் தேடுதல்.)

[இரண்டு சேனைத்தலைவர்கள் வருதல்.]

முதற்சேனைத்தலைவன்:—தெய்வசங்கற்பமே சங்கற்பம்! வச்சிரவாகுதேவன் பிடிபட்டான்! சந்திரசேகரன் இறந்தான்!

இரண்டாவதுசேனைத்தலைவன்:—நமது குலதேவதைபோலவே வந்து உதவினர்கள் நான்குபுருஷர்கள். அவர்கள் வராவிட்டால்—

முதற்சேனைத்தலைவன்:—நாம் ஏன்இங்கு இவ்வண்ணம் பேசிநிற்போம்! அவர்களே பெருந்தீரர்கள்! (அழகானந்தன் ஈட்டியைத் தேடிக் கையிலெடுத்து எழுந்து நின்று 'ஆயினுந் தற்கொலை புரிவதோ?' என்கின்றனன். அப்பொழுது அவனைப்பார்த்து) யார்நீ? நில்! ஓடாதே! தப்பித்துக்கொண்டோடப்பார்க்கின்றாயா?

இரண்டாவதுசேனைத்தலைவன்:—ஈட்டி யொன்று கையில்! குற்றுயிராயிருப்பவர்களைக் கொன்று அவர் ஆடைமுதலியவற்றை உரிந்து கொள்வதற்கா?

முதற்சேனைத்தலைவன்:—இந்நேரம் இவன் கீழே தடவிக்கொண்டிருந்தான்! யார்நீ? என்னவார்த்தை பேசாமலிருக்கின்றனை!

அழகானந்தன்:—யான் யாருமில்லை.

முதற்சேனைத்தலைவன்:—யாருமில்லையா? திருட்டுப் பயலிவன்? பிடித்து அரசனிடங் கொண்டுபோவோம்!

[சச்சந்தனும் காலாட்படையும் சிறைகாவலாளர்களும்வருதல். சேனைத்தலைவர்கள் அழகானந்தனை அரசனிடம் ஒப்பித்தல். அரசன்சிறைகாவலாளர்களிடம் அவனை ஒப்பித்தல். பிறகு யாவரும் போதல்.]

மூன்றாங் களம்.

இடம்:—சிறைச்சாலை. காலம்:—காலை.

நடிகர்:—அழகானந்தன்.

அழகானந்தன்:—(நித்திரைவிட்டெழுந்து) என்ன கனவுகண்டேன்? என்ன கனவுகண்டேன்? ஒன்றுந்தோற்றவில்லை! கனவிலுள்ளனகனவிற் காண்போமென்கிறார்களே! விந்தையா யிருக்கின்றது! யான்சிறிதும் நினைக்காதகாரியங்களைக் கனவிற்கண்டேனே! யானல்லவோ அழகானந்தன்? அல்லனோ? சிறிதுகாலத்தில் உயிர்துறப்பது நிச்சயமாயிருக்க யான்என் கொடுமையாலிறந்த சரசாங்கியைக்கண்டு அவளைச் சச்சந்தமகாராஜன் எதிரில் மணம் புரிந்து இளமைப் பருவத்திற்குரிய சகலவித இன்பதுன்பங்களை யநுபவித்துக்கொண்டு ஒரு தேசத்தை அரசாள்வதாகக் கனவுகண்டேனே! ஆச்சரியம்! ஆச்சரியம்!! என்னைப்போன்றமூடமூடர்களும் உலகில்உண்டா? இதை நிஜமென்றே எண்ணிக் கனவில் என்ன ஆநந்தங்கொண்டேன்! பெருந்துன்பம் அநுபவிப்பதின்மத்தியிற் சிறிது சந்தோஷமா? அற்பசந்தோஷம்! அற்பசந்தோஷம்!! மானுடஜன்மத்தின் தன்மையிப்படியேயிருக்கின்றது! ஜனனமுதல் மரணம்வரை துன்பமநுபவிப்பதே பெருங்காரியமா யிருப்பதைக் கண்டிருக்க, நடுவில் வரும் சிறிது சந்தோஷத்தைக்குறித்து என்னென்னசெய்யத் துணிகின்றார்கள்? அச்சந்தோஷம் மனத்திலநுபவிப்பதோ? அன்றித் தேகத்திலநுபவிப்பதோ? இவை யெல்லாம் இன்பமாகுமோ? சுழங்காட்டுவது போலவே நின்று தூக்கமிகப் பின் காட்டுமென்பதை யறிவதில்லை! யாவும் ஒருமாயமல்லவோ? இஃதென் ஆச்சரியம்? சரசாங்கியைக்கண்டு மணம்புரிந்தேன்! சூரிய சந்திரர்கள் தெற்குவடக்காக முறைபிறழ்ந் தோடினபோதிலும் எனதுகொடுந்தன்மையாலிறந்தசரசாங்கியையினியிப்பூமியிற் கண்ணுற் காணவுங் கூடுமோ? இல்லை! இஃதன்றி மற்றவைகளைக் கனவிற்

கண்டிருப்பேனாயின் ஒருவாறு நம்புதலுங் கூடும்! இஃதென்னே யென் எண்ணம்? என்னை அரசன் அழகானந்தன் என்று கண்டுபிடித்தனனாயின் பிழைப்பது கூடுமா? ஒருவேளை என்னை மன்னித்தாலும் அரசனாவதா? முடியாதகாரியம்! அதுவுங் கூடுமானாலும் யான் சரசாங்கி யில்லாமல் ஒருக்ஷணமும் உயிர்தாங்கியிருப்பேனோ? என்னைக்கொல்லத் தாமதஞ் செய்கிற ஒவ்வொரு க்ஷணத்தையுங் கடுநரகிற் கற்பகாலம் துன்பமநுபவிப்பதுபோ லல்லவா நினைக்கின்றேன்? எனது சரசாங்கி கனவின்கண்ணுறவது என்னை வன்னெஞ்சனென்றெண்ணாது ஒருபொருட்டாய் மதித்துத் தனது முகத்தைக் கவிழ்த்திக் காட்டினளே! அக்கனவு எனக்குச் சற்று நீட்டித்திருக்கலாகாதா? என் ஆநந்தம் அளவில்லாமற் பெருகியிருக்குமே! யான் எதிலுங்கொடுத்துவைக்காதவன்! போர்முனையிலிறந்து வீரசுவர்க்கமடைந்திருக்க வொண்ணாதா! கொலையாளிகளாலே கழுவேற்றப்படவேண்டுமா? எனதுகண்ணாட்டியைப்பின்றொடர்ந்து செல்லும்படி ஒரேக்ஷணத்தில் வாளால்வீசிக்கொன்றனராயின் அவர்களுக்கு எவ்வளவு நன்றிபாராட்டுவேன்! மனமே! என் வீணாளெண்ணத்திற் காலங்கழிக்கின்றாய்?

"பேதைமை யென்றும் வித்திற் பிறந்துபின் வினைக ளென்னும்
வேதனை மரங்க ளோங்கி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட் டவலம் பூத்து
மாதுய ரிடும்பை காய்த்து மரணமே கனியு" மன்றே

மறந்தனையே!—உனக்குள்ள சொற்பகாலத்தை ஈச்சுரனைத் துதித்தலிற் செலவழித்தாற் சிறிதுநன்மையாவதடையலாமே! மாண்டவர்மீண்டுவருவரோ? அறிவிலாதாய்! அவனைத்துதித்து அவனது சரணாரவிந்தங்களைச் சிந்தித்தாலும் நன்மையுண்டு!

(பாடுதல்.)

இராகம் - நாதநாமக்கிரியை. தாளம்-ஆதி.

பல்லவி.

மகாதேவசம்போ - ஹர ஹர சிவ சிவ
மகாதேவ சம்போ.

அநுபல்லவி.

நகாத மார்க்கந் தவிர்த் தெளியேனைக் காக்குங்
கருணை யிதுவே நிதம் சமஸ்த புவன நோக்கும் (மகா)

சரணங்கள்.

திரபுரா தியரை யெரியச் சிரித்தவா
தெவ்வரக்கர் கெட முருகனை யளித்தவா
கரியின தாண்மை யொடுங்க வுரித்தவா
காலனைப் புவிதனின் விழ வுதைத்தவா (மகா)

கருது மாலிருமன் மேவி யிருந்தவா
கமலனாதி சுரர்துதிக்குப் பரிந்தவா
சுருதிமுடியிற்றூய நடனம் புரிந்தவா
சுத்த ஜோதி மயமாக விரிந்தவா (மகா).

சர்வஜீவ ரக்ஷக சுகுணளா
சந்த மிலகும்பரி மளமலர்த் தாளா
பர்வதராஜ குமாரி மணளா
பனிமலர்க் கொன்றை பணிந்தவெண்டோளா (மகா)

"அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதங்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சினமல்கு கயிலாய
மெடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே"

சரசாங்கி! உன்னை யான் மறக்கவேண்டுமென்று எண்ணினும் என்மனமுன்னை மறக்கவில்லையே!

(படுத்துக்கொள்கின்றான்.)

[சிறைகாப்பாளர் வருதல்.]

முதற்சிறைகாப்பாளன்:—இவன் மிகவும் அயர்ந்து நித்திரை புரிகிறான்டா! முகம் எவ்வளவு திவ்யமாகவிளங்குகின்றது! பார்த்தனையா?

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—ஆம். தாமரை மலரினும் திவ்யமுகமே! இவனைஏன்நம்மரசர் இச்சிறையிலிட்டனர்? உனக்கேதாவது தெரியுமா? சொல்லு!

முதற்சிறைகாப்பாளன்:—எனக்குத் தெரிந்தவரையில் யான்சொல்லுகின்றேன். இவன் போர்க்களத்தில் ஒன்றியாய் நின்றிருந்தனனும்! இவன் பகைவனே யென்றெண்ணி நம்மரசர் இவனைச்சிறையிலிட்டிருக்கின்றார். ஒருகால்சிரசிழப்பானோ? என்னவோ?

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—சிரசிழக்கும்படியா நேரிடும்? எனக்குமனம் பொங்குகின்றது! மனம் பொங்குகின்றதப்பா! என்னை யறியாமல் எனக்குக்கண்ணீர் பெருகுகின்றது! யான் கொடிய

வன்னெஞ்சுடையவனாயினும் இவன்மீது இரக்கந்தோன்றுகின்றது! இவன் சாகக்கூடாது!

முதற்சிறைகாப்பாளன்:—பார்த்தையா இவன் முகத்தை? கவனித்துப் பாரடா! இவனிடத்தில் அழகானந்தன் சாயையிருக்கிறதே!

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—ஆமாமடா! ஆம். அழகானந்தனைப் போலவேயிருக்கின்றான்! இவன்சாக நாம்பார்த்திருக்கக்கூடாது! என்மனந்துணியாது! என்மனந்துணியாது!!

முதற்சிறைகாப்பாளன்:—அரசன் சொல்லும்படி ஆக்ஞாபித்தால்!—

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—சிறைச்சாலையினின்று தப்பிப்போகும்படி விட்டுவிடுவோம்!

முதற்சிறைகாப்பாளன்:—தப்பிப்பிழைத்தோடும்படி விட்டுவிடப்போகின்றாயா? நம்தலைபோய்விடுமே!

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—யான் போனாலும் போகின்றேன்! அவன் பிழைத்திருக்கட்டும்! அவன் பிழைத்திருக்கவேண்டும்! இவன் அழகானந்தன்தானென்று என்புத்தியிற்படுகின்றது.

முதற்சிறைகாப்பாளன்:—அழகானந்தனாயிருந்தால் அவன் பிழைக்கவேண்டும்! நாமிறந்தாலுமிறப்போம்! அவனுயிருடனிருந்தால் நல்லது! எவ்வளவுநல்லவன்!

அழகானந்தன்:—(விழித்து) தோழர்களே! கொஞ்சம் ஜலம்வேண்டும்! மிகவுந் தாகமா யிருக்கின்றது!

சிறைகாப்பாளரிருவரும்:—நீரேவெளியிற்போய் அருந்தலாமே!

முதற்சிறைகாப்பாளன்:-(தனக்குள்)இவன் குரலால்அழகானந்தன்தான்!

அழகானந்தன்:—யான் சிறையிலிடப்பட்டிருக்கிறபோது வெளியே சென்று நீரருந்திவருதல் தக்கதன்று! அரசனுக்கிழுக்கு கடந்தபழி நம்மைச்சாரும். ஆதலால்—

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—நீங்களே போய்—(தூதன்வருதல்.)

தூதன்:—யாரடா! காவற்காரர்களே! இங்கு உம்மிடம் ஒப்பித்தபகைஞனை என்னுடன் அனுப்புங்கள்!

முதற்சிறைகாப்பாளன்:—உன்னுடன் அனுப்புவதா? ஏன் உன்னுடன் அனுப்பவேண்டும்?

தூதன்:—ஆம். ராஜா உத்தரவு!

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—ராஜா உத்தரவா?—என்ன அது?

தூதன்:—சபைக்கு அழைத்துவரும்படி அவர்கட்டளை!

சிறைகாப்பாளரிருவரும்:—அப்படியானாற் சரி! அழைத்துக்கொண்டு போ!

(அழகானந்தனும் தூதனும் போதல்.)

முதற்சிறைகாப்பாளன்:—இவனை ராஜா இப்பொழுதுபார்த்தாற் கொல்லும்படி கட்டளையிடமாட்டார்! ஒருவேளை என்னவோ?

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—யார்க்கும் இவனைக்கொல்ல மனமே வராது. அவனைத்தப்பிப்போகும்படி யுக்திசொல்லிக் கொடுத்தும் அவன்போகமாட்டேனென்றானே!

முதற்சிறைகாப்பாளன்:—அழகானந்தன் அன்றி மற்றவர்களானால் ஓடிப்போயிருப்பார்களடா!

இரண்டாவதுசிறைகாப்பாளன்:—ஆம். இவன் அழகானந்தன் தான்! இதென்னடா சத்தம்? (போதல்.)

முதற்சிறைகாப்பாளன்:—யானும் வருகின்றேன். (போதல்.)

நான்காங்களம்.

இடம்:—காஞ்சியரண்மனைச்சபாமண்டபம். காலம்:—நண்பகல்.

பாத்திரர்:—சச்சந்தன், துணைநிதி, விக்கிரமன், வீரசேனன், முதலியோர்.

சச்சந்தன்:—எனது பிரிய நேயர்காள்! உங்களாலே யான் எனது ராஜ்ஜியத்தைப் பெற்றவனானேன்! நீங்கள்செய்த பேருபகாரத்திற்கு யான் புரியுங் கைம்மாறெதுவாகும்? எனது ராஜ்ஜியத்தையே யான் பரிசாயளித்த போதிலும் அதுவும் குறைவே யாகும்!—போர்க்களத்தில் வெகுவிரைவாக நுழைந்து நமது படைகளை நிலைநிற்கச்செய்து, போர்புரிந்து, பகைவரைத் தலைகாட்டவொட்டாமலோட்டிச் சந்திரசேகரனைக்கொன்ற இளங்காளை எங்குளன்? அவ்வீரனையான் கண்ணுறல்வேண்டும்! யான் கூறியபடி யவனைக் கண்டுபிடித்தீர்களா?

துணைநிதி:—மகாராஜா! அச்சிறுவன் வேற்றுருவமைந்துவந்த அருச்சுனனிலும் பதின்மடங்குவிரைவாகப்போர்புரிந்து பகைவர்களைப் புறங்காட்டச் செய்தனன்! அவனாலே தாங்கள் இச்சம்பத்தடைந்தீர்களே யன்றி எங்களால் அன்று!

சச்சந்தன்:—அச்சிறுவனைப் பற்றிச், சபையோர்களே! உங்களுக்கேதேனுந் தெரியவராதா?

சபையோர்கள்:—யாங்கள் எங்குந்தேடியும் எங்கள் கண்களுக் ககப்படவில்லை! அவர் எங்குற்றனரோ?

சச்சந்தன்:—எங்குங்காணீர்களோ? இருக்கட்டும். வைத்தியர் ஏன் இன்று சபைக்குவரவில்லை! சீக்கிரம் இந்துவதனையும் சுகுணனும் இங்கு வந்துசேரட்டும்.

மந்திரி:—சேவகா! சீக்கிரம் போய் அவர்களை யழைத்துவா.

சச்சந்தன்:—(தனக்குள்) கனகாம்புஜம் மிகவும் வஞ்சனைக்காரி யென்று சிங்காரவல்லியாற்றெரிந்துகொண்டோம்! கனகாம்புஜமும் இறந்தாள்! சிங்காரவல்லியணிந்துகொண்டிருந்த முத்திரைப் பதக்கத்தாலன்றோ யாவுந்தெரிந்துகொண்டனம்! நீங்காத சிறையில் விட்டனம்! ஆராய்ந்துபாராமற் பெண்சாதிவார்த்தையை யுண்மையென்றே நம்பி மதிமோசம்போய்விட்டோம்! நமது அருமைக் குமாரத்தி சரசாங்கி தவறிவிட்டதும் கனகாம்புஜத்தின் சூதினாற்றன்றோ? அன்றுமுதல் அவள் தம்பியையுங் காணோம்! அழகானந்தன்மேற்குற்றஞ்சாட்டி யவனைத் துரத்திவிட்டனள்! நயவஞ்சகி! என்னகாரியஞ்செய்தனள்! என்னகாரியஞ்செய்தனள்!! அவள் மயக்கத்திலழுந்தி யாவற்றையுமறந்து அறிவழிந்தேனே! சந்திரசேகரன் போர்க்குவந்தான்! யாவற்றிற்கும் காரணம் இவளேயன்றி வேறில்லை! இறந்ததே நன்மையாயிற்று! சிங்காரவல்லியா லகப்பட்டுக்கொண்டோமென்றல்லவோ உயிர்நீத்தனள்! இதன் உண்மையை வைத்தியனைக்கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்று சிங்காரவல்லி கூறவில்லையா? (சபையோரைநோக்கி) வைத்தியரேன் இன்னும் இங்குவரவில்லை? முகுந்தரைப்பற்றி ஏதாவது உங்கட்குந் தெரியுமா? (வைத்தியர்வர) வைத்தியரே! வந்தீரா! யான் கேட்பதற்கு உண்மையானவிடையை யளித்துவிடும்! தப்பிப்பொய்பேசினீராயின் தலைபோய்விடும்!

வைத்தியர்:—மகாராஜா! கோபம் வேண்டாம்! தடையில்லாமல் எனக்குத்தெரிந்தவற்றைக் கூறிவிடுகின்றேன். மன்னிக்கவேண்டும். மகாராஜா!

சச்சந்தன்:—இறந்த கனகாம்புஜத்திற்குப் பாஷாணத்தை முன்பு கொடுத்தாயாமே! நிஜந்தானா? உண்மையையுரையும்.

(இந்துவதனையும் சுகுணனும் வருதல்.)

வைத்தியர்:—மகாராஜா! யான்உண்மையைக்கூறிவிடுகின்றேன். எனக்குயிர்ப்பிச்சை கொடுக்கவேண்டும்! மகாராஜா! கொஞ்சநாளைக்கு முன்னே ராணியவர்கள் சிங்காரவல்லியிடம் பாஷாணமருந்து கொண்டுவந்து தம்மிடமேகொடுக்கும்படியாய்ச் சொல்லியனுப்பினார்கள்! அப்படியே—

இந்துவதனை:—(கூக்குரலிட்டு) அம்மா! அம்மா!! நீ இறந்தாயோ? இறந்தாயோ!

சச்சந்தன்:—ஓ! இந்துவதனே! இஃதென்னை கூக்குரல்? என்ன சமாசாரம்? என்னசமாசாரம்?

இந்துவதனை:—என்னு பிராணேசுவரி சரசாங்கியம்மை யிறந்தாளே! யானென்ன செய்யப்போகின்றேன்? ஐயோ!

சச்சந்தன்:—சரசாங்கியா இறந்தாள்? என்ன பிதற்றுகின்றாய்! பயித்தியமா?

இந்துவதனை:—மகாராஜா! எனக்கு நாவெழவில்லையே! யான் என்ன செய்வேன்! கருணரைக் கேட்டால் அவர்சொல்வார்!

சச்சந்தன்:—கருணா! என்னசொல்லப்போகின்றாய்? இன்னமும் பொய் பேசப்பார்க்கின்றாயோ? சரசாங்கி எங்கே? உன்னையிதோ சித்திரவதைசெய்ய உத்தரவுகொடுக்கப்போகின்றேன்!—என்னருமைப் புதல்வியே!

கருணன்:—மகாராஜா! யான் இப்பொழுது உண்மையையே கூறப்போகின்றேன்! தாங்கள் என்னைக் கொல்லும்படி உத்தரவளிப்பினும் சரியே!

(வச்சிரவாருதேவன், துன்மதி, அழகானந்தன், சரசாங்கி வருதல்.)

சச்சந்தன்:—வச்சிரவாருதேவரே! வாரும்! நீரிப்பொழுது சிறையிலன்றோ விருக்கின்றீர்? எமது நாட்டைக் காரணமின்றி வீணே குரோதம் பாராட்டிப் படையெடுத்து வந்தமையாலன்றோ வலிகுன்றி வெங்கிட்டோடினீர்கள்? திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையென்பதுபோல் நீங்கள் பெரும்போர்வீரராயினும் அறநெறிதப்பியொழுகியபடியாலன்றோ இம்மூவரும் மற்றொரு சிறுவனும் எமக்குப் பக்கத்துணைவராகநீங்கள் தோற்றவர்களானீர்கள்? அன்றி நும்மரசனும் இறந்தானே! இனி என்னசெய்யப்போகின்றீர்?

வச்சிரவாதுதேவன்:—என்ன செய்யப்போகின்றேன்? தெய்வசங்கற்பமொன்றிருக்கிறதென்பது தெரியாது எம்மரசன் படையெடுத்து வந்தனன்! யான் எப்பொழுது தங்கள் கைவசத்திலிருக்கின்றேனோ அப்பொழுதே தங்கள் ஆக்ஞைக்குட்பட்டவன்தானே! ஆனால் ஒருவரமாத்திரம்!—இதோ நிற்கின்றானே இச்சிறுவன்! இவனைமாத்திரம் காப்பாற்றுவதாக வாக்களிக்கவேண்டும்! இப்பிள்ளையைப் போலும் நற்குணநற்செய்கை யுடையவர்களை யான் எங்குங்கண்டதேயில்லை!

சச்சந்தன்:—இச்சிறுவனை யாம் காப்பாற்றவேண்டும்! அங்ஙனேயாக! அருகில்நிற்கும் இவரார்? நுமக்குத்தெரியுமே?

வச்சிரவாதுதேவன்:—இவர் எம்மரசரது பிராண நண்பராவார். இவர் துன்மதியென்று பெயருடையவர்!—

அழகானந்தன்:—அடே! துன்மதி! நீ இன்னும் பிழைத்திருக்கின்றாயோ!

என்கையில் வாள் இல்லையே உன்னைவெட்டிச்சாய்ப்பதற்கு!

(அழகானந்தன் கையையோங்கித் துன்மதியைக் குத்தப்போதல்.)

சரசாங்கி:—பிராணநாதா! அவரை ஏன்கோபித்துக்கொள்ளவேண்டும்?

அழகானந்தன்:—ஆ! என்னருமைக்கண்ணே! சரசாங்கி! சரசாங்கி!!

(அழகானந்தன் அவள் கையைப் பிடிக்கப்போதல்.)

[சரசாங்கியும் இந்துவதனையும் சபையினின்றும் நழுவிவிடுதல்.]

கண்ணே! நீ உயிரோடிருக்கின்றாயா? என்னெல்லாம் மெய்யாருமோ? நீ எமன்கையினின்றும் எவ்வணந்தவறினையோ? என் கண்ணே! என்காதற்கிளியே!

சச்சந்தன்:—இவனென்ன பித்தம்பிடித்தவனைப்போல் என்னவோ குழறுகின்றான்! நீயார்?

அழகானந்தன்:—யான் இவ்வரண்மனையில் வளர்ந்துவந்த அழகானந்தன்!

சச்சந்தன்:—அழகானந்தன்! இங்கு எப்படிவந்துசேர்ந்தாய்? இவ்வூரை விட்டுத்தூரத்திலிருக்க நீ ஏன்இங்குவரவேண்டும்? இவரை ஏன் நீ அடிக்கச்சென்றனை?

அழகானந்தன்:—மகாராஜா! நம்புதல்வியாகிய என்னுயிர்க்காதலி சரசாங்கியுயிர்க்கும் என்னுயிர்க்கும் நம்முயிர்க்கும் கேடுசூழ்ந்த பரமசண்டாளனாகிய இவன் உயிரோடிருக்கலாமா? போர்க்களத் தித்றங்களுக்குப் படைத்துணையாக வந்தபோதிவனைக் கான்முறிய அடித்தும் எப்படியோபிழைத்துவந்தான்! அவன் உயிரோடிருந்தால் உலகமெல்லாம் ஒருங்கே கேடடையுமாதலால் அவனையிச் சபைமுன்னரே கொலைபுரியத்துணிந்தேன். அதனால் என்சரசாங்கியையுங் கண்ணுற்றேன்!—

சச்சந்தன்:—அப்பா! அழகானந்தா! நீயோ எமக்குப் படைத்துணையாக வந்தனை? நீ கூறியபடி இவன் நம்மையெல்லாங் கொல்லும்படி என்னசூழ்ச்சிசெய்தனன்? நீ சொல்லுவது மகா ஆச்சரியகரமாயிருக்கின்றதே!

அழகானந்தன்:—நான் ஏன் சொல்லவேண்டும்! அவனுக்குக்கட்டளையிடுவீர்களானாலவனே சொல்லுகின்றான்.

சச்சந்தன்:—அடே! துன்மதி! உண்மையை விளங்கக் கூறுகின்றாயா? அல்லது சித்திரவதைபுரியக் கட்டளையிடட்டுமா?

துன்மதி:—மகாராஜா! தாங்கள் எவ்விதக்கட்டளையிட்டபோதினும் அவ்வண்ணமே நடக்கச் சித்தமாகக் காத்துக்கொண்டிருக்கின்றேனே! என்காலோ முறிந்துபோய்விட்டது! நான் இன்னும் இரண்டு நாட்பொழுதிலேயே யிறந்துவிடுவேன்! யான் ஏன் ஒளித்துப்பேசவேண்டும்? நடந்தது நடந்தபடியே கூறிவிடுகின்றேன்!

சச்சந்தன்:—என்னதாமசம்?

துன்மதி:—யான் சோழவளநாட்டிலே கும்பகோண நகரத்திற் பிறந்தவன்! விதிவசத்தாற் சோழநாட்டுமன்னருக்குச் சிநேகனாயினேன்! அப்படியிருக்குநாள்களில் இம்மோதிரம் எனக்குக்கிடைக்கும் வழி நேர்ந்தது!

சச்சந்தன்:—இம்மோதிரம் எனதருமைப்புதல்வியதன்றோ? இஃதெப்படியுன்னிடம் வந்து சேர்ந்தது?

துன்மதி:—சோழநாட்டில் எனதுநண்பர் ஜெயவீரர்வீட்டில் வேடிக்கையாகப்பேசிக்கொண்டிருக்கும்போது அழகானந்தரிடம் பந்தயம் போட்டுச்செயித்தேன்!

சச்சந்தன்:—எதற்காகப் பந்தயம்போட்டிதைக்கொண்டாய்?

துன்மதி:—கற்புக்கரசியாகிய தமதுபெண்ணை!—எனக்குவாயுங் கூசுகின்றதே! யான் எப்படி யிச்சபையில் வெட்கமின்றி யுச்சரிப்பது!

சச்சந்தன்:—எமதுபெண்ணை? என்ன? என்ன? சொல். ஏன்தாமதிக்கின்றாய்?

துன்மதி:—ஒருநாள் உலகத்தில் பதிவிரதைகளுண்டோவென்பதைப்பற்றி வார்த்தை சொல்லும்படி நேர்ந்தபோது ஒவ்வொருவருமொவ்வொருவிதமாகச்சொல்ல அழகானந்தர் பத்தினியுலகில் உண்டென்றும் தன்பத்தினியே பத்தினிகளுக்குத் திலகமென்றுங்கூறினர்!

சச்சந்தன்:—சீக்கிரம்சொல்!

துன்மதி:—அப்பொழுது யான் உலகிற்பத்தினியொருத்தியும் இல்லையென்று சாதித்து நிற்க, அழகானந்தர் சரசாங்கியம்மையின் அழகினையும் கற்பின்றன்மையையும் புகழ்ந்துகூற யான் அவரை யதுபவிக்கவெண்ணங்கொண்டேன்.

சச்சந்தன்:—பிறகு!—

துன்மதி:—யான் கோபமூட்டி இந்தமோதிரத்தைப் பந்தயமாக வைக்கும்படிசெய்து இங்குவந்து அம்மங்கையைப் பரிசோதிக்க என் எண்ணம் நிறைவேறவில்லை! பிறகுபெட்டியில் ஒளிந்துவந்து கைவளையைக்கழற்றிச்சென்று அழகானந்தரிடங் காண்பித்து—

சச்சந்தன்:—என்னசெய்தாய்?

துன்மதி:—அவளை யனுபவித்தேன் என்று பொய்கூறிஅவருக்கு அகமிடத்தக் கோபத்தை யெழுப்பி இம்மோதிரத்தைக் கவர்ந்து கொண்டனன்!

சச்சந்தன்:—இவ்வளவுதானா? இன்னமுமுண்டா?

துன்மதி:—இல்லை!

சச்சந்தன்:—இல்லையா! இப்பாதகனைச் சிறையிலடையுங்கள்! கொல்லுங்கள்!

துன்மதி:—இல்லை! இல்லை!! என்னாண்டுதலாலேயே சந்திரசேகரன்—

(துன்மதியைக் காவலாளிகள் பிடித்திழுத்துச்செல்கின்றனர்.)

வச்சிரவாகுதேவன்:—இத்தகைய கொடுந் துன்மார்க்கனது வார்த்தை கேட்டு எம்மரசன் படையெடுத்துவந்திறந்தனன்! போர்க்களத்தில் என்னைப்புறங்காட்டியோடும்படி தூண்டினன்! ஆ! இவன் காரியம் எப்படியிருக்கின்றது!

சச்சந்தன்:—வச்சிரவாகுதேவரே! நும்மிடங் குற்றேவல் புரிந்துவந்த சிறுவரை எங்குக்கண்டுபிடித்தீர்!

வச்சிரவாகுதேவன்:—யான் காட்டுவழியாக வரும்போது அங்கு மூர்ச்சையாய்க்கிடந்ததைக் கண்ணுற்று எழுப்பிக்கேட்க அருகிற் சிரசின்றியிருந்த முண்டமொன்றைக் காண்பித்து அவர் தம் எஜமானனென்றுகூறினர். யான் தேற்றியென்னிடமே வேலைக்காரராயமரும்படிவேண்ட அவரும் அங்ஙனமே ஒத்துக்கொண்டனர்!

சச்சந்தன்:—காட்டில் உயிர்சோர்ந்திருக்கக்கண்டீரோ? அருகிலொருதலையற்றமுண்டம்! தன்எஜமானன! இதென்ன?

துணைநிதி:—மகாராஜா! யாம்கூறுவனவற்றிற்குச் சிறிதுசெவி சாய்க்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம். இக்குழந்தையைப்பற்றி எங்களுக்கும் சிறிதுதெரியும். இவர் காட்டில் வழிதப்பி எங்கள் குகையில் வந்திருக்க நாங்கள்சிலதினங்களாக ஆதரித்துவந்தோம்! ஒருநாட்காலையில் தேகஞ் சிறிதசௌக்கியமெனச் சொல்லக் குகைக்கண் இவரைநிறுத்தி நாங்கள் வேட்டையாடலைவிரும்பிவெளியே சென்று சீக்கிரத்திற்றானே திரும்பினோம்!

விக்கிரமன்:—மறந்துவிட்டீர்களே! நோயாகவிருக்கிறதென்று ஏதோ கையிற்கொடுவந்தமருந்திற் சிறிதருந்தவில்லையோ?

துணைநிதி:—யான் அதைக் கவனிக்கவில்லை! பிறகு நாங்கள் திரும்பிவருமுன்னரே இவரிறந்ததுபோலிருந்தமைகண்டு விக்கிரமனெடுத்துவர மிகவுந்துக்கித்து இறந்தாரெனக்கருதி அக்காட்டிற்கிடத்திப் புஷ்பமும் தழையும் பரப்பிக் குகைக்குச்சென்று மிகவும் வருந்தி யிருந்தோம்! பிறகு—

சச்சந்தன்:—அங்கொருமுண்டமிருந்ததாக நம் வச்சிரவாகுதேவர் கூறுகின்றாரே! அதைப்பற்றி நீவிரேதாவதறிவீரா?

வீரசேனன்:—அஃதென்னுடன்பேசீர்புரிந்திறந்தவரானதலையற்றமுண்டம் பிறகு தந்தையார் அவர் முகுந்தரென் றுரைத்தார்.

சச்சந்தன்:—முகுந்தனோ யிக்காரத்தா லிறந்தனன்?

வீரசேனன்:—ஆம்! என்னைக் கோபமூட்டியதன்றி என்னைக் கொல்லும் பொருட்டு வாளையோச்சியதன்மையின் யான்கொன்றேன்!

சச்சந்தன்:—நீர் எனக்குப்பேருபகாரியாயிருப்பினும் தண்டனைக்குட்படும்படி நேரிடுகின்றதே!

சுகுணன்:—மகாராஜா! முகுந்தர் என்னைப் பயமுறுத்தி அழகானந்தருடைய உடையை என்னிடங்கொண்டு தமது குமாரத்தி சரசாங்கியம்மாளையும் அழகானந்தரையுங் கொன்றுவரும்படியாக வல்லவோ சொல்லாமலே புறப்பட்டுப்போயினார்!

சச்சந்தன்:—எமது குமாரத்தியைக் கொல்லவா வெழுந்தனன் முகுந்தன்!

குணநிதி:—மகாராஜா! இத்தகைய முகுந்தனுக்காகவோ தம்மருமைப் புத்திரனைக் கோபிப்பது?

சச்சந்தன்:—இஃதென்ன ஒன்றின்பின்னொன்று முளைக்கின்றது! எனதருமைப்புத்திரன்! கனவுதானோ? அல்லது நனவோ? அன்றி இந்திரஜாலமோ? அவர்கள்குழந்தைப் பருவத்திலேயே தவறினவர்களாயினரே!

குணநிதி:—மகாராஜா! யான் குணநிதியல்லனோ?

சச்சந்தன்:—குணநிதி! உம்மையிப்பொழுதுநான்தெரிந்துகொண்டேன். எமது புத்திரர்களை நீராகாப்பாற்றினீர்? என்னருமை மக்காள்!—இழந்தபுத்திரர்களையும் புத்திரியையுங் கண்டயான்மிகவும் சந்தோஷசாகரத்திலாழ்ந்தேன்! ஆ! ஆ! திருவுளச்சம்மதம் இப்படியா இருந்தது! சுகுண! சரசாங்கி இவ்விடத்தினின்றும் சென்றமை நீயறியாததன்றே!

சுகுணன்:—மகாராஜா! அழகானந்தர் துன்மதியின் கைப்பாவையாகி, அவன் கூறியபொய்யினைமெய்யெனநம்பிச் சரசாங்கியை வஞ்சகமாயழைத்துக்கொண்டுபோய்க் கொன்றுவிடும்படி எனக்குக் கடிதமெழுதியதன்றித் தனது மனைவிக்கும் என்னைப்பின்றொடர்ந்துதன்னைப்பார்க்கவரும்படியாகவும் கடிதம் எழுதினார். கடிதத்தைக் கண்ணுற்று என்னைமிகவும் வேண்டயான் அவருக்குத்துணைசென்றேன்! வழியில் உண்மையுணர்ந்து தன்னைக்கொல்லும்படி என்னைப்பலவாறுவேண்டியும் யான் மறுத்துக் காஞ்சீபுரிக்கு வந்தருளும்படி பிரார்த்தித்தேன்! ஒரேபிடிவாதமாக யான் காடேசென்று சீனைவனைக்காண்பேனென்றார்கள்! அப்பொழுது தங்கள் தர்மபத்தினியவர்கள் எனக்கு அமிர்தசஞ்சீவியென்று கொடுத்த மருந்தையவர்களிடங்கொடுத்தேன்!

சச்சந்தன்:—கதை வெகுநன்றாயிருக்கின்றது! நல்லது, வைத்தியரே! நீர் கொடுத்தமருந்துதானோ அது? ஏன்ஐயா வைத்தியர்களுக்கு ஜீவகாருண்யம்வேண்டாமா?

வைத்தியர்:—மகாராஜா! என்மேற்கோபித்துக்கொள்ளக்கூடாது! யானுள்ளதை உள்ளவாறே சொல்லுகின்றேன்! என்னைப் பாஷாணமருந்துவேண்டுமெனக்கேட்டார்கள். யான் அவர்கள் குணந்தெரிந்து, மயக்கங்கொடுக்கும் மருந்துதான் கொடுத்தேன்! என்மேற் குற்றமொன்றுமில்லையே!

சச்சந்தன்:—சரி! சுகுண! உனக்கெப்படி இம்மருந்து வந்துசேர்ந்தது!

சுகுணன்:—சிங்காரவல்லியம்மை என்னையழைத்துப்போய் இராணியவர்களிடம் விடுத்தார்கள்! இராணியவர்கள் சரசாங்கியைத் தன் தம்பிக்கு இணங்கும்படி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டு இம்மருந்தை அதற்கு முன்கூலியாகக்கொடுத்தார்கள்!

சச்சந்தன்:—எல்லாம் நன்றாகவே நடந்தேறின! சரசாங்கியெங்கே சென்றனள்? சீக்கிரத்தில் அழைத்துவாருங்கள். சபையோர்களே! யான் (சேவகர்கள் போதல்.) சொல்வனவற்றைமிகக் கவனமாகக்கேட்கவேண்டும்! நடந்தசங்கதிகள் யாவும் உங்களுக்கும் நன்றாகவேவிளங்கியிருக்கும்! இழந்தரத்தினங்களையெல்லாம் இன்று கண்டெடுத்தேன்!—எமது குமாரத்திக்கு மணாளன் அழகானந்தனேயாயினன்! நமது குமாரரிருவர்களும் நம்மிடமேவந்து சேர்ந்தனர்கள்! யானும்தளர்ந்தவயதுடையனாய்விட்டேன்! ஆதலின் சரசாங்கியின்புருடனாவான் எவனோ அவனுக்கே இந்நாட்டரசாளுகையைக் கொடுக்கும்படி மனோநிச்சயஞ் செய்துவிட்டபடியால் இனி அதனின்றும் எப்படி மாறுவேன்? பிள்ளைகளிருக்க மருமகனுக்களித்தல் நீதியோ?

விக்கிரமன்:—தந்தையே! நாங்கள் இன்றுகாறும் இவரையே தந்தையெனக் கருதி வேடர்போல் வசித்திருந்தோம்! இப்பொழுதன்றோ தமதுமக்களியாமெனத்தெரிந்துகொண்டனம்! தாங்கள் இவ்வழகானந்தருக்கே பட்டங்கட்டிவிடலாம்! மனத்திலுதித்த வண்ணமே செய்தல் கடன்! சந்திரசேகரனைக்கொன்று இவ்விராச்சியத்தை நிலைநிறுத்தினவரிவரேயாகலின் அவருக்கே இந்நாடுரித்து! இவ்வண்ணம் நடத்தலேநீதி! எமது தங்கையை எம்முயிரினும் பதின்மடங் கதிகமாகவே நேசிக்கின்றோம். அத்தகையதங்கையினது பிராணநாயகரலரோ இவர்?

குணநிதி:—மகாராஜா! தமது புத்திரர் அவ்வெண்ணமுடையராயினும், அவ்விதமே புத்திரர்களிருப்ப மருகற்குப்பட்டங்கட்டுதல் ராஜநீதியாகாதே! ஆயினும் தமதுமனோரதம் ஈடேறும்படியான விஷயமொன்று கூறுகின்றேன்! இப்பொழுது சோழநாடும் நம்தேயாகியதன்றோ? அந்நாட்டரசனைக்கொன்று வெற்றிகொண்டார் அழகானந்தரேயாக அந்நாடவர்க்குரித்தாகும்! அவ்விராஜ்ஜியத்தை

யவருக்குப் பட்டங்கட்டி மாலையும் மருமகனையும் அந்நாட்டிற் குடியேற்றி விடுவோமே! இவ்வாறுசெய்தல் நலமெனவென் சிறு மதிக்கொருவாறு தோன்றுகின்றது!

சுச்சந்தன்:—நீர்கூறியது சகலவிதத்திலும் நன்மையாகத் தோன்றுகிறது! அங்ஙனமே அழகானந்தருக்குச் சோழநாட்டைக்கொடுத்து விடுவோம்! (வச்சிரவாகுதேவனைநோக்கி) நீரும் சந்திரசேகரனிடமிருந்ததுபோலவே யிவரிடமும்சேனாபதியாயிருக்கவேண்டும்! சுகுணா! உனக்கு முதன் மந்திரிப்பட்டமளித்தனம்!

வச்சிரவாகுதேவனும் சுகுணனும்:—இஷ்டப்படியே நடக்கக்காத்துக் கொண்டிருக்கின்றனம்!—(சரசாங்கியும் இந்துவதனையும்வருதல்.)

சுச்சந்தன்:—சரசாங்கி! என்கண்மணியே! உன்னைக்காணவும்பெற்றேன்! நின் சிற்றன்னை சொற்கேட்டு நடந்தவென்னை மன்னிப்பாய்! நின்னை வேதவிதிப்படி அழகானந்தருக்கு மணம்புரிவித்துச் சோழ நாட்டைச் சீதனமாயளிக்கின்றேன்! இந்துவதனே! நீயும் உன் னரசியோடுசென்று அவளுக்குச் சிறந்ததோழியாயிரு!......... குழந்தாய்! உனக்கேதாவது வரம்வேண்டுமோ? கேள்.

(சரசாங்கி ஒன்றுங்கூறாமல் இந்துவதனையுடன் திரும்பிப்போதல்.)

சுச்சந்தன்:—குழந்தாய்! நில், போகாதே! கோபமாயிருக்கின்றாய்! நின்னைச் சாந்தப்படுத்த யானும் நின்னொடு வருகின்றேன்! (போதல்.)

அழகானந்தன்:—

(இறைவனைத் துதித்துப் பாடுதல்.)

கங்கையைத் தரித்த வெந்தை கழலிணை மனங்கொண்டார்க்குப்
பொங்கரு ளுருவத் தோடும் பொலிவுற வவர்முற் றோன்றிச்
சங்கையி லன்மை யாவுந் தந்திடு வானை வன்ற
னிங்கித விளையாட் டெல்லா மியாவரே யறிதற் பாலார்.

(யாவரும்போதல்.)

ஐந்தாமங்கம் முற்றிற்று.

சரசாங்கி நாடகம்

முற்றிற்று.

மங்களம்.

இராகம் - சுருட்டி. தாளம் - ஆதி.

பல்லவி.

மங்களம் மங்களமே - ஜெயசுப
மங்களம் மங்களமே

அநுபல்லவி.

ஐங்கரங்கொண்டேயன்பர்க்கருளுங்கணேசருக்கும்
செங்கையின் வேலாயுதந் திகழ் முருகேச ருக்கும்(மங்களம்)

சரணங்கள்.

தில்லைமன்று ணடிப்பார்க்கும் - உலகமீன்ற
சிவகாமி யம்மை யார்க்கும்
சொல்லின் கிழத்தியெனுந் துங்கமார் வாணிக்கும்
மெல்லி திருமகள்ச மேதன் சக்ர பாணிக்கும்(மங்களம்)

அழகானந்த னென்பார்க்கும் - சுகுணனெனும்
அருமை நேசங் கொண்டோர்க்கும்
வழுவி லன்புடை யிந்துவதனையாம் பாங்கிக்கும்
பழுதில் கற்புநிலையைப் படைத்த சரசாங்கிக்கும்(மங்களம்)

முத்தமிழ்ப் பாவலோர்க்கும் - நற்குணசேன
மொழியு யிவ்வுலகோர்க்கும்
சித்திவிக்டோரியாட்கும் ஷேக்ஸ்பியர் கனனுக்கும்
சத்யநெறிகைக்கொள்ளும் சலசலோசனனுக்கும்(மங்களம்)

வாழ்த்து.

கோச்சகக் கலிப்பா.

துங்கவழ கானந்தத் தூயநற்கற் பகத்தருவும்
நங்கைசர சாங்கியெனு நறுங்காம வல்லியுஞ்சேர்
பொங்குறுநந் நாடகமாம் புகழ்பொருந்து மொழிலியுமே
மங்களமா நிலவுலகின் மன்னியென்றும் வாழியவே.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
		சிறப்புப்பாயிரம்.	
4	23	கற்றோர்க்ரு	கற்றோர்க்கு.
		நாடகபாத்திரங்கள்.	
4	6	நண்பண்	நண்பன்
		நூல்.	
17	13	ஸ்திரீ	ஸ்திரீ
24	4	சார்த்துக்	சாத்துக்
33	19	சிதிரை	சித்திரை
35	23	'தை...டு'	தை...டு
,,	27	பெண்பிள்ளைகளுக்கு	பெண்பிள்ளைகளுக்குப்
,,	31	நிரேன்	நீரோன்
55	7	திந்துக்	தித்திக்
59	20	வந்திருந்தாா.	வந்திருந்தார்.
64	15	புரிந்தன	புரிந்தா
76	12	மின்னுங்	மின்னும்
79	31	"அழகானந்தன்"	அழகானந்தன்".
83	32	காணத்தக்கதே!	காணத்தக்கனவே!
91		கனம்	களம்
98	17	முடலவருந்தி	முடல்வருந்தி
103	9	ஆரதுக்ஷ	[illegible]
109		கனம்	[illegible]
118	14	யிந்தகந்தின்	[illegible]
,,	26	செடியேனே	[illegible]